a-735

# T. N. L. A. Debates

OFFICIAL REPORT

VOL: LIII No: 4 and 5

November 8th and 9

1983


211,31 N83

N83.53.4&5

136061

சென்னை-600 008
136661



தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1983, நவம்பர் 8, செவ்வாய்க்கிழமை

ஐப்பசி 22, ருத்ரோத்காரி-திருவள்ளுவர் ஆண்டு 2014.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10–00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

'' ஆக்கமும் கேடும் அதனால் வருதலால்
காத்தோம்பல் சொல்லின்கண் சோர்வு ''

நன்மை பயக்கும் வாழ்க்கைச் சிறப்புகளும் தீமை உண்டாக்கும் கேடுகளும் சொல் ஆற்றலாலேயே உண்டாகின்றன. எனவே, ஒன்றைச் சொல்லும்போது தவறு உண்டாகாமல் கருத்தாகச் சொற்களைப் பயன்படுத்துக.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

1. அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம்.

திரு. ரா. உமாநாத் : நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களின் தலைமையில் செயல்படும் அமைச்சரவைமீது இப்பேரவை நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கிறது ''.

THIRU V- KRISHNAMOORTHY; Mr.Speaker,Sir, I second the motion moved by the hon, Member Thiru Umanath,

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1980 ஆம் ஆண்டு பெற்ற நடை தேர்தலிலே மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு இன்று ஆட்சி நடத்தக்கூடிய அரசு என்பது நமக்குத்தெரியும். திட்டவட்டமான வாக்குறுதிகளை மக்களுக்குக் கொடுத்து ஆளும் உரிமையைப் பெற்ற அரசாங்கமாகத் தான்இது ஆட்சிக்கு வந்தது. To fight against Indira Congress authoritarianism, the mandate was given by the people.

உள்ளடக்கம்.

8-11-1983


| | | பக்கங்கள் |
|---|---|---|
| 1. | அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம்.— .. .. .. | |
| | திரு. ரா. உமாநாத் .. .. .. | 375—413 |
| | திரு. என். எஸ். வி. சித்தன் .. .. | 413—431 |
| | திரு. ஜே. சி. டி. பிரபாகரன் .. .. | 431—454 |
| | திரு. ஏ. சாகுல் ஹமீது .. .. | 455—461 |
| | திரு. ஜி. மூர்த்தி .. .. .. | 461—467 |
| 2. | பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. | 468—471 |

அதாவது இந்திரா காங்கிரஸ் சர்வாதிகாரத்தை எதிர்த்து
முறியடிக்க வேண்டும் என்று மக்கள் ஆணையிட்டு இருக்கி
றார்கள் அந்த தேர்தலிலே. அந்தக் கேந்திரமான அரசியல்
ஆணையை நான் நிறைவேற்றுவேன் என்றும் சர்வாதிகாரத்தை
எதிர்த்து போராடுவேன் என்றும் மக்களிடம் வாக்குறுதியைக்
கொடுத்து அரசாங்கத்திற்கு வந்த ஆளும் கட்சி தான்
இன்றைக்கு ஆளும் கட்சியாக இருக்கிறது. அதிகாரத்திற்கு
வந்த பிறகு இன்று முதலில் பெரும் துரோகம் செய்தது இந்த
ஆரசியல் வாக்குறுதியைத் தான். First major betrayal is the political
mandate. இந்த சட்டமன்றத்திலே அதனுடைய அறிகுறிகளை காண
லாம் இந்த செஷனிலே. கடந்த சட்டமன்றக் கூட்டத்திலே
சர்வாதிகாரத்தை எதிர்த்து அமைச்சர்களும் ஆளும் கட்சியைச்
சேர்ந்த உறுப்பினர்களும் போட்டாபோட்டி போட்டுக்கொண்டு
மனதாரக் கண்டித்துப் பேசினார்கள். நாங்களும் சந்தோஷப்
பட்டோம். பட்ஜெட் ஷெசனிலே தினமும் 80 ஆயிரம் டன்
அரிசி விஷயம், 216 கோடி ரூபாய் வறட்சி நிவாரண விஷயம்,
தொழில் லைசன்ஸ் கிடைக்காத விஷயம், இதுபோன்ற பிரச்
சனைகளை மத்திய அரசு செய்யவில்லை என்று கடும் தாக்குதலை
தொடுத்ததையும் போன பட்ஜெட் ஷெசனிலே பார்த்தோம்,
சந்தோஷப்பட்டோம். கொடுத்த வாக்குறுதியை அப்படி
அவர்கள் செய்ததன் மூலமாக நிறைவேற்றிக் கொண்டு
இருந்தார்கள் என்ற நிலையை நாம் பார்த்தோம் போன
பட்ஜெட் செஷனிலே. மாண்புமிகு முதலமைச்சர் திடீர்
என்று ஒரு நாள் உண்ணாவிரதம் இருந்தார்கள், நாம் பார்த்
தோம். ஆனால் இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரிலே
ஆளும் கட்சியின் சர்வாதிகார எதிர்ப்புக் குரலில் சுருதி இறங்கி
விட்டது என்பதை நாம் அனைவரும் பார்க்கிறோம். அதற்கு
நான் அமைச்சர்களையோ ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்
பினர்களையோ குற்றம் சொல்லமாட்டேன். அவர்களுடைய
இன்ஜின், அதாவது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த
விஷயத்தில் தண்டவாளத்தை விட்டு இறங்கி விட்டார்கள்
என்று கூறுவேன். இப்போது நமக்கு 80 ஆயிரம் டன் அரிசி
கேட்டோம் கிடைத்ததா இல்லையே, குடும்பக் கார்டுகளுக்கு
குறைக்கப்பட்ட அரிசி உயர்த்தப்பட்டதா இல்லையே,
தொழில் துறையில் பாரபட்சம் நிறுத்தப்பட்டதா இல்லையே
ஆனால் 22–10–83 அன்று ஒரு நிகழ்ச்சியில் ஒருவர் பேசினார் :

'மைய அரசு தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்கு பல
வசதிகள் செய்து தருகிறது. அதிகப்படியாக 10 ஆயிரம்
டன் அரிசியை மைய அரசு வழங்குகிறது, வறட்சிப் பணி
களுக்கு இன்னும் அதிக அளவில் தொகை ஒதுக்கீடு செய்ய
திட்டங்கள் இருக்கின்றன. புதிய தொழிற்சாலைகள் நிறு
வனங்கள் தமிழ்நாட்டில் ஏற்படுத்த விரைவில் அனுமதி
கிடைக்க உள்ளது. இப்படி இந்திரா துதி பாடியது மாண்புமிகு



திரு. ஆர். வெங்கட்ராமன் அல்ல. மாண்புமிகு திரு ஆர். வி.
சுவாமிநாதன் அல்ல, காங்கிரஸ் தலைவர் திரு. எம். பி. சுப்பிர
மணியம் அல்ல, சாட்சாத் நமது முதலமைச்சர் எம். ஜி. ஆர்.
அவர்கள் தான் என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.
ஒரு குறுகிய காலத்திற்குள்ளேயே சர்வாதிகாரத்திற்கு ஆதர
வாக, ரீட்டெயில் பேச்சல்ல, ஹோல்சேல் பேச்சே ஆரம்பித்து
விட்டார்கள் என்றால் அதில் விஷயம் இருக்கிறது என்றுதான்
அர்த்தம் ஆகிறது.

இதில் என்ன இரகசியம் இருக்கிறது என்று பார்த்தால் அரசி
யல் காரணம்தான் இந்த மாற்றத்திற்குக் காரணம் என்று
நான் நம்புகிறேன். சமீபத்தில் மாண்புமிகு முதல்வர் கூறி
யதை 29–8–83ஆம் தேதிய 'மக்கள் குரல்' பத்திரிகை ரிப்போர்ட்
செய்துள்ளது. அதாவது, '' தமிழ்நாட்டில் காங்கிரஸ் கட்சியும்
அ.தி.மு.க.வும் நெருங்கி நல்ல அரசியல் சூழ்நிலை உருவாகி
வருவதை சுட்டிக்காட்டினார்.'' என்று ரிப்போர்ட் செய்துள்
ளது. இதில் ' நெருங்கி ' என்ற வார்த்தையைத் தான் நாம்
முக்கியமாகக் கவனிக்க வேண்டும்.

சர்வாதிகாரத்தை எதிர்த்துப் போராடுவேன் என்று
மக்களுக்கு வாக்குறுதியைக் கொடுத்து அதிகாரத்திற்கு வந்த
பின், அந்தச் சர்வாதிகாரத்துடன் ' நெருங்கி நல்ல ' உறவு
கொள்ளுகிறார் என்றால் இது மக்களிடம் பெற்ற அரசியல்
ஆணையைக் காலில் போட்டு மிதிப்பதாக ஆகாதா என்று
தான் நான் கேட்கிறேன். எதற்காக இந்த உறவு நெருக்கம் ?

அது சிங்கத்தின் வாயிலிருந்தே வெளியில் வந்தது. வெறும்
அரசியல் உறவில் அவர்கள் நெருக்கம் ஏற்படவில்லை. இந்த
அரசின், ஆளும் கட்சிச் செயலர் ப. உ. சண்முகம் அவர்கள்,
கட்சித் தலைவரின் அனுமதியின்றி கொள்கைப் பிரச்னையைப்
பேச மாட்டார் ; பேசவும் முடியாது. வத்தலக்குண்டு
பொதுக் கூட்டத்தில், அந்தக் கட்சியின் ஜெனரல் செக்ரட்டரி
ப. உ. சண்முகம் அவர்கள் பேசிய பேச்சு இதுவரையில் மறுக்கப்
படவில்லை. 15–6–83 ஆம் தேதிய '' மாலை முரசு '' பத்திரி
கையில் அவருடைய பேச்சு வெளியிடப்பட்டிருக்கிறது. அதை
நான் கோட் செய்கிறேன் : '' அ.தி.மு.க. இந்திரா காங்கிர
சோடு, வரும் தேர்தல்களில் கூட்டணி சேருமா என்று
கேட்கிறார்கள் '' என்று கூறிவிட்டு, '' நாங்கள் சேரமாட்
டோம் '' என்று கூறவில்லை ; ஆனால், '' அப்படி இரு கட்சி
களும் கூட்டு சேர்ந்தால் 80-ல் கருணாநிதி செய்துகொண்ட
ஒப்பந்தம்போல் இருக்காது. சம பங்காக பிரித்துக்கொள்ளவோ
நிச்சயமாக ஒருபோதும் அ.தி.மு.க. ஒத்துக்
கொள்ளாது '' என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படி
என்றால் என்ன அர்த்தம் ? சர்வாதிகார சக்தியோடு உடன்
பாடு கொள்வதில் இருக்கக்கூடிய அந்த எதிர்ப்பைக் கைவிட்டு
விட்டதாகத்தானே அர்த்தம் ? இந்திரா காங்கிரசுடன் கூட்டு
சேருவது என்று முடிவாகிவிட்டது என்று பேசிக்கொள்கி

றார்கள். சீட் எத்தனை விட்டுக் கொடுப்பது என்பதில் பேரம் நடைபெறுகிறது என்பது புரிகிறது. நான் இப்பொழுது கூறியது முன்பு பேசிய பேச்சு. ஆனால் இதற்குள் அவர்கள் வெகு தூரம் போயிருப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.

மாண்புமிகு அமைச்சர் காளிமுத்து அவர்கள் இந்திரா சர்வாதிகாரப் போக்கைப் பொறுத்தவரை, சமீப காலம் வரையில் 1980-இல் மக்கள் கொடுத்த ஆணைப்படி பேசி வந்தார். அவர் கூறினார் : ''இந்திரா காங்கிரஸ் என்பது குஷ்டரோகி கையில் இருக்கும் சோத்துருண்டை போன்றது'' என்று. அது கரெக்ட், நூற்றுக்கு நூறு நான் அதை ஒத்துக்கொள்கிறேன். குஷ்டரோகி கையிலிருக்கும் சோத்துருண்டை போன்றது இந்திரா காங்கிரஸ் என்பதை இப்பொழுது ஒத்துக்கொள்கிறதா ? அத்துடன் தேர்தல் உடன்பாடு செய்து கொள்வது என்றால், குஷ்டரோகி கையிலிருக்கும் சோத்துருண்டையில் அ.தி.மு.க. வாய் வைத்தாகிவிட்டது என்றுதானே பொருள் :

''வாடிய பூ மொட்டாகாது, கருவாடு மீனாகாது'' என்று மாண்புமிகு அமைச்சர் காளிமுத்து இந்திரா காங்கிரசைப் பற்றி வருணித்தார். அதை நூற்றுக்கு நூறு நான் ஒத்துக்கொள்கிறேன். இப்பொழுது முதல்வரை நான் கேட்க விரும்புவது என்னவென்றால், கருவாடு எப்படி மீனாயிற்று ?

'Eight wonders'

என்று சொல்வார்கள், தலைவரவர்களுக்கும் அது தெரியும்.
'It is the ninth wonder'

கருவாடு எப்படி மீனாயிற்று ? வாடிய பூ எப்பொழுது மொட்டானது ?

தேர்தல் வாக்குறுதியை மீறி இந்திரா காங்கிரசுடன் தேர்தல் உடன்பாட்டிற்கு எதற்காகச் செல்கிறீர்கள் ?

1980 தேர்தலில் குடும்ப சார்வாதிகாரத்தை அனுமதிக்க மாட்டேன் என்று முதல்வர் பேசினார். அப்பொழுது அப்படிச் சரியாகப் பேசினார். அந்த முயற்சியை, குடும்ப சர்வாதிகாரத்தை, பிரதமர் திருமதி காந்தி கைவிட்டு விட்டாரா? கைவிட்டதாக இல்லையே, அப்படியிருக்க ஏன் அவர்களுடன் உடன்பாடு காண்பதற்காகச் செல்கிறீர்கள் ? தொடர்ந்து அந்த முறை நடப்பது நன்கு தெரிகிறதே ! அப்படியிருக்கும்பொழுது அந்தச் சர்வாதிகார சக்திகளோடு ஏன் இம்மாதிரி உறவு கொள்ள முயற்சிக்க வேண்டும், உடன்பாடு காண முயற்சிக்க வேண்டும் ?



1980 தேர்தலின்பொழுது, ''பிரதேசக் கட்சிகளை நாட்டில் அனுமதிக்கக் கூடாது'' என திருமதி காந்தி கூறினார். அப்படி பேசியதற்காகவே எதிர்க்கிறேன் என்று நானும் இருந்த ஒரு மேடையிலே மாண்புமிகு முதல்வர் அப்பொழுது பேசினார். அவர் அன்றைக்கு அப்படிப் பேசியது சரி என்று இன்றைக்கும் நான் சொல்கிறேன். இப்பொழுது திருமதி காந்தி அந்தப் பேச்சைக் கை விட்டாரா, இல்லையே ?

(முற்பகல் 10-10)

டேராடூனில் சமீபத்தில் பிரதமர் பேசியது, ஜூலை 21 ஆம் தேதிய ''தினமலர்'' பத்திரிகையில் வந்திருக்கிறது. ''மாநிலக் கட்சிகள் விஷம் என்று பிரதமர் இந்திரா கூறினார்'' என்றுவந்திருக்கிறது. நான் தினமலர் பத்திரிக்கையிகளை கோட்பண்ணுகிறேன். பல பத்திரிக்கைகள் அரசியலிலே இருக்கின்றன. ஆனால் தினமலர் பத்திரிகை இந்திரா காங்கிரஸை மட்டும் கோட் பண்ண மாட்டார்கள் என்று நான் நினைக்கிறேன். அப்படிப்பட்ட பத்திரிகையில் மாநில கட்சி விஷம் என்று பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் கூறியதாக வந்திருக்கின்றது. அதற்காகவே இந்திரா காங்கிரஸைத் தோற்கடிக்க வேண்டும் என்று 1980-ல் பேசிய நமது மாண்புமிகு முதலமைச்சர் இன்று அதே பிரதமரோடு அதாவது மாநில கட்சிகள் விஷம் என்று கூறிய பிரதமர் அவர்களோடு, அவர்களுடைய கட்சியோடு தொடர்பு கொள்வதற்கும், நெருங்கி உறவு வைப்பதற்கும், கூட்டு சேருவதற்கும் முயற்சி செய்கின்றதே, அதற்கு என்ன காரணம் ? 1980-ல் அந்த சர்வாதிகாரப் போக்கினை நீங்கள் எதிர்த்தீர்கள் ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் கொடுத்திருக்கின்ற தீர்மானம் 'அமைச்சரவையின் மீது இப்பேரவை நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கின்றது' என்பது. எனவே அதை விட்டுவிட்டு கொள்கைகளைப் பற்றிப் பேசுவது எந்த அளவிற்குப் பொருத்தம் என்பது தெரியவில்லை.

திரு. ரா. உமாநாத் : பாலிசி அல்ல. மேன்டேட்டிலே உள்ளதை நான் சொல்கிறேன். எனவே தாங்கள் தயவு செய்து இதிலே தலையிடாதீர்கள். வேறு விஷயத்திலே தலையிட்டால் பரவாயில்லை. அதாவது பொலிட்டிக்கல் மேண்டேட்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் தலையிட விரும்பவில்லை. I wa t to get a clarifi ation because y ur Resolution is differen . But you are t lking on a different pl a. I want a darification from you on this.

திரு. ரா. உமாநாத் : 1980 ஆம் ஆண்டில் நீங்கள் ஜனங் களுக்குக் கொடுத்த வாக்குறுதி சர்வாதிகாரத்தை எதிர்ப்பாம் என்று. அப்படி அந்தக் கொள்கையை ஏற்றுக் கொண்டீர் களே, இன்று அந்த சர்வாதிகாரத் தன்மை இல்லாமல் போய் விட்டதா ? இந்த அரசாங்கம் அமைந்ததே அந்த மேன்டேட்டின் மூலமாகத்தானே. நீங்கள் அந்த மேன்டேட் கொடுத்த போது உள்ள அந்த நோக்கம் நிறைவேறி விட்டதா ? இலலையே- அரியானாவிலே வெறும் 15 என்ற நிலையில் இருந்த மைனா ரிட்டியை அரசு மெஜாரிட்டியாக ஆக்கவில்லையா ? மத்திய பிரதேசத்திலே சிங்கிள் பார்ட்டியை மெஜாரிட்டியாக ஆக்கவில்லையா ? அங்குள்ள சர்க்காரை மெஜாரிட்டி சர்க்காராக ஆக்க வில்லையா ? நீங்கள் எந்த செக்ஷன் இருக்கக்கூடாது என்று கூறுகிறீர்களோ அந்த செக்ஷனை உபயோகப்படுத்தி பாண்டிச்சேரியில் டி.எம்.கே. அரசாங்கத்தை அவர்கள் டிஸ்மிஸ் செய்யவில்லையா ?

1980-க்குப் பின் இன்னும் பல மாநில அதிகாரங்களை மத்தியில் குவித்து சர்வாதிகாரப் பாதையிலே செல்லவில்லையா ? அப்படி இருக்க நீங்கள் இன்று செய்வது மக்களை வஞ்சித்து சர்வாதிகாரச் சக்தியை அப்பட்டமாக வளர்ப்பது தான். வஞ்சித்தல் என்பது பிட்ரேயல் என்ற ஆங்கில வார்த்தையின் பொருள். அதைத்தான் நான் சொல்கிறேன். இந்திரா காங்கிரஸ் கட்சி கர்நாடகாவில் தோற்று, ஆந்திராவில் தோற்று கேரளத்தில் தனி பலத்தை இழந்து, காஷ்மீரிலும் தோற்று, மேற்கு வங்காளத்திலும் தோற்று, திரிபுராவிலும் தோற்று மற்ற பல மாநிலங்களில் எல்லாம் ஆட்டம் காணுகின்ற நிலை மையில் அந்த சர்வாதிகார சக்தியை, அதிகாரச் செருக்கை மீண்டும் மத்தியில் அமர்த்தி நாட்டு மக்கள் தலையில் திணிக்க, தமிழ் மக்கள் தலையில் திணிக்க இன்றைக்கு இந்த அரசு பாடு படுகின்றது என்று நான் கூறுகிறேன்.
There is differenc: between the tweedl dum and tweedledee.

அ.தி.மு.க. அரசின் இந்தப் போக்கு நாட்டு மக்களின், தமிழக மக்களின் அபிலாஷைகளுக்கு வேட்டு வைப்பதாக இருக்கும் என்று நான் கூறுகிறேன்.

மத்திய அதிகாரக் குவியல் என்பது சர்வாதிகாரம் என்றே இந்த அரசு கூறி வந்தது. அதிகாரங்களைப் பரவலாக்குவது தன்னாட்சி என இந்த அரசு கூறி வந்தது. ஆனால் அதிகாரக் குவியலை உடைத்து மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் கேட்பதற் கான முயற்சியில் முன்னேறுகிறபோது மாநில சுயாட்சி அதி காரங்களை ஸ்தூலப்படுத்தி, அதற்கான ஒற்றுமை உருவாகும் இடத்திற்கு அதாவது காஷ்மீர் மாநாட்டுக்கு நம்முடைய அரசின் முதல்வர் அவர்கள் செல்லவில்லை என்பது நமக்குத் தெரிந்த



விஷயம். அதற்கான காரணம் என்னவென்று கேட்டால், 'சில தெளிவுகளைக் கேட்டு நான் திரு. ஃப்ரூக் அப்துல்லாவுக்கு எழுதி இருக்கிறேன்3 என்றார். என்ன தெளிவு கேட்டார்கள். என்ன பதில் கிடைத்தது என்கிற அந்தக் கடிதப் போக்குவரத்தை வெளியிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென் றால் இந்த அவையிலே இந்த அரசு தான் எதற்காக நிற்கிறேன் என்று சொல்லியதோ அந்த விஷயத்திற்காக ரொம்ப பலம் திரண்டு இருக்கும் இடத்திற்கு (எக்ஸ்பென்டெட் சக்தி) இந்த அரசாங்கம் போகவில்லையென்பதால், அந்தக் கடிதப்போக்கு வரத்தை இங்கே வெளியிட வேண்டும் என்று நான் இந்தக் காரணத்தைக் கூறி கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல் நிதிக் கமிஷன் வந்த போது தமிழக வளர்ச்சிக் காக 1,000 கோடி ரூபாய் கேட்டார்கள். ஆனால் அதைப் பெறுவதற்காக ஒரு ஒற்றுமையை உருவாக்கும் காஷ்மீருக்குச் செல்ல மறுக்கும் நிலைமை ஆகியவற்றிற்கு எல்லாம் உண்மைக் காரணம் இது தான் என்று நான் கருதுகிறேன். மாநில சுயாட்சி அதிகாரங்களை ஸ்தூலப்படுத்தி, அதற்கான ஒற்றுமையை உரு வாக்கும் இடத்திற்கு சென்றால், சர்வாதிகார சக்திகளோடு உருவாகிவரும் தேர்தல் உடன்பாடு பாதிக்கப்படுமோ என்ற ஐயப்பாடு தான் இதற்குக் காரணம் என்று நாங்கள் கருதுகிறோம்.

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஒருவர் பேசும்போது குறுக்கிடக் கூடாது. நான் இது வரையில் அதைத்தான் கடைபிடித்தேன். யாரும் பேச மாட்டார்கள். உங்களுக்கு எல்லாம் பேச வாய்ப்பு கொடுத்து விட்டு கடைசியில் தான் பதில் சொல்லயிருக்கிறேன். ஆனால், இந்திரா காங்கிரஸோடு தேர்தல் கூட்டு என்றோ, தேர்தல் தொடர்பு என்றோ எந்தத் தலைவரோடும் பேசவில்லை. பேசப்படவும் இல்லை என்பதை தயவு செய்து தெரிந்து கொள் ளுங்கள்.

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்திரா காங்கிரஸோடு தேர்தல் உடன்பாடு சம்பந்தமாக பேசவில்லை என்றார்கள். அப்புறம், பேசப்போவதும் இல்லை என்று சொன்னார்களா (சிரிப்பு).

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. உமாநாத் அவர்களைப் பற்றி எனக்கும் நன்றாகத் தெரியும். என்னைப் பற்றியும் அவர் களுக்கும் தெரியும். ஆகவே, அவர் வலையில் நான் சிக்க மாட் டேன் என்பதை அவர் தயவு செய்து தெரிந்து கொள்ளவேண்டும். அவர்கள் உத்தரவாதம் கொடுத்து எந்தக் கட்சியோடும் சேர மாட்டோம் என்று சொன்னதுண்டா, கிடையாது. எலெக் ஷனுக்கு எலெக்ஷன் நாம் மாறுகிறோம். (மேசையை தட்டும் ஒலி)

எலெக்ஷனில் யாரோடு சேர்ந்தால் லாபமோ அவரோடு சேர்கிறோம். அடுத்த எலெக்ஷனில் யாரோடு சேர்கிறோமோ நமக்குத் தெரியாது. முன்னாடி எப்படி இருந்தோமோ, தெரி யாது. 1977, 1980 இரண்டு தேர்தலில் ஒரு தேர்தலில் தான் நாம் இரண்டு பேரும் சேர்ந்து இருந்தோம். ஒரு தேர்தலில் சேரவில்லை. ஆகவே, அரசியல் கட்சிக்காரர்கள், அரசியலைச் சேர்ந்தவர்கள் அவர்களுக்கு என்று தனி உரிமை இருக்கிறது. அவர்களுக்கு எப்போது தேவை, நியாயம் என்று தெரிகிறதோ அதை அரசியலுக்குப் பயன்படுத்துவார்கள். அதை பாலிசி என்ற வகையில் இங்கே நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் சேர்ப் பது பொருத்தம் என்று எனக்குத் தெரியவில்லை. அவர்களுக்குப் பொருத்தம் என்றால் அவர்கள் பேசட்டும்.

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நாங்களும் நிலைமைக்கு நிலைமை மாறியிருக்கிறோம் என்று..

திரு. கே. எஸ். ஜி. ஹாஜாசெரீப் : நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்து விட்டு, அரசாங்கம் செய்த குறையை குற்றங்களை எடுத்துசசொல்லாமல் வயிற்றெறிச்சலைக் கொட்டிக்கொண்டு இருந்தால் என்ன அர்த்தம். எனக்குப் புரியவில்லை. (குறுக்கீடுகள்)
My esteemed friend, the Communist Deputy Leader, is talking out of pride, prejudice and jealousy. He must stop this and come to the point.

திரு. என். சங்கரய்யா : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் என்னசொன்னார் என்பதை சாதாரணமாக என்னால் புரிந்து கொள்ள முடிய வில்லை. ஒரு வேளை மதுரையில் இந்திரா காங்கிரஸ் கட்சி கூட்டத்தில் நடந்த அடிதடி காரணமாக நிலைமை தடுமாறி பேசு கிறாரா? (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நம்பிக்கையில்லாத் தீர் மானம் காங்கிரஸ் கட்சி பேரில் அல்ல. (குறுக்கீடு)

திரு. என். சங்கரய்யா : அவர் எந்த வார்த்தையைப் பயன்படுத்தி இருக்கிறார். வயிற்றெறிச்சல் என்று சொன்னால், தமிழகத்தில் உள்ள ஜனங்கள் மத்தியில் அவர்கள் கட்சியில் நடக்கக்கூடிய வன்முறையைப் பற்றி வயிற்றெறிச்சல் படுகிறார் கள். அவர் ஏன் அந்த வார்த்தையைப் பயன்படுத்தவேண்டும் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ''ஹார்ட் பர்னிங்'' என்ற ஆங்கில சொல்லுக்கு தமிழ் அர்த்தம் 'வயிற்றெறிச்சல்'.





அது பார்லிமெண்டரி வார்த்தைதான். அன்-பார்லிமெண்டரி வார்த்தை அல்ல. ஆகவே, அதைப் பற்றிய பிரச்னை கிளப்ப வேண்டாம். அந்தப் பிரச்னைக்குப் போகவேண்டாம்.

(முற்பகல் 10-20)

திரு. என். சங்கரய்யா: தலைவரவர்களே, திரு. ஹாஜா செரீப் அவர்கள் ''தன்னுடைய வயிற்றெறிச்சலைக் கொட்டு கிறார்'' என்று சொன்னார்கள். அதுவல்ல. காரணம் 1980-ல் இந்தச் சர்க்கார் மற்ற சில கட்சிகளோடு சேர்ந்து, சர்வாதிகார சக்தியை எதிர்ப்போம் என்று சொல்லி, ஆட்சிக்கு வந்தது. இப்போது அந்தக் கொள்கையிலிருந்து மாறியிருக்கிறது என்று தோழர் உமாநாத் அவர்கள் பேசிக்கொண்டிருக்கி றார்கள். இந்த அரசின்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்ததற்கான காரணங்கள் அரசியல் அடிப்படை என்று நிரூபிப்பதற்காகக் கூறுகிறார்கள்.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் (குறுக்கீடுகள்) பதில் கூறும்போது, எதிர் காலத்தில் பேசப் போவதில்லையா என்று கேட்டபோது, ''நீங்க ளும்தான் நிலைமைக்கு நிலைமை மாறி உடன்பாடு செய் திருக்கிறீர்கள்'' என்று அவர்கள் சொன்னார்கள். ஆம். அப்படி மாறினாலும் இலட்சியம் மாறவில்லை. எந்த அரசியல் இலட்சியத்திற்காக தேர்தல் உடன்பாடோ அந்த இலட் சியத்திலிருந்து நாங்களும் மாறவில்லை. எந்தத் தேர்தல் வந்தாலும், யாரோடு உடன்பாடு செய்தாலும், இலட்சியத்தில் மாறுபாடு இல்லை. எங்கள் இலட்சியத்தை நிறைவேற்றுவதில் ''வீ ஆர் கன்சிஸ்டன்ட்'' அதிலிருந்து நாங்கள் மாறவில்லை. இந்தச் சர்க்காரைப் பொறுத்தவரையில் மக்கள் நலனைக் காக்க வேண்டுமென்றால் சர்வாதிகாரத்தை எதிர்த்தே தீர வேண்டும். அல்லது சர்வாதிகாரத்துடன் உடன்பாடு கொள்ள வேண்டுமானால் மக்களின் நலன்களை கைவிட வேண்டும். 'நோ மிடில் வே'. (குறுக்கீடு).

திரு. நா. சுந்தரராஜ் : சர்வாதிகாரம், சர்வாதிகாரம் என்று சொல்வது அவைக் குறிப்பில் இருக்கலாமா ? அதை நீக்க வேண்டும்.

திரு. ரா. உமாநாத் : நான் சர்வாதிகாரம் என்று சொல் வது எதேச்சாதிகாரத்தை, அதாவது 'அதாரிட்டேரியானிசம்' (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: காங்கிரஸ் கட்சி உறுப் பினர்கள் தயவுசெய்து உட்கார வேண்டும். ஒருவர் குறிப் பிட்டிருப்பதை ஒரு கொட்டேஷனாக எடுத்து இங்கே அவர்கள் தெரிவிக்கிறார்கள். அதில் தவறு இல்லை.

திரு. ரா. உமாநாத் : 1980 ஆம் ஆண்டு தேர்தலில்
கொடுக்கப்பட்ட இன்னொரு முக்கியமான வாக்குறுதி ''ஜன
நாயக உரிமைகள் காபந்து செய்யப்பட்டு விரிவுபடுத்தப்படும்''
என்பது. ஜூலை 1982-ல் பீகார் சர்க்கார் பத்திரிகை
கட்டுப்பாடு சட்டம் நிறைவேற்றியது அனைவருக்கும் தெரியும்.
பீகார் அரசின் மக்கள் விரோதக் கொள்கைகளை மறைக்க,
சிறைகளில் நடத்தும் கொடுமைகளை மறைக்க, கொள்ளைக்
காரர்களுக்கும் அமைச்சர்களுக்கும் உள்ள உறவுகளை மறைக்க
இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது என்று அந்த சட்ட
மன்றத்திலும் நாடாளுமன்றத்திலும் பேசப்பட்டது. இது
நாட்டையே உலுக்கியது உங்களுக்குத் தெரியும். தன்னால்
நியாயப் படுத்த முடியாமல், புகலிடம் தேடி டெல்லிக்கு ஓடி
னார். பிரதமராலும் நியாயப்படுத்த முடியவில்லை ; புகலிடம்
கொடுக்க முடியவில்லை. கடைசியில் மக்களால் விரட்டப்பட்ட
பீகார் முதலமைச்சருக்கு புகலிடம் கொடுத்தது யார் தெரி
யுமா ? அதற்கு முன்னாலே நமது முதல்வர் நிறைவேற்றிய
சட்டம்தான். இதைவிட வெட்கக்கேடு வேறு என்ன இருக்க
முடியும் ?

நாடே வெறுத்து, பத்திரிகை உலகமே எழுந்து கலகம்
செய்து, பல பந்துகள் நடத்தி, பல மாநில மக்களே தூக்கி
எறிந்த ஒரு சர்வாதிகாரச் சட்டத்தை, காங்கிரஸ் சர்வாதி
கார ஆட்சிக்கு வழிகாட்டியாக, காங்கிரஸ் அல்லாத தமிழக
சர்க்கார்தான் இருந்தது என்றால் தமிழக அரசின் ஜனநாயக
விரோதம் எவ்வளவு விஷம் கலந்தது என்பது தெளிவாகும்.

1983 மே மாதத்திலேயே அந்தச் சட்டத்தை தான்
வாபஸ் பெறப்போவதாக பீகார் முதலமைச்சர் தெரிவித்தார்.
அதற்குப் பிறகும் நம்முடைய முதலமைச்சர் இங்கே நிறை
வேற்றிய சட்டத்தை கைவிடவில்லை. முறைப்பதும் பரிவு
காட்டுவதுமாக காட்சியளித்தார். இப்பொழுதும் பாருங்கள்,
பீகார் முதலமைச்சர் அந்தச் சட்டத்தை வாபஸ் பெற்று,
சட்டப்பேரவையில் ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்து
நிறைவேற்றியிருக்கிறார். ஆனால் நம்முடைய முதலமைச்சர்
சட்டத்தை ரத்து செய்து, ஒரு திருத்தச் சட்டத்தை இன்ன
மும் கொண்டுவர மறுக்கிறார். இதன் பொருள் என்ன ?
ஏற்கனவே நிறைவேற்றிய சட்டத்தை ரத்து செய்ய விரும்ப
வில்லை. இது நான் கருதுவது. பத்திரிகைகளை மிரட்டுவதற்
காகவும், பத்திரிகைகளை அரசாங்கத்தின் தொங்குசதையாக
மாற்றுவதற்காகவும், மிரட்டவும் அவர்கள் தலையில் தொங்க
விட்டவாளாக – டெமக்கிள்ஸ் ஸ்வோர்ட் – அதை வைத்திருக்
கிறார்கள். நீங்கள் கொண்டுவந்த திருத்தச் சட்டத்தை
ரத்து செய்து இன்னொரு சட்டத்தை இங்கே ரிப்பீலிங்
ஆக்ட்டாக இந்த செஷனிலேயே கொண்டுவரவேண்டும்
என்று நாங்கள் கோருவதுடன் 292- ஏ, ஐ.பி.சி. என்ற
அசல் சட்டத்தையும் ரத்து செய்யவேண்டும். ஏனென்றால்





இந்த நாட்டிலேயே அந்த 292ஏ நமது மாநிலத்தில்தான்
உள்ளது. அதை ஏன் மிசசம் வைப்பானேன். பத்திரிகைகள்
அக்ரெடிட்டேஷன் கமிட்டி 1982-ல் காலாவதியாகி விட்டது.
ஓராண்டாகியும் புதுப்பிக்கவில்லை. ஐ.இ.என்.எஸ். ஸ்தா
பனம் தினகரன் ப்ரொப்ரேட்டர் திரு. கந்தசாமியை நிய
மித்ததாகத் தெரிகிறது. அதில் அரசாங்கத்திற்கு பிடித்த
மில்லை என்று நான் நினைக்கிறேன். அதனால் அந்த அக்ரெடிட்
டேஷன் கமிட்டியை புதுப்பிப்பதில் தாமதம் ஏற்படுத்திக்
கொண்டுவருகிறார்களோ ? இதற்குப் பிறகு தமிழகத்தில்
ஜனநாயகத்தின் மீது தாக்குதல் இன்னும் வேகமாகப் போய்க்
கொண்டிருக்கிறது உங்களுக்குத் தெரியும். தமிழகத்திற்கு
என தனித் தடுப்புக் காவல் சட்டம், மாவட்டம் விட்டு
மாவட்டம் பிரஜைகளை விரட்டுவதற்கு போலீஸ்க்கு அதி
காரம் கொடுத்து ஒரு சட்டம், தொண்டர் படைத் தடைச்
சட்டம், சுவற்றில் எழுதுவதை தடை செய்யும் தடைச்
சட்டம், டேப், கிராமபோன் ரிக்கார்ட், கார்ட்டூன் தடைச்
சட்டம், பட்டம் விடுவதை தடுக்கும் தடைச் சட்டம் என்று
ஜனநாயகப் படுகொலைப் பாதையில் சென்று கொண்டிருக்
கிறது. T..is Government is becoming a hangman of Demccracy என்று
சொன்னால் அது மிகையாகாது என்று நான் சொல்ல விரும்பு
கிறேன்.

ஜனநாயக ஸ்தாபனங்களுக்கு, பஞ்சாயத்துக்கள்,
பஞ்சாயத்து யூனியன்கள், முனிசிப்பாலிட்டிகள், கார்ப்ப
ரேஷன்ஸ், அனைத்து கூட்டுறவு சங்கங்கள், வங்கிகள்
இவற்றிற்கு அ.தி.மு.க. அரசாங்கம், இந்த அரசாங்கம்
அதிகாரத்திற்கு வந்து ஆறாண்டுகளாகியும் தேர்தல்களை
நடத்தவில்லை. மாறாக மேற்கு வங்கத்தில் 1977-ல், இந்த
அரசாங்கத்தைத் தேர்ந்தெடுத்த அதே 1977-ல் தான்
அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அதிகாரத்திற்கு வந்
தார்கள. அங்கே இரண்டு தடவை லோக்கல் பாடீஸ் எலெக்
ஷன்ஸ் நடத்தியாகிவிட்டது. 1978-ல் ஒன்று நடத்தினார்கள்.
ஐந்தாண்டுகள் பூர்த்தியானதும் இப்போது 1983-ல் மீண்டும்
தேர்தல்கள் நடத்தினார்கள். ஒரு ஜனநாயகத்தில் இருக்கிற,
ஜனநாயக ப்ரேம்வொர்க்கில் இருக்கிற அந்த ஆர்கனைசேஷன்
கம்ப்ளீட்டாக ஆபீஸர்கள் கையிலிருக்கிறது.

ஸ்தல ஸ்தாபனங்களுக்கு இன்னும் தேர்தல்கள் நடத்தாத
விஷயத்தைப் பற்றிச் சொல்கிறபோது இந்த அரசாங்கத்தின்
கொள்கை எப்படி யிருக்கிறது என்று சொன்னால்அரசாங்கத்தின்
கொள்கை மேலே சர்வாதிகாரத்துடன் ஒன்று சேருவதும் —
அத்தாரி டேரியனிஸம் — கீழே ஸ்தல ஸ்தாபனங்களில்
சர்வாதிகாரத்தை இவர்கள் புகுத்துவதும் சரியான ஏற்பாடு,
சரியான கொள்கை சரியானது என்பதை 'கரெக்ட்' என்று
சொல்வதாக நினைக்கிறீர்களா, அப்படி நினைக்காதீர்கள். நான்
தமாஷாகச் சொல்கிறேன்.

அங்கேயும் சப்போர்ட் பார் அத்தாரிடேரியனிஸம். இங்கே கீழேயும் அத்தாரிடேரியனிஸத்தைத் திணிப்பது.

ஆட்டைக் கடித்து மாட்டைக் கடித்து மனிதனைக் கடிப்பது போல் நீதிபதிகளையும் அவர்கள் குடும்பத்தினரையும் வேவு பார்க் கும் ஏற்பாட்டை இந்த அரசு செய்துள்ளதை இந்த நாடு கண்டித் தது உங்களுக்குத் தெரியும். நாடாளுமன்றம் கண்டித்தது உங்க ளுக்குத் தெரியும். பல மாநில அவைகள் கண்டித்தது தெரியும். இந்த அவையிலும் அது வந்தது. இதைத் தாங்காமல் ஏப்ரல் 27-ம் தேதி நீதிபதிகள் மகாசபை கூட்டத்தைக் கூட்டி கண்டித்து தீர்மானம் போட்டார்கள். அது—பத்திரிகைகளில் வந்தது ஹிந்து ஏப்ரல் 28ம் தேதி வந்த தீர்மானம், நீதித்துறையின் உயர்ந்த அங்கங்களை வேவு பார்ப்பதற்கு உள்ளாக்குவதன் மூலம் மறை முகமாக அவர்களை அச்சுறுத்துவதும் அவமானப்படுத்துவது மாகும் என அந்த சபை அவர்கள் மீட்டிங்கில் அதிருப்தியைத் தெரிவித்தது. எங்களை வேவு பார்ப்பது என்றால் நாங்கள் பரம்பரைக் குற்றவாளிகளோ கடத்தல்காரர்களோ அல்ல என்று அந்தக் கூட்டத்தில் ஒரு நீதிபதி கூறினார். அரசாங்கத்திற்கு எதிராக தீர்ப்பு வழங்கினால் வெறுக்கத்தக்க டெலபோன்கள் வரு கின்றன என்று இன்னொரு நீதிபதி கூறினார். செப்டம்பர் மாதம் முதல் — நான் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். —மீண்டும் வேவு பார்க்கும் வேலை துவங்கி விட்டி ருக்கிறது என்று எனக்குத் தெரிகிறது. (குறுக்கீடு) ஓப்பன் கோர்ட்டில் ஒரு ஜட்ஜ் ஒரு ஜட்ஜ்மென்ட் விஷயமாக, ஆர்கு மென்ட் விஷயமாகப் பேசுகிறபோது ஓப்பனாக டிக்ளேர் பண்ணியது, அதனால் ரகசியம் ஒன்றும் கிடையாது. மீண்டும் செப்டம்பர் மாதம் இந்த வேவு பார்க்கும் வேலையை அரசாங்கம் ஆரம்பித்துள்ளது.

(முற்பகல் 10-30)

**மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குத் தெரிகிறது என்பதற் கும், நான் அறிந்து கொண்டேன் என்பதற்கும், எனக்கு அறிவிக்கப் பட்டது என்பதற்கும் வேறுபாடு இருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும். தெரிகிறது என்றால், நேரடியாக அவர் தெரிந்து கொண்டிருக்கிறார் என்பது பொருள். பிறகு விளக்கம் சொன்னார், நீதிபதி வழக்கு மன்றத்தில் சொன்னார் என்று. ஆகவே, பத்திரி கைச் செய்தியை அவர் சொல்கிறார்.

**திரு. ரா. உமாநாத் :** தலைவர் அவர்களே, பத்திரிகைச் செய்தி அல்ல,. கோர்ட் புரொசீடிங்சில் அட்டெண்ட் பண்ணிய எங்களுடைய வக்கீல் எங்களுக்கு நேரடியாக ரிப்போர்ட் பண்ணியது. அப்படி ஆரம்பித்திருக்கிறது என்று கோர்ட் புரொசீடிங்கில் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறது. அதனுடைய நேரம் பார்க்க வேண்டும். அதை எப்படி, எங்கு செய்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். இப்படிச் செய்தால், ஜனங்கள் என்ன நினைப் பார்கள் என்பதைப் பார்க்கவேண்டும்.



ராமபிரானசாத் ராவ் கமிஷன் புரொசீடிங்சுக்கு, சர்க்காருக்கு எதிராக ஸ்டே கொடுக்கப்பட்டமறுநாளே இந்த ''சர்வேலென்ஸ்'' ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது என்று அந்த ஜட்ஜே கூறியிருக்கிறார். நான் அதை வன்மையாகக் கண்டிக்கிறேன். ஆட்சியை நடத்துவது மாண்புமிகு முதல்வர் அவர்களா அல்லது இங்கே இருக்கக்கூடிய ஸ்பெஷல் பிராஞ்சா ? என்று ஜனநாயக உள்ளம் படைத்தவர்கள் கேட்கிற கேள்வி. நாங்கள் கேட்கிற கேள்வியும் அதுதான். இந்த அரசு ஜனங்களை நம்பவில்லை ; எதிர்க் கட்சிகளை நம்ப வில்லை ; சட்டமன்றத்தை நம்பவில்லை ; நாடாளுமன்றத்தை நம்பவில்லை ; நீதிபதிகளை நம்பவில்லை ; போலீசை மட்டும் தான் நம்பி ஆளுகிறது. போலீஸ் ராஜ் என்று கூறினால் அது மிகையாகாது என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

சமீபத்தில் தமிழக அரசு ஜாதி உணர்வை ஊக்குவிக்கிறது. ஒவ்வொரு ஜாதி கூட்டத்திற்கும் அந்தந்த ஜாதி அமைச்சர்கள் அனுப்பப்படுகிறார்கள். கொங்கு வேளாளர் நிகழ்ச்சியில் மாண்பு மிகு அமைச்சர் குழந்தைவேலு கலந்துகொண்டார். அதைப் பத்திரிகைகளிலே பார்த்தேன். முக்குலத்தோர் சங்க நிகழ்ச்சிக்கு அமைச்சர் திருநாவுக்கரசு போகிறார். யாதவ குல நிகழ்ச்சிக்கு அமைச்சர் இராகவானந்தம் அவர்கள் போகிறார்— போக வில்லை என்றால், 'ஐ ஆம் சப்ஜக்ட் டு கரெக்ஷன்'. பத்திரிகை களிலே வந்தது ; போகவில்லை என்றால் சொல்லட்டும்.

முன்னர் இப்படி ஒரு நிகழ்ச்சியில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கலந்து கொண்டார். பிறகு கேட்டபோது அவர் அந்த நோக்கத்தோடு கலந்துகொள்ளவில்லை என்று அப்போது பதில் சொன்னார்கள். பிறகு இந்த ஜாதிக்கூட்டங்களுக்கு அமைச்சர்கள் போவது அதிகமாகியிருக்கிறது என்பது என் மெயின் பாயின்ட். அதிலே, 'பாக்ட்ஸ்'சிலே திருத்தம் இருந்தால் — சப்ஜெக்ட் டு கரெக்ஷன்.

அது மட்டுமல்லாமல், புது அமைச்சர்களை நியமிக்கும்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு கோவேந்தன் அவர்கள் 'முத்தரையர்' சார்பாக நியமிக்கப்பட்ட ஒரு அமைச்சர் என்று பத்திரிகையிலே செய்தி வந்தது. அதேபோல், மாண்புமிகு எஸ். ஆர். இராதா அவர்கள் சௌராஷ்டிராவைச் சேர்ந்தவர் என்பதால் நியமிக்கப்பட்டதாக வும், வன்னியருக்கு பிரதிநிதித்துவம் போதாது என்பதற்கு மாண்புமிகு விஜயலட்சுமி அவர்களும் அமைச்சர்களாக நியமிக்கப் பட்டார்கள் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன் னார்கள். பிறகு அவர்களே, திறமையைப் பார்த்துப் போட்ட தாகவும் சொன்னார்கள். இதுதான் பத்திரிகைகளிலே வந்தது. இப்படிச் செய்வதன் மூலம் நாட்டுக்கு பேரபாயம் ஏற்படுகிறது என்று சொல்கிறேன். ஜாதி உணர்வைத் தூண்டி விடுவ தினால், ஜாதி சங்கங்கள் வளர்க்கப்படுகிறது. இதுவரையில் சங்கங்களை அமைக்காதவர்கள், அமைச்சர்கள் வருகிறார்கள் என்பதால், சங்கங்களை ஆரம்பிக்க முன்வருகிறார்கள் ; ஜாதி

சங்கங்களை ஆரம்பித்தும் இருக்கிறார்கள். இது ஓட்டு பெறுவதற்காக இந்த அரசு கையாளும் சாகசம் என்று நான் கருதுகிறேன். ஜாதித் துவேஷம், ஜாதிக் கலவரம் எங்கே கொண்டு போய் விடும் என்பதைப் பார்க்கவேண்டும். கேரளத்தில் வகுப்புவாத அமைச்சரவை அமைக்கப்பட்டு, அது எங்கே கொண்டு போய் விட்டது என்பது நம் எல்லோருக்கும் தெரியும். இந்து—முஸ்லீம் கலவரத்தினால், பயங்கரமான சூழ்நிலை ஏற்பட்டு, ஏராளமானவர்கள் செத்தார்கள். இந்து—கிறிஸ்தவர்கள் துவேஷம். அதிலும் அன்றைக்கு இந்த சர்ச் விஷயமாக கலவரம் ஏற்பட்டது. அதேபோல் நாயர் —ஈழவர் விரோதம். என்ன நடந்தது? இவர்களுக்குக்கெல்லாம்கூட மந்திரி சபையில் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டது. அப்படியும், அங்கே ஜாதிக் கலவரம்தான் ஏற்பட்டது. எனவே இந்த ஜாதியை ஊக்குவிக்கின்ற இந்த கொள்கை எத்தகைய அபாயத்தை விளைவிக்கக் கூடியது என்பதை நான் எச்சரிக்க விரும்புகிறேன்.

இன்னும் பல வாக்குறுதிகளைக் கொடுத்தார்கள். கர்ப்பிணிப் பெண்களுக்கு 3 மாதம் வரை ரூ. 50 கொடுப்பதாகச் சொன்னார்கள். எத்தனை பேர்களுக்கு கொடுத்தார்கள்? கணக்குத் தெரியாது. 5 கிலோ அரிசி வாங்கினால், ஒரு கிலோ அரிசி எக்ஸ்டிராவாக ஏழைகளுக்குக் கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். ஆனால், இப்போது கிராமங்களிலே இது 2 கிலோவாக குறைக்கப்பட்டிருக்கிறது. இதுவரை கொடுக்கப்பட்டு வந்த அரிசியே கொடுக்காத சூழ்நிலை இருந்து வருகிறது.

60 வயதான விவசாயத் தொழிலாளர்களுக்கு பென்ஷன் தருவதாக எலக்ஷன் டிக்ளரேஷனில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது அமுல்படுத்தப்பட்டிருக்கிறதா? ஒரு இலட்சத்து 99 ஆயிரம் பேர்களுக்கு கொடுக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. அதிலே 30,000 பேர்கள் தான் விவசாயத் தொழிலாளர்கள். ஆகவே, இது விவசாயத் தொழிலாளர்களுக்காக கொடுக்கப்பட்டது அல்ல. வறுமையைக் குறிக்கோளாக வைத்து கொடுக்கப்பட்ட ஒன்று. வறுமைதான் அதற்குத் தகுதி. 60 வயதான விவசாயத் தொழிலாளர்களுக்கு நீங்கள் வாக்குறுதி கொடுத்தபடி கொடுத்தீர்களா என்றால், இல்லை.

அடுத்து, நிலச் சீர்த்திருத்தத்தைப் பொறுத்தவரையில், தமிழகத்தைப் பொறுத்தவரைக்கும், படுதோல்வி அடைந்திருக்கிறது என்று நான் சொல்ல விரும்புகிறேன். அதைப்பற்றி எங்கள் கட்சியில் இருந்து அடுத்துப் பேசக்கூடிய எங்கள் தலைவர் விரிவாகப் பேசுவார். ஆனால் புதுப்புதுத் திட்டங்களை அன்றாடம் அறிவிப்பதில் இந்த அரசு இந்தியாவிலேயே முதலிடம் பெறுகிறது. ஒத்துக் கொள்கிறேன். பிறகு அந்தத் திட்டம் என்ன ஆயிற்று என்பதை யாரும் பார்க்க மாட்டார்கள். ஆனால் அறிவிப்பு மட்டும் தெரிகிறது. ஆனால் திட்டம் என்ன ஆயிற்று? சாதனை விளக்கப் பொதுக்கூட்டங்களில் அரசாங்கத்



தின் சார்பாக இந்த அறிவிப்புகளைப் படிப்பார்கள். அறிவிக்கப்பட்ட ஏராளமான திட்டங்கள், ஒன்று தோல்வியுற்றது., அல்லது ஊழல் மலிந்து போய்விட்டது அல்லது அலட்சியப்படுத்தப்பட்டது என்ற குற்றச்சாட்டை நான் இங்கே கொண்டு வர விரும்புகிறேன்.

இந்தியாவிலேயே கண்டுபிடிக்கப்படாத புரட்சித் திட்டம் எங்கள் முதல்வர்தான் கண்டுபிடித்தார் — அதுதான் தன்னிறைவுத் திட்டம் என்று மாண்புமிகு அமைச்சர் குழந்தைவேலு அவர்கள் அடிக்கடி சொல்வார்கள். ஆனால் முதல் கட்டமாக 69 பஞ்சாயத்துகளுக்கு மாநில அதிகாரிகள் கணக்குக் கொடுத்தார்கள். அதிலே 1982 ஆம் ஆண்டு கணக்கைப் பார்த்தால் வேலையின் குறிக்கோள் 22 கோடி ஆனால் பூர்த்தி செய்தது 24 கோடி. வேலை எண்ணிக்கையைப் பொறுத்தவரையில் குறிக்கோள் 5,110 ஆனால் பூர்த்தி செய்தது 5,335. மிஞ்சிவிட்டது எண், வெற்றி, வெற்றி என்று அமைச்சர் ஆரவாரம் செய்தார். ஆனால் ஆய்வு செய்து பார்த்தபோதுதான் குட்டு வெளியாகியது. அதாவது ரேண்டம் செக்கப் என்று கூறுவார்கள். அப்படி ரேண்டம் செக் அப் பண்ணினார்கள். அப்படி மூன்று பிளாக்குகளில் செக் பண்ணியதில் 1978-79, 1979-80-லே பழைய திட்டத்தில் பூர்த்தி செய்த தன்னிறைவுத் திட்டத்திற்கு முன்னாலேயே பூர்த்தி செய்யப்பட்ட—12 ரோடுகளுடைய கணக்கை தன்னிறைவுத் திட்டத்தில் பூர்த்திசெய்ததாக திருட்டுத்தனமாகச் சேர்த்துக் காட்டி உள்ளனர். இப்படிப் பல பிளாக்குகளில் செய்ததுதான் பூர்த்தி செய்ததற்கான கணக்கைக் காட்டி இருக்கிறார்கள். இது சாம்பிள் செக். எத்தனை பிளாக்குகளில் பூர்த்தி செய்வதற்கான கணக்கை 'ப்ளோட்' பண்ணி, 'இன்பிளேட்' பண்ணி காட்டியிருக்கிறார்கள் என்பது 'என்ட்டையர்' வேலைகளை செக் அப் பண்ணினால்தான் தெரியும்.

செங்கல்பட்டு மாவட்டம் குன்றத்தூர் பிளாக்கில் டெஸ்ட் செக் அப் பண்ணியதில் பத்து கிலோ மீட்டர் ரோடு தூரம் ஒரே வேலை — ஆனால் இரண்டு தரம் செய்ததாக பில் போட்டு வாங்கியுள்ளனர். ஜஸ்ட் ரேண்டம் செக் அப்பிலே தெரிந்தது. அதுவும் 'ரீ-மெட்டலிங்' பண்ணியதற்கு. முதல் முறை ரீ—மெட்டலிங் பண்ணிய ஒரு வாரத்திற்குள்ளேயே அதே ரோட்டிலே மீண்டும் 'ரீ-மெட்டலிங்' பண்ணியதாகக் காட்டி இருக்கிறார்கள். இது அசல் 'ஃபிராடு' தானே என்று அரசாங்கத்தைக் கேட்ட போது 'ஆம்' என்று அரசாங்கம் ஒப்புக் கொண்டது. இப்படி எத்தனை பிளாக்குகளில் பணம் சாப்பிட்டார்கள். This is authoritative. ஆதாரத்துடன் தான் பேசுகிறேன். எத்தனை பிளாக்குகளில் இந்த மாதிரி ஃபிராடு நடந்திருக்கிறது என்பது யாருக்குத் தெரியும்.

மேலும் இரண்டு மாவட்டங்களில் டெஸ்ட் செக் நடந்தது. அதில் 174 ரோடுகள், 205 கிலோ மீட்டர் கிராவல் போட்டு ரோலர் விடவேண்டும். ஆனால் இவர்கள் வெறும் கிராவல்

மட்டும் போட்டுப் போய் விட்டார்கள். பணத்தை சாப்பிட்டு விட்டார்கள். ரோடும் அவர்களுக்குப் பின்னாலேயே போய் விட்டது.

இன்னொரு மூன்று மாவட்டங்களில் 6 பிளாக்குகளில் டெஸ்ட் செக் நடந்தது. அதில் ஹைவேஸ் டிப்பார்ட்மென்ட்டில் ரோலர் வாடகை 8 மணி நேரத்திற்கு ரூ. 388 வாடகை. 94 வேலைகளுக்காக பஞ்சாயத்து யூனியன்கள் ஹைவேஸ் டிப்பார்ட்மெண்டிடம் 388 ரூபாய்க்கு வாடகைக்கு வாங்கி, 100 ரூபாய்க்கு கான்ட்ராக்டர்களிடம் வாடகைக்கு கொடுத்து விட்டார்கள். இதனாலே சர்க்காருக்கு நஷ்டம் 2½ இலட்சம். இந்த பணத்தை அரசும் பஞ்சாயத்து யூனியன்களும் சேர்ந்து ஹைவேஸ்க்குக் கட்டியது. ஆனால் இந்தக் கான்ட்ராக்டர்களுக்கு 2½ லட்சம் ரூபாய் லாபம். அந்தப் பணத்தை யார் யார் பங்குபோட்டார்கள் என்று விஜிலன்சுக்கு அனுப்பும் ஏற்பாட்டை செய்தால்தான் தெரியும். அவர்கள் இதைச் செய்வார்களா என்பது தெரியாது.

அந்த ஆடிட்டர் இறுதியில் கூறுகிறார், இந்தத் தன்னிறைவுத் திட்டத்தை அமல்படுத்தியதில் ஏராளமான முறைகேடுகளும் வீணான செலவுகளும் நடந்திருக்கின்றன என்று. நான் இப்பொழுது சொல்கிறேன். ஆம். இது தன்னிறைவுத் திட்டம்தான். அமைச்சருக்குத் தன் நிறைவுத் திட்டம்தான். அதிகாரிகளுக்கும், கான்டிராக்டர்களுக்கும் வயிறு நிறைவுத் திட்டம் என்று குற்றம் சாட்டுகிறேன்.

(முற்பகல் 10-40)

இன்னொரு அறிவிப்பு. நாங்கள் கரும்பு விதைகளுக்கு 6 பண்ணைகள் கட்டப்போகிறோம் என்று அறிவிப்பு வந்தது. 1978–79-ல் 6 மாவட்டங்களில் கட்டினார்கள். ஏக்கருக்கு 20 டன் முதல், 30 டன் வரை கிடைக்கும் என்று திட்டமிடப் பட்டது. ஆனால் கிடைத்தது 8 முதல் 18 டன்தான் வந்தது. ஆகவே 1979-ல் ஆரம்பித்த உடனேயே நான்கை மூடி விட்டார்கள். ஜூலை 1982-ல் ஐந்தாவதை மூடிவிட்டார்கள். இன்னும் ஒன்றை மட்டும் ஏன் மிச்சம் வைக்கவேண்டும் என்று அதையும் நவம்பர் 1982-ல் மூடிவிட்டார்கள். அறிவிப்பு 6 பண்ணைகள் என்று. ரேடியோவிலே பிராட்காஸ்ட். ஆனால் மூடியது நோபடி நோஸ். அறிவிப்பு இல்லை.

அதேபோல் அரிசனங்களுக்கு ஏராளமான திட்டங்கள் அறிவிப்பு செய்யப்பட்டது. ஆனால் என்ன நடக்கிறது? 375 பால் கூட்டுறவுச் சங்கங்கள் சாங்ஷன் செய்யப்பட்டது. ஆனால் 224 சங்கங்கள் செயலாற்றுகிறது என்கிறது ஆடிட்டருடைய ரிப்போர்ட். துப்புரவுத் தொழிலாளர்களுடைய குழந்தைகள் ஃப்ரி-மெட்ரிக் வரையிலும் படிக்க உதவித் தொகை என்று அறிவித்தார்கள். ஆனால் என்ன நடந்தது? 1977-லிருந்து 1982 வரைக்கும் 300 ஸ்காலர்சிப் அனௌன்ஸ் பண்ணினார்கள். ஆனால் கொடுக்கப்பட்டது வெறும் 59. அவுட் ஆப் 300, 59 தான் கொடுத்தார்கள். புரட்சிகரமான அரிசன சேவை இதுதான்.



நாங்கள் அரிசனங்களுக்கு இலவசமாக புஸ்தகம் கொடுக்கிறோம் என்று அறிவிப்பு செய்தார்கள். 1977–82-ல் 9 மாவட்டங்களில் 39 ஆயிரம் மாணவர்களுக்கு புஸ்தகங்கள் கொடுக்கவில்லை. குமரி மாவட்டத்திலேயேயும், செங்கற்பட்டு மாவட்டத்திலேயும் சிறுபான்மை மொழி பேசும் மாணவர்களுக்கு அந்த மொழிப்புத்தகம் ஏப்ரல் 1978 முதல் பிப்ரவரி 1980 வரை கொடுக்கவில்லை.

அரிசன மாணவிகளுக்கு ஹாஸ்டல் கட்டுகிறோம் என்று கார்ப்பரேஷன் அமைத்துள்ளோம் என்று அறிவித்தீர்கள். இது ஒரு அறிவிப்பு. ஏப்ரல் 1980 முதல் மார்ச் 1981 வரை 100 வீடுகள் கட்டத் திட்டம். மத்திய சர்க்கார் 1 கோடி கொடுத்தார்கள். மாநில சர்க்கார் 1 கோடி கொடுத்தார்கள். ஆனால் ஜூன் 1981-ல் அவர்களுக்கு 100 வீடுகள் கட்டுவதற்கு கொடுக்கப்பட்ட 2 கோடியில், 5½ லட்சம்தான் செலவு செய்திருக்கிறார்கள். அதுவும் 3 பர்செண்ட்தான். மத்திய சர்க்காரிடமிருந்து பணம் வாங்குவது என்பது பெரிய விஷயம். கிடைத்த பணத்தை வைத்துக் கொண்டு வீடு கட்டவேண்டிய இடத்திலே வெறும் 3 சதவீதம் என்று சொன்னால் கோபம் வரும். இன்-எபிசியன்சி என்று சொன்னால் கோபம் வரும். வாட் ஈஸ் திஸ்? இது எபிசியன்சைக் காட்டுகிறதா?

அடுத்து நீர்ப்பாசன கிணறுகளுக்கு உதவி செய்வதற்காக புதிய திட்டம் ஒன்று அறிவிக்கப்பட்டது. 1978 முதல் 1982 வரை 1,640 கிணறுகள் வெட்டப்படும் என்று சொன்னார்கள். ஆனால் 60 தான் பூர்த்தி செய்யப்பட்டது. இந்த 4 வருஷத்திலே, 1,640 எங்கே? 60 எங்கே? அரிசனங்களிடத்திலே இருக்கக்கூடிய உங்களுடைய ஆட்டிடியூட் என்ன என்பதைப் பாருங்கள்.

அடுத்து விருதுநகர் அருகில் பாவாலி கிராமத்தில் உள்ள அரிசனங்கள் சுடுகாடு கிடைக்க 3 ஆண்டுகள் போராடினார்கள். ஆனால் கிடைக்கவில்லை. ஏற்பாடும் செய்வதில்லை. ஆதி திராவிட டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன் கணக்கைப் பார்த்தால் 80லிருந்து 81 வரை, மற்றும் 1981 முதல் 1982 வரை உள்ள ஆண்டுகளில் 1½ கோடி சாங்சன் செய்யப்பட்டது. ரிலிஸ் பண்ணிக் கொடுக்கப்பட்டது. இதிலே 8 பஞ்சாயத்து யூனியன்கள் செக்-அப் செய்தபோது 35 சதவீதம் செலவே செய்யவில்லை என்று கண்டுபிடிக்கப்பட்டது. அந்தமாதிரி அவர்களுக்கு வேண்டிய சுடுகாடு அல்லது அதற்கு போகிற ரோடு ஆகியவற்றுக்காக ஒதுக்கப்பட்ட பணத்திலே 35% அன்-யுடிலைஸ்டு. இப்படித் தான் நடக்கிறது.

(திரு. ரா. உமாநாத்) [1983 நவம்பர் 8

அடுத்து முதுகுளத்தூரில் 40 அரிசனங்களுக்கு வீடு கட்டு வதற்கு பட்டா கொடுத்தார்கள். ஆனால் அவர்கள் போய் வீடு கட்டுவதற்குள்ளே, மேல் ஜாதிக்காரர்கள் அந்த இடத்திலே கட்டி விட்டார்கள். கலெக்டருக்கு அப்பீல் பண்ணியாகிவிட்டது. அவர்கள் உத்தரவு போட்டார்கள். ஆனால் 3 வருடம் ஆகி விட்டது. மேல் ஜாதிக்காரர்கள்தான் அங்கே தங்கியிருக் கிறார்கள். கலெக்டருக்கும் அப்பீல் கொடுத்தார்கள். ஆர்.டி.ஓ. தாசில்தார் ஆகியோருக்கும் அப்பீல் கொடுத்தார்கள். அமைச்சருக்கும் ஏராளமான பெட்டிஷன் வந்திருக்கும். அவரும் கவலைப்படவில்லை என்பதைத்தான் நான் சொல்ல விரும்பு கிறேன்.

அடுத்து மலைஜாதி மக்களின் நல்வாழ்விற்காக ஆடு கொடுக் கப்போகிறோம், மாடு கொடுக்கப்போகிறோம் என்று பல அறிவிப்புகளைச் செய்தார்கள். அவைகள் அனைத்தும் என்ன ஆயிற்றுத் தெரியுமா? கல்ராயன் மலையில் 36 டெஸ்ட் செக் செய்யப்பட்டு, அதிலே என்ன தெரிந்தது. என்றால், 1977–78-ல் கொடுத்த ஆடுகளில் 78 சதம் செத்துப்போய்விட்டது. சில மலைக்குச் செல்லும் வழியில் செத்துப் போய்விட்டது. சில மலைக்குச் சென்ற ஓரிரு வாரங்களில் செத்துவிட்டது.

அடுத்து லேட்டஸ்டாக ஒரு அறிவிப்பு முந்தாநாள் பேப்பரில் பார்த்தேன். மலைஜாதி மக்களுக்கு மானிய விலையில் கழுதை களை அரசு சப்ளை செய்யப்போகிறது என்று. சேலம் மாவட் டம் கொல்லி மலையில் வாழும் மலைஜாதியினர், தாங்கள் உற்பத்தி செய்யும் பொருள்களை எடுத்துச் செல்ல 50 சதவீத மானிய விலையில் ஒருங்கிணைந்த மலை ஜாதியினர் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ஒரு ஜோடி கழுதை வழங்கப்படும். தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம் உங்களுக்கு நன்றாகத் தெரியும். அங்கே இப்போது வந்திருக்கக்கூடிய கழுதைகள் எல்லாம் நடுங்க ஆரம்பித்திருக்கின்றன. ஏற்கெனவே அங்கே வந்த ஆட்டினு டைய கதி என்ன என்று தெரியவில்லை. வருகிற வழியிலேயே ஆடுகள் செத்தன என்று சொல்கிறார்கள். கழுதைகள் அடு வாரத்திலேயே சாகப்போகிறோம் என்று பயந்து நடுங்கக் கூடிய நிலைமை இருக்கிறது. அந்த அளவுக்கு அந்தத் திட்டம் நடந்து வருகின்றது.

இன்னொரு மன்னிக்க முடியாத குற்றம் என்னவென்றால், தர்மபுரி மாவட்டம் வறட்சியினால் பாதிக்கப்பட்ட மாவட்டம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அங்கே இருக்கும் மக்களுக்கு ஊதியம் இல்லை, வேலை இல்லை, பட்டினி கிடக்கும் சூழ்நிலை அங்கே நிலவி வருகிறது. ஆனால் அந்த இடத்திலேதான் நக்ஸலைட்டுகள் இருக்கிறார்கள் என்று சொல்லி பலரைச் சுட்டுக் கொன்றிருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை கொடுப் பதற்கு பதிலாக, கூலி கொடுப்பதற்குப் பதிலாக, நக்ஸலைட்டு கள் என்று பெயர் சூட்டப்பட்டு சுட்டுக் கொலை செய்யப் பட்டிருக்கிறார்கள். 'அரசு தனக்கு கிடைக்கும் நிதியை



1983 நவம்பர் 8] (திரு. ரா. உமாநாத்)

வைத்துத்தானே அவர்களுக்கு உதவி செய்ய முடியும். அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். நியாயம் தான்' என்று முதலமைச்சர் அவர்களே ஒப்புக் கொண்டிருக்கிறார். ஆனால் ரிப்போர் டைப் படித்துப் பார்த்தால்தான் உண்மை நிலைமை தெரி கிறது. வறட்சிக்குள்ளான மாவட்டம் என்ற வகையில் அந்த மாவட்டத்திற்கு ஒதுக்கிய பணத்தை 1977-லிருந்து 1982 வரை செலவு செய்யாமல் வைத்திருக்கிறார்கள். எவ்வளவு? 1 கோடியே 30 லட்சம் ரூபாய் அப்படியே செலவு செய்யப்படாமல் கிடப்பில், போடப்பட்டிருக்கிறது. Can there be a worst crime? நான் கேட்கிறேன். அவர்கள் கூலி கேட்டார்கள், வேலை கேட்டார்கள். அதற்காகப் போராடினார்கள். ஆனால் அவர்கள் நக்ஸலைட்டுகள் என்று கொல்லப்படுவது நியாயமா? ஆனால், Rs. 1. 30 crores were lying idle. இதிலே டபுள் கிரைம் இருக்கிறது. ஒன்று கிடைத்தப் பணத்தை அவர்களுக்கு வினியோகம் செய்யாமல் இருப்பது; அப்படிச் செய்யாமல் இருந்த குற்றத் திற்காக அரசாங்கம் தன்னைத்தானே தண்டித்துக் கொள்வதற்குப் பதிலாக, பலருடைய உயிரை பலி வாங்கியது. This is a double crim . ஆகவே, நீதியை பராமரிக்க முடியாத, இந்த அரசின் திறமையில்லாத்தனத்திற்கு கொடுக்கப்பட்ட உயிர் பலிதான், அந்தச் சுடப்பட்டவர்களின் உயிர்கள், என்று சொல்ல விரும்புகிறேன்.

அதேபோல இராமநாதபுரம் மாவட்டமும் வறட்சியினால் பாதிக்கப்பட்ட மாவட்டம். அங்கே ஒரு கோடியே 60 லட்சம் ரூபாய் அப்படியே செலவு செய்யப்படாமல் கிடப்பிலே போடப் பட்டிருக்கிறது. திட்டங்களை அறிவிப்பது, அமல்படுத்தா மல் இருப்பது, அரைகுறையாக நிறைவேற்றுவது, ஊழல் கதவுகளை திறந்து விடுவது, அதை ஜனங்களிடமிருந்து மறைப் பது, ஆகிய இவைகள் தாம் வெல்ஃபேர் புரோக்கிராம் ஸ்கீமைப் பொறுத்தவரைக்கும் இருக்கும் சூழ்நிலை என்று சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து ஊழல் விஷயம். மக்கள் மத்தியில் என்ன பரவ லாகப் பேசப்படுகிறது தெரியுமா? ஊழலற்ற அரசாங்கம் அமைக்கப்படும் என்று ஒரு வாக்குறுதி தேர்தல் காலத்தில் மக்கள் மத்தியில் கொடுக்கப்பட்டது. ஆனால் மக்களின் மத்தி யில் பரவலாக இருந்து வரும் பேச்சுக்களை கவனித்தால், இந்த அரசாங்கத்தின்கீழ் லஞ்சம், ஊழல் என்பது அட்லாண்டிக் ஓஷன் போல மாக்கடல் போலத் தோன்றுகிறது என்று பேசிக் கொள்கிறார்கள். பல்வேறு நிலைகளில் இதைக் கவனித்துப் பார்த்தால், இது உண்மை என்று தெரிகிறது.

மெடிக்கல் இன்ஜினியரிங் போன்ற பல்வேறு படிப்புகளில் மாணவர்களை சேர்ப்பதில் இன்றைய முறையில் ஜனங்கள் பரிபூர்ணமாக நம்பிக்கை இழந்து விட்டார்கள். லஞ்சம் கொடுத்தால் சுலபமாக சீட்டு கிடைக்கும் என்ற நிலையை இன்று ஜனங்கள் நம்புகிறார்கள். செலக்ஷன் முறையே

கொலாப்ஸ் ஆகிவிட்டது. அதனுடைய பிரதிபலிப்புத்தான் இந்த ஆண்டு 105-க்கும் மேற்பட்ட ரிட் மனுக்கள் ஹைகோர்ட்டிலே போடப்பட்டிருக்கும் காட்சி. அதற்குமேல் இல்லை என்று அர்த்தம் இல்லை. போடுவதற்கு பணம் இல்லாததால் இன்னும் அதிகமாக ரிட்டுகள் வரவில்லை. உதாரணமாகப் பார்த்தால், எக்ஸ்.ஜே.ஸி. சுபேதார், ரங்கசாமி என்கிற மிலிட்டரி மேன், எனக்கு மதுரையிலிருந்து எழுதுகிறார்.

ரெஜிஸ்டிரேஷன் நெம்பர் 12548—அக்கிரிகேட் மார்க் 85 சதவீதம், பி.ஸி—செலக்ட் ஆகியிருக்கிறார்கள். ரெஜிஸ்ட்டிரேஷன் நெம்பர் 14153, 85 சதவீதம் பி. ஸி. செலக்ட்டட் எஸ். கல்பனா, 83 சதவீதம், பி.ஸி. செலக்டட். ஆனால் இந்த எக்ஸ் சர்வீஸ்மேனுடைய மகள், நாட்டுக்காக உயிரையே பணயம் வைத்தவருடைய மகளுக்கு கிடைக்கவில்லை. அவர்களுடைய ரெஜிஸ்ட்டிரேஷன் நெம்பர் 22744. மார்க் 88 சதவீதம், பி.ஸி. பட் நாட் செலக்டட். பணம் இல்லை. ஆகவே நான் ரிட் போடவில்லை என்று கண்ணீர் விட்டு எழுதியிருக்கிறார். நிலைமை இப்படி இருக்கிறது. நிலைமை இப்படி இருக்க, இந்த இன்டர்வியூ செலக்ஷன் முறையில் லஞ்ச ஊழல் மலிந்திருக்கும் என்று ஜனங்கள் ஏன் நம்ப மாட்டார்கள்?

கேரளத்தில் இன்டர்வியூ சிஸ்டமே இல்லை. மார்க் லிஸ்ட் வரிசையில் பகிரங்கமாக நோட்டீஸ் போர்டில் போடுவார்கள். ஆனால் இந்த சர்க்கார், இன்டர்வியூ சிஸ்டத்தை உடும்புப் பிடியாக பிடித்திருக்கிறது. ஏன் என்றால், இந்த சிஸ்டத்திலே தான் ஊழலுக்கான சகல விதமான ஏற்பாடுகளையும் அதற்குள்ளாகவே செய்ய முடியும். அதனால்தான்.

அடுத்து, பி.டபிள்.யூ.டி., இந்த பி. டபிள்யூ டிபார்ட்மெண்ட் ஊழலில் பெரிய பெருச்சாளி. சமீபத்திலே இந்து, எக்ஸ்பிரஸ் பத்திரிக்கைச் செய்தி ஒன்று பார்த்தேன். பி.டபிள்யூ.டி. அமைச்சர் ஆர்.எஸ்.ஆர்.எம். ஆஸ்பத்திரிக்கு திடீர் சோதனைக்கு போனாராம். 1981–82 ஆம் ஆண்டில் விசேஷ மராமத்திற்காக கொடுத்த 3 லட்சம் ரூபாயை, அதற்கான வேலைகள் முடிவு பெறாமலேயே காண்டிராக்டர் செக் வாங்கியிருக்கிறாராம். ஆகவே, ஒரு அஸிஸ்டென்ட் எக்ஸிக்யூட்டிவ் என்ஜினீயரை அங்கேயே சஸ்பென்ட் செய்தாராம். அத்தோடு லிமிடெட் டென்டர் இனிமேல் கொடுக்க மாட்டேன்' பகிரங்க ஓபன் டென்டர்தான் கொடுப்பேன் என்று அவர் சொன்னதாக ஸ்டேட்மென்டும் பத்திரிகையில் வந்திருக்கிறது.

(முற்பகல் 10-50)

ஆனால் வேடிக்கை என்னவென்றால் 14—9—1983 ஆம் தேதி சஸ்பென்ட்செய்யப்பட்ட அதிகாரிகள் 28—10—1983 ஆம் தேதி அதாவது 1½ மாதத்திற்குள்ளாக சஸ்பென்ஷனை கேன்சல் பண்ணி ரிஇன்ஸ்டேட் பண்ணப்பட்டார்கள். ஏன் என்றால்.

Pending investigation they are reinstated,



என்று சொல்கிறார்கள். அப்படியானால் ஆரம்பத்திலே பென்டிங் இன்வெஸ்டிகேஷன் என்றால் கன்டின்யூ இன் சர்வீஸ் தானே. ஏன் சஸ்பென்ட் பண்ணினீர்கள்? அதை ரத்து செய்த தன் மர்மம் என்ன? பென்டிங் இன்வெஸ்டிகேஷன் என்று சொல்லி கன்டின்யூ பண்ணலாம் என்றால்

Why did you suspend one month before?

அதனுடைய ரகசியம் என்ன? நான் கேட்கிறேன். லிமிடெட் டென்டர் தகாதது என்றால் ஏன் இத்தனை காலம் நீங்கள் கொடுத்து வந்தீர்கள்? சமீபத்திலே பத்திரிக்கையிலே ஒரு விரிவான செய்தி வந்துள்ளது. அதை நம்முடைய அமைச்சர் மறுக்கவில்லை. ஏனென்றால் ஆல் டீடெய்ல்ஸ் அதனுடைய விவரங்கள், நம்பர், எவ்வரிதிங் கொடுத்திருக்கிறார்கள. 1981–83 ஆம் ஆண்டுகளில் மாசானராஜன் என்பவருக்கு 13.40 லட்ச ரூபாய்க்கு 40 வேலைகள் கான்ட்ராக்ட். அதே பீரியடிற்கு தமிழ்செல்வத்திற்கு 3.60 லட்ச ரூபாய்க்கு கான்ட்ராக்ட். அதே பீரியடிற்கு பேச்சிமுத்துவிற்கு 5·81 லட்ச ரூபாய்க்கு கான்ட்ராக்ட் கொடுக்கப்பட்டிருக்கிறது. கான்ட்ராக்ட் நம்பர் மற்ற விவரங்களுடன் அந்த பத்திரிக்கையில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. அதோடு நிற்காமல் ஒரு வேலைக்கு 2 தரம் பணம் கொடுக்கப்பட்டது பற்றியும் அந்தப் பத்திரிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளது. நம்பரோடு போடப்பட்டும் இருக்கிறது. ஒரே தரம் தான் அந்த வேலை செய்யப்பட்டிருக்கிறது. ஒரு லட்சத்து இருபதாயிரம் ரூபாய்க்கு ஒரு வருஷத்தில் செய்ததாகக் காட்டி மறு வருஷத்திலும் செய்ததாகக் காட்டி—ஆனால் செய்தது ஒரு தடவைதான்—இரண்டு தரம் பேமென்ட் செய்யப்பட்டிருக்கிறது.

சிரணி அரங்கம் ஸ்பெஷல் ரிப்பேர்ஸ் செய்யப்படவில்லை. ஆனால், 21,389 ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பத்திரிக்கை என்ன சார்ஜ் பண்ணுகிறது என்று சொன்னால் அந்த மூவரில் முதல் இருவர் அமைச்சரின் சொந்தக்காரரார் என்று ஒப்பனாக குற்றஞ்சாட்டியது, அமைச்சர் இது வரைக்கும் மறுக்கவில்லை. நான் பத்திரிக்கையில் அதைப் பார்க்கவில்லை. ஒன்றும் இல்லாததற்கு எல்லாம் கேஸ் போடக்கூடிய சர்க்கார் இந்த குற்றச்சாட்டிற்கு கேஸ் போடவில்லை. அதற்குப் பதிலாக இந்தத் தகவலைக் கொடுத்தது யார் என்று தேடிப் பிடித்து ஆர்.எஸ்.ஆர். எம். ஹாஸ்பிடலில் அந்த இரண்டு இன்ஜினீயர்கள் என்று சந்தேகப்பட்டு அதை செக் செய்வதற்காக போய் அவர்கள் சஸ்பென்ட் செய்யபட்டார்கள். சஸ்பென்ட் பண்ணினால் அதற்கு ஆதாரம் வேண்டுமல்லவா? ஆகவே சீனியர் என்ஜினீயரிடம் அவர்களுடைய வேலை சரியில்லை என்று சொல்லி சர்ட்டிபிகேட் வாங்க முயற்சித்தார்கள். ஆனால் சீனியர் என்ஜினீயர் மறுத்தார், ஆகவே ரீஇன்ஸ்டேட் பண்ணினார்கள்.

— ...ted to be reinstated again.

இனிமேல் லிமிடெட் டெண்டர் விட மாட்டேன், ஓப்பன் டெண்டர்தான், பத்திரிக்கையிலே பப்ளிஷ் பண்ணி, ரிஜிஸ்டர்டு காண்ட்ராக்டர்களுக்கு எல்லாம் நோட்டீஸ் கொடுத்துதான் செய்வோம்என்று சொன்னாரே அமைச்சர், நான் கேட்கிறேன், அப்படி சொன்னபிறகும் நீங்கள் லிமிடெட் டெண்டர் கொடுக்கவில்லையா கொடுத்திருக்கிறீர்கள்?

Govt. House Sub-division—A.E.E. Devadass Sundaram—3works Kalaivanar Arangam and 10 other works.

2 லட்ச ரூபாய். இது லிமிடெட் டெண்டர் கொடுக்கமாட்டேன் என்றும் ஓப்பன் டெண்டர்தான் கொடுப்பேன் என்றும் சொன்ன பிறகு கொடுத்தது. அதைப்போலவே

North-west Sub-division—A.E.E.Victor Jayaraj—4 works in Kilpauk Medical College, Opthalmic Hospital—3 works, Woman and Children Hospital—3 works

ஆகிய பத்து வேலைகளுக்கு 1 லட்சத்து 60 ஆயிரம் ரூபாய்க்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. லிமிடெட் டெண்டர் கொடுக்க மாட்டேன் என்று சொன்னபிறகும் ஏன் கொடுத்தீர்கள், சோழியன் குடுமி சும்மா ஆடாது என்று தமிழிலே நாம் சொல்வோம்? லிமிடெட் டெண்டர் என்று சில குறிப்பிட்டவர்களுக்கு கொடுப்பது, ஆகவே அது நல்ல கறவை மாடு. அதிலே அமைச்சருக்கு கமிஷன் இல்லை என்று நான் சொன்னாலும் ஜனங்கள் நம்புவார்களா? என்ன செய்வது? நான் கூறலாம். ஆனால் ஜனங்கள் நம்பமாட்டார்களே, இந்த பேக்ட்களை எல்லாம் அவர்கள் பார்க்கிறார்கள்.

No contradiction by the Minister also.

இப்போது நான் சொல்லியிருப்பது எல்லாம் சினிமாவிலே ஒரு ட்ரெய்லர் ப்லிம் காட்டுவதுமாதிரிதான். முழுப்படமும் காண்பித்தால் கோடிக் கணக்கான ரூபாய்க்கு ஓடும்.

இன்னொரு ஊழல், சோஷியல் பாரஸ்ட்ரி. மாண்புமிகு அமைச்சருடைய மறுப்பையும் நான் பார்த்தபிறகுதான் இதைச் சொல்கிறேன். ஒரு காடு வளர்ப்புத் திட்டம் நீண்டகாலமாக அமைக்கப்பட்டது. அதன் நோக்கம் மரங்கள் வளர்த்து கிராம மக்களுக்கு விறகு வழங்குவதுதான். ஆனால் சமீபத்திலே மாநில அரசு ஏற்பாடு செய்த ஆராய்ச்சியிலிருந்து ஒரு விஷயம் வெளிவந்தது. மாநிலத்தில் இத்திட்டத்தின் கீழ் யுகலிப்டஸ் மரம் வளர்க்கிறார்கள் செங்கற்பட்டு மாவட்டத்திலே மட்டும் 1975–76 லிருந்து 1982–83 வரை —இந்த அரசாங்கத்தினுடைய 4 வருஷம் அதிலே கவர் ஆகிறது— கிராம மக்களுக்குக் கொடுக்காமல் ஒரு பேப்பர் பேக்டரிக்கு 17,422 டன்களை விற்றார்கள். அதிலே அதிர்ச்சி தரும் விஷயம் என்னவென்றால் மரத்தின் உற்பத்திச் செலவு டன்னுக்கு 640 ரூபாய். முதலாளிக்கு விற்றது ஒரு டன்னுக்கு 80 ரூபாய். கேரளத்தில் அதே யூக்லிப்டஸ் மரம் டன் 275 ... கர்நாடகத்தில் 205 ரூபாய்க்கு



விற்கிறார்கள். தமிழ்நாட்டில் முதலாளிக்கு 80 ரூபாய்க்கு விற்கிறார்கள். அந்த அதிர்ஷ்டசாலி முதலாளி யார் நம் மாண்புமிகு முதலமைச்சர் இதயத்தில் இடம் பிடித்த சாட்சாத் விசுவநாதன் அவர்கள் தான். (குறுக்கீடு) நான் பஸ் முதலாளி விஸ்வநாதன் அவர்களைச் சொல்லவில்லை. பேப்பர் பேக்டரி முதலாளியை சொல்கிறேன். ஒரு டன்னுக்கு உற்பத்தி செலவிலிருந்து 80 ரூபாயை கழித்தால் ரூ. 560 கிடைக்கிறது. ஆனால் விற்கிற போது உற்பத்தி செலவுக்கா நாம் விற்போம். ஒரு மார்ஜின் லாபம் வைத்து அல்லவா விற்போம். எவ்வளவு கோடிக்கணக்கான ரூபாய்கள் அங்கே கிடைத்து இருக்கும் என்று நீங்கள் இதிலிருந்து பார்க்கலாம். I want the Government to come up with the truth உண்மை என்ன என்பது வெளியில் வரவேண்டும். இது என்ன தர்மமா, பிச்சைக்காரர்களுக்கு போடுவதற்கு. விஸ்வநாதன் என்ன பிச்சைக்காரரா இல்லையே கோடீஸ்வரர் அவர்களுக்கு ஏன் பொதுச்சொத்தை அள்ளிக் கொடுத்தீர்கள். இது ஊழல் இல்லையா? அப்படி என்றால் எதற்கு தான் ஊழல் என்பதை எனக்குச் சொல்லிக்கொடுத்தால் பரவாயில்லை.

அடுத்து, டிரான்ஸ்போர்ட்டில் ஆளை எடுப்பது. முறைப்படி ரெக்ரூட்மெண்டு நடப்பதாக நீங்கள் நினைக்கிறீர்களா? அப்ளிகேஷன் கால் ஃபார் செய்து செலக்ஷன் நடத்தி எடுக்கிறீர்களா? இல்லையே என் சொந்த அனுபவத்தில் நான் சொல்கிறேன். சொந்த அனுபவம் என்றால் எங்கள் பார்ட்டி செகரட்டரி நல்லசிவம், எம்.எல்.சி. அவர்களும் திரு. ஹேமச்சந்திரன், எம்.எல்.ஏ., அவர்களும் ஒரு நாள் முதலமைச்சர் அவர்கள் தோட்டத்தில் முதலமைச்சரை பார்ப்பதற்காக காத்து நிற்கும்போது டிரான்ஸ்போர்ட் மினிஸ்ட்டர் மாண்புமிகு திரு. முத்துசாமி அவர்கள் அங்கே வந்தார்கள். வந்தபோது அங்கே ஆளும் கட்சி எம்.எல்.ஏ. ஒருவர் இருந்தார். அவர் அமைச்சரைப் பார்த்து டி.டி.சியில் 6 இடங்கள் காலியாக இருக்கின்றன. இந்த 6 இடங்களையும் எனக்கு கொடுங்கள் என்று கேட்கிறார். இவர்கள் 2 பேரும் உட்கார்ந்து இருக்கிறார்கள். நீங்கள் கேட்கின்ற ஐ விட்னஸ்ஐ நான் முதலமைச்சருக்கு சொல்கிறேன். பார்ட்டி செகரட்டரி உட்கார்ந்து இருக்கிறார். 6 இடங்களை பில் அப் செய்வதை எனக்குக் கொடுங்கள் என்று கேட்கிறார். அதற்கு அமைச்சர் என்ன சொன்னார் என்றால் இது எல்லாம் செலக்ஷன் படி நடத்த வேண்டும் என்று சொல்லவில்லை. 6 இடங்களில் 3 இடங்களை நீங்கள் வைத்துக்கொள்ளுங்கள் மீதி 3 இடங்களை இன்னொரு எம்.எல்.ஏ.வுக்கு கொடுத்து விடு என்கிறார். This is how rec uitma t is going onin the Transport என்று நான்சொல்ல விரும்புகிறேன்.

ஆட்சியில் இருக்கின்ற அ.இ.அ.தி.மு.க. அரசு ஊழலைஎதிர்த்து போராடுவது எங்கே நிற்கிறது என்றால் இந்த ஆட்சியின் ஊழலை யாராவது சுட்டிக்காட்டினால் கொலையில் முடியும் அல்லது கொலை முயற்சியில் முடியும். புதுக்கோட்டையில் எங்களுடைய

தாலுக்கா செகரட்டரி தோழர் ஆரோக்கியசாமி, பல
குளங்கள் காண்டிராக்ட்டுக்கு விடாமல் பணம் வழங்கினார்கள்
என்று தாலுக்கா செகரட்டரி ரிப்போர்ட் செய்தார்
கலெக்ட்டருக்கு. அதனால் அவரை ஆளை வைத்து கொல்லப்
போய் அவர் உயிர் தப்பியது பெரிய விஷயம்.

அவுசிங் போர்ட் ஊழலைப் பற்றி தோழர் ரமணி அவர்கள்
இங்கே அம்பலப்படுத்தியது, போனில் அவரை கொலை
செய்வேன் என்று மிரட்டியது இது தான் பேலன்ஸ்சீட். ஊழலை
எதிர்த்து போராடுவேன் என்று உறுதி கொடுத்து அரசாங்கம்
அமைத்ததால் வருகிற கணக்கு என்ன என்றால் ஊழல்
விஷயத்தில் ஊழலை அம்பலப்படுத்தினால் கொலைக்கு தயாராக
வேண்டும், மரணத்திற்கு தயாராக வேண்டும் என்ற நிலை
இந்த அரசினுடைய அந்த வாக்குறுதியின் சம்பந்தமான
பேலன்ஸ் சீட். ஊழல் செய்வது மட்டும் அல்ல...............

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் எவ்வளவு நேரம்
வேண்டும் உங்களுக்கு?

**திரு. ரா. உமாநாத் :** எனக்கு 2 மணி நேரம் வேண்டும்
சார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதற்கு 2 நாள் ஒதுக்கி
யிருக்கிறேன். எல்லாக் கட்சியிலும் ஒவ்வொருவர் பேசவேண்டும்.
நீங்கள் கொஞ்சம் அட்ஜஸ்ட் செய்துகொண்டால் மற்றவர்களும்
பேசுவார்கள்.

**திரு. ரா. உமாநாத் :** சென்ஸ்சூர் மோஷன் என்றால் அது
ஒரே சப்ஜெக்ட். ஆனால் நோ கான்பிடென்ஸ் மோஷன் என்பது
பல பாலிசியை டச் செய்யவேண்டி இருக்கிறது. நீங்கள் தயவு
செய்து ஒத்துழைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11–00)

ரவுடியிசத்தை ஒரு ஆயுதமாக இந்த அரசு மேற்கொள்ள ஆரம்
பித்து இருக்கிறது. எதிர்க் கட்சிகளை அழிக்கவும், ஜனநாயக
இயக்கங்களை நசுக்கவும், ரவுடியிசத்தை இந்த அரசு ஒருகொள்கை
யாக அனுஷ்டித்து இருக்கிறது என்பதை நான் சொல்ல விரும்பு
கிறேன். நான் கூறும் சம்பவங்கள் உங்களுக்கு புதிது அல்ல.
ஆனால் கோர்வையாக பார்க்கவேண்டும். பந்து செய்ய இருந்த
வியாபாரிகளை அச்சுறுத்தியது, திருவாளர்கள் நெடுமாறன், நல்ல
சிவன் கார்களை ஆளும் கட்சியினர் நொறுக்கியது. திரு.
நெடுமாறன் வீட்டை சோடா பாட்டிலால் தாக்கியது, மதுரை
ஆதினத்தின் மைக்கை பிடுங்கியது, அவர் திருச்செந்தூரில் தங்கி
யிருந்தஇடத்தையும், மதுரை வீட்டையும் சோடா பாட்டிலால்
தாக்கியது, பி.ஜே.பி. தலைவர் கோவையில் கூட்டம் பேச வந்த
வழியில் அடித்து நொறுக்கப்பட்டது,

தொகுதி வேலைக்காக அரசாங்க அலுவலகத்திற்கு
திரு. குமரிஅனந்தன் சென்றபொழுது ஆளுங்கட்சியினர் கொலை
செய்ய முயற்சித்தது. திரு. அடியார் மதுரையில் கூட்டமொன்றில்
பேசுவதற்கு முன் அதே மேடையை ஆளுங்கட்சியினர் நொறுக்கி



தரை மட்டமாக்கியது – இவையெல்லாம் ஒரு குறுகிய காலத்தில் வரிசையாக நடந்திருக்கின்றன. இதில் முதல்வரின் பார்வை என்ன?

முதல்வர் கார் தாக்கப்பட்டது என்ற செய்தி வந்தவுடனே – நான் உண்மையிலே சந்தோஷப் பட்டேன், முன்னாள் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் டி.எம்.கே. ஆட்கள்தான் தாக்கினார்கள் என்று பத்திரிகையில் வந்தபிறகும் கூட, தாக்கியதைக் கண்டித்து அவர்கள் அறிக்கை விட்டார்கள். எல்லா கட்சிக்காரர்களும் கண்டித்து அறிக்கை விட்டார்கள். ஆனால், நம்முடைய மாண்புமிகு முதல்வர், இத்தனை எதிர்க்கட்சித் தலைவர்கள் தாக்கப்பட்டபொழுது, கண்டிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்தத் தாக்குதல் நடப்பதை அவர் விரும்பவில்லை என்றால், கண்டித்திருப்பார் அல்லவா? When leaders were attacked no, condemnation.

எல்லாவற்றையும்விட பச்சையாக நடத்தப்பட்டது பி.டி.சி. – டிரான்ஸ்போர்ட்டிலே. 7–5–1983 ஆம் தேதியன்று 50 ஆளுங் கட்சியினர் திருவொற்றியூர் டெப்போவிலிருந்து வந்து தண்டையார்ப்பேட்டை டெப்போ கேட்டில், சி.ஐ.டி.யூ. ஆட்களை அடித்தார்கள். அவர்கள் வந்தது எதிலே தெரியுமா? என் சி187 என்ற பி.டி.சி. பஸ் ; டி.எம்.என். 1642 என்ற பி.டி.சி. ஜீப். அதற்கு என்ன அர்த்தம் ? பி.டி.சி. நிர்வாகம் கொடுத்தது என்று அர்த்தம் ? சக தொழிலாளிகளை அடிப்பதற்கு பி.டி.சி. நிர்வாகம் பஸ்ஸும் ஜீப்பும் கொடுத்தது என்று சொன்னால், என்ன அர்த்தம் ? சி.ஐ.டி.யூ.வைச் சேர்ந்த திரு. பெரியசாமி, போலீஸ் ஸ்டேஷனில் கம்பிளெயின்ட் பண்ணப் போகிறார். போலீஸ் ஸ்டேஷனுக்குள்ளே ஆளுங் கட்சியினர், சர்க்கிள் இன்ஸ்பெக்டர் முன்னாலேயே அடிக்கிறார்கள். சர்க்கிள் இன்ஸ்பெக்டர் பார்த்துக் கொண்டு சும்மா நிற்கிறார். பிறகு, டி.எஸ்.பி. வந்து கண்டித்தார் சர்க்கிள் இன்ஸ்பெக்டரை. இரண்டு மூன்று நாட்களுக்குள் டி.எஸ்.பி. மாற்றப்பட்டார்.

இன்னொரு நாள் ஜாமீன் எடுப்பதற்காகக் கோர்ட்டுக்குப் போகிறார்கள் நம் தோழர்கள். அந்தக் கோர்ட்டுக்குள்ளேயே ஆளுங்கட்சியினர் பகிரங்கமாக, நம் தோழர்களை இரண்டு தரம் அடித்தார்கள் ; ஜாமீன் எடுக்கப் போனவர்களை அடித்தார்கள்.

ஹோசூரிலே, நம்முடைய சி.ஐ.டி.யூவைச் சேர்ந்த நல்ல ஊழியர், அசோக்லேலண்ட் ஊழியர், சக்திவேல் கொலை செய்யப்பட்டார். இன்றையவரையில் நடவடிக்கை இல்லை. ஆளுங் கட்சிக்கு வால்பிடிக்க மறுக்கும் சங்கம் சி.ஐ.டி.யூ. என்பதனால் அரசே ஏற்பாடு செய்த குண்டாயிசம், ரௌடிசம், இந்த அரசின் இந்தக் கொள்கை மனிதரின் உயிருக்கே ஆபத்து. சட்டம்-ஒழுங்கே விட்டத்தில் சொருகி விடப்பட்டது. இது ஜனநாயக இயக்கத்திற்கே பேரபாயம் என்று நான் சொல்ல விரும்புகிறேன்

அடுத்தது, இந்த அரசின் தொழிலாளர் விரோதக் கொள்கை.
இந்த அரசின் தொழிலாளர் விரோதக் கொள்கை உச்ச கட்டம்
அடைந்துள்ளது. தொழிலாளர் நலச் சட்டங்கள் சுருங்கச்
சொன்னால்,

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

Labour laws have collapsed Conciliation machinery his Colla
spsed Sanctity of agreements; have collasped.

அதாவது தொழிலாளர் நலச் சட்டங்கள் தகர்ந்து விட்டன.
ஒப்பந்தங்களுடைய மதிப்புத் தகர்ந்து விட்டன. கன்சிலியேஷன்
மெஷினரி - சமரசத் துறையே தகர்ந்து விட்டது என்று நான்
சொல்ல விரும்புகிறேன். சமரசத் துறை இன்று அதிகாரிகள்
கையில் இல்லை. அவர்கள் முடக்கப்பட்டு கிடக்கிறார்கள். காரின்
ஸ்டீரிங் சக்கரம்தான் அவர்களுடைய கையில் இருக்கிறது ; அந்த
லேபர் ஆபீசர்ஸ் - அதிகாரிகள் - கையில் இருக்கின்றன.
அவர்கள் ஓட்டவில்லை. அமைச்சர்தான் back seat driving
நடத்துகிறார். 'லேட்டஸ்ட்' உதாரணம், டிரான்ஸ்போர்ட்
தொழிலாளர்களின் ஊதிய உயர்வு ஒப்பந்தம் - சமரச அதிகாரி
முன்னிலையில் பேசி ஒப்பந்தம் வந்தால் செக்ஷன் 12 (3)
ஒப்பந்தம் என்பார்கள். அல்லது முதலாளியும் தொழிற் சங்கமும்
தங்களுக்குள் பேசி ஒருமைப்பாட்டுக்கு வந்து பின்னர் லேபர்
ஆபீசருக்கு முன்னால் வந்து கையெழுத்துப் போடுகிறோம் என்று
சொன்னால் - லேபர் ஆபீசர் ஒத்துக் கொண்டால் செக்ஷன்
12 (3) ஒப்பந்தம் என்று சொல்வோம்.

17-8-1983 ஆம் தேதி அமைச்சர் மாண்புமிகு முத்துசாமி
அவர்கள் முன்னிலையில் டிரான்ஸ்போர்ட் சம்பந்தமாக ஒரே
நிலை எடுத்துள்ளார்கள் பல சங்கங்கள். உடனே அமைச்சர்
எழுந்தார். முதலமைச்சரைக் கலந்து வருகிறேன் என்று போய்
5 நிமிஷத்திற்குள்ளே திரும்பி வந்து ரூ. 15 தான். ரூ. 10-ஐ,
ரூ. 15 ஆக்குகிறேன், அடிப்படை சம்பளத்தில் 7 சதவிகிதம்
தான் கொடுக்கிறேன் என்று சொல்லிவிட்டு கையிலே டைப்
பண்ணிய ஒப்பந்தம் கொண்டு வந்து கையெழுத்து போடுங்கள்
என்று சொல்கிறார். சீப் மினிஸ்டரைக் கன்சல்ட் பண்ணப் போய்
வருகிறேன் என்று சொன்ன 5 நிமிடத்திற்குள்ளே அக்ரிமென்
டில் கையெழுத்துப் போடு என்று டைப் பண்ணி கொண்டு
வந்துள்ளார்கள் என்று சொன்னால், இதன் பொருள் என்ன? சர்க்
கார் ஒப்பந்தத்தை முதலிலேயே டைப் பண்ணி வைத்துள்ளது.
பேச்சு வார்த்தை என அமைச்சர் நடத்தியது எல்லாம் வெறும்
நாடகம். பெரும்பான்மையான சங்கங்கள், சி.ஐ.டி.யூ.,
முன்னேற்றப் பேரவை, ஏ.ஐ.டி.யு.சி. கையெழுத்துப் போட
மறுத்தார்கள். ஆளுங்கட்சிச் சங்கத்தைப் போட வைத்தனர்.
அதோடு ஐ.என்.டி.யூ.சி.-ஐ, எச்.எம்.எஸ்ஸைக் கையெழுத்துப்
போட வைத்தனர்.



136061
600 008

இதில் சீரியசான பிராட் என்னவென்றால், அதுவரை பேச்சு
வார்த்தையில் ஒரு மூலையில் உட்கார்ந்து வாய்கூட திறக்காமல்
இருந்த டி.சி.எல். திரு. பெலார்மின்னை அமைச்சர் கூப்பிட்டு,
உன் முன்னிலையில் நடந்தது என்று நீயும் கையெழுத்துப்போடு
என்றார். அவர் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளவே
இல்லை. சைலண்ட்டாக உட்கார்ந்திருந்தார். அவரையும்கையெ
ழுத்து போட வைத்தார். இதை 12(3) ஒப்பந்தம் என்று அறி
வித்தார். டி.சி.எல். கன்சிலியேஷன் நோட்டீஸ் அனுப்பவில்லை;
கன்சிலியேஷனும் நடத்தவில்லை; சங்கங்களின் சந்தா ரெஜிஸ்டரும்
செக் பண்ணவில்லை. வேடிக்கை என்னவென்றால் 17 ஆம் தேதி
கையெழுத்திட்ட அதே அதிகாரி பெலார்மின், மறுநாள் 18ஆம்
தேதியே 23 ஆம் தேதி இந்த விஷயத்திலே கன்சிலியேஷன் நடத்த
வாருங்கள் என்று கூப்பிடுகிறார். கையெழுத்து போட்டு
முடித்த அதிகாரி மீண்டும் கன்சிலியேஷனுக்கு கூப்பிடுவது கேலிக்
கூத்தல்லவா? அவர் தான் என் முன்னிலையில் ஒப்பந்தம் ஆயிற்று
என்று கையெழுத்து போட்டாரே, பிறகு என்ன கன்சிலியேஷன்?
இது மோசடி அல்லவா? கள்ள நோட்டு அடிப்பதற்கும், இதற்கும்
என்ன வித்தியாசம் என்று கேட்க விரும்புகிறேன். நிதானமாக
முதல்வரை கேட்டுக் கொள்கிறேன் தயவுசெய்து நீங்கள் இதில்
தலையிட்டு இதை திருத்தியமைக்க ஏதாவது ஒரு ஏற்பாடு
செய்யவேண்டும். எங்களை மூச்சுத் திணற வைக்கும் நிலைக்கு
தள்ள வேண்டாம் என்று நான் பணிவோடு முதல்வரை கேட்டுக்
கொள்ள விரும்புகிறேன்.

அதேநேரத்தில், சென்னை டாம்கோ கம்பெனியில், ஒரு
மைனாரிட்டி யூனியன், தான் கோரிக்கையே வைக்கவில்லை என்று
சொல்கிறது. அங்கேயிருக்கிற மெஜாரிட்டி யூனியனும், நிர்வாக
மும் பேச்சுவார்த்தை நடத்தி ரூ. 180-லிருந்து ரூ. 220 வரை
ஊதிய உயர்விற்கு அவர்கள் ஒத்துக்கொண்டனர். ஒரு அண்டர்
ஸ்டாண்டிங்கிற்கு வந்து டி.சி.எல். முன்னாலே 12(3) ஒப்பந்தத்
திற்குப் போனார்கள்; டி.சி.எல். போடுவதற்கு தயாராக இருந்
தார். ஏதோ போடாதே என்று ஒரு ஒலியை கேட்டார். போடப்
போனவர், நான் போடவில்லை, நீங்கள் போகலாம் என்று கூறி
விட்டார். அங்கே ஒருமைப்பாடு வந்த இடத்தில் போடத் தயா
ராக இருந்த டி.சி.எல்.-ஐ போடாதே என்று இன்ஸ்ட்ரக்ஷன்.
லேபர் அதிகாரிகள் சொல்கிறார்கள், மாண்புமிகு லேபர் மினிஸ்
டர் கவனிக்கவேண்டும். ஒருமைப்பாட்டிற்கு வந்த பிறகு, 12(3)
போடாதே என்று தங்களுக்கு மேலிடத்திலிருந்து இன்ஸ்ட்ரக்
ஷன்ஸ் கிடைத்தது என்று அவர்கள் சொல்கிறார்கள். மேலிடம்
என்று சொன்னால் அவர்களுக்கு மேலே அமைச்சர்தான். அத
னாலே தான் கூறினேன். கன்சிலியேட்டரி மெஷினரி கொலாப்ஸ்ட்
என்று லேபர் சட்டங்கள் தகர்ந்து விட்டிருக்கின்றன. லேபர்
மானிய விவாதத்திலே, சாதனை என்று பெரிய பட்டியலை அமைச்
சர் அவர்கள் படித்துக் காட்டினார். ஆனால் குறைந்தபட்ச
சட்டக்கூலி சட்டப்படி பெரும்பாலான தொழிலாளிகளுக்கு
கிடைப்பதில்லை. அது காகிதத்தில் இருக்கிறது. சமீபத்தில் கூட

கைநெசவுத் தொழிலாளர் மினிமம் வேஜஸ் மறுக்கப்பட்டது.
மினிமம் வேஜஸ் அவர்களுக்கு கிடைக்கவில்லை. அதற்காகத்தான்
ஸ்ட்ரைக் செய்யவேண்டி வந்தது. மதுரை, கரூர், ஆரணி
போன்ற இடங்களில் ஸ்ட்ரைக் நடந்தது. அரசு அதிகாரிகள்
தலையிட்டு என்ன செய்தார்கள் என்றால், அதைவிட குறை
வாக ஒரு தொகையை வாங்கி முடித்து விடுங்கள் என்று சொல்லி
முடித்துவிட்டார்கள். விவசாயத் தொழிலாளர்களுடைய நிலைமை
அதைவிட மோசம். எங்கும் சட்டக் கூலி கொடுப்பதில்லை. ஒன்று
பட்டு சட்டக்கூலி கேட்டால் சப்-கலெக்டர் தாசில்தார் வந்து
சட்டக்கூலியை விட குறைத்து ஏற்க செய்கிறார்கள். அப்படி
சமரசம் செய்து கையெழுத்து போடு என்று வற்புறுத்துகிறார்கள்
மேட்டூர், செங்கம், திண்டிவனம் அரசுப் பண்ணைகளில் அரசு
நிர்ணயித்த சட்டக்கூலி அமல் நடத்தவில்லை. அமைச்சர் அவர்
கள் கேட்பார்கள். குறைந்த கூலிக்கு ஏன் கையெழுத்து போடு
கிறார்கள் என்று. இப்படி நிர்பந்தத்தினால் சட்டக்கூலியை விட
குறைத்து கொடுப்பதற்கு சுப்ரீம் கோர்ட்டிற்கு கேஸ் வந்தது.
டெல்லியில் நடந்த ஆசிய விளையாட்டுப் போட்டிக்கான கட்
டடம் கட்டும் தொழிலாளர்களுக்கு மினிமம் வேஜஸ் கொடுக்
காத போது, சுப்ரீம் கோர்ட்லே நீதிபதி என்ன சொன்னார்
என்றால் 'ஐ ஆம் கோட்டிங் தி ரெலவன்ட் போர்ஷன் ஆப் தி
ஜட்ஜமென்ட், வேறு எந்த வழியும் இல்லாத நிலைக்கு ஒரு,
பிரஜை ஒரு குறிப்பிட்ட நிலை எடுக்க நிர்பந்திக்கப்பட்டால்
அது கட்டாய வேலை என்று கூறலாம். போர்ஸ்டு லேபர், ஒரு
பிரஜை வேறு வழியின்றி சட்டக்கூலியை விட குறைந்த கூலி
பெற்று வேலை செய்கிறார் என்றால், அரசியல் சாசனத்தில்
23-வது விதியின் கீழ் குறிப்பிட்ட கட்டாயப்படுத்தப்பட்ட வேலை
என்பதாகும். சட்டக்கூலியை விட குறைந்த கூலியைப் பெறுவ
தற்கு, வேறு வழியில்லை, பட்டினி கிடக்காமல் ஏதாவது கூலி
கிடைக்கட்டும் என்று குறைந்த கூலியைப் பெற்றால் அதற்கு
அவர்களை குற்றம் சொல்லக்கூடாது என்று நீதிபதி அவர்கள்
சொல்லுகிறார்கள். அது போர்ஸ்டு லேபர் என்று சொல்கிறார்
கள். அதை வைத்துப் பார்த்தால் தமிழ்நாட்டில் என்ன நடை
பெறுகிறது? வறுமைக் கோட்டிற்கு கீழுள்ள தொழிலாளிகளிடம்
கட்டாய வேலை வாங்கப்படுகிறது. தமிழக அரசு இன்றைக்கு
தமிழகத்திலே கட்டாய வேலை முகாமைத் தான் நடத்தி வரு
கிறது. தொழிலாளர் நல அமைச்சர் வாண வேடிக்கையுடன்
கொண்டு வந்த நெசவாளர் சட்டம் என்ன ஆயிற்று? கோர்ட்
டிலே ஸ்டே; இதற்கு கவுண்டர் கூட பைல் பண்ணவில்லை.
நிரந்தரமாக்கும் சட்டம் என்னவாயிற்று? அரசு நிறுவனங்களே
அமல் படுத்துவதில்லை. ஆண்களுக்கும், பெண்களுக்கும் சம
வேலைக்கு சம ஊதியச் சட்டம் என்னவாயிற்று! குமரி மாவட்
டத்தில் அரசு ரப்பர் தோட்டத்திலேயே அமல் நடத்த மறுக்கி
றார்கள். தொழில் கோர்ட் மூலம் தொழிலாளர்களுக்கு வர
வேண்டிய பணம் வசூல் செய்யும் சட்டம் என்னவாயிற்று
இன்றைக்கு அம்பீ[illegible]பே மூடப்பட்டது.



(முற்பகல் 11–10)

48 தொழிலாளர்களுக்கு கிராஜுவட்டி, சட்டப்படி நஷ்டஈடு எல்லாம் சேர்ந்து 96,000 ரூபாய் என்று கோர்ட் தீர்ப்பு சொன்னது. அதை வசூல் செய்யவேண்டுமென்று அரசு உத்தர விடுகிறது. 1983-வரையில் 10,000 ரூபாய்தான் வசூல் ஆனது. பாக்கி, 86,000 ரூபாயை வசூல் செய்தாக வேண்டும். அதை மாதம் 1,000 ரூபாய் கணக்கில் வசூல் செய்ய வேண்டுமென்று கலெக்டர் உத்தரவு போடுகிறார். அதாவது அந்த 86,000 ரூபாய் பணத்தை வசூல் செய்வதற்கு 86 மாதங்கள் —ஏழு வருடங்கள் —ஆகும். ஆகவே, இப்படி வசூல் செய்து கொடுப்பது, அந்தத் தொழிலாளர்கள் வாழ்வதற்காக அல்ல, அவன் சாகும்பொழுது அவனைத் தூக்கிச் செல்வதற்கான செலவுக்காகத்தான் ஆகும். இந்த அரசு கொண்டு வரும் சட்டங்களையெல்லாம் நடைமுறைப்படுத்துவதில் எப்படி பெயிலியர் ஆயிற்று என்று பார்த்தால், இந்தச் சட்டங்கள் அரசின் கழுத்தில் போடுவதற்கான மைனர் செயின்களாகத்தான் இருக்கின்றன; ஆர்னமென்ட்ஸாகத்தான் இருக்கின்றன.

ஒப்பந்தங்களின் புனிதத் தன்மையைப் பொறுத்தவரையில், அந்தப் புனிதத்தன்மை தகர்ந்து விட்டது என்றுதான் சொல்ல விரும்புகிறேன். ஒரு ஒப்பந்தம் இருக்கிறது. குமரி மாவட்ட ரப்பர் தோட்டங்களில் குமரி மாவட்ட வாழ்க்கைப் புள்ளியுடன் இணைத்து பஞ்சப்படி கொடுக்க வேண்டுமென்று ஒரு ஒப்பந்தம் உண்டு. இதுபற்றி ஜாயின்ட் லேபர் கமிஷனர் ரப்பர் தோட்ட முதலாளிகளோடு பேசுகிறார். ஆனால் அவர்கள் மறுக்கிறார்கள். தனியார் தோட்டத்திலும் மாநில அரசு தோட்டத்திலும் பொருந்தும் ஒப்பந்தம் அது. அந்த ஒப்பந்தம் 1981-உடன் முடிகிறது. ஆனால் புதிய ஒப்பந்தம் ஏற்படும் வரை பழைய ஒப்பந்தம் நீடிக்கும் என்று சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு கொடுத்திருக்கிறது. ஜாயின்ட் லேபர் கமிஷனர் தோட்ட முதலாளிகளுக்கு அப்படியே எழுதினார். பழைய ஒப்பந்தம் அமலில் இருக்கிறது. அதன்படி பஞ்சப்படி கொடுங்கள் என்று சொல்கிறார். ஆனால் முதலாளிகள் பழைய ஒப்பந்தத்தை மதிக்காமல் இருக்கிறார்கள். ஜாயின்ட் லேபர் கமிஷனர். அரசுத் தோட்ட நிர்வாகிகளுக்கும் பழைய ஒப்பந்தம் தொடரும் என்று எழுதினார். ஒப்பந்தத்தை மீறிய முதலாளிகள் மீது அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். அந்த ஒப்பந்தம் தொடர்கிறது என்று நீங்கள் சொன்னாலும் நாங்கள் கேட்க மாட்டோம் என்ற முறையில் அவர்கள் அந்த ஒப்பந்தத்தையும் மீறி நடக்கிறார்கள்.

இந்த அரசின் தொழிலாளர் விரோதக் கொள்கையின் கொடூரம் குழந்தைத் தொழிலாளிகள் விஷயத்தில் தெரிகிறது. 22–8–83-ஆம் தேதிய எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் ஜெனீவாவில் ஆகஸ்ட் 21-ல் நடந்தது பற்றிய செய்தி வந்திருக்கிறது. நீதிபதிகளின் சர்வதேசக் கமிட்டி, ஐ.நா.வின் மனித உரிமைக் கமிட்டியின் உப கமிட்டி. அந்தக் கமிட்டியின் செய்தி, "உலகத்திலேயே குழந்தைத் தொழிலாளிகளின் அதிகமான குவியல் தமிழ்நாட்டு தீப்பெட்டி தொழிற்சாலைகளில்தான். இந்தத் தொழிற்சாலை[illegible]

டத்தில் மொத்தம் ஒரு இலட்சத்தில், 45,000 பேர் 15 வயத்திற்கு குறைவானவர். காலையில் 3 மணி முதல் 5 மணிக்குள் எழுப்பி 30 கிலோ மீட்டர்தூரம்வரை லாரிகளிலும், பஸ்களிலும் ஏற்றிச் சென்று மாலை 6 மணி முதல் 9-க்குள் திருப்பக் கொண்டு விடுவார்கள்.'' இதுபற்றி 1977-ஆம் ஆண்டிலிருந்தே நான் சுட்டிக்காட்டினேன். ஆனால் இது இன்னும் நடக்கிறது. இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்று கேள்வி கேட்க நேரத்தில் அமைச்சரவர்கள் சொன்னார்கள். அந்த அதிகாரியை நியமித்திருக்கிறேன், இந்த அதிகாரியை நியமித்திருக்கிறேன் என்று, அதிகாரியை நியமிப்பது பற்றிய பிரச்சினை இல்லை. காரியம் நடக்க வேண்டுமா? இல்லையா? இந்தத் தொழிலாளர் விரோதக் கொள்கை இப்பொழுது உலகக் கூண்டிலே நிறுத்தப்பட்டிருக்கிறது. ஐ.நா.வின் மனித உரிமைக்கமிட்டியின் சப் கமிட்டியாவது இப்படிச் சொல்கிறது. நம்முடைய தமிழ்மக்களைப் பாதுகாப்பதற்காக சகல நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டுமென்று எந்த ஐ.நா.வில் சொல்லப்படுகிறதோ அந்த ஐ.நா.வின் மனித உரிமைக் கமிட்டியின் சப் கமிட்டி நம்முடைய தமிழக சர்க்காரின் தொழிலாளர் விரோதக் கொள்கைகளைக் கண்டித்திருக்கிறது. ஏன் இதில் நடவடிக்கை எடுக்கவில்லை?

முதலாளித்துவச் சுரண்டல் தேவைக்கு முன்னால் இந்த அரசின் குழந்தைப்பாசம் ஆவியாகி மறைந்து விடுகிறது. முதலாளித்துவச் சுரண்டலா, குழந்தைப் பாசமா என்று வரும்பொழுது அரசாங்கம் முதலாளித்துவ சுரண்டலாகத்தான் தேர்ந்தெடுக்கும்.

தமிழகத்தில் பிஞ்சுக் குழந்தைகளின் இரத்தத்தை உறிஞ்சிக் குடிப்பதை அரசு அனுமதித்ததை, அதன் கொடுமையைச் சத்துணவுத் திட்டத்தினால் மறைக்க முடியாது. வேட்டி புடவைகளினால் மறைக்க முடியாது.

தமிழக அரசின் தொழிலாளர் விரோதக் கொள்கை உலக மக்கள் முன்னால் கூண்டில் நிறுத்தப்பட்டுள்ளது. உலகக் கண்டனத்திற்கே உள்ளாக்கப்பட்டுள்ளது. இப்படிப் பயங்கரச் சுரண்டலை ஆதரிக்கும் அரசு ஆனதினால்தான், அ.தி.மு.க. வின் பிரதிநிதியாக இருக்க தென்னிந்திய மில் முதலாளி சங்கத்தின் முன்னாள் தலைவராகிய வரதராஜை இராஜ்ய சபாவிற்கு அனுப்பியிருக்கிறீர்கள் என்பது அதற்கு ஒரு முத்தாய்ப்பு வைத்ததாக இருக்கிறது. (மணியடிக்கப்பட்டது) நான் இரண்டு மணி நேரம் வேண்டுமென்று கேட்டேன், எனவே, இன்னும் கொஞ்சம் நேரம் ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எப்படியும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நாளைக்குப் பதில் சொல்ல மாட்டார்கள், நாளைக் கழித்துத் தான் பதில் சொல்வார்கள், இது சாதாரணமாக நாம் பார்த்து வருகின்ற ஒரு வழக்கம் தான். இங்கே ஒரு குற்றச்சாட்டல்ல, பல குற்றச்சாட்டுக்கள் வரும், சென்சூர் மோஷன் என்றால் குறிப்பிட்ட ஒரு சப்ஜக்ட் பற்றி மட்டும் குற்றச்சாட்டு வரும்.



அதற்கு சம்பந்தப்பட்ட அமைச்சர் மட்டும் பதில் சொன்ன போதும். ஆனால் இதிலே பல குற்றச்சாட்டுகள் வா அவற்றுக்கெல்லாம் சேர்த்து பதில் சொல்ல வேண்டியிருக்கும். அடுத்து காவல் துறை சம்பந்தப்பட்டதைச் சொலல விரும்புகிறேன்.

சம்பல் பள்ளத்தாக்கில் பதுங்கி இருக்கும் கொள்ளைக்காரர்கள் தான் கடத்திச் செல்வது, பணயக் கைதிகளாக வைப்பது போன்ற செயலில் ஈடுபடுவார்கள் என்பதைக் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் தமிழ்நாட்டில் இந்த ஆட்சியின் கீழ் போலீஸே இந்த வேலையில் ஈடுபட ஆரம்பித்துள்ளனர். 5-10-1982-ல் ஒரு ஊரில் சர்க்கிள் இன்ஸ்பெக்டரும், எஸ்.ஐ.யும் நுழைந்து 5,000 ரூபாயையும், நகைகளையும் கொள்ளையடித்து ராஜம்மாளின் கணவன் முனிரத்தினத்தைப் பணயக் கைதியாகக் கடத்திச் சென்றனர். ஒரு வாரம் ஒளிய வைத்தனர். அவரை விட வேண்டும் என்றால் 30,000 ரூபாய் பணயப் பணமாகத் தர வேண்டும் என்று கேட்டனர். கடைசியில் தனது தோப்பை விற்று 30,000 ரூபாய் பணம் தருவதாக எழுதி வாங்கியதற்குப் பிறகு விட்டனர். சர்க்கிள் இன்ஸ்பெக்டரும், எஸ்.ஐ.-யும் செய்த காரியம் இது. இதில் கொள்ளை, கடத்தல், பணயக் கைதியாக வைத்தல், நிர்ப்பந்தமாக எழுதி வாங்குதல் என்ற இவ்வளவு குற்றங்களும் வருகின்றன. இந்த இன்ஸ்பெக்டர் மற்றும் எஸ்.ஐ.-க்கும், சம்பல் பள்ளத்தாக்குக் கொள்ளைக்காரர்களுக்கும் என்ன வித்தியாசம் இருக்கின்றது? இதிலே அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்தது? ஒருக்கால் சர்க்கார் அவர்களுக்குப் ப்ரமோஷன் கொடுத்தார்களோ என்னவோ தெரியவில்லை.

அடுத்து திரு. ஜீவகன் என்பவரை வக்கீல் திரு. சங்கரன் வீட்டிலிருந்து போலீசார் கடத்திச் சென்றார்கள். ஒரு வாரம் கழித்து தர்மபுரியிலே அந்த ஜீவகனைக் கைது செய்ததாக பொய் ரிக்கார்டு செய்கிறார்கள். இது பொய் என்றும் அந்த அதிகாரி மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தீர்ப்பு சொன்னார்கள். ஆனால் அப்போது இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்தது தெரியுமா? ''ஜீவகனைக் கைது செய்ததற்காக'' என மடல் எழுதித் தங்கப் பதக்கம் கொடுக்கப்பட்டது. தங்கப் பதக்கத்தை அந்த ஆஃபீஸருக்குக் கொடுத்தது. அரசாங்கத்தின் இந்தக் கொள்கை காரணமாக இன்று லஞ்சம் வாங்கிக் கொண்டு பலரை போலீஸ் ஸ்டேஷனிலே ரிக்கார்ட் பண்ணாமல் வைப்பது சர்வ சாதாரணமாகிவிட்டது. தனக்குப் பிடிக்காத ஒருவரை லஞ்சத்தின் மூலமாக ஸ்டேஷனில் கொண்டு வந்து வைப்பது என்பது வழக்கமாகி விட்டது. ஒரு மகனைப் பிடிக்க அப்பனைக் கொண்டு வந்து ஸ்டேஷனில் வைப்பது என்பதும் அப்பன் கிடைக்கவில்லை என்றால் மகனைக் கொண்டு வந்து வைப்பது என்பதும் சர்வ சாதாரணமாகி விட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உங்கள் இனம் என்பதற்காகச்சொல்கிறேன். திருச்சியிலே வக்கீல்களை போலீஸ் அடித்து நொறுக்கியது. மாநிலம் [illegible]

பாட்டம் நடந்தது. வேலை நிறுத்தம் நடந்தது. கோயம்புத்தூர் பார் அசோசியேஷன் இது சம்பந்தமாக முதலமைச்சர் அவர்களைப் பேட்டி காண வேண்டும் என்று பல முறை முயற்சி எடுத்தும் அவர்களுக்கு அந்த வாய்ப்பு கிடைக்கவில்லை என்று கூறினார்கள்.

அடுத்து வீனஸ் மிஷன் எலிமென்டரி ஸ்கூல். பறங்கி மலை போலீஸ் ஜூரிஸ்டிக்ஷனிலே இது வருகின்றது. அது ஊழல் நிறைந்த நிர்வாகத்தின் கீழ் இருந்து வருவதாகக் கூறி தமிழ்நாடு கிரேஜூவேட்ஸ்-போஸ்ட் கிராஜூவேட்ஸ் அசோசியேஷன் ஆட்சேபித்தது. அதற்கு நிர்வாகத்திடம் லஞ்சம் வாங்கிக் கொண்டு காவல் துறையினர் இரவு 12 மணிக்கு அதன் காரியதரிசி திரு. மாயவன் என்பவரைக் கழுத்தைப் பிடித்து டாக்சியில் தள்ளினார்கள். அதாவது சாதாரண ஒரு செக்ஷன் 75 என்ற கேசில் அவ்வாறு நடந்து கொண்டார்கள். இரவு பன்னிரண்டு மணிக்குச் சென்று கைது செய்திருக்கிறார்கள். அப்படி இரவு 12 மணிக்கா போக வேண்டும்? அப்படிப் போய் கழுத்தைப் பிடித்துத் தள்ளி இருக்கிறார்கள் டாக்சியில். போலீஸ் ஆஃபீஸரிடம், தான் ஜட்டி போட்டுக் கொண்டு வருகிறேன் என்று அவர் சொன்ன போதும் அவரை விடவில்லை. டாக்சியிலே பிடித்துத்தள்ளினார்கள். டாக்சிக்குப்பணம் ஏதுபோலீஸிலே. நிர்வாகம் தான் டாக்சிக்கும் பணம் கொடுத்தது என்று அர்த்தமாகிறது. ஆகவே ஊழலை இந்த அசோசியேஷன் எதிர்க்கின்றது என்பதற்காக டாக்சிக்குக் காசு கொடுத்து அனுப்பி இரவு 12 மணிக்கு, தூங்கிக் கொண்டிருப்பவரை எழுப்பி கைது செய்யச் செய்திருக்கின்றது அந்த நிர்வாகம். அவர் ஜட்டி போட்டு வருகிறேன் என்று சொன்ன போது கூட அவரை விடவில்லை. அவர் என்ன கொலையா செய்தார்? விட்டால் அண்டர் கிரவுண்டுக்கா போய் விடுவார்? சாதாரண செக்ஷன் 75 கேஸ் தானே. இப்படிப்பட்ட அட்டூழியங்கள் எல்லாம் இந்த அரசின் போலீஸ் கொள்கை காரணத்தால் இன்றைக்கு உருவாகிக் கொண்டிருக்கின்றன. நியாயமாகச் செயல்படும் அதிகாரிகளுக்கும் பாதுகாப்பு இல்லாத நிலைமை இருக்கின்றது.

அடுத்து குமரி மாவட்டத்தில் உள்ள பறக்கும் படையின் தலைவர் லஞ்சம் வாங்க மறுப்பவர். நல்ல அதிகாரி. ஆனால் கடத்தல்காரர்கள் அவருடைய மகனைக் கடத்திச் சென்று கொன்று விட்டனர். ஆனால் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் திரு. இராமச்சந்திரன் அதனை அனாதைப் பிணம் என்று புதைத்து விட்டார்கள். பிறகு ரீ-ஓப்பன் செய்து பார்த்தால் இறந்தவன் பறக்கும் படைத் தலைவரின் மகன் என்பது தெரிய வந்தது. கடத்தல்காரர்கள் அவனைக் கொன்று விட்டார்கள். எனவே போலீஸ்காரர்களுக்கும், கடத்தல்காரர்களுக்கும் லிங்க் இருக்கின்றது. ஆண்டி சோசியல் எலிமென்டுக்கும், போலீஸாருக்கும் லிங்க் இருக்கின்றது. நான் ஒரு முறை சொன்னேன், மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூட கோபித்துக் கொண்டார்கள் அப்படிச்



சொல்லலாமா என்று. What is this? அதே மாதிரி லீவில் வந்த ராணுவ வீரரை ஆளும் கட்சிக்காரர்கள் கொன்று விட்டார்கள். அதே சர்க்கிள் அதை மூடி மறைத்தார்.

(முற்பகல் 11-20)

கள்ளச்சாராயம் காய்ச்சும் இடத்தை ஒரு போலீஸ்காரன் டேபிள் சுந்தரராஜ் என்பவர் காட்டினார். அடுத்த சில நாட்களில் அந்த கான்ஸ்டேபிள் கொலை செய்யப்பட்டார். கொன்றவர் பெயரைக் குறிப்பிட்டு சர்வ கட்சியினர் எஸ்.பி.யிடம் மகஜர் கொடுத்தனர். ஆனால் 1983 ஜூன் 12 ஆம் தேதியில் நடந்த அ.தி.மு.க. சாதனை விளக்கப் பொதுக் கூட்டத்தில் இரண்டு அமைச்சர்கள் கலந்து கொண்ட அந்தப் பொதுக் கூட்டத்தில், அந்தக் கொலைகாரன் கலந்து கொண்டு, அதற்குத் தலைமை தாங்குகிறான் என்றால், சாதனை என்ன? கள்ளச்சாராயம் காய்ச்சியது, கான்ஸ்டேபிளைக் கொன்றதுதானே. இது தானே இந்த நாட்டில் போலீஸ் எப்படி இருக்கிறது என்பதற்கு எடுத்துக் காட்டு.

ஒரு நாட்டில் உள்ள மக்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டிய கடமை இந்த மாநில அரசுக்கு இருக்கிறது. ஆனால் நிலைமை எப்படி இருக்கிறது? அதே மாவட்டத்தில் அமிர்தன் என்ற பர்ஸ்ட் கிரேட் கான்ஸ்டேபிள் தோழர் பெருமாளிடம் போனில் பேசுகிறார். ஹேமச்சந்திரனை ஒழுங்காக இருக்கச் சொல்லுங்கள், இல்லாவிட்டால் கொலை செய்வேன் என்று சொல்கிறார். ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர் ஒழுங்காக இருக்கவில்லை என்றால், சொல்வோம் என்று எங்கள் தோழரிடம் போனில் கூறுகிறார் என்று சொன்னால் இந்தத் தமிழகத்தில் மக்களுடைய உயிருக்கும் உடைமைக்கும் போலீசிடமிருந்தே மிகுந்த அபாயம் ஏற்பட்டுள்ளது. அதை ஊக்குவிப்பது இந்த அரசுதான் என்று நான் குற்றம் சாட்டுகிறேன்.

இந்த அரசில் மனித உரிமைக்கு மதிப்பு இல்லை. "நோ ரெஸ்பெக்ட் பார் ஹியுமன் வேல்யூஸ் அன்ட் ப்ரீடம்" இன்றைக்கு தமிழகத்தில் 3 இலட்சம் விசாரணைக் கைதிகள் இன்னமும் சிறைகளில் வைக்கப்பட்டு இருக்கிறார்கள் என்றால், அதுவும் பலர் 17 ஆண்டுகள் வரை விசாரணை இன்றி வைத்து இருக்கிறார்கள் என்றால், என்ன வேல்யூ பார் ப்ரீடம்? 17 வருஷம் அண்டர்-ட்ரயல் என்று எங்காவது வைத்திருந்தது உண்டா? பீகாரில் நடந்தது என்று கேளவிப்பட்டு இருக்கிறோம் இது மாதிரி பீகாரில் தான் நடக்கும். நான் கூட முன்னாலே ஒரு தரம் அமைச்சரிடம் கூறினேன். மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கிற போது நம்முடைய தமிழகம் எவ்வளவோ பரவாயில்லை என்று. ஆனால் இப்போது அங்கே நடப்பது இங்கே நடக்க ஆரம்பித்து விட்டது.

[திரு. ரா. உமாநாத்] [1983 நவம்பர் 8

சமீபத்தில் நாடாளுமன்றத்தில் கேட்ட கேள்விக்கு பதில் அளிக்கையில் என்ன பதில் சொன்னார்கள் என்றால், சமீப காலத்தில் ஓராண்டில், இந்தியாவிலேயே அதிகமான கைதிகள் — 52 பேர் — சிறையில் இறந்தது தமிழகத்தில் தான் என்று பதில் அளிக்கப்பட்டது. ஐ. ஜி. ஹோண்டா என்ன பதில் சொல்கிறார் இதற்கு என்றால், சென்ட்ரல் ஜெயிலில் 8 தான், பாக்கி சப் ஜெயிலில் என்று. இறந்தது சென்ட்ரல் ஜெயிலாக இருந்தால் என்ன? சப் ஜெயிலாக இருந்தால் என்ன? அங்கேயுள்ள கைதிகளுக்கு பூரண பாதுகாப்பு கொடுக்க வேண்டியது இந்த அரசாங்கம் தானே. கோர்ட் அவனை குற்றவாளி என்று சொல்லி தண்டனை கொடுக்கின்ற வரையில், அல்லது அவனை தூக்கில் போடு என்று சொல்கிற வரையில், அவனுக்கு மனித உரிமைகள் கொடுக்கப்பட்டு, அவனுடைய உயிரைப் பாதுகாக்க வேண்டியது இந்த அரசின் கடமைதானே.

But :he Hig'iest numbe of deat s was only in TamilNadu

இந்த மாநில அரசு போலீஸ் அட்டூழியங்களைத் தட்டிக் கொடுப்பதனால், போலீஸ் ஹேவ் பிகம் டிரிக்கர்-ஹேப்பி-அதாவது அவர்கள் கையில் துப்பாக்கி இருப்பதனால், எப்போது சுடலாம், சுடலாம் என்று ஒரு சுடுதற்கு ஒரு அரிப்பு அவர்களுக்கு ஏற்பட்டு இருக்கிறது. எத்தனை வருஷத்திற்கு நாம் இதை சும்மா கையில் வைத்திருப்பது, கொஞ்சம் சுட்டுப் பார்ப்போமே என்று ஒரு அரிப்பு அதைத்தான் ''டிரிக்கர்-ஹேப்பி'' என்று சொன்னேன்.

திருநெல்வேலி மாவட்டத்தில் மட்டும் 9 பேரை வெவ்வேறு சந்தர்ப்பங்களில் சுட்டுக் கொன்று இருக்கிறார்கள். 9 கொலைகளைச் செய்து இருக்கிறார்கள். திருநெல்வேலி மாவட்டம் நாங்குனேரி போலீஸ், பிச்சையா என்பவரைச் சுட்டுக்கொன்றது. களக்காடு போலீஸ், புலுத்தேவர் என்பவரைச் சுட்டுக்கொன்றது. திருநெல்வேலி தாலுக்கா போலீஸ், பாண்டி என்பவரைச் சுட்டுக் கொன்றது. குலசேகரபட்டினம் போலீஸ், ராஜ்மோகன் என்பவரைச் சுட்டுக் கொன்றது. திருநெல்வேலி தாலுக்கா போலீஸ், முருகன் என்பவரை அடித்துக் கொன்றது. பனவடா, போலீஸ் குணாளன் என்பவரை அடித்துக்கொன்றது. தாழையூத்து போலீஸ் வள்ளிநாயகம் என்பவரை அடித்துக் கொன்றது. தென்காசி போலீஸ் ஒருவரை அடித்துக் கொன்றது. அவர் பெயர் தெரியவில்லை. சுத்தமல்லி போலீஸ் ஒருவரை அடித்துக் கொன்றது. அவர் பெயரும் தெரியவில்லை. இன்னும் இப்படி எத்தனை கொலைகள் நடைபெற்று இருக்கின்றனவோ நமக்குத் தெரியாது ?

இன்னொன்றையும் இங்கே குறிப்பிட வேண்டும். 1981 ஆம் ஆண்டு மே மாதம் தேவி, விஜயா என்ற இரண்டு 16 வயது பெண்கள், அவர்களுடைய முதலாளி மகனால் கற்பழிக்கப்பட்டு



1983 நவம்பர் 8 திரு. ரா. உமாநாத்

அவர்களுடைய கழுத்தை நெரித்து கொன்று கிணற்றில் போட்டார். அவர் மீது ஆக்ஷன் எடுக்க வேண்டுமென்று சொன்னோம். ஆனால் இன்று வரையில் நடவடிக்கை எடுக்கவில்லை. ஏற்கெனவே சொன்னபோது முதலமைச்சர் நடவடிக்கை எடுக்கிறேன் என்று சொன்னார். போஸ்ட்மார்டம் ரிப்போர்ட்டை படித்துக்காட்டினேன் இந்த அவையில். ஆனால் என்ன நடந்தது? கொலைகாரனை இந்த அரசு காப்பாற்றுகிறது. அதாவது கொலை செய்யப்பட்டாலும் இந்த அரசு விரும்பினால் மறைக்கிறது. பெண்கள் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்லியும், போஸ்ட்மார்டம் ரிப்போர்ட்டைப் படித்துக் காட்டியும் அந்த முதலாளி மகன்மீது நடவடிக்கை இல்லை, டாக்டர் மாற்றப்பட்டிருக்கிறார்.

1982 ஆம் ஆண்டு நவம்பர்த்திங்கள் 21 ஆம் நாளில் இந்திரா நகரைச் சேர்ந்த சித்திரா என்கிற 20 வயது பெண் கொலை செய்யப்பட்டிருக்கிறார். அந்தப் பெண் கல்யாணமாகி 8 மாதங்கள் தான். கர்ப்பம் தரித்திருக்கிறார். 40 நாள் கரு வயிற்றிலே இருக்கிறது. கணவன் அந்தப் பெண்ணை எரித்துக் கொன்றான். கொன்றுவிட்டு, ஸ்டவ் வெடிப்பு என்று சொன்னான். ஸ்டவ் அப்படியே இருக்கிறது, பத்திரமாக. போஸ்ட்மார்டம் ரிப்போர்டில் கொலை என்ற சந்தேகம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அந்தக் கொலையை மறைக்க அரசு தரப்பில் பெரும் முயற்சி நடந்தது எனக்குத் தெரியும். கொலைகாரனை கைது செய்தீர்களா ? இல்லை. அந்தக் கொலைகாரனின் சகோதரர் ஒரு அக்கவுண்டன்ட். அவருக்கு ஆளும் கட்சி மேல் மட்டத்தில் செல்வாக்கு இருப்பதனால் அந்த இளம் கர்ப்பிணியின் கொலையை இந்த அரசு மறைத்தது என்று நான் குற்றம் சாட்டுவேன்.

கடைசியாக குடும்பத்திற்கு ஒருவருக்கு வேலை என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. Governmen :s trying to deceive the gullible அப்பாவி மக்களை இப்படித் தெரிவித்து, ஏமாற்ற முயற்சி செய்கிறது இந்த அரசாங்கம். உங்களுடையத் திட்டக் கமிஷன் ரிப்போர்ட் என்ன சொல்கிறது? 56 சதவீதம் பேர் இந்தநாட்டில் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளார்கள். குடும்பக் கார்டு 118 இலட்சம் பேர்களுக்குத் தந்திருக்கிறார்கள். இதில் 56 சதவீதம் பேர் ' பிலோ பாவர்ட்டி லெவல் ' என்றால் 60 இலட்சம் குடும்பங்கள். ஆக 60 இலட்சம் பேர்களுக்கும் நீங்கள் வேலை கொடுக்கப்போகிறீர்களா ? உங்களால்இது முடியுமா ?

உங்களுடைய ஆறாண்டு நடைமுறை என்ன என்பது பற்றி மாநில சர்க்கார் அமைத்த பிளானிங் கமிஷன் ரிப்போர்ட்டை கொடுத்திருக்கிறது. அந்த ரிப்போர்ட்டில் 11-வது பாராவில் '' வேலையின்மை பிரச்சினையில்தமிழகம் மற்ற மா நிலங்களை விட படுமோசமாக இருக்கிறது. நாட்டின் மொத்த தொழி

டாட்டத்தில் தமிழகத்தின் பங்கு 12.83 சதமாகும். எல்லா
மாநிலங்களையும் விட இதுதான் கூடுதலான எண்ணிக்கை ''
என்று கூறுகிறது. இப்படித்தான் பட்டியல் போகிறது. நீங்கள்
இந்த நிலையில் 60 இலட்சம் பேர்களுக்கு வேலை கொடுக்கிறோம்
என்றால் இதற்கும் அதற்கும் என்ன பொருத்தம் என்று தெரிய
வில்லை. ஏதாவது ' மேஜிக் லாம்ப் ' முதலமைச்சர் வைத்
திருக்கிறாரா என்று தெரியவில்லை.

அதோடு நிற்கவில்லை. அரசாங்கத்திலிருந்து நீங்களே 10,000
கான்ஸ்டபிள்களை செலக்ட் பண்ணினீர்கள். பின்னால் அவர்க
ளுடைய செலக்ஷனை ரத்து செய்தீர்கள். அது மட்டுமல்ல.
உங்களுடைய புள்ளி விவர இலாகாவிற்கு 1,500 கிராஜுவேட்ஸ்
வேண்டுமென்று கேட்டீர்கள். எல்லா எம்பிளாயிமென்ட் எக்
சேஞ்சுகளிலிருந்தும் அதற்கு ஆட்களை அனுப்பினார்கள். ஆகஸ்ட்
1981-ல் டெஸ்ட் எழுதினார்கள். அந்த 1,500 கிராஜுவேட்
ஸைப் பொறுத்தவரையில் இன்று வரையில் ரிசல்ட் கொடுக்கப்
படவில்லை ; அப்பாயின்ட்மென்ட் ஆர்டர்ஸ் வரவில்லை.
ஆனால் குடும்பத்திற்கு ஒரு ஆளுக்கு வேலை என்று அறிவிக்கி
றீர்கள்.

அது மட்டுமல்ல. கன்னியாகுமரி மாவட்டத்தில் 175 ஃபாக்
டரிகள் குளோஸ்டு. 60,000 பேர்களுக்கு வருஷத்தில் ஒரு
மாதத்திற்கு வேலை. ஃபாரஸ்ட் டிபார்ட்மென்ட் நடத்தக்
கூடிய முந்திரித் தொழிற்சாலைகளில்கூட இந்தத் தொழிலாளர்
களுக்கு கொஞ்சம் கூடுதல் நாள் வேலை கொடுக்கலாம் என்று
சொன்னால் சர்க்கார் துறை வேலை கொடுப்பதில்லை. உங்க
ளால் ஒன்றும் செய்ய முடியவில்லை. 8 பிரின்ட் தொழிற்சாலை
களில் 50 சதவீதம் தொழிலாளர்களுக்கு ' லே ஆஃப் '. கிட்டத்
தட்ட 3 இலட்சம் தொழிலாளர்களுக்குமேல் லே ஆஃபில்
இருக்கிறார்கள். இதைத் தடுக்க முடியவில்லை. ' யூ குட்
நாட் டு எனித்திங் '.

அடுத்து கெமிக்கல்ஸ், அலுமினியம் தொழிற்சாலைகளில்
மூன்றில் இரண்டு பகுதி உற்பத்தியைக் குறைத்து லே ஆஃப்
செய்தார்கள். உங்களால் தடுக்க முடியவில்லை. ஏன் ? நீங்கள்
நடத்தும் மின் வாரியத்தில் ஒரு இலட்சம் பேர் இருந்ததை
80,000 பேராகக் குறைத்தீர்கள். அடுத்து 60,000 ஆக குறைக்
கப்போகிறீர்கள். இருக்கும் வேலைவாய்ப்பினை நீங்களே
குறைத்துக்கொண்டு இருக்கும்போது குடும்பத்திற்கு ஒருவருக்கு
வேலை கொடுக்கிறோம் என்று சொன்னால் அதை என்ன
என்பது? (மணியடிக்கப்பெற்றது.) கௌரவமாக முடிக்க
இன்னும் கொஞ்சம் நேரம் கொடுங்கள்.

(முற்பகல் 11-30)

எல்லாவற்றிற்கும் மேலாக ' சிம்கோ ' மீட்டரில் 340 பேர்
களை வேலை நீக்கம் செய்யலாமென அரசே அனுமதி கொடுத்
தது. அப்படி வேலை நீக்கம் செய்யலாம் என்ற அனுமதி



கொடுக்கிற சர்க்கார் வீட்டிற்கு ஒரு ஆளுக்கு வேலை என்று
சொன்னால் அது ' ஹிப்பாக்ரசி ' அல்லவா ? பாசாங்கு
அல்லவா ? இது வேலை கொடுக்கும் திட்டம் அல்ல, வேலை
கெடுக்கும் திட்டம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வேலையில்லாத பட்டதாரிகளுக்கு அலவன்ஸ் கொடுக்கப்
படும் என்று தேர்தல் வாக்குறுதி கொடுத்தீர்கள். இந்திரா
காங்கிரஸ் அதை எதிர்த்தது. டி.எம்.கே.வும் அதை தங்கள்
எலக்ஷன் ' பிளட்ஜ்'லே போட்டார்கள். ஏ.ஐ.ஏ.டி.எம்.
கே.வும் நாங்கள் கொடுக்கிறோம் என்று சொன்னார்கள். 1978ஆம்
ஆண்டு ஏப்ரல் 1 ஆம் தேதி முதல் மேற்கு வங்கத்தில் 3½ இலட்
சம் பேர்களுக்குக் கொடுத்து வருகிறார்கள். அதற்காகும் செலவு
48 கோடி. 1982-83-க்கு இன்னும் 80 ஆயிரம் பேர்களுக்குக்
கொடுக்கப்போகிறோம் அதற்கு மேலும் 13 கோடி
ரூபாய் செலவாகும் என்று சொல்லுகிறார்கள். ஆனால்
தமிழகத்தில் இந்த 3 ஆண்டுகளிலே 20 ஆயிரம் பேர்களுக்குத்
தான் கொடுக்கிறோம் என்று முன்னவர் அவர்கள் சொன்னார்
கள். நான் கேட்கிறேன். தேர்தல் வாக்குறுதிப்படி இந்த சிறு
அலவன்சே கொடுக்காத ஒரு சர்க்கார், அதை மீறிய ஒரு
சர்க்கார், பல்லாயிரக்கணக்கான ரூபாய் செலவாகக்கூடிய
குடும்பத்திற்கு ஒருவருக்கு வேலை என்பதை எப்படி நிறை
வேற்றப் போகிறீர்கள். வேலையில்லாத் திண்டாட்டம் என்பது
இந்திரா காங்கிரஸ் சர்க்கார் கொள்கை விளைவு. இதை அடிக்கடி
நான் சொல்வேன். அதே கொள்கையைத் தான் நீங்களும்
பின்பற்றுகிறீர்கள். மாற்றுக் கொள்கைக்குவரமாட்டேன் என்கிறீர்
கள். அதே கொள்கையைத் தான் பின்பற்றுகிறீர்கள். ஐ. எம்.
எப். லோனை வாங்குகிறீர்கள். ஆட்களைக் குறைத்தால்தான்
லோன் கொடுப்போம் என்பதை ஏற்று நீங்கள் செயல்படுகிறீர்கள்.
நான் சொல்வது சரியில்லையா என்பதைக் கேட்க விரும்பு
கிறேன்.

கடைசியிலே ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன்.
வறட்சி நிவாரண விஷயம் குறித்து எவ்வளவோ பேசியிருக்கி
றோம். ஆனால் ஒன்றை இந்த அவையின் கவனத்திற்குக்
கொண்டு வர விரும்புகிறேன். ஏனென்றால் தமிழ்நாட்டிலே
இந்த வறட்சியைப் பொருத்தவரையில் நம்முடைய ஆளுங்
கட்சியைச் சேர்ந்தவர்களுக்குக் கிண்டலாக மாறி விட்டது.
வறட்சியின் உச்சக்கட்டத்தில், ஜனங்கள் அல்லோலகல்லோலப்
படும் நேரத்தில் அரசாங்கத்தினுடைய ஆளும் கட்சியைச்
சேர்ந்த ஒரு முக்கியப் பிரமுகர் பேசுகிறார். இது வரையில்
மறுக்கப்படவில்லை. அந்த உச்சக்கட்டத்தில் சொல்கிறார்,
தமிழ் நாட்டிலே வறட்சி எங்கே இருக்கிறது ? கருணாநிதிக்குத்
தான் வறட்சி என்று பேசினார். அதன் அர்த்தம் என்ன ?
நண்பர் கருணாநிதிக்குத்தான் வறட்சி என்றால், கிராமங்களிலே
வறட்சி இல்லை ; நகரங்களிலே வறட்சி இல்லை. ஆண்களும்
பெண்களும், குடிநீருக்காக மைல் கணக்காக நடக்கவில்லை ?
இரவு பகலாக ' கியூ' வில் நிற்க
வில்லை ? ' நம்பர் ' பண்ணவில்லை.

வில்லை. கருணாநிதிக்குத்தான் வறட்சி என்று அந்த உச்சக் கட்டத்தில் சொன்னால், ஜனங்களுடைய துயரத்திற்குட்பட்ட கேந்திரமான விஷயம். அவர்கள் துயரத்திற்கு ஆளான நேரத்தில் அந்த வறட்சியை ஒரு கிண்டலான வார்த்தையாக உபயோகப் படுத்தியது என்று சொன்னால் நிச்சயமாக அது ஆச்சரியமான விஷயம்.

பணம் கொடுக்கவில்லை. நான் ஒத்துக் சொள்கிறேன். கிடைத்த பணத்தில் என்ன நடைபெறுகிறது என்பதை பலரும் பேசி இருக்கிறார்கள். நானே பார்த்தேன். வறட்சி நிவாரண கமிட்டியிலே தஞ்சாவூரிலே நான் ஒரு மெம்பர். அஜெண்டா கொடுத்தார்கள். என் தொகுதியிலே வாய்க்கால்களை ஆழப் படுத்தியதற்கு, பல வாய்க்கால்களுக்கு இத்தனை ரூபாய் என்று சாங்ஷன் பண்ணியிருந்தார்கள். நான் முந்தைய நாளே ஏதாவது ஒன்றை செக் அப் பண்ணலாம் என்று நினைத்து நம்முடைய ஃபார்மர்களை அழைத்துக் கொண்டு அந்த வாய்க் கால்களைப் பார்த்தேன். போனால் 30 ஆயிரம் ரூபாய் செல விடப்பட்டது என்றிருக்கிறது. வேலை முடிக்கப்பட்டது என்றும் இருக்கிறது. போய்ப் பார்த்தால், மூன்றில் ஒரு வேலைதான் நடந்து முடிந்திருக்கிறது. இரண்டு வேலைகள் தொடவே இல்லை. நான் என்தோழர்களுடன் நடந்து பார்த்தேன். ஒரு கால் வேறு எங்காவது ஆழப்படுத்தி இருக்கிறார்களா என்று. 'நோ'. மறு நாள் கமிட்டி கூடுகிறது. கலெக்டர் முன்னாலே 30 ஆயிரம் ரூபாய் செலவில் 3 வேலைகள் முடிக்கப்பட்டது என்று எழுதி இருக் கிறது. ஆனால் மூன்றிலே இரண்டு வேலைகள் முடிக்கப்பட வில்லை. நான் நடந்து சென்று பார்த்தேன் என்று சொன்னேன். அந்த எக்சிகூட்டிவ் என்ஜினீயர் அவர்களைக் கேட்டால் நான் பார்த்தவன் என்று சொன்ன பிறகு மறுக்க முடியவில்லை. இன்னும் கொஞ்சம் வேலை பாக்கியிருக்கிறது என்று சொன்னார். கலெக்டர் சொன்னார். அப்படி இருக்கிறபோது முடிக்கப்பட்டது என்று ஏன் எழுதினீர்கள் என்று கேட்டார். கலெக்டர் ஓப்பனாகச் சொன்னார். You have sent me a false report. I will report to the Chief Engineer பொய் ரிப்போர்ட் கொடுத்து இருக்கிறீர்கள். வேலை செய்யாமலேயே முடிக்கப்பட்டது. என்று எழுதியிருக்கிறீர்கள். ஆகவே சீப் இன்ஜினியருக்கு ரிப்போர்ட் அனுப்பப் போகிறேன் என்று சொன்னார்கள். ஆனால் எனக்கு அதிர்ச்சி தந்தது. என்ன என்றால், கலெக்டரே கன்விஸ் ஆனபிறகு, ரைட்டிங்கிலே இருக்கிறபோது, ஒரு அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர் அவருடைய பெயர் எனக்குத் தெரியாது. அவர் எழுந்து நின்று அந்த இ.இ. செய்தது நியாயம் என்று வாதாடக்கூடிய முறையிலே பேசினார். ஐ வாஸ் ஷாக்ட். பலரும் பேசுகிறார்கள். இதிலே அ.தி.மு.க. ஊழியர்களுக்கு எல்லாம் பங்குண்டு என்று நாங்கள் எல்லாம் அப்படி மொட்டையாகச் பேசவில்லை. But this is my experience. I have seen myself.



கலெக்டரே நீங்கள் அனுப்பியது பால்ஸ் ரிப்போர்ட் என்று டிக்ளேர் செய்த பிறகு, ரெக்கார்ட்ஸ் இருக்கிறபோது, ஆளும் கட்சி உறுப்பினர் எழுந்து நின்று அந்தப் பணத்தைமோசடி செய்து இருக்கக் கூடிய அந்த இ.இ.யை சப்போர்ட் பண்ணுகிறார்கள் என்றால் நான் எந்த முடிவிற்கு வர வேண்டும், ஒரே ஒரு முடிவு தான். அந்த எக்சியூட்டிவ் என்ஜீனியர் வட்டாரத்திலே கிடைக்கிற அந்தப் பணத்தைப் பொறுத்தவரைக்கும் அந்த பணத்திலே இந்த மாதிரி இருக்கக் கூடிய ஊழியர்களுக்கும் பங்குண்டு என்று சொல் கிறார்கள். Nero was Fiddling while Rome was burning ரோமாபுரி எரிகிறபோது நீரோ மன்னன் பிட்டில் வாசித்துக் கொண்டு இருந்தானாம். ஜனங்கள் கஷ்டப்படுகிறபோது இந்த மாதிரி அரசுக்கு சேரவேண்டிய பணத்தை அதிகாரிகளும், ஆளும் கட்சி யைச் சார்ந்த பலரும் பங்கு போடுவது என்றால், அதைவிட குற்றம் வேறு எதுவும் இருக்க முடியாது. ஆகவே இந்த அர சாங்கம் அத்தாரிட்டேரியனிசத்தைப் பாது காக்கக்கூடிய சர்க்கார். லஞ்ச ஊழல் செய்யக்கூடிய சர்க்கார், செய்கின்றவர்களை பாது காக்கக்கூடிய சர்க்கார், ஜனநாயகத்தை இந்த மாதிரி ஒடுக்கக் கூடிய சர்க்கார் (குறுக்கீடு) என்று கூறி இந்த அரசு மீது நம்பிக்கை யில்லை என்று நான் இந்த தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

*திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க பேரவைத்துணைத் தலைவர் அவர்களே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி யினுடைய துணைத்தலைவர் மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள், ''மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர் களின் தலைமையில் செயல்படும் அமைச்சரவை மீது இப்பேரவை நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கின்றது'' என்ற ஒரு தீர்மானத்தை முன் மொழிந்து இங்கே பேசியிருக்கிறார்கள்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி இந்த தீர்மானத்தை முன் மொழிந்தாலும் கூட இந்த மாமன்றத்திலே இருக்கின்ற, எதிர் வரிசையிலே உள்ள சில கட்சிகள் இந்த தீர்மானத்திற்கு ஆதர வாக நின்று இருக்கின்றன. தமிழக சட்டமன்றப் பேரவையைப் பொறுத்த அளவிலே பிரதான எதிர்கட்சியாக இருக்கக்கூடிய இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியினர் இந்த நம்பிக்கையின்மை தீர்மானத்திற்கு ஆதரவு தருகிறார்களா என்று கேட்கப்பட்டதா என்ற நிலை ஒருபுறம் இருக்க இந்தத் தீர்மானம் இன்றைக்கு விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப் பட்டிருக்கிறது. நான் முன்பே சொன்னதைப் போல பிரதான எதிர்க்கட்சி என்ற முறையிலே ஆளுகின்ற கட்சிகள் நிறைகள் செய்கின்ற நேரத் திலே மனநிறைவோடு அவைகளைப் பராட்டுவதற்கும், குறை களைக் காணுகின்ற நேரத்திலே குறைகளைச் சுட்டிக் காட்டிக் களைவதற்கும் ஆக்கபூர்வமான யோசனைகளைச் சொல்வதற்கும் என்றைக்கும் எங்களுடைய கட்சி தயாராக இருந்திருக்கிறது என்ற அந்த முறையிலே நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கின்ற இந்த தீர்மானத்தின் மீது நாங்களும் கலந்து கொண்டு எங்களுடைய ஒருசில கருத்துக்களை முன்னால் வைப்பது பொருத்தமாக இருக் கும் என்று நம்புகிறேன்.

இங்கே நம்பிக்கையில்லாந் திர்மானத்தை முன் மொழிந்து பேசிய நம்முடைய பொதுவுடமைக் கட்சியின் துணைத் தலைவர் வழக்கம்போல் பேசினார்கள் என்று சொன்னாலே போதும் என்று நான் கருதுகிறேன். சிலர் பேசுகின்ற நேரத்திலே அவர்களுக்கு என்று சில பிரச்சினைகள் இருக்கும். எந்தப் பிரச்சினைகள் இருந்தாலும் சரி, அதற்குள்ளே போய் விடுவார்கள். தெரிந்தோ, தெரியாமலோ, அதைப் போலவே நம்முடைய பொதுவுடமைக் கட்சியின் துணைத் தலைவர் இன்றைக்கு பேசுகின்ற நேரத்திலே தேவையில்லாமலேயே, வேண்டுமென்றே வலிந்து மத்தியிலே இருக்கக்கூடிய அமைச்சரவையைப் பற்றியும், நாமெல்லாம் வணங் கக்கூடிய, மதிக்கக்கூடிய பாராட்டக்கூடிய அன்னை இந்திரா காந்தியைப் பற்றியும் அவர்கள் தனக்கேஉரித்தான பாணியிலே சில சொற்றொடர்களைக் கடுமையான வாசகங்களை (குறுக்கீடு)ச் சொன்னார்கள். சர்வாதிகாரம் என்று சொன்னார்கள், சர்வாதி காரி என்று சொன்னார்கள். எதேச்சதிகாரம்என்று சொன்னார்கள். நான் உடனேயே சர்வாதிகாரி என்ற சொல்லுக்கு என்னபொருள் இருக்கிறது என்று நம்முடைய நூலகத்திலேஇருந்து அகராதியை எடுத்துப் பார்த்தேன். ஆங்கிலத்திலேயும் சரி, தமிழிலேயும் சரி, சர்வதிகாரி என்பதற்கு வல்லாட்சியர் என்றும், சர்வாதிகாரி, தன்னாட்சி குழு அதிகாரம் பெற்றவர் என்றும் தமிழிலே போடப்பட்டிருக்கிறது. ஆங்கிலத்திலே சொல்கிற நேரத்திலேAbsolut eRuler என்று சொல்லியிருக்கிறார்கள். அது மாத்திரமல்ல. Person with absolute authority in any sp ere, one who dictates to writers, என்றெல்லாம் அந்த அகராதியிலே பொருள் சொல்லப் பட்டிருக்கிறது. நான் கருதுகிறேன். நம்முடைய பொதுவுடமைக் கட்சியின் துணைத் தலைவர் அந்த அர்த்தங்களை எல்லாம் புரிந்துகொண்டுதான் அதை தெரிவித்திருக்கிறார்கள் என்று கருதுகிறேன். சர்வாதிகாரம் எங்கே அங்கேயிருக்கிறது. எதேச்சதிகாரம் எங்கே இந்த நாட்டிலே இருக்கிறது. (குறுக்கீடு). நீங்கள் பேசும்போது நாங்கள் எவ்வளவோ பொறுமையாக இருந்தோம்.

திரு. ரா. உமாநாத் : டிக்சனரியைப் பார்த்த அர்த்தத்திலே அல்ல. பொலிட்டிகள் டெர்ம், அத்தாரிட்டேரியனிசம் என் பது.

திரு. என். எஸ். வி. சித்தன் : ஆகவே அகராதியைப் பார்த் தாலும் சரி, பார்க்காவிட்டாலும் சரி, அவர்கள் அரசியல் ரீதியாக பொருத்தம் கொடுத்தாலும் சரி, அல்லது அவர்களுக்கே உரித் தான முறையிலே பொருள் கொடுத்தாலும்சரி, அந்த சார்வாதி காரத்தைப் பற்றி அவர்கள் அழுத்தமாகச் சொல்லியிருக்கிறார் கள்,



இந்தியா, உலகத்திலேயே மிகப் பெரிய ஜனநாயக நாடு என்பதில் நம்முடைய நாட்டு மக்களுக்கு பெருமை இருக்கிறது. வயது வந்த ஆண்களுக்கும், பெண்களுக்கும் வாக்குரிமை அளித்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு ஜனநாயக அமைப்பிலே நாம் ஆட்சியை அமைத்திருக்கிறோம். அந்த முறையிலே ஜனநாயக அமைப்பிலே நாடு இயங்கிக் கொண்டிருக்கிறது. நான் இன்னும் கூடச் சொல்வேன். மேற்கு வங்கத்திலே கூட சமீபத்திலே தேர்தல் நடைபெற்று அங்கே கூட ஜனநாயக முறையிலே ஆட்சி அமைக்கப் பெற்று நடந்துக் கொண்டிருக்கிறது. எழுத்துரிமையையும், பேச்சுரிமையையும் இந்த நாட்டிலே நீடித்து நிலைபெற்று வரு கிறது. எப்படி இந்த நாட்டிலே சர்வாதிகாரம் நிலவுகிறது ஏதேச்சாதிகாரம் நடக்கிறது என்று நம் நண்பர்கள் பேசு கிறார்கள் என்று எனக்குப் புரியவில்லை.

(முற்பகல் 11-40)

1975 ஆம் ஆண்டிலே நாட்டிலே பெரும் புரட்சி பரவுவதற் கான சூழ்நிலை உருவாகி வந்தது. அதை நாம் அனைவரும் நன்கு அறிவோம் மாணவர்களைப் பள்ளிக் கூடம் செல்ல வேண்டாம் என்று தூண்டினார்கள். ராணுவத்திலே உள்ளவர்களைக் துப்பாக்கிகளைப் கீழே போடுங் கள் என்று சொன்னார்கள். மேலதிகாரிகள் உத்தரவுகளுக்கு கீழ் படியக் கூடாது என்று வன்முறை தூண்டப்பட்டதால் பாதுகாப்பு பந்தோபஸ்து சீர்குலையக்கூடிய நிலை ஏற்படும் என்பதை எண்ணிப் பார்த்துத்தான், அந்தச் சூழ்நிலையில் அவசர நிலைமை பிரகடனம் செய்யப்பட்டது. அதற்குப் பிறகு 1977 ஆம் ஆண்டு தேர்தல் நடந்தது. தேர்தலிலே நான் சார்ந்திருக்கின்ற இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி மத்தியிலே ஆளுகின்ற வாய்ப்பினை இழந் தது. அன்னை இந்திரா காந்தி அவர்கள் ஆட்சிக் கட்டிலை விட்டு இறக்கப்பட்டார்கள். அப்போது அமைதியாக நாங்கள் ஆட் சியை வேறு கட்சியிடம் ஒப்படைக்கவில்லையா? வேறு எந்த நாட்டில் ஒரு அதிகார மாற்றத்தில் இவ்வளவு சமாதானமாக அமைதியாக நடந்திருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண் டும். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இது தெரியாதா? அவருக்கு மிக நன்றாகத் தெரியும். அவருக்கு மன சாட்சி உண்டு. ஆனால் வாதத்திற்காக இங்கே வைக்க வேண்டும் என்று சொல்கிறார்களே தவிர, நிச்சயமாக அப்படி அவர் சொல்லவில்லை என்று கருதுகிறேன்.

அதற்குப் பிறகு, 1980—லே தேர்தல் நடந்தபோது, கன்னியா குமரியிலிருந்து, காஷ்மீரத்திலே உள்ள மக்கள் வரையில் ஏகோ பித்த நம்பிக்கையைப் பெற்று மீண்டும் இந்த நாட்டினுடைய பிரதமராக பொறுப்பேற்றுக் கொண்டு திருமதி காந்தியவர்கள் ஆட்சி செலுத்திக் கொண்டிருக்கும்போது, அவர்கள் இப்படிப் பட்ட துராக்கிரதமான வார்த்தைகளை ஏன் சொல்ல வேண்டும் என்பதுதான் எனக்குப் புரியவில்லை.

அணி சேரா நாடுகளுடைய ஒட்டு மொத்த தலைவியாக பொறுப்பேற்றுக் கொண்டு சென்ற ஆண்டு கூட இந்த அவையிலே நாம் பர்ராட்டிப் பேசினோமே. அவ்வாறு 103 நாடுகளின் தலைவியாக பொறுப்பேற்றுக் கொண்டு, எவ்வளவு சிறப்பாக நம்முடைய பிரதமர் அவர்கள் அதனை நடத்திக் காண்பித்தார். நான் இன்னமும் எண்ணிப் பார்க்கிறேன். உலகிலே இருக்கிற மற்ற நாடுகளெல்லாம் ஆசிய விளையாட்டுப் போட்டியை நடத்த தயங்கிக் கொண்டிருந்த சூழ்நிலையில், நமது பாரதப் பிரதமர் அவர்கள் டெல்லியிலே மிகப் பிரமாதமாக அந்த விளையாட்டுப் போட்டிகளை நடத்திக் காட்டி, இதுமாதிரி இதுவரையில் நடக்கவில்லை என்று அத்தனை நாடுகளும் பாராட்டும் வகையில், நடத்த வில்லையா? இன்னும் சொல்லப்போனால், காமன்வெல்த் நாடுகளின் மாநாடு கூட டெல்லியிலே இந்த மாதம் நடைபெறவிருக்கிறது. இப்படி பிரதம அமைச்சரின் கடமைகளை சிறப்பாக நிறைவேற்றிக் கொண்டிருக்கிற அன்னை இந்திரா காந்தி அம்மையார் அவர்களைப் பாராட்டிச் சொல்லவேண்டாம், ஆனால் இதையே ஒரு வாய்ப்பாக எடுத்துக் கொண்டு, குறை சொல்லவேண்டாமே என்றுதான் நான் சொல்ல விரும்புகிறேன். எப்படியாவது குழம்பிய குட்டையிலே மீன் பிடிக்க வேண்டும் என்று நம்முடைய மாண்புமிகு பொதுஉடமைக் கட்சியின் துணைத் தலைவர் அவர்கள் எண்ணியிருப்பார்களேயானால், அது நிச்சயமாக முடியாது என்று நான் உங்கள் மூலமாக தெரிவித்துக் கொள்கிறேன்.

நம் நாட்டில் சர்வாதிகாரம் நிச்சயமாக இல்லை. சீனாவிலே சர்வாதிகாரம் நடக்கிறது என்று சொல்ல முடியுமா? சொன்னால் என்ன நடக்கும்? சொல்லிவிட்டு பிறகு அங்கே இருக்க முடியுமா? ஆனால் இந்த நாட்டிலே எல்லா விதமான உரிமைகளும் இருக்கிற காரணத்தால் தைரியமாக அவர்கள் சொல்கிறார்கள், சர்வாதிகாரம் இருக்கிறது என்று. ஆகவே, சர்வாதிகாரம் என்று பேசிப் பேசி நம்மை நாமே பலவீனப்படுத்திக்கொள்ள வேண்டாம் என்று சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்து இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்திலே பேசுகிற நேரத்திலே நான் முன்னமேயே சொன்னதைப் போல நிறைகளைப் பாராட்டுவது எங்களுடைய கடமையாக கருதுகிறேன். இன்றைக்கு தமிழகத்திலே இருக்கிற அத்தனை கோடி மக்களுடைய எண்ணத்திலேயும் இருந்துக் கொண்டுக வலை அளிக்கிற இலங்கைத் தமிழர்களுடைய பிரச்சினையில், மாண்புமிகு பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவ்ர்கள் ஜூலை மாதத்திலிருந்து இன்று வரை எடுத்து வருகிற ஆக்கப் பூர்வமான, ராஜதந்திரமான நடவடிக்கைகளையொட்டி, தமிழக அரசு மைய அரசாங்கத்திற்கு பல்வேறு வகைகளில் ஆதரவு அளித்து வருகிறது. தமிழக அரசாங்கம் மைய அரசு எடுக்கிற பல்வேறு நடவடிக்கைகளுக்கு ஆதரவு கொடுப்பதோடு, உண்மை நிலைமையை மாண்புமிகு தமிழக



அவர்கள் உணர்ந்துக் கொண்டிருக்கிற காரணத் முதலமைச்சர் அவர்கள் உணர்ந்துக் கொண்டிருக்கிற காரணத்தால், இலங்கைத் தமிழர்கள் பிரச்னையைப் பொறுத்த வரையில், நம்முடைய அரசாங்கம் எடுத்துக் கொண்டிக்கிற, இன்னும் எடுக்க இருக்கும் நடவடிக்கைகளுக்கு எங்களுடைய கட்சியின் சார்பிலே பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

அது மட்டும் அல்ல, அண்மைக் காலத்திலே தமிழக அரசைப் பொறுத்தவரையில் ஒரு புதிய அணுகு முறையை என்னால் பார்க்க முடிகிறது. இந்த மாமன்றத்திலேயே பல்வேறு கால கட்டங்களில் எதிரும் புதிருமாக இருந்து கொண்டு, மைய அரசாங்கத்தைப் பற்றி மைய அரசாங்கம் தமிழகத்திற்கு கொடுக்கிற உதவிகளை, மானியங்களைப் பற்றியெல்லாம் தாக்கியே பேசிக் கொண்டிருக்கும் அந்த, நிலை மாறி, இன்றைக்கு ஒரு பெரிய மாற்றம் ஏற்பட்டு போராடிப் பெறுவதை விட, வாதாடிப் பெறுவதே மேல் என்ற முறையிலே, மாற்றம் ஏற்பட்டிருப்பதை என்னாலே பார்க்க முடிகிறது.

குறிப்பாக சமீபத்திலே சென்னை வந்த ஆந்திர முதலமைச்சர் அவர்கள், மாநிலங்களின் உரிமைகளையும் அதிகாரங்களையும் மைய அரசு அபகரிக்க முயற்சிக்கிறது என்று குற்றஞ்சாட்டிய சில நாட்களிலேயே தமிழகத்தின் முதல்வர் அவர்கள், புதிய தொழில்கள் ஆரம்பிப்பதற்கு லைசென்ஸ்கள் வழங்குவதிலே மத்திய அரசாங்கம் தாராளமாக இருக்கிறது என்றும் அவை முன்னவர் அவர்கள் அரிசி கொடுத்து உதவுவது போன்ற இன்னும் சில பிரச்சினைகளிலே மத்திய அரசாங்கம் தமிழக அரசிற்கு உதவிகரமாக இருக்கிறது என்றும் செய்திகளைச் சொல்லி இருக்கிறார்கள். மத்திய அராசாங்கம் மாநில அரசாங்கத்திடம் அனுதாப உணர்வோடு நடந்து கொள்கிறார்கள் என்று அவர்கள் சொல்லியிருப்பது குறித்து நான் மகிழ்சியடைகிறேன், பாராட்டுகிறேன். இந்தப் போக்கும் அணுகுமுறையும் தொடரவேண்டும், தொடரும் என்று நம்புகிறேன்.

இந்த சட்டமன்றத்தின் கூட்டம் 6 மாதங்களுக்குப் பின்னாலே இப்போது நடந்துகொண்டிருக்கிறது. 6 மாதங்களுக்குள் சட்டமன்றத்தைக் கூட்டவேண்டுமென்ற சட்டம் இல்லாவிட்டால் தீபாவளியைப் போல் பொங்கலைப்போல் வருடத்திற்கு ஒருமுறை என்று இது வந்துவிடுமோ என்று நான் அஞ்சுகிறேன். இந்த முறை மாறவேண்டும். நமக்குப் பக்கத்திலே இருக்கிற சின்னஞ்சிறு தீவான இலங்கையிலே நாடாளுமன்றக் கூட்டம் 2 வாரங்களுக்கு ஒரு முறை 15 நாட்களுக்கு ஒரு முறை கூடுகிறதே அப்படிபட்ட ஒரு முறையே இங்கே ஏற்பட்டால் பல்வேறு பிரச்சினைகளைப்பற்றி மக்கள் பிரதிநிதிகளாகிய நாங்கள் எடுத்துச் சொல்லவும் அவற்றிற்குத் தீர்வு காணவும் முடியும்.

மாதத்திற்கு இரண்டு முறை இல்லாவிட்டாலும் மாதத்
திற்கு ஒரு முறையாவது அல்லது 2 மாதத்திற்கு ஒரு
முறையாவது சட்டமன்றக் கூட்டத்தைக் கூட்டவேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன். எனக்குத் தெரியும் பதில்
சொல்ல ஆற்றல்மிக்கவர்கள் இங்கே இருக்கிறார்கள், இங்கே
பிரச்சினைகளை எடுத்துவைக்கக் கூடியவர்கள் இருக்கின்ற
காரணத்தினால் மேலும் பெரும்பான்மை இருக்கிற காரணத்
தினாலே அடிக்கடி சட்டமன்றத்தைக் கூட்டி மக்களுடைய
பிரதிநிதிகளின் குறைகளைக் கேட்பதற்கு முயற்சி செய்ய
வேண்டுமென்று தங்கள் மூலமாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** என் மூலமாக
என்று தாங்கள் சொல்வதால் நான் ஒரு பதிலைச் சொல்ல
விரும்புகிறேன். அரியானாவில் ஒரு நாள் மட்டும் கூட்டினார்
கள். கூடி ஒரே நாளில் கலைந்த நிகழ்ச்சியெல்லாம் இருக்
கிறது.

**திரு. என். சங்கரய்யா :** அரியானா, ஜனதா கட்சியில்
இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தவர்களைக் கூண்டோடு
காங்கிரஸாக்கிய மாநிலம் இல்லையா? ஆகவே ஒரு நாளிலேயே
கூடிவிடுவார்கள்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** எனக்குத் தெரியும், இதிலே
யும் அவர்கள் நுழைந்து விடுவார்கள் என்று. துணைத்தலைவர்
அவர்களே, ஒரு நாள் இங்கே போதும் என்று எண்ணுகிறீர்
களா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நாம் இங்கே
15 நாட்கள் கூடுகிறோம். அங்கே ஒரே நாளில் கூடிக்
கலைகிறார்கள் என்றுதான் சொன்னேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** நமக்கு பிரச்சினைகள்
நிறைய இருக்கின்றன. துணைத் தலைவர் அவர்களே,
நமமுடைய அரசாங்கம் திட்டக் குழுவை நியமனம் செய்
திருக்கிறது. ஏறத்தாழ அந்தத் திட்டக்குழுவிலே எட்டிற்கும்
அதிகமான உறுப்பினர்கள் அங்கம் வகித்துக் கொண்டிருக்
கிறார்கள். நம்முடைய கஜானாவிலிருந்து பல லட்சக்கணக்
கான ரூபாய் அதற்காக செலவிடப்படுவதாக அறிகிறேன்.
நம்முடைய திட்டக்குழு தமிழகத்திலே தொழில் வளர்ச்சிக்
காக பொருளாதார முன்னேற்றத்திற்காக விவசாய மேம்
பாட்டிற்காக என்ன என்ன திட்டங்களைத் தீட்டியிருக்கிறது
அண்மைக் காலத்திலே? எத்தனை முறை அவர்கள் கூடியிருக்
கிறார்கள். கல்லூரியிலே இருக்கிற ஒரு பொருளாதாரப்
பேராசிரியர் நிறையத் திட்டங்களைக் கொடுக்கக் கூடிய
இந்த நேரத்திலே எத்தனை முறைகள் திட்டக்குழுவினர்
கூடியிருக்கிறார்கள், என்ன என்ன திட்டங்களை தீட்டி



யிருக்கிறார்கள் என்பதைப்பற்றியெல்லாம் ஒரு வெள்ளை
அறிக்கை மூலமாக அவைக்குக் கொடுக்கவேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைய தினம் தமிழகத்திலே எத்தனையோ வாரியங்கள்
இருக்கின்றன. இதிலேகூட இந்தியாவிலேயே நமக்குத்தான்
முதல் பரிசு கிடைக்கும். இந்தியாவிலே உள்ள பல்வேறு
மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கிறபோது தமிழகத்திலே
தான் நிறைய வாரியங்கள் இருக்கின்றன என்ற நிலைமை
இருக்கிறது. அந்த வாரியங்களைப் பார்க்கிற நேரத்திலே
அவை மக்களுக்குச் சேவை செய்தவற்காக என்று இல்லாமல்
ஆளுங்கட்சியிலே இருக்கிறவர்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுப்
பதற்காக இந்த வாரியங்கள் பயன்படுகின்றன என்ற
முறையை இந்த அரசாங்கம் கடைப்பிடிக்குமானால் விளைவுகள்
பாதமாக இருக்கும் என்பதை நான் கவனத்திற்குக் கொண்டுவர
விரும்புகிறேன். பொதுத்துறை நிறுவனங்களின் செலவினங்
கள் — பேரல்லல் கவர்ன்மென்ட் என்று ஆங்கிலத்திலே சொல்
வார்களே — அதற்கு இணையாக இருக்கிற காரணத்தினாலே
நம்முடைய வரிப்பணம் பாழாகக்கூடிய சூழ்நிலை இருக்கிறது
என்பதை அரசு எண்ணிப் பார்க்கவேண்டும்.

(முற்பகல் 11—50)

மது விலக்கைப் பொறுத்த அளவில் எங்களுடைய
கட்சியின் கொள்கையை பல்வேறு காலகட்டங்களிலே
இந்த மாமன்றத்திலே எடுத்துச் சொல்லியிருக்கிறோம்.
பரிபூரண மது விலக்கு வேண்டும் என்று சொல்லியிருக்கி
றோம். அந்த மது விலக்கு கொள்கைக்காகத்தான்
இந்த மாமன்றத்திலே பல்வேறு தலைவர்கள் போராடி
இருக்கிறார்கள், வாழ்ந்து இருக்கிறார்கள் என்று எல்லாம்
எடுத்துச் சொல்லியிருக்கிறோம். ஆனால் அரசு இன்றைக்கு
மதுக் கடைகளை திறந்துவிட்ட காரணத்தினால் அதன்
மூலமாக அரசுக்கு எந்த அளவுக்கு அதிக வருவாய்
வரவேண்டும் என்று பார்க்கிற நேரத்தில் இன்றைக்கு
பிளண்டிங் யூனிட்டு, டிஸ்ட்டிரிபூஷன் என்று சொல்கிறார்கள்.
இந்த இரண்டையும் அரசே எடுத்துக் கொள்ளுமானால் அதன்
மூலமாக பல கோடிக்கணக்கான ரூபாய்கள் அரசுக்கு வர
இருக்கிறது. அப்படிப் பெறுவதற்கு முயற்சியை எடுத்துக்
கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்தில் இருக்கின்ற கிராமப் பொருளாதாரம்
அண்மையில் சீர்குலைந்து போயிருப்பதாக நாங்கள் கணக்கிடு
கிறோம். தமிழகத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் முறையாக
இயங்கவில்லை. விவசாயிகள் வாங்கிய கடனை திருப்பி
செலுத்த முடியவில்லை, அதன் விளைவு இன்றைக்கு
உற்பத்தி குறைந்து இருக்கிறது. விளைச்சலைப் பெருக்க
கடன் உதவி, உர வசதி போன்றவைகள் தாராளமாக

கிடைக்காத காரணத்தால் இன்றைக்கு தமிழகம் உற்பத்தித் துறையில் பின்தங்கியதோடு அல்லாமல் உரத்தையும் கடன் கொடுக்கின்ற இடங்களில் ஊழலுக்கு இடம் ஏற்பட்டு இருப்பதாக நாங்கள் கருதுகிறோம். அது அதிகாரி மட்டத்தில் ஆனாலும் சரி அல்லது வேறு மட்டத்தில் ஆனாலும் சரி இது மாதிரி குறைகளைக் களைவதற்கான முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயத்தைப் பற்றி பேசுகிற நேரத்தில் விவசாய உற்பத்திப் பற்றி பேசுகிற நேரத்தில் அதற்கு பொறுப்பு ஏற்றுக்கொண்டு இருக்கும் அமைச்சர் விவசாயத்தைப் பற்றி எங்காவது பேசியிருக்கிறாரா என்று நான் எண்ணிப்பார்க்கிறேன். பல்வேறு கால கட்டங்களில் பேசுகிற துறைக்கு பொறுப்பு ஏற்றுக்கொண்டு இருக்கும் ஒரு அந்தத் துறையில் செய்து இருக்கும் அமைச்சர் சாதனைகளைப் பற்றி, வருங்காலத்தில் நடவடிக்கைகள் பற்றி சொன்னால் பாராட்டலாம். ஆனால் என்ன காரணத்தினாலோ கட்சியின் செயலாளரைப் போலவே கட்சியினுடைய கொள்கையாக கூட எடுத்துக்கொள்ள முடியாது. பல்வேறு கால கட்டங்களில் தன்னுடைய நேரத்தையும் பதவிகளையும் வாய்ப்பையும் காங்கிரஸ் கட்சியை திட்டுவதற்கு யோசனைச் சொல்வதற்காகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். நான் மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே உங்கள் மூலமாக நம்முடைய முதலமைச்சரை கேட்டுக் கொள்வது அந்த அமைச்சரை நீங்கள் கொஞ்சம் சற்று இழுத்துப் பிடிக்க வேண்டும். அந்தத் துறையில் பொறுப்பு ஏற்றுக்கொண்டு இருக்கும் அமைச்சர் அந்தப் பொறுப்பினை ஏற்றுக்கொண்டுவருகிற காலத்திலே பொறுப்புடன் செயல்படவேண்டும் என்று நான் கேட்டுகொள்ள விரும்புகிறேன்.

அமைச்சரவைப் பொறுத்தவரையில் பல்வேறு கால கட்டங்களில் கருத்து வேறுபாடுகள் என்பது, கருத்து மாறுபாடுகள் என்பது ஒலித்துக்கொண்டே இருக்கிறது. குத்தகை நிலம் சம்பந்தமாக நம்முடைய வருவாய்த் துறை அமைச்சருக்கும், அறநிலையத்துறை அமைச்சருக்கும் இந்த மாதிரியான கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன. ஒரு அமைச்சர் இருக்கவேண்டும் என்று சொல்கிறார், அந்தச் சட்டத்தின் அடிப்படையில் இருக்கக்கூடாது என்று இன்னொருவர் சொல்கிறார். இந்த மாதிரி கருத்து வேறுபாடுகள் அமைச்சரவையைப் பொறுத்தவரையில் இருக்கூடாது என்று நான் கருதுகிறேன்.

நேற்றைக்கு மதுரையில் கூடிய தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் செயற்குழு மிக அற்புதமான, அருமையான தீர்மானத்தை அழுத்தம் திருத்தமாக நிறைவேற்றி இருக்கிறது. கோயில்கள், மடங்கள், டிரஸ்டிகளுக்குச் சொந்தமான அனைத்து குத்தகை நிலங்களிலும் ஒரே நேரத்தில் இதன் மீது குத்தகைதாரர்கள், நில உடமைதாரர்கள் என்ற இரு நபர்களுக்கும்



இருக்கும் உரிமையை நீக்கி நிலச் சொந்தக்காரர்களுக்கு நியாயமான முழு நஷ்ட ஈடு வழங்கி உழுபவர்களுக்கே நிலத்தை உடமையாக்கவேண்டும். கோயில்கள், மடங்கள், அறக்கட்டளைகள் நிலங்களை எடுத்துக் கொள்ளும்போது அவற்றுக்கு ரொக்கமாக நஷ்டஈடு தரவேண்டும். இப்பணத்தை முதலீடு செய்து அதன் வருவாயில் இருந்து கோயில் காரியங்களுக்கும் அறச் செயல்களுக்கும் செலவு செய்ய வகை செய்யவேண்டும் என்று ஒரு தீர்மானத்தை எங்கள் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி நிறைவேற்றி இருக்கிறது. அரசு அதை செயல்படுத்த வேண்டும்என்று கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயத்தைப் பற்றி பேசுகிற நேரத்தில் இன்றைக்கு நாங்கள் எல்லாம் கிராமங்களில் இருந்து வருகிறோம். நாள் ஒன்றுக்கு 6 மணி நேரம் மின்சாரம் கிடைக்கிறது என்று நாங்கள் உணர்ந்து இருக்கிறோம். எங்களுக்கும் தகவல்கள் கிடைத்து கொண்டு இருக்கிறது. மின்சார தட்டுப்பாடு இருந்து அந்தக் காலம் எல்லாம் கடந்து இன்றைக்கு மழை பொழிந்து அணைகளில் கூட நீர் நிரம்பியிருக்கிற நேரத்தில் கூட 5 மணி நேரம் கூட சரியாக மின்சாரம் வராத நிலையில் இன்னும் இருக்குமானால் நாம் எப்படி உணவு உற்பத்தியைப் பெருக்கப் போகிறோம்? இன்றைக்கு கடனில் பிறந்து, கடனில் வாழ்ந்துக் கொண்டு இருக்கும் விவசாயிகளுக்கு நாம் என்ன சொல்லப் போகிறோம்? அவர்களுடைய விமோசனத்திற்கு என்ன வழி இந்த அரசு செய்து இருக்கிறது என்பதை நான் உங்கள் மூலமாக கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னும் ஒன்றை இந்த நேரத்தில் குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கிறேன். காவேரி நதி நீர்ப் பிரச்சினை தீர்க்கப்படாமல் இருக்கிறது. தமிழகத்தில் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் இருக்கிறார்கள். இந்த ஆண்டு மட்டும் தஞ்சை மாவட்டத்தில் 4 லட்சம் ஏக்கர் சாகுபடி செய்ய வேண்டிய இடத்தில் 1 லட்சம் ஏக்கர்தான் சாகுபடி செய்து இருக்கிறார்கள். 3 லட்சம் ஏக்கர் உற்பத்திச் செய்யப்படவில்லை என்றால் என்ன அர்த்தம். 6 லட்சம் டன் உணவு உற்பத்தி இந்த ஆண்டு செய்ய இயலவில்லை. 6 லட்சம் டன் உணவு உற்பத்தி செய்யவில்லை என்று சொன்னால் 100 கோடி ரூபாய் தமிழகத்தில் இன்றைக்கு பாதிக்கப்பட்டு இருக்கிறது. விவசாயிகள் வயிற்றில் அடிக்கப்பட்டு இருக்கிறது. உற்பத்தி பெருகவில்லை என்று அர்த்தம். இதை அரசு கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டாமா? இது சிந்தித்துப் பார்க்க வேண்டிய வேளை இல்லையா? இது தமிழகம் எதிர் பார்க்கக் கூடிய பிரச்சினை இல்லையா? நான் உங்கள் மூலமாக உடனடியாக மெத்த அவசரத்தோடு கேட்டுக் கொள்கிறேன் இந்த பிரச்சினைக்கு அரசு தீர்வு காண வேண்டும். நாள் கடக்க, கடக்க இந்தப் பிரச்சினை ஒரு பூதாகரமாக விளங்கி தமிழகத்தின் எதிர் காலத்தை

இருட்டு ஆக்கக் கூடிய நிலையை உருவாக்கிக் கொண்டிருக்கிறது. அரசு இதற்கு ஆக்கப் பூர்வமாக நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். அப்படி எடுக்கிற நேரத்தில் நாங்கள் நிச்சயமாக ஆதரவாக இருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

எண்ணிப் பார்க்கிறோம். ஒரு ஆலை மூடினால் சில நூற்றுக் கணக்கான தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லை என்று சொன்னால் நாம் கூக்குரல் போடுகிறோம். எத்தனை தொழிலாளர் தலைவர்கள் வருகிறார்கள், யார் எல்லாம் வருகிறார்கள். ஆனால் சில நூற்றுக் கணக்கான ஏக்கர்கள் பாதித்துப் போகின்ற நேரத்தில் அந்த விவசாயிக்கு யார் குரல் கொடுப்பது, அந்த விவசாயிகள் நிலை என்ன, இன்றைக்கு ஆயிரக் கணக்கான, லட்சக் கணக்கான விவசாயிகள் இருக்கிறார்களே அவர்களுக்கும் அதே ஆர்வத்தோடும், அக்கரையோடும் அரசு செயல்பட வேண்டும் என்று நான் உங்கள் மூலமாக கேட்டுக் கொள்கிறேன்.

கரும்புக்கு விலை ரூ. 155 என்று வைத்திருப்பது காணாது; ரூ. 200, ரூ. 205 வேண்டுமென்று சொன்னோம். அரசாங்கம் கொடுத்த புள்ளி விவரத்திலேயே ரூ. 200-க்கு மேலே கொடுத்திருக்கிறார்கள் என்று உள்ளதாக நான் கேள்விப்படுகிறேன். அப்படி இருக்கிற நேரத்திலே, இந்த வரிசையிலே இருக்கிற அத்தனை பேரும் குரல் கொடுத்து, இங்கே அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், ரூ. 175, கரும்புக்கு டன்னுக்குக் கொடுக்கிறோம், என்று. ஆனால், என்ன நடைபெற்றது? அரசாங்கம் அறிவித்து விட்டது; அமைச்சர் அறிவித்து விட்டார். ஆனால், டைரக்டர் ஆப் ஷுகர் என்ன சொல்கிறார்? ரூ. 155 தான் விலை தருகிறோம், மேலும் ரூ. 20 ஐ மானியமாகக் கொடுக்கிறோம் என்று சொன்னார். அதனுடைய விளைவு என்ன வாயிற்று. ரெக்கவரி குறைவாக இருக்கிறவர்களுக்கு அதிகமான பணம். ரெக்கவரி கூட இருப்பவர்களுக்குக் குறைந்த பணம் என்கின்ற முறையிலே இன்றைய தினம் வந்திருக்கிறது. நான் கேள்விப்படுகிறேன், விவசாயப் பெருமக்களுக்குச் சொந்தமான பல கோடிக்கணக்கான ரூபாய், நாளெல்லாம் நீர் பாய்ச்சி, வெந்து மடிந்துக் கொண்டிருக்கும் அந்த விவசாயப் பெருமக்களுக்குச் சொந்தமான, கோடிக்கணக்கான ரூபாய் இன்றைக்கு ஆலை முதலாளிகளிடம் இருக்கிறது. இதை அரசாங்கம் பெற்றுத் தர வேண்டும். அதற்கான முயற்சிகளை நீங்கள் எடுக்க வேண்டுமென்று நாங்கள் கேட்டுக் கொள்கிறோம். அரசாங்கம் இந்தப் பிரச்னையிலே கிணற்றில் போட்ட கல்லாக இருந்து விட வேண்டாம் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

தொழில் பிரச்சினையைப் பொறுத்த வரையிலே, 1980-லே இருந்து எந்த அளவு தமிழகம் முன்னேறி இருக்கிறது? தொழில் துறையிலே தமிழகம் இன்னும் பின்தங்கிய நிலையிலே இருக்கிறது. விவசாயத்தைப் பொறுத்த அளவிலே உற்பத்தி செய்வோமானால் 1, 2, 3, 4 என்று தான் பெற முடியும். தொழிலில், 1, 4, 8, 16 என்று பல்வேறு விதத்திலே உற்பத்தியைப் பெருக்குவதன் மூலமாக, மக்களுக்குப் பொருளாதார வாழ்வு தரக்கூடிய முறையில் இன்னும் அதிகமான முயற்சிகளை அரசாங்கம் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



தமிழகத்திலே நீளமான கடற்கரை இருக்கிறது. 500 மைல் நீளமுள்ள கடற்கரை என்று கருதுகிறேன். அந்தக் கடற்கரையைப் பயன்படுத்தி, பல இலட்சக்கணக்கான பேர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கின்ற நிலையைப் பெற முடியும்? அன்னியச் செலாவணியைப் பெற்றுக் கொடுக்க முடியும். அதற்கான வழி வகைகலளைக் காண வேண்டும்.

நம்மிடம் வனத்துறை இருக்கிறது; வனங்கள் இருக்கின்றன. அவற்றின் மூலமாக, பல நூற்றுக் கணக்கான பேர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்க முடியும். ஆகவே, அரசாங்கம் தொழில் துறையில் இன்னும் ஆக்கத்துடன் செயல்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தன்னிறைவுத் திட்டத்தைப் பொறுத்த வரையில் ரூ. 220 கோடி, 374 ஊராட்சி ஒன்றியங்களுக்குச் செலவிடப்பட்டிருக்கிறது. ஒரு குத்து மதிப்புக் கணக்குப் போட்டால் ரூ. 60 இலட்சம் செலவிடப்பட்டிருக்கிறது, ஒவ்வொரு ஒன்றியத்திற்கும். ரூ. 60 இலட்சம் செலவழிக்கப்பட்டு விட்டது. தன்னிறைவுத் திட்டம் நிறைவேற்றப் பட்டு விட்டது என்கிறார்கள். போதுமான வேலைகள் நடந்துள்ளனவா என்று எண்ணிப் பார்ப்போமானால், செலவழித்த பணத்திற்கும் நடைபெற்றிருக்கிற வேலைகளுக்கும் ஒப்பிட்டுப் பார்க்கிற நேரத்திலே, பல இனங்களிலே பணம் முழுமையாகச் செலவிடப்படவில்லை. எந்த இனத்திற்குச் செலவழிக்கப்பட்டிருக்க வேண்டுமோ, அதற்குச் செலவிடப்படாத நிலைமையிருக்கிறது. அதற்கான சான்றுகளை நாங்களே வைத்திருக்கிறோம். ஆகையினாலே, இப்படி பல கோடி ரூபாய் பாழாகியிருக்கிற காரணத்தாலே ஒரு சோஷியல் இண்டிபென்டன்ட் ஆடிட்டுக்கு ஏற்பாடு செய்ய அரசாங்கம் தயாராக இருக்கிறதா என்று நான் உங்கள் மூலம் கேட்க விரும்புகிறேன்.

மத்திய அரசாங்கம் பல கோடி ரூபாய்களை, தமிழக அரசு மூலமாக, தேசீய வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழே கொடுத்திருக்கிறார்கள்—மானியமாக, கடனாகக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், இன்றைக்கு நான் பார்க்கின்றேன், எங்களுடைய பகுதியிலே கூட, இந்த ஆண்டுக்கான தேசிய வேலை வாய்ப்புத் திட்டம் 7, 8 மாதங்களாகியும்கூட இன்னும் தொடங்கப்படாத நிலையிலே இருக்கிறது. பணத்தை மத்திய அரசாங்கம் ஒதுக்குகிறது. முறையாக செலவிட வேண்டிய நாம் செலவிடவில்லை என்று சொன்னால், 7, 8 மாதங்களுக்கு முன்னால் ஆரம்பித்

திருந்தால், முறையாக, சரியாக நடந்திருக்க முடியும். ஆகவே, அவசர கோலமாக அள்ளித் தெளிப்பதைப் போலத்தான் இருக் கும். ஆகவே, அதற்கான முறைகளை எளிதாக்கி, விரைவிலே, சரியான முறையிலே, செயலாற்றுவதற்கான முயற்சியை அரசாங்கம் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மதிய உணவைப் பற்றி பல்வேறு கால கட்டங்களிலே நாம் பேசியிருக்கிறோம். பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் தமிழகத்தினுடைய வருவாய் குறைவாக இருக்கிற காலத்திலே, அன்றைக்கு மதிய உணவைக் கொண்டு வந்ததற்குக் காரணம், பள்ளிக்குக் குழந்தைகள் வரவேண்டும், பள்ளியிலே படிக்கின்ற குழந்தைகள் பஞ்சத்தாலே, பட்டினியாலே, வறுமையாலே நின்று விடக் கூடாது, ஒழுங்காக வர வேண்டும் என்பதற்காக ஒரு அருமையான திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். ஆசிய ஜோதி பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் போகின்ற இடங்களில் எல்லாம் பாராட்டிச் சொன்னார்கள். அப்படிப்பட்ட அருமையான திட்டத்தின் தொடர்ச்சியாக, நம்முடைய முதலமைச்சர் அவர்கள்—அரசு—தமிழகத்திலே மதிய உணவுத் திட்டத்தை விரிவாக்கியிருக்கிறார்கள். ஏழைக் குழந்தைகளுக்கு மதிய உணவு வழங்கப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. வாழ வகையற்ற முதியோர்களுக்கு மதியஉணவு வழங்கப்படுகிறது என்று சொல்லப் படுகிறது. வேட்டி, சேலைகள் எல்லாம் கொடுக்கப்படுகின்றன என்று சொல்லப்படுகிறது. ஆனால், இவை எல்லாம் மனி தாபிமான அடிப்படையிலேதான் இருக்க முடியும். முறையாக நடைபெறுகிறதா? எவ்வளவு பணம் ஒதுக்குகிறார்கள்? எவ்வளவு செலவிடுகிறார்கள் என்பதையெல்லாம் தனியாகப் பார்க் கலாம். ஆனால், இந்தத் திட்டங்கள் எல்லாம் மனிதாபிமான அடிப்படையிலேதான் இருக்க முடியுமே தவிர, வளத்தைப் பெருக்கக்கூடிய திட்டமாக, தமிழகத்தினுடைய எதிர் காலத்தை, தொலை நோக்கோடு பார்க்கும்போது, பொருளாதார முன் னேற்றத்திற்கு இந்தத் திட்டங்கள் உதவுமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். வளமான, வலிவான நாட்டை உருவாக்க தர்ம சிந்தனை மட்டும் போதாது, ஆழ்ந்து சிந்தித்து பொருளா தார திட்டங்களை உருவாக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

சில தினங்களுக்கு முன்னால், இந்த மாமன்றத்திலே ஒரு வினாவிற்குப் பதில் சொல்கின்ற நேரத்தில், மின்சாரத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கிற பால் வளத்துறை அமைச் சர் அவர்கள், ரூ. 100 கோடி இருக்குமேயானால், கேஸ் டர்பைன் மூலமாக, மின்சாரத்தை உற்பத்தி செய்யலாம். அதன் மூலமாக, சிறு சிறு யூனிட்டுகள் போட்டு, தமிழகத்தினுடைய மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்யலாம் என்று சொன்னார்கள்.



[நண்பகல் 12—00]

ஆகவே, ஒரு சில நூறு கோடி ரூபாயில் தமிழ் நாட்டினுடைய மின்சாரப் பற்றாக்குறை போகுமென்றால் அரசாங்கம் சற்று முனைப்பாக இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மத்திய அரசாங்கத்தை நீங்கள் அணுகிற போதும், இந்தப் பிரச் னையை மத்திய அரசாங்கத்திற்கு நீங்கள் கொண்டு செல்கிற நேரத்திலும், நிச்சயமாக எங்கள் கட்சி உங்களுக்குத் துணையாக இருக்குமென்று சொல்லி, இந்தப் பிரச்சினையிலே இந்த அமைச் சரவை மிகவும் கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

1982 ஆம் ஆண்டு கணக்கை எடுத்துப் பார்ப்போமேயானால் வேலை வாய்ப்பிற்காகப் பதிவு செய்தவர்கள், எஸ்.எஸ்.எல்.சி. வகுப்பிற்கு மேலே படித்தவர்கள் 10 இலட்சத்து 22 ஆயிரம் பேர்கள். அன்-எம்ப்ளாய்ட், அண்டர்-எம்ப்ளாய்ட் என்று சொல்கிறோமே அவர்கள் எண்ணிக்கை ஏறத்தாழ 40 இலட்சம் என்று இருந்து கொண்டிருக்கிறது. தேர்தல் காலத்திலே பல் வேறு மலிவான வாக்குறுதிகள் கொடுக்கப்பட்டன. இன்றைக்கு $3\frac{1}{2}$ ஆண்டுக் காலம் நிறைவேறி இருக்கிறது. இந்தத் தேர்தல் கால வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு, ஏன் கடந்த ஆண்டு சொன்ன, வீட்டிற்கு ஒருவருக்கு வேலை வாய்ப்பு கொடுப்பதற்கு 15 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதாகச் சொல்லப்பட்டதே, அதன் மூலமாக எவ்வளவு பேர்கள் பயன் பெற்றிருக்கிறார்கள் என்ற விவரத்தைச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அது ஏதோ கடலில் கரைத்த பெருங்காயத்தைப் போல இருக் கிறது. தமிழகத்தில் வேலை இல்லாதவர்களுடைய எண்ணிக்கை வெகுவாகப் பெருகிக்கொண்டிருக்கிறது என்பதையும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலை வர் அவர்களே, 1977 ஆம் ஆண்டில் இந்த அமைச்சரவை பொறுப்பேற்றுக்கொண்டிருக்கிறது. 1980 ஆம் ஆண்டு வரை யில் இந்த அமைச்சரவை பதவியில் இருந்தது. பின்னாலே, மீண்டும் தேர்தல் நடைபெற்று ஆட்சிப் பொறுப்பிற்கு வந்திருக் கிறார்கள். நான் ஒரு கணம் எண்ணிப்பார்க்கிறேன். 1980 ஆம் ஆண்டிற்கு முன்னாலேயிருந்த இன்றைய ஆளும் கட்சியி னுடைய நிலை, அந்த கட்சியிலே இருக்கிற உறுப்பினர்களுக்கும் தலைவருக்கும் இருக்கிற உறவு 1980 ஆம் ஆண்டிற்கு பிறகு, கடந்த மூன்று ஆண்டு காலத்திலே எப்படி இருக்கிறது என்று; தலைவர் அவர்களே, நான் உங்கள் மூலமாக மாண்புமிகு முதல மைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன். அண்மைக் காலத்தில் நிர்வாகத்தில் தலையிடுவது குறித்து ஆளுகின்ற கட்சியிலே இருப்பவர்கள் மீது பலவிதமான குற்றச்சாட்டுகளை எங்களால் சொல்ல முடியும். அந்த நிலை வளர்வதற்கான முயற்சியை எடுத்துக் கொள்ளக் கூடாது. அவைகள் தவிர்க்கப்பட வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

அமைச்சர்கள் அவ்வப்போது அறிவிப்புகள் கொடுக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் காளிமுத்து அவர்கள் உள்ளாட்சித்துறை தேர்தலைப் பற்றி பலமுறை சொல்லிவிட்டு, அந்த அமைச்சரவை முடிந்து புதிய அமைச்சரவை வந்திருக்கிறது. உள்ளாட்சித் துறைக்கு புதிய அமைச்சர் வந்திருக்கிறார். புதிய அமைச்சர் ஒவ்வொரு ஆறு மாத காலத்திற்கும் தனி அதிகாரிகளுடைய பதவி நீட்டிப்பு மசோதாவை கொண்டு வருகிறார். ஊராட்சித் தேர்தல்களுக்கான தேதியை சொல்வார்கள் என்று நாம் எதிர்பார்க்கிற நேரத்திலே, சர்வ கட்சிக் கூட்டத்திற்கு தேதியை சொல்கிறார். சென்ற சட்டமன்ற கூட்டத் தொடரில் நகராட்சி தேர்தல்களுக்கான தேதியை அறிவிக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார். அவர்கள் அறிவிப்பார்கள் என்று நாம் கருதுகிறோம். ஜனநாயகத்திற்கு நாற்றங்காலாக இருக்கிற ஊராட்சி மன்றங்கள் செயல்படாத காரணத்தால், மக்களுடைய வரிப் பணம் பாழாகிற காட்சியை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அதேபோல, கூட்டுப் பொறுப்பிலே இயங்குகிற அமைச்சரவையாக இருந்தாலும் கூட, அமைச்சர்களுடைய மாறுபட்ட கருத்துக்களை பல்வேறு கால கட்டத்திலே எங்களால் பார்க்க முடிகிறது.

நகர்ப்புற மக்களின் கடன் சுமையைப் போக்க அடுத்த கூட்டத்தில் சட்டம் கொண்டுவரப்படும் என்று சட்ட அமைச்சர் அவர்கள் ஒரு முறை அறிவித்தார்கள். அந்தச் சட்டம் இன்றைக்கு என்னவாகி இருக்கிறது என்று தெரியவில்லை. அதனுடைய முன்னேற்றத்தை அவர்கள் சொல்வார்களானால் நான் மகிழ்ச்சி அடைவேன்.

அதே போல கடந்த சட்டமன்றக் கூட்டத்திலே அரசு சீட்டுக் கம்பெனி ஒன்றை ஆரம்பிக்கப் போகிறது; முன்னாள் முதலமைச்சர் அண்ணா அவர்களின் பிறந்த நாளிலே வரப்போகிறது; வந்து கொண்டே இருக்கிறது; அரசாங்கமே இந்த சீட்டுக் கம்பெனியை நடத்தப் போகிறது; இனிமேல் இலஞ்சம், ஊழல் எல்லாம் நீடிக்காது என்றெல்லாம் சொன்னார்கள். அந்தச் சீட்டுக் கம்பெனி ஆரம்பிக்கப்பட்டு, எவ்வளவு சீட்டுக்களை நடத்தி இருக்கிறார்கள்? எத்தனை பேர்களுக்கு பயன்பட்டிருக்கிறது? அதன் மூலமாக அரசாங்கத்திற்கு எவ்வளவு வருவாய் வந்திருக்கிறது என்ற விவரங்களைச் சொல்வார்களானால் பயனுள்ளதாக இருக்கும். அமைச்சர்களின் அறிவிப்புகள், வெறும் அறிவிப்புகளாக மட்டும் இருந்துவிடக் கூடாது என்பதைச் சொல்ல விரும்புகிறேன். இன்னொன்றையும் நான் கூற விரும்புகிறேன். மூன்று மாதங்களுக்கு முன்னால் பெண்கள் பொருளாதார மேம்பாட்டு வாரியம் அமைக்கப்படும் என்று அரசாங்க அறிவிப்பு வந்ததாக அறிகிறேன். பத்திரிகையிலே தலைப்புச் செய்திகள் ஆளும் கட்சிக்கு ஆதரவாக வந்தன. அந்த வாரியம் எப்போது வரும்? அந்த வாரியம், ஏதோ, சிலருக்கு வேலை வாய்ப்பு கொடுப்பதாக இல்லாமல், தமிழ் நாட்டிலே இருக்கிற மாதர்களுக்கு துணை செய்கின்ற வாரியமாக அது இருக்கவேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.



காவல் நிலையங்களில் ஆளும் கட்சியிலே இருக்கிறவர்கள்
தலையிடுவதும், அதன் மூலமாக காவல் துறையிலே இருக்கிற
வர்கள் மட்டுமல்லாது, அரசாங்க அதிகாரிகள் தாக்கப்படுகிற
நிகழ்ச்சிகள் அங்கொன்றும், இங்கொன்றுமாக நடந்து கொண்
டிருக்கின்றன. அது களையப்பட வேண்டும். இவைகள் மூல
மாக அரசுக்கு மட்டுமல்லாது, தமிழ் நாட்டிற்கும் கெட்ட பெயர்
வருகிறது என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்பு
கிறேன். வறட்சி நிவாரணப் பணியானாலும் சரி, தன்னிறை
வுத் திட்டப் பணியானாலும் சரி, ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித்
திட்டப்பணியானாலும் சரி, அல்லது தேசீய கிராமப்புற வேலை
வாய்ப்புத்திட்டமானாலும் சரி, இவைகள் அனைத்திலும் ஒப்
பந்தக்காரர்களும், அதிகாரிகளும் ஆகிய இந்த இரண்டுபேர்களுமே
சேர்ந்துகொண்டு ஊழல் செய்வதற்கான முயற்சியில் ஈடுபடுவ
தற்கு வாய்ப்பு இருப்பதால்தான் தேர்தல் விரைவிலே வர வேண்டு
மென்று நாங்கள் சொல்கிறோம்.

பொதுத் துறை நிறுவனங்களெல்லாம் செயல்படுகின்ற முறை
யைப் பார்த்தால் அவை தலைகுனிவை ஏற்படுத்துகின்றன என்
பதை இந்த நேரத்தில் நான் வேதனையோடு சுட்டிக்காட்ட
விரும்புகிறேன். நான் இப்படி சொல்கின்ற காரணத்தால், அர
சாங்கத்தின் மீது பழி சுமத்துவதாகவோ அல்லது குற்றம் சுமத்துவ
தாகவோ யாரும் எண்ணிவிட வேண்டாம். இதன் தன்மையை
உணர்ந்த காரணத்தினால்தான் வீட்டு வசதி வாரியத்தைப் பற்றி
ஆராய்வதற்காக மின்வாரியத்தின் தலைவராக இருக்கக்கூடிய,
திரு. விஜயராகவன் அவர்களைத் தலைவராகக் கொண்ட குழு
அமைக்கப்பட்டிருக்கிறது. அது போன்றே, தமிழ்நாடு குடிநீர்
வடிகால் வாரியத்தைப் பற்றிக் கூறப்படும் ஊழல்களை விசாரிப்
பதற்காக இரண்டாம் செயலாளர் திரு. டி. வி. அந்தோணி
அவர்களைக் கொண்டு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. இந்த
இரண்டு சான்றுகளே போதும் என்று கருதுகிறேன்.

அதுமட்டுமல்லாமல், சில நாட்களுக்கு முன்னால் இந்த மா
மன்றத்தில் குடிநீர் வடிகால் வாரியத்தின் மீதான தணிக்கைக்
குழுவின் அறிக்கை வைக்கப்பட்டது. எங்களைப் போல நீங்
களும் பார்த்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். அதில் உள்ள
கணக்குப் பட்டியலின்படி வாடகை இனங்களுக்காக பத்து இலட்
சம் ரூபாய் செலவு என்றும் பயணச் செலவுகளுக்காக எட்டு
இலட்சம் ரூபாய் செலவு என்றும், தொலைபேசிக் கட்டணமாக
மூன்று இலட்சம் ரூபாய் செலவு என்றும் குறிப்பிடப்பட்டிருக்
கிறது. இவையனைத்திற்கும் சிகரம் வைத்தாற் போல் இதர
செலவினங்களுக்காக என்று, கணக்குக் காட்ட முடியாத செலவு
என்று 17 இலட்சம் ரூபாய் காட்டப்பட்டிருக்கிறது. இது
போன்ற நிதி நிர்வாக முறை கேடுகள் அரசின் மீதும், பொதுத்
துறை நிறுவனங்களின் மீதும் மக்களுக்கு இருக்கின்ற நம்பிக்கை
யைப் பாழ்படுத்திவிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1983 நவம்பர் 8

சென்னை, உயர்நீதி மன்றத்தில், வரலாறு காணாத அளவிற்கு
மருத்துவக் கல்லூரி அட்மிஷனை எதிர்த்து ஏராளமான ரிட்
மனுக்கள் தாக்கலாகியிருக்கின்றன. அந்த வழக்குகள் விசார
ணையில் இருப்பதால் அந்த வழக்குகளின் தன்மைக்குள் போவ
தற்கு நான் விரும்பவில்லை. ஆனால், அதே நேரத்தில் அரசுக்கு
ஒரு யோசனையைச் சொல்ல விரும்புகிறேன். ஒருவேளை தேர்
வுக்குழு தவறு செய்திருக்கலாம், அது அரசின் கவனத்திற்கு வரா
மல் இருந்திருக்கலாம் அல்லது வேறு தவறுகள் நடந்திருக்கலாம்.
இங்கே ஒரு சம்பவத்தைக் குறிப்பிட்டுக் காட்டுவது பொருத்தமாக
இருக்கும். முதுகளத்தூரில் இனக் கலவரம் நடைபெற்று, துப்
பாக்கிச் சூடு போன்றவைகள் நடந்தன. அதையொட்டி இந்த
மன்றத்தில் நடந்த விவாதத்தில், மறைந்த முதலமைச்சர்
அண்ணா அவர்கள் பேசுகின்ற நேரத்தில், சீதையின் கற்பை
உலகம் அறியச் செய்வதற்காக இராமபிரான் சீதையை அக்கினிப்
பிரவேசம் செய்யச் சொல்லவில்லையா ? அதைப்போல உங்கள்
நேர்மையை மற்றவர்கள் அறியச் செய்வதற்காக இது குறித்து
பாரபட்சம் இல்லாத ஒரு நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்யுங்
கள் என்று அன்றைக்கு ஆட்சியிலிருந்த காங்கிரஸ் ஆட்சியாளர்
களைக் கேட்டார். அண்ணாவின் கொள்கைகளை ஏற்று ஆட்சி
யில் அமர்ந்திருக்கின்ற இந்த அரசாங்கத்திடம் நான் கேட்டுக்
கொள்ள விரும்புகிறேன். மருத்துவக் கல்லூரித் தேர்வில் மோசடி
நடக்கவில்லை, ஊழல் நடக்கவில்லை என்று பொது
மக்கள் நம்புவதற்காக, மருத்துவக் கல்லூரித் தேர்வு முறை
யாக, நேர்மையாக, மோசடிக்கோ, ஊழலுக்கோ இடமின்றி
நடைபெற்றதா என்பதைப்பற்றி விசாரிக்க உயர்நீதிமன்ற நீதிபதி
ஒருவரைத் தலைவராகக் கொண்ட விசாரணைக் கமிஷனை
அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எனக்கு எதிரே அமர்ந்திருக்கின்ற அமைச்சர்கள் கோபப்பட
மாட்டார்கள் என்று நம்புகிறேன். நான் எந்தவொரு தனிப்பட்ட
விருப்பிலோ அல்லது வெறுப்பிலோ இதைச் சொல்லவில்லை.
அமைச்சர்களைச் சேர்ப்பதும், சேர்க்காமல் இருப்பதும் முதல
மைச்சரவர்களின் தனிப்பட்ட விருப்பம். அதன்படி சேர்த்துக்
கொள்கிறார்கள். அதில் தலையிடுவதற்கு நான் விரும்பவில்லை.
ஆனால், அமைச்சர்களைத் தேர்ந்தெடுக்கும் நேரத்தில் அவர்
உழைத்த உழைப்பு, கட்சிக்கு அவர் செய்த தியாகம், திறமை,
கல்வி, புலமை ஆகியவைகளைப் பொறுத்துத் தேர்ந்தெடுத்திருந்
தால் அதில் கருத்து வேறுபாடு இருக்க நியாயமில்லை. ஆனால்,
ஜாதியை ஆதாரமாக வைத்துக் கொண்டு, ஜாதிக்கு ஒரு அமைச்
சர் என்று அமைத்தால் அது தவறான ஒரு முன்மாதிரியாக
அமைந்துவிடாதா என்றுதான் கேட்கிறேன்.

மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியாளர்கள் இருக்கிறார்கள்.
அவர்களது பணியைப் பொறுத்த வரையில், ஒருநாளைக்கு 24
மணி நேரத்தில் 10 மணி நேரம், 15 மணி நேரம் உழைத்தார்கள்
என்றால் அதில் பெரும்பகுதி நேரத்தை ஆக்கப் பணிகளுக்கோ,
வளர்ச்சிப்பணிகளுக்கோ செலவிடுவதில்லை. பல்வேறு கூட்டங்கள்,



1983 நவம்பர் 8] [திரு. என்.எஸ்.வி.சித்தன்]

பல்வேறு விவாதங்கள், கருத்தரங்குகள் என்று போகிறார்கள்;
இதனால், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் வளர்ச்சிப்
பணிகளுக்காகவும், ஆக்கப் பணிகளுக்காகவும் நேரத்தைச் செல
விட முடியாத நிலையில் இருக்கிறார்கள். எனவே, பேரவைத்
துணைத் தலைவரவர்களே, தங்கள் மூலமாக இந்த அரசுக்கு
ஒரு யோசனையைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். மராட்
டிய மாநிலத்தில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இரண்டு கலெக்
டர்கள் இருக்கிறார்கள். ஒரு கலெக்டர் நிர்வாகத்தைக் கவ
னிக்கிறார். இன்னொரு கலெக்டர் வளர்ச்சிப் பணிகளில் அக்
கறை கொண்டு, வளர்ச்சிப் பணிகளின் முன்னேற்றத்திற்கான
பல்வேறு திட்டங்களில் கவனம் செலுத்துகிறார். அந்த முறை
யைத் தமிழகத்திலும் தொடர்வது பொருத்தமாக இருக்குமா
என்று அரசு யோசனை செய்து பார்க்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

[பிற்பகல் 12-10]

அடுத்தபடியாக அரிசன பெருமக்களுக்கு காலனி வீடுகள்
கட்டிக் கொடுப்பது என்ற திட்டத்தின் கீழ் காங்கிரஸ் ஆட்சி
காலத்திலும், தி.மு.க. ஆட்சி காலத்திலும் இலவசமாக வீடு
கட்டி அந்த மக்களுக்குக் கொடுக்கும் திட்டம் நடந்து வந்தது.
ஆனால் என்ன காரணத்தினாலோ 1980 ஆம் ஆண்டிலிருந்து
அந்த இலவசமாகக் காலனி வீடு கட்டிக் கொடுக்கின்ற திட்டம்
அடியோடு நிறுத்தப்பட்டுவிட்டது. அதன் காரணமாக சமுதா
யத்தின் தாழ்த்தப்பட்ட நிலையிலே இருக்கின்ற மக்கள் எந்த
அளவுக்குத் தொல்லைப்படுகிறார்கள் என்பதை நாம் எண்ணிப்
பார்க்க வேண்டும். எனவே உடனடியாக அந்த இலவசமாக
வீடு கட்டிக் கொடுக்கின்ற திட்டத்தை அரசாங்கம் தொடர
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே வீடு கட்டிக் கொடுப்பதற்காக மத்திய
அரசு கொடுத்த 6 ஆயிரம் ரூபாய்க்குப் பதிலாக மாநில அரசு
4 ஆயிரம் ரூபாய், 3 ஆயிரம் ரூபாய் என்று குறைத்துக் கொடுத்
திருப்பதாகச் சொல்லப்படுகின்றது. அதன் காரணமாக
முதல் தவணை, இரண்டாம் தவணை ஆகியவற்றை வாங்கியும்
வீடுகளைக் கட்டி முடிக்க முடியாத நிலையில் பலர் கஷ்டப்
பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதன் காரணமாக கடன்
தொல்லைக்கு அந்த சமுதாய மக்கள் ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள்
என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து அரிசன மக்களுக்காக அமைக்கப்பட்ட ஆலோசனைக்
குழுக்கள் சரியாக இயங்கவில்லை. அரிசன மக்களுக்கு உரிய
விகிதாச்சாரத்தின்படி சலுகைகள் வழங்கப்படுவதில்லை. அந்த
விகிதாச்சாரம் முறையாகப் பின்பற்றப்படுவதில்லை.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் காலையிலே எழுந்து
செய்தித்தாளைக் கையில் எடுத்துப் பார்த்தால் இன்றைய
முதலமைச்சர் முன்னாள் முதலமைச்சரின் குற்றச்சாட்டுகளுக்கும்

பதில் சொல்வதும், முன்னாள் முதலமைச்சர் இன்றைய முதல
மைச்சரின் குற்றச்சாட்டுகளுக்குப் பதில் சொல்வதும் என்ற
முறையிலே செய்திகள் வந்திருப்பதைத்தான் காண முடிகின்றது.
நாங்கள் வட மாநிலங்களுக்குச் செல்லுகின்றபோது எல்லாம்
அந்தப் பகுதிகளிலே இருப்பவர்கள் எல்லாம் பேசுகிறார்கள்,
தமிழ்நாட்டிலே வேறு ஒன்றுமே நடக்கவில்லையா,
நடந்துகொண்டிருக்கின்றதா என்று. பத்திரிகைகளைப் படித்
தால் இதைத் தவிர வேறு ஒன்றுமே நடக்கவில்லை என்ற அள
வுக்கு முக்கியத்துவம் தரப்பட்டு இப்படிப்பட்ட செய்திகள்தான்
வருகின்றன. இங்கே இருக்கின்ற பத்திரிகைகள் மட்டுமல்ல.
வடக்கே இருக்கின்ற ஆங்கிலப் பத்திரிகைகளிலும் அவ்வாறு வரு
கின்றது. எனவே அமைச்சர்களாக இருப்பவர்கள் இங்கே இருக்
கின்ற நிர்வாகச் சீர்திருத்தங்களைப் பொறுத்தவரையில் என்
னென்ன செய்யலாம் என்றும் என்னென்ன செய்திருக்கிறோம்
என்பதையும் எண்ணிப்பார்க்கின்ற நிலைமை வரவேண்டும்.
அந்த வகையிலே இனிமேல் எஞ்சி இருக்கின்ற காலத்திலேயாவது
மக்களுக்கு நன்மை பயக்கத்தக்க நல்ல காரியங்களைச் செய்ய
வேண்டும் என்று சொல்லி இந்த அளவுக்கு என்னுடைய உரை
யினை நிறைவு செய்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேர
வைத் துணைத் தலைவர் அவர்களே, திரு. சித்தன் அவர்கள்
பேசும்போது அமைச்சரவை நியமனம் ஜாதியின் பெயராலே
நடைபெறுகின்றது என்று ஒரு குற்றச்சாட்டைச் சொல்கின்ற
விதத்திலே சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு.
உமாநாத் அவர்களும் கூட குறிப்பிட்டார்கள். என்னுடைய
பெயரைச் சொல்லி சௌராஷ்டிரா ஜாதி என்று சொன்னார்கள்.
நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். சௌராஷ்டிரா
என்பது ஒரு ஜாதியல்ல. ஒரு சிறுபான்மை மொழி பேசுகின்ற
வர்கள். நாங்கள் எந்த ஜாதியையும் சேர்ந்தவர்கள் அல்ல.
என்னைப் பொறுத்தவரையில் ஜாதியற்ற ஒரு சமுதாயம், பகுத்
தறிவுச் சமுதாயம் வேண்டும் என்று சொல்கின்ற இயக்கத்திலே
இருப்பவன். ஜாதியிலே நம்பிக்கை இல்லாமல் ஜாதியினை
எதிர்த்துக் கொண்டிருப்பவன். ஆகவே அந்த அடிப்படையிலே
தான் எங்களை நியமிக்கிறார்களே தவிர வேறல்ல. எனவே
எங்களை ஒரு குறிப்பிட்ட ஜாதிக்குச் சொந்தக்காரர்களாக
ஆக்காதீர்கள். நாங்கள் அமைச்சர்களாக நியமிக்கப்படுகின்ற
நேரத்திலே எங்களைப் பாராட்டிப் பேசியவர்கள் எல்லாம்
இங்கே இருக்கிறீர்கள். ஆனால் நியமிக்கப்பட்டதற்குப் பின்
னால் ஜாதியிலே தயவு செய்து சேர்க்காதீர்கள். நாங்கள் ஜாதிக்
குச் சொந்தக்காரர்கள் அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்
கிறேன்.

திரு. எஸ். ஆண்டித் தேவர் : பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சியின் துணைத்தலைவர்
அவர்கள் அமைச்சரவை மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கை



யின்மையைத் தெரிவிக்கும் தீர்மானத்திலே பேசினார்கள்.
அவர் அதனை ஆதரித்துப் பேசினாரா, அல்லது எதிர்த்துப்
பேசினாரா என்ற முடிவைச் சொல்லவில்லையே, அது ஏன்
என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, இதைக் கேட்டதும் பொதுவான
ஒரு கதை எனக்கு நினைவுக்கு வருகின்றது. அதாவது விடிய
விடிய கதை கேட்டும் சீதைக்கு ராமன் சித்தப்பாவா என்று
கேட்டார்களாம். இவ்வளவு நேரம் நான் இங்கே பேசியபோது
அகில இந்திய பார்வர்ட் ப்ளாக் கட்சித் தலைவர் திரு. ஆண்டித்
தேவர் அவர்கள் இங்கேதான் இருந்திருக்கிறார்கள். நான்
இவ்வளவு நேரம் பேசியதிலிருந்து ஒன்றும் புரிந்துகொள்ள முடிய
வில்லை என்றால் ஆண்டவன்தான் அவரைக் காப்பாற்ற
வேண்டும்.

*திரு. ஜே. சி. டி. பிரபாகரன் : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தின் முன்பாக
மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தலைமையில் செயல்படு
கின்ற அமைச்சரவையின் மீது இப்பேரவை நம்பிக்கையின்மை
யைத் தெரிவிக்கின்றது என்று மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்
திரு. உமாநாத் அவர்கள் கொண்டுவந்திருக்கின்ற தீர்மானத்தின்
மீது சில உணர்வுகளைப் பகிர்ந்துகொள்வதற்கு எனக்கு அளிக்
கப்பட்டிருக்கின்ற நல்ல வாய்ப்புக்கு முதற்கண் எனது நன்றி
யினை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு
உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் பேசுகின்றபோது இங்கே
கருத்துக்கள் வெளியாகும், பூகம்பம் கிளம்பும், எதைச் சொல்லப்
போகிறார்களோ, எப்படிச் சொல்லப் போகிறார்களோ என்
றெல்லாம் எண்ணித்தான் இந்த மன்றத்திற்குள்ளே நுழைந்
தோம். உள்ளே நுழைந்த பிறகு தான் இந்த நம்பிக்கை இல்
லாத் தீர்மானம் மழை காலத்திலே வைத்த வெத்துவேட்டாக,
புஸ் வாணமாகப் போய் இருக்கிறது என்பதை அவருடைய
வாதமே இன்றைக்குத் தெளிவாகக் காட்டியிருக்கிறது.
எதையோ நினைத்து எதையோ இடித்து இருக்கிறார்கள். ஏன்
இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் என்று எண்ணிப் பார்க்கிற
போது ஆட்சிப்பொறுப்புக்கு வந்து இருக்கிற ஒரு இயக்கம்,
ஆளுகிற பொறுப்பிலே இருக்கும் ஒரு கட்சி தொடர்ந்து வருகிற
ஆண்டுகள் முழுவதும் பொதுமக்களுக்குக் கொடுத்து இருக்கிற
வாக்குறுதிகளை நிறைவேற்றாத காரணத்தால் அல்லது பொது
மக்கள் விரோத சக்திகளுக்கு ஊக்கம் அளிக்கின்ற காரணத்
தால் இன்றைக்குப் பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவிக்கிற காரணத்
தால், ஏகோபித்த, விதத்தில் இன்றைக்கு எதிர்ப்பு தெரிவிக்
கிறார்கள் என்ற கருத்திலே இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானம்
கொண்டு வரப்பட்டு இருக்குமானால் அதிலே கருத்துக்கள் இருக்கு
மானால், இங்கே உட்கார்ந்து இருக்கிற நிலைமையிலே நாங்கள்
பதில் சொல்லத் தயாராக இருக்கிறோம்.

ஆனால் இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானம் பொதுமக்களின் கருத்துக்களை எதிரொலிக்காமல் ஏதோ கற்பனை உலகத்திலே இருந்து வாதங்களை வைத்ததுபோல் இருக்கிறது. ஒன்றை மட்டும் நான் சொல்கிறேன்.

இந்த மாமன்றத்திலே கொண்டுவரப்பட்டு இருக்கும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் இன்றைக்கு எதைத் தெளிவாகக் காட்டுகிறது என்று சொன்னால் , இன்றைக்கு இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்து இருக்கிற கட்சிகள் To mark their presence or for the sake of record இதைக் கொண்டுவந்திருக்கிறார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். நாங்களும் சட்டமன்றத்திற்குள்ளே இருக்கிறோம் எங்களாலும் சிலவற்றைச் செய்யமுடியும், பேசமுடியும் என்றஅடிப்படையிலே To mark their presence or for the sake of record என்பதற்காக கொடுத்து இருக்கிறார்கள் என்று நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். இதைத் தவிர திறமையாக வாதங்களை வைத்து விவாதிப்பதற்கு இல்லை என்ற அடிப்படையிலேகூட இதை அவர்கள் கொடுத்து இருக்கக்கூடும். அல்லது, ஒரு வேளை மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் சொல்வார்கள், இதுவரையில் நாம் தோழமைக் கட்சிகளாக இருந்தோம். தோழமைக் கட்சியாக இருக்கிறபோது இணைந்து தானே வெற்றியைப் பெற்றோம். இன்றைக்கு அந்தத் தோழமை இல்லை. எதிர்ப்பு உணர்வை நாங்கள் காட்ட விரும்புகிறோம். நாங்கள் மாறுபட்ட கருத்துக்களிலே இருக்கிறோம் என்பதை இந்த அவைக்கு மட்டுமல்ல, நாட்டுக்கும் உணர்த்திட வேண்டும் என்ற அடிப்படையிலே இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை இங்கே கொண்டு வந்து இருக்க வேண்டும். அது எப்படியிருந்தாலும், நான் அவருக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

ஏனென்றால், நாங்கள் கடந்து வந்து இருக்கும் பாதை, போட்டு இருக்கும் திட்டங்கள், எங்களுக்கு முன்னாலே போடப்பட்ட முட்டுக்கட்டைகள், எங்களுக்கு முன்னாலே வைக்கப்பட்ட தடைக்கற்கள், அத்தனையையும் தாண்டிக்கொண்டு 1980 ஆம் ஆண்டில் இருந்து சரித்திரம் படைத்து இருக்கும் தளநாயகன் புரட்சித் தலைவர் தலைமையில் இவற்றையெல்லாம் நாங்கள் செய்து இருக்கிறோம், இவற்றையெல்லாம் நிறைவேற்றியிருக்கிறோம், என்று அடுக்கடுக்காக சொல்வதற்கும், விவாதங்களை எடுத்து வைப்பதற்கும், விவாதங்களைத் துவக்குவதற்கும் இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானம் வெகுவாக உதவி இருக்கிறது என்ற அந்த வகையில் நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

நீங்கள் ஒன்றை எண்ணிப் பார்க்க வேண்டும். நம்பிக்கை இல்லாத் தீர்மானம் என்று கொண்டு வந்திருக்கிறபோது. இதே மாமன்றத்திலே 1952 ஆம் ஆண்டு மூதறிஞர் ராஜாஜி அவர்கள்



அருப்புக்கோட்டை இடைத் தேர்தல் நடந்தபோது, நான் வேண்டுமா, வேண்டாமா என்பதை நாட்டு மக்கள் உணர்த்துவதற்காக இந்த இடைத் தேர்தல் வாய்ப்பாக இருக்கட்டும் என்று சொன்னார்கள். அந்த இடைத் தேர்தலில் தோல்வியைச் சந்தித்தபிறகு, இந்த மாமன்றத்தைக் கூட்டி, தான் வேண்டுமா, வேண்டாமா என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் நாட்டு மக்களுக்குச் சொல்ல வேண்டும் என்று நம்பிக்கைத் தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள். அப்படிப்பட்ட ஒரு நிலைமை, அப்படிப்பட்ட ஒரு சங்கடம் எங்களுக்கு இல்லை.

அப்படி நாம் பார்க்கிறபோது 7 1/2 ஆண்டுகாலம் ஆட்சிப் பொறுப்பிலே முதலமைச்சராக கலைஞர் அவர்கள் இருந்த போது, 1972 ஆம் ஆண்டில் வெளியே புயல் வீசியது, பூகம்பம் கிளம்பியது, இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் பேரறிஞர் அண்ணா அவர்கள் காட்டிய பாதையில் இருந்து திராவிட முன்னேற்றக் கழகம் வழி தவறிப்போகிறது, திராவிடர் இயக்கம் எங்கோ போய்க் கொண்டு இருக்கிறது என்று கேட்டபோது, அவரை வெளியே அனுப்பினார்களே, அப்போது ஏற்பட்ட அந்த பூகம்பம், அப்போது ஏற்பட்ட அந்தச் சரிவு, அந்த ஆர்ப்பாட்டம், அந்த ஆட்டம், அதைக் காணப் பொறுக்காமல், இந்த மன்றத்தைக் கூட்டி, இங்கே நம்பிக்கை தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள். வெளியே இருக்கும் மக்களுக்கு நம்பிக்கையில்லா விட்டாலும், உள்ளே இருக்கும் எங்களுக்கு நம்பிக்கை இருக்கிறது என்று நம்பிக்கைத் தீர்மானத்தை கொண்டு வந்தார்களே, அப்படிப்பட்ட ஒரு கட்டம், அப்புடிப்பட்ட ஒரு அவல நிலை, அப்படிப்பட்ட குழப்ப நிலை எங்கள் கட்சிக்குள்ளே இல்லை. எங்கள் கட்சிக்கு வெளியேயும் இல்லை, எந்தப் பூகம்பமும், எந்தப் புயலும், எப்படி வந்தாலும் அவைகளை எல்லாம் நடுநிலையில் இருந்து தீர்க்கும் நாயகனாக புரட்சித் தலைவர் அவர்கள் இருப்பதால் சொல்கிறோம், நம்பிக்கைத் தீர்மானத்தைக்கொண்டு வந்து எங்களுக்கு நம்பிக்கை இருக்கிறது என்று நாட்டுமக்களுக்குச் சொல்லவேண்டிய நிலைமைக்கு நாங்கள் தள்ளப்படவில்லை. அந்த வகையிலும் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு ஒரு சில கருத்துக்களைச் சொல்வதன் மூலமாக சில தெளிவுகளை ஏற்படுத்தக் கூடிய ஒரு வாய்ப்பு பெற்றமைக்காக நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

ஒருவேளை நண்பர்கள் கேட்கலாம். ஆளும் பொறுப்புக்கு வந்து இருக்கும் கட்சி சரியான பாதையில் சென்றுகொண்டு இருக்கிறதா, போட்டு இருக்கும் திட்டங்கள் மக்களைச் சேர்ந்து இருக்கிறதா, இவர்கள் நடந்து வந்தபாதை எப்படியிருக்கிறது என்று பார்ப்பதற்கு, ஒரு வேளை இடைத் தேர்தல் ஒரு கருவியாக இருக்குமானால், இடைத் தேர்தலை வைத்துத்தான் இந்த ஆட்சி வேண்டுமா, வேண்டாமஎன்று பார்க்கவேண்டும் என்றுசொன்னால், 1980 ஆம் ஆண்டு பொதுமக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்று 26 இலட்சம் வாக்குகளைப் பெற்று

ஆட்சிக்கு வந்து இருக்கும் நாங்கள் இரண்டு இடைத்தேர்தல்களைச் சந்தித்து இருக்கிறோம். நீங்கள் எண்ணிப் பார்க்கவேண் வேண்டும்.

(பிற்பகல் 12–20)

பெரியகுளம் இடைத்தேர்தலிலே, 1980 ஆம் ஆண்டில் ஏறத்தாழ 19,882 வாக்குகள் வித்தியாசத்தில் அந்த இடத்தை திராவிட முன்னேற்றக் கழகத்திடம் இழந்த அண்ணா தி.மு. கழகம் 1982-ல் ஏறத்தாழ 69,000 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற முடிந்தது என்று சொன்னால் அந்தப் பாராளுமன்றத் தேர்தல் மூலமாக 1982 வரைக்கும் நாங்கள் நடந்துவந்த பாதை சரியாக இருக்கிறது என்பதை இந்த நாட்டு மக்கள் ஏற்றுக்கொண்டார்களா இல்லையா ? நாங்கள் போட்டத் திட்டங்கள் சரியாக இருக்கின்றன என்று எடுத்துச்சொல்லுகின்ற ஒரு கருவியாக அந்த இடைத்தேர்தல் இல்லையா ? 1983 ஆம் ஆண்டு திருச்செந்தூர் தேர்தலில் வெற்றிபெற முடியுமா? நீதியைப் புகட்டுவோம் என்றெல்லாம் சொல்லி புலம்பினார்களே. எத்தனைபேர் கூட்டு சேர்ந்தார்கள்? எப்படி எப்படி எல்லாம் வலம் வந்தார்கள்? இந்த நாட்டிலே இருக்கிற மக்கள் பார்க்கவில்லையா ?

1983 ஆம் ஆண்டு பார்ச் [illegible] ஏறத்தாழ 1766 வாக்குகள் வித்தியாசத்தில் மிகச் சிறப்பாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றிபெற்றதை நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். 1980 ஆம் ஆண்டு நாங்கள் பெற்ற வாக்கு வித்தியாசம் ஏறத்தாழ 1705. ஆனால் இடைத்தேர்தல் என்று வருகிறபோது இந்தக் கட்சியின் கொள்கை சரியாக இருக்கிறதா? ஆளும் கட்சி சரியான பாதையில் நடந்து வந்திருக்கிறதா என்பதைப் படம் பிடித்துக் காட்டுவதற்காக, ஒரு நல்ல தீர்ப்பு வழங்குவதற்காக தமிழக மக்களுக்கு ஒரு அவகாசம் தரப்படுகிறது. அந்த இடைத்தேர்தலில் 1766 வாக்குகள் கூடுதலாக அளித்து மிகப்பெரும் வெற்றியை ஈட்டித் தந்திருக்கிறார்கள தமிழக மக்கள்.

1982-லே நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலிலும் நம்மீது மக்கள் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். அதற்குப் பின்னாலே நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலின்போதும் நம்மீது இந்த நாட்டு மக்களுக்கு நம்பிக்கை இருக்கிறது என்பதைத் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுகின்ற கருவியாக இந்த இடைத்தேர்தல்கள் இல்லையா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

இதை நான் சொல்லுகின்றபோது 1973 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருக்கிறபோது, திண்டுக்கல் பாராளுமன்றத் தேர்தல் நடக்கிறபோது என்ன நடந்தது? இன்னும் கொஞ்சம் தப்பி, கிட்டத்தட்ட 4,800 வாக்குகள் குறைவாக எடுத்திருந்தால் அந்த பாராளுமன்றத்



தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு டெபாசிட் போய்விடும் என்று சொல்லக்கூடிய அளவுக்கு அன்றைக்கு மக்கள் வாக்களிக்கவில்லையா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

கோவை மேற்கு நகர சட்டமன்றத் தொகுதியில் தேர்தல் நடக்கவில்லையா? இன்றைக்கு ஆட்சிப் பொறுப்பில் இருக்கின்ற மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அன்றைக்கு பெரும்பான்மை வாக்குகள் பெற்று அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வெற்றியை ஈட்டித் தரவில்லையா என்பதை உங்கள் முன்னால் வைக்க விரும்புகிறேன். ஆக, இடைத்தேர்தல் மூலமாக இந்த ஆட்சி ஒரு சரியான பாதையில் சென்று கொண்டிருக்கிறது என்பதை தெளிவாக நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

எங்களைப் பொறுத்தவரைக்கும், இன்றைக்கு இந்த தீர்மானத்தை முன்மொழிந்திருக்கிற திரு. உமாநாத் அவர்களுக்கு என்ன கருத்து இருக்கிறதோ, அவர்கள் பாதை எப்படி இருக்கிறதோ என்பதைப்பற்றி நாங்கள் கவலைப்படவில்லை யாரோடு தோழமையாக இருக்கப்போகிறார்கள், தேர்தல் நேரத்தில் எவ்வாறு இருக்கப்போகிறார்கள் என்ற சிந்தனை, அச்சம் எங்களுக்கு இல்லை. எங்களைப் பொறுத்தவரைக்கும் எங்களுடைய எண்ணம் தெளிவாக இருக்கிறது. என்னென்ன பணிகளை ஆற்றவேண்டும் ஐந்தாண்டு காலத்திற்குள் என்பதை எண்ணி, எண்ணி, அடுக்கடுக்காக என்னென்ன வாக்குறுதிகளைத் தந்தோமோ அவற்றை எல்லாம் செம்மையாக செய்துகொண்டிருக்கிறோம். அந்த நம்பிக்கையின் அடிப்படையில் சொல்கிறோம், 1980 ஆம் ஆண்டில் இருந்த தோழமை உணர்வோடு சொல்கிறோம்; ''வாலறுந்த நரிக் கதையாக உங்கள் கதை முடிந்துவிடக் கூடாது'' என்று.

எங்களைப் பொறுத்தவரைக்கும் தெளிவான சிந்தனையோடு அடுக்கடுக்காக நல்லபல திட்டங்களைப் போடுவதன் மூலமாக அரசியல் சட்டத்திலே எவற்றை எல்லாம் இந்த மாநில அரசுக்கு செய்ய உரிமை இருக்கிறது என்று வரையறுத்து சொன்னார்களோ, நாடு விடுதலையடைந்த நேரத்தில் இருந்து தமிழ்நாடு என்னென்ன அதிகாரங்களைப் பெற்றிருக்கிறதோ அந்த அதிகாரங்களோடு அதிகமான அதிகாரங்கள் வேண்டுமென்று கேட்கிறோம். உரிமைக்கு குரல் கொடுத்தருக்கிறோம். எந்தத் துறையாக இருந்தாலும் இந்த அரசு மைய அரசுக்கு முன்னால் மண்டியிட்டது என்ற வரலாறு இல்லை.

இங்கே இன்னொன்றையும் நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இந்த மாநில முதலமைச்சர் மரியாதைக்குரிய புரட்சித் தலைவர் அவர்கள் டெல்லி மாநகரிலே பேசுகிறபோது வரி விதிப்பு முறைகளில் மாற்றம் ஏற்பட்டால் (It is totally unacceptable) என்று பேசியிருக்கிற அந்த வாதத்தை நினைவுபடுத்த விரும்புகிறேன். அது மட்டுமல்ல

வருவாய்த் துறை அமைச்சராக இருந்தாலும் சரி, மரியாதைக்குரிய செய்தி-அறநிலையத்துறை அமைச்சராக இருந்தாலும் சரி, டெல்லி கருத்தரங்கில் பேசுகிறபோது தொழில் துறை அமைச்சராக இருந்தாலும் சரி, இந்த மாநில அரசு எப்படி எல்லாம் புறக்கணிக்கப்படுகிறது என்று மைய அரசுக்கு முறையாக கவனப்படுத்திக்கொண்டு வந்திருக்கிறார்கள். எந்த திட்டம் எங்கே நிறைவேற்றப்பட வேண்டும் என்று இந்த ஆட்சி போட்டு அனுப்பியிருக்கிற தீர்மானங்களிலே எவை எல்லாம் மைய அரசினுடைய ஒப்புதலைப் பெறவில்லை என்று பேசுகின்றபோதும், கருத்தரங்கிலே சொல்லுகின்ற விவாதத்தின் போதும் டெல்லி மாநகரத்திலே இருக்கிற, இந்தியச் துணைக் கண்டத்தை ஆளுகின்ற கட்சியைச் சேர்ந்த மாநில முதலமைச்சர்கள் எல்லாம் மூக்கிலே விரலை வைத்து தமிழ்நாட்டில் இருந்து வருகிற அமைச்சர்கள் கொண்டுவருகிற கருத்துக்கள் மிகப்பெரிய மறுமலர்ச்சியை மாநிலங்களில் ஏற்படுத்தத் தக்கதாக இருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

பல்வேறு நிலைகளிலே பாராட்டியிருக்கிறார்கள். மத்திய அரசினுடைய தவறுகளை சுட்டிக்காட்ட இந்த அரசாங்கம் 1980லேயிருந்து என்றைக்குமே தவறியது கிடையாது. பல உதாரணங்களை என்னால் சொல்ல முடியும், பல நினைவுகளை என்னால் சுட்டிக்காட்ட முடியும். ஆனால் ஒன்றை மட்டும் நான் சொல்கிறேன். மாண்புமிகு உமாநாத் போன்றவர்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக சிற்சில நிகழ்ச்சிகளை, சிற்சில உதாரணங்களை சொல்லுவதன் மூலமாக இந்த ஆட்சி, இப்படி ஆகிவிட்டது என்ற கருத்தை சொல்வார்களானால் நான் மிகப் பணிவோடு சொல்கிறேன். you are living in an utopian world நீங்கள் கற்பனை உலகத்திலே வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள். நடைமுறைக்கு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நம்மைப் பொருத்தவரைக்கும், ஒவ்வொரு பிரச்சனையாக, ஒவ்வொரு துறையாக அலசி ஆராய்ந்து கொண்டே போகலாம். அடுக்கடுக்காக அதற்கு ஆதாரங்களை என்னாலே சொல்ல முடியும்.

இந்த சட்டம்-ஒழுங்கு பிரச்சனைக்கு மட்டும் இங்கே பதில் சொல்லியாக வேண்டும். தமிழ்நாட்டிலே இன்றைக்கு அமைதி பூங்காவாக சட்டம் ஒழுங்கை காப்பாற்றுகின்ற ஒரு அரசு இயங்கி கொண்டிருக்கிறது. கொஞ்சம் வடக்கே போய்விட்டு வாருங்கள். பஞ்சாப் பற்றி எரிகிறது. இன்று காலை செய்தித் தாளிலே ஒரு செய்தி வந்திருக்கிறது. பஞ்சாப் கவர்னர் வீட்டிலே வேலை பார்க்கிற ஒரு ஊழியர், தன்னைத் தாக்குவதற்கு யாரோ இருப்பதாக அவராகவே நினைத்துக்கொண்டு கலங்கி பித்து பிடித்து தன்னைத் தானே சுட்டுக்கொல்ல முயன்றதாக அவரை கைது செய்திருக்கிறார்கள். ஆஸ்பத்திரியிலே அனுமதித்து இருக்கிறார்கள். ஆக பஞ்சாபிலே கவர்னர் வீட்டில்



வேலை பார்க்கிற ஊழியருக்குக்கூட பாதுகாப்பு இல்லை. பஞ்சாப் பற்றி எரிந்து கொண்டிருக்கிறது. அசாமிலே இருக்கிற நிலை பற்றி பல்வேறு நிலைகளிலே இந்த மன்றத்திலே விவாதித்து இருக்கிறோம். எடுத்துச் சொல்லி இருக்கிறோம். உத்திர பிரதேசத்திலேயும், மத்திய பிரதேசத்திலேயும், கொள்ளைக்காரர்களை அடக்க முடியாத அரசாங்கங்கள் இருந்த வரலாறு இன்று வரையில் தொடர்ந்து நடந்து வருகிறது. தமிழ் நாட்டிற்கு சற்று அப்பாலே போனால்தான் எப்படிப்பட்ட ஒரு நல்ல ஆட்சி இங்கே நடந்து கொண்டிருக்கிறது என்பது உங்களுக்கு புரியும். இதையே ஒரு அளவு கோலாக வைத்து நீங்கள் பார்க்க வேண்டுமென்று விரும்பினால் ஒன்றை நான் சொல்கிறேன். சென்னையிலே உள்ள பாரி முனையிலேயிருந்து இராயபுரம் வரைக்கும் ஒரு தம்பதியினரை மாலை நேரத்திலே நடக்கவிட்டு பத்திரமாக வீடு போய் சேருகிறார்களா என்று பார்த்தால், போய் சேருவார்கள். கல்கத்தாவிலே முடியுமா ? பம்பாயிலே முடியுமா? இரண்டாம் ஆட்டம் சினிமா முடிந்து வீட்டு புருஷனும் பெண்சாதியும் வீட்டிற்கு வந்தால் போதும் என்ற நிலைமை வடநாட்டிலே இருந்து கொண்டிருக்கிறது. ஆனால் தமிழ் நாட்டிலே சட்டம்—ஒழுங்கை காப்பற்றுகின்ற ஒரு நல்ல அரசாக, இந்திய துணைக் கண்டத்திலே இருக்கிற அனைத்து அமைச்சுனுடைய பாராட்டுக்களை பெறுகிற, இந்திய துணைக் கண்டத்தை ஆளுகின்ற மத்திய அரசினுடைய பாராட்டுகளை பெறுகிற அளவுக்கு சட்டம்-ஒழுங்கை நாம் காப்பாற்றி வந்திருக்கிறோம்.

காவலர்களுக்கு வீட்டு வசதி இணையம், மலிவு விலையில் உணவுப் பொருட்கள், முதலமைச்சர் காவலர் பதக்கம் என்று இரண்டாயிரம் தலைமை காவலர்களுக்கு அளிக்கின்ற அளவுக்கு, யாரை, கௌரவப்படுத்த வேண்டுமோ, யாருக்கு சிறப்பு செய்ய வேண்டுமோ, அவர்களுக்கு சிறப்பு செய்து கொண்டிருக்கிறோம். 1980 ஆம் ஆண்டிலிருந்து மட்டும் ஒரு விவரத்தை நான் சொல்கிறேன். 1980-ல் பதிவு செய்யப்பட்ட. சொத்து சம்பந்தமான வழக்குகள் 39,097. அதிலே, கண்டுபிடிக்கப்பட்ட வழக்குகளின் விழுக்காடு 59 ஆக இருக்கிறது. திரும்ப பெறப்பட்ட சொத்துக்களுடைய எண்ணிக்கை 47.8 சதவிகிதமாக இருக்கிறது. 1981 ஆம் ஆண்டு அதிலே 38,029 வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அதிலே கண்டு பிடிக்கப்பட்டவை 69 விழுக்காடு ஆகும். பெறப்பட்ட சொத்துக்கள் 53.3 விழுக்காடு ஆகிறது. 1982 இல் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் 34,680 என்று சொன்னால் 72 விழுக்காடாக இருக்கக்கூடிய, கண்டுபிடிக்கப்பட்ட அந்த சொத்துக்கள் திரும்ப பெறப்பட்ட மதிப்பு 58.8 ஆக இருக்கிறது. இதை எதற்காக நான் சொல்கிறேன் என்றால், ஆங்காங்கு நடைபெறுகிற சில தவறுகள், சில குறைகளை தட்டிக் கேட்கிற நியாயத்தை முன் வைக்கிற ஒரு நல்ல அரசு இங்கே இருக்கின்ற காரணத்தாலே இதை நம்மாலே செய்ய முடிந்திருக்கிறது. தமிழ்நாடு இட்ட அளவை எண்ணிப் பார்க்க வேண்டும்.

1978-83-க்காக, ஐந்தாண்டில், 2150 கோடி வேண்டுமென்று கேட்டோம். இன்றைக்கு 83 ஆம் ஆண்டு 3,150 கோடியாக உயர்த்தப்பட வேண்டும் என்று கேட்டோம். ஆயிரம் கோடி அதிகம். 40 விழுக்காடு அதிகமாக பெற்றிருக்கிறோம். நபர் வாரி திட்டச் செலவு 522லேயிருந்து 765 ஆக உயர்த்திக் கொள்வதற்கான திட்டத்தை நம்மாலே தயார்படுத்த முடிந் திருக்கிறது. வேலை வாய்ப்பு சதவிகிதம் 1971 ஆம் ஆண்டு 35.8 ஆக இருந்தது. 1981லே 39.2 விழுக்காடாக மாற்றி காட்டியிருக்கிறோம். தனி நபர் வருமானம் 1960-61-லே 335 ரூபாய் 1970-71-லே 583 ரூபாய். 1980-81-லே 1269 ரூபாய். இன்றைக்கு அது 1365 தாண்டிக் கொண்டிருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

(பிற்பகல் 12-30)

வருவாய்த் துறையைப் பொறுத்தவரைக்கும் 1—12—1980 முதல் பல ஆட்சிகளைப் பார்த்து, மாற்றங்களை ஏற்படுத்த முடியுமா என்று விரக்தியின் விளிம்பிற்கு வந்துவிட்ட வருவாய் வாரியத்தை நீக்கிக் காட்டினோமே அதற்காகவா இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம். பகுதி நேர கிராம அதிகாரிகளை நீக்கவேண்டும் என்றும், அதிலே ஊழல் நடக்கிறது, அநியாயம் நடக்கிறது, ஏழைகளுக்கு நீதி கிடைக்கவில்லை என்று கிராமப் புறத்திலே இருக்கிற தாயும் தகப்பனும் கண்ணீர் வடித்தார்களே, அந்த கிராம அதிகாரிகளை நீக்கியதன் மூலமாக மகத்தான சாதனையைச் செய்ததற்காகவா இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம். பினாமி நிலங்களை ஒழிக்க வேண்டும் என்று இங்கே மசோதா இயற்றி, சட்டமாக வரவேண்டும் என்று ஒப்புதல் தர வேண்டும் என்று இந்தியக் குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைத்து, ஒப்புதல் தராமல் திரும்பப் பெற்றும், இதை வலி யுறுத்த வேண்டும் என்று இருக்கிறோமே அதற்காகவா இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம். எண்ணிப் பார்க்க வேண்டும்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

மணடல் கமிஷனிலே சிறப்பான ஒன்றைப் பாராட்டியிருக் கிறார்கள். பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக நன்மை செய் கின்ற ஒரு நல்ல அரசாக தென்னகத்தில் தமிழ்நாடு, கர்நாடகா ஆகிய மாநிலங்களில் பிற்பட்டவர்களுக்கு என்று பல்வேறு நிலைகளில் நன்மை செய்து வருவதாக சொல்லியிருக்கிறார்கள். மண்டல் கமிஷன் அறிக்கையை நான் படிக்கிறேன். வட மாநிலங் களில் நிலப் பிரபுத்துவம் ஓரளவுக்கு இருப்பதால், பிற்பட்டோர் மீது அவர்களது ஆதிக்கம் இருந்து வருகிறது. அப்படிப்பட்ட நிலை தென்னகத்தில் குறிப்பாக தமிழ்நாட்டில் இல்லை. தமிழ் நாடு அரசு பிற்பட்டவர்களுடைய பொருளாதார வளர்ச்சி யில் முன்னேற்றத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று மண்டல் கமிஷன் சார்பாக





துறையாக நாம் எடுத்துக் சொல்ல வேண்டுமானால் நான் ஆதாரங்களைச் சொல்ல முடியும். வாதங்களை எடுத்து வைக்க முடியும். அப்படி யாராவது வாதாட வருவார்களேயானால், எடுத்துக் காட்டுக்களைச் சொல்வதற்காகச் சொல்கிறேன். இந்திய துணைக் கண்டத்திலே இருக்கிற எல்லா மாநிலத் துறைகளோடும் நாம் இங்கேபோட்டிருக்கிற திட்டங்களை நம்முடைய ஆட்சியின் சார்பிலே நம்முடைய துறைகள் கொண்டு வந்திருக்கக்கூடிய சாதனங்களை எடுத்துச் சொல்வோமேயானால் இந்த மன்றத்திலே அதிக நேரம் வேண்டும் என்று உமாநாத் கேட்டார் கள். நானும் 4 மணிக்கும் அதிகமாக பேசிக் கொண்டு இருக்க லாம். அவ்வளவு தேவை இருக்கிறது.

மின் துறையைப் பொறுத்தவரைக்கும், 15,235 சிற்றூர் களில் 31-3-1983 முடிய 15,639 சிற்றூர்களில் நாம் மின் இணைப்புத் தந்திருக்கிறோம். இந்தியாவிலேயே எந்த மாநிலத் திலாவது செய்து இருக்க முடியுமா? 1982-83-ல் 19,497 மின் தொடர்புகள் வேளாண்மை விசையேற்றத்திற்காக தந்திருக் கிறார்கள். இந்தியாவிலே சாதனை செய்த மாநிலம் தமிழ்நாடு என்ற பெயரை வாங்கியிருக்கிறோம். 1980 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரைக்கும் 2,719 மெகாவாட்டாக இருந்த மின் இணைப்பு 1983 இல் 31,092 ஆக அதிகரித்திருக்கிறது. குடிசைகளுக்கு மின் விளக்கு தமிழகத்திலே செய்திருப்பதைப் போல மேற்கு வங்கத்திலே இருப்பதாகச் சொல்ல முடியுமா? அல்லது வேறு மாநிலத்திலே இருப்பதாகக் கணக்கு காட்ட முடியுமா? 2½ ரூபாய் போட்டால் வீட்டுக்கு ஒளி விளக்கு என்று கிராமப் புறத்திலே இருக்கிற ஏழை எளியவர்கள் எல்லாம் புரட்சித் தலை வர் அவர்களை புண்ணியவான் காலத்திலேதான் எங்களுக்கு ஒளி பிறந்திருக்கிறது என்ற மகிழ்ச்சியைத் தெரிவித்திருக்கிறார்கள். ஏறக்குறைய 5.2 இலட்சம் குடிசைகள் இதனாலே பயனடைந் திருக்கின்றன.

ஆதி திராவிடர் குடியிருப்புகள் 100-க்கு 100 மின் வசதி பெற்றிருக்கிறது என்று காமர்ஸ் ஏட்டிலே பாராட்டியிருக்கிறார் கள். மின் கட்டணம் நாட்டிலேயே நாம் தான் மிகவும் குறை வாக வாங்கிக் கொண்டிருக்கிறோம். உற்பத்திச் செலவு 60 காசாக ஆகிய அந்த மின்சாரத்தை 1971-லே 16 காசாக இருந்தது 14 காசாக குறைத்தோம். 80-ல் சிறு விவசாயிகளுக்கு 12 காசாக ஆக்கினோம். 1980 ஆம் ஆண்டு விவசாய இணைப்புகளுக்கு மின் வாரியக் கட்டணத்தில் நான்கிலிருந்து இரண்டாகக் குறைத் தோம். 81 ஆம் ஆண்டு மின் அளவு வாடகைக் கட்டணத்தை முழுவதுமாக நீக்கம் செய்தோமே, அதற்காகவா இந்த நம் பிக்கையில்லாத் தீர்மானம். மின் உற்பத்திக்கு என்ன முதலீடு செய்யப்பட்டு வருகிறது என்ற கணக்கையெல்லாம் நான் உங் கள் முன்னால் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். 1975-76 இல் 24.92 கோடியாக மின் உற்பத்திக்கு செய்யப்பட்டு வந்த அந்த செலவு, 1979-83-லே 77.95 கோடியாக வளர்ந் திருக்கிறது. 1982-83-ல் 117.25 கோடியாக மாற்றி இருக்கி

றோமே இது சாதனை இல்லையா ? சாதனை படைத்த இந்த அமைச்சரவை மீது நம்பிக்கையில்லை என்று சொல்வதை எண்ணிப் பார்க்க வேண்டும். மின் துறையைப் பொறுத்த வரைக் கும் இந்திய துணைக் கண்டத்திலே இருக்கிற நிலைமைகளோடு நம்முடைய நிலைமைகளை எண்ணிப் பார்க்கவேண்டும். டோட்டல் இன்ஸ்டால்டு கெபாசிடி 1981—82-ல் தமிழ்நாட்டிலே 2,539 மெகாவாட் இந்திய துணைக் கண்டம் முழுவதும் 32,456 மெகாவாட் தான். எண்ணிப் பார்க்க வேண்டும். எலக்ட்ரிசிடி ஜெனரேடட் உற்பத்தி செய்யப்பட்ட அளவு 11,213 மில்லியன் கிலோவாட். இந்திய துணைக் கண்டத்தினுடைய அளவு 1,22,866 கிலோ வாட்டாக ஆகி இருக்கிறது. பெர் கேப்பிட்டா பவர் கன்சம்ப்சன் 1979—80-ல் 180 கிலோ வாட்டாக இருக்கிறது. இந்திய துணைக் கண்டத்தினுடைய அளவு 136 ஆகியிருக்கிறது. இன்டஸ்ட்ரியல் கன்சம்ப்சன் 1980—81-ல் 92 கிலோ வாட் அளவு இந்திய துணைக் கண்டத்தினுடைய அளவு 73 கிலோ வாட் அதே போன்று விவசாயத்திற்காக 47 கிலோவாட் நாம் தருகிறோம். இந்திய துணைக் கண்டத்தினுடைய மொத்த அளவு 21 கிலோ வாட்டாக இருக்கிறது. டொமஸ்டிக் கன்சம்ப்சன் 1980—81-ல் 18 கிலோ வாட். இந்திய துணை கண்டத்திலே இருக்கிற மற்ற மாநிலங்களில் 16 கிலோ வாட் கூட ஒழுங்காக தர முடிய வில்லை.

இன்றைக்கு கிராமங்களைப் பொறுத்த வரைக்கும் 99.1 சத வீதம் மின் இணைப்பு ஏற்படுத்தி தந்திருக்கிறது இந்த அரசு. இதிலே இந்திய துணை கண்டத்தினுடைய மற்ற மாநிலங் களின் கிராமங்களுடைய அளவு 47.7 விழுக்காட்டை கூட தாண்டவில்லை. இதை எல்லாம் கணக்கிலே எடுத்துப் பார்க் கிற போது இந்த அரசாங்கம் மின் துறையில் மற்ற மாநிலங் களுக்கு ஒரு எடுத்துக் காட்டான மாநிலமாக இருக்கிறது என் பதைத் தான் சொல்ல வேண்டும். இதன் மீதா நம்பிக்கை யில்லாத் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறீர்கள் என்று, கிராமப் புறங்களிலே இருக்கக் கூடிய அத்தனை ஏழை எளிய மக்களும் உங்களைப் பார்த்து கேட்கிறார்கள்.

தமிழ் வளர்ச்சியைப் பொறுத்தவரைக்கும், இந்திய துணை கண்டத்திலே, அறிஞர் அண்ணாவிற்குப் பிறகு, தமிழ் மாநாடு கண்ட பெருமை தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர் களுக்குத் தான் இருக்கிறது. அதே போல நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் காலத்திலேதான், வளர்ச்சி என்பது பேச்சு அளவிலே மட்டும் இல்லாமல், அடுக்கு மொழியிலே மட்டும் வராமல், அடுக்கடுக்காகசெயல் திட்டங்களாக வளர்ந்திரு கிறது. தஞ்சையிலே தமிழ் பல்கலைக் கழகம் ஏற்படுத்திய, பா அதிரப் பாடிய பாரதியாருக்கு நூற்றாண்டு விழா நடத்திய பாவேந்தர் பாரதிதாசனுக்கு விழா எடுப்பித்த, பாரதியார் பெயரிலும், பாரதிதாசனார் பெயரிலும் பல்கலைக் கழகங்கள் ஏற்படுத்திய இந்த அரசின் மீதா நம்பிக்கையில்லை என்று



தமிழ் அறிஞர்களுக்கு ஓய்வு ஊதியம் அளித்த, வறுமையிலே வாடுகின்ற அத்தனை அறிஞர்களுக்கும் உதவித் தொகை அளித்த இந்த அரசைப் பார்த்தா நம்பிக்கையில்லை என்று சொல்கிறீர்கள் ? இந்தி எதிர்ப்பிலே எந்த கேடயத்தை அண்ணா அவர்கள் தூக்கிப் பிடித்தார்களோ, எந்தக் கவசத்தை அண்ணா அவர்கள் வைத்திருந்தார்களோ, அதையே கவசமாக, அதையே கேடயமாக புரட்சிக் தலைவர் அவர்களின் அரசு பயன் படுத்தி வருகிறது என்பதற்கு உதாரணமாக ஒன்று சொல்ல விரும்புகிறேன்.

ஆகாசவாணி என்று அறிவிப்போம் என்று டெல்லி வானொலி நிலையத்திலேயிருந்து அறிவிப்பு வருகிறது. ஆகாச வாணி என்று அறிவிக்கக்கூடாது, அது வேண்டாம், அதை மாற்ற வேண்டும் என்று, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்ப்புத் குரல் கொடுத்து, தீர்மானம் போடவில்லையா, அதை எண்ணிப் பார்க்க வேண்டும். இரயில்வேயிலே உத்தி யோக உயர்வுக்கு இந்தி படிக்க வேண்டும் என்று சொன்னபோது, அதை ஏற்க மாட்டோம் என்று இந்த மாமன்றத்திலேயே விவாதம் நடத்தி தீர்மானம் போட்டு அனுப்பவில்லையா டெல் லிக்கு, என்று எண்ணிப் பார்க்க வேண்டும். மறைந்த பாரதப் பிரதமர் நேருஜி அவர்களுடைய உறுதி மொழி காப்பாற்றப்பட வேண்டும் என்று மத்திய அரசாங்கத்தை, தொடர்ந்து வற் புறுத்தி வருகின்ற மொழிக் கொள்கையிலே, அண்ணா அவர் களின் வழியைக் கடைப் பிடிக்கின்ற அரசாங்கமாக இருக்கின்ற இந்த அரசைப் பார்த்தா நம்பிக்கையில்லை என்று சொல்கி றீர்கள் ?

டி. வி.-யிலே இந்தி ஒலி—ஒளி பரப்பு அதிகமாகியபோது இந்தி ஒலிபரப்பையே எடுக்க வேண்டும் என்று சொல்லவில்லை, ஆனால் அதன் நேரத்தைக் குறைக்க வேண்டும் என்று மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தி லேயே வாதாடவில்லையா ? தமிழகத்தில் தர்மபுரி மாவட்டத்தை யும், மேற்கு மாவட்டங்களையும் உள் அடக்கிய பகுதியாகிய ஒரு இடத்தில் ஒரு வானொலி நிலையம் ஒன்று அமைக்க வேண்டும் என்று மத்திய அரசோடு வாதாடினார்களே, அதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

தமிழகத்திலே கடுமையான வறட்சி ஏற்பட்டது. அந்த வறட்சி காலத்திலே உணவுப் பொருள்களின் விலையிலே ஏற்றம் ஏற்பட்டதா ? உணவுப் பொருள்களை நல்ல முறையில் பகிர்ந் தளிப்பதற்காக 17,844 நியாய விலைக் கடைகளை தமிழக அரசு திறந்தது. தமிழகத்திலே எப்படி செம்மையாக உணவு வினியோகம் நடக்கிறது என்று டெல்லி அரசாங்கம் ஒரு

டாக்குமெண்டரி பிலிமே எடுத்து, இந்த பப்ளிக் டிஸ்டிரிபியூஷன் சிஸ்டத்தைப் பாராட்டவில்லையா ? மைய அரசு கொள் முதல் விலையை உயர்த்திய போதும், விற்பனை விலையை நாம் உயர்த்தவில்லையே. ஸ்டேக்கிரிங் சிஸ்டம் கொண்டு வந்ததை மைய அரசு பாராட்டவில்லையா ?

அது மட்டும் அல்ல. வறட்சி காலத்தில், இந்திய துணைக் கண்டத்திலே எந்த மாநில முதல்வர்களுக்கும் இல்லாத துணி வோடு, தெளிவோடு, நம்முடைய மாநில முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள், 7 மணி நேரம் உண்ணாவிரதம் இருந்து மைய அரசினுடைய தவறான போசகுகளைச் சுட்டிக் காட்டி துணிவோடு எடுத்துச் சொல்லக் கூடிய ஒரு திறமையான ஆட்சி யாக புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சிதான் இருந்தது என்பதை நான் ஆதாரத்தோடு சொல்ல விரும்புகிறேன். வறட் சியை நாம் சமாளித்தோம். வறட்சி என்று பேசுகின்றபோது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்கள் நீட்டி முழக்கிப் பேசி னார்கள். குற்றங்கள் சொன்னார்கள. ஆனால் வறட்சிக் காலத்திலே— எக்கனாமிக்ஸ் அண்ட் பொலிடிகல் வீக்லி என்ற பத்திரிகையிலே மேற்கு வங்க அரசு வறட்சி காலத்திலே எப்படி இருந்திருக்கிறார்கள். எப்படி அந்த அரசு நடந்திருக்கிறது என்று, சுமந்த பானர்ஜி என்ற எழுத்தாளர் எழுதியிருக்கிறார். அதை படிக்கிறேன். அது வறட்சி காலத்தில் மேற்கு வங்க ஆட்சியும் அதன் நிர்வாகமும் எப்படி சீர்கேடு அடைந்துள்ளது என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது.

"It is being alleged that the pattern of aid is lopsided and the id is reaching only the C.P.M. followers."

என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

"Besides there is a widespread feeling in the villages that proper irrigation measures in time could have countered the drought to a great extent."

செய்ய முடிந்ததா ? இல்லை என்று ஆதார பூர்வமாகச் சொல்லு கிறார்கள். பார்வேர்டு பிளாக்—கைச் சேர்ந்த அங்கே இருக்கக் கூடிய அசோக்கோஷ் என்ற அதன்பொதுச் செயலாளர் சொல்கி றார்கள்:—



"Failure of irriggtion was the main reason foı the calamity. Rs. 950 crores of agricultural Production was lost. Tubewells which are' listed in an Official Statistics are found missing at the actual spots.'

எங்கெங்கே குழாய் கிணறுகளை போட்டிருக்கிறது என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அமைத்திருக்கிற அரசாங்கம் அங்கே அறிவித்திருக்கிறதோ, அங்கேயெல்லாம் போய், அந்த ஸ்டேடிஸ்டிக்ஸையும் வைத்துக் கொண்டு பார்த்தால், அங்கே டியூப் வெல்லே இல்லை என்று சொல்லக் கூடிய வகையிலே மேற்கு வங்கத்திலே நிலைமை இருக்கிறது என்பதை உங்கள் நினைவுக்கு கொண்டு வர விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-40)

The money allotted for digging such tube-wells had obvicusly gone to the pockets of the rich farmers who, in many places dominate the Panchayats. பஞ்சாயத்துக்களிலே பொறுப்பேற்றிருக்கின்ற பல பெரியவர்கள்பல நில பிரபுக்கள் எல்லாம் இருக்கிறார்களே அவர்களுடைய பாக்கெட்டிலே போய்ச் சேர்ந்து இருக்கிறது என்று இன்னும் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

The Chowkidars of the Panchayat office of Manked village narrated his experience. While accompanying the Panchayat Head....

முன்னாள் காங்கிரஸ் கட்சியிலிருந்த நிலபிரபுக்கள் இன்றைக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியிலே சேர்ந்திருக்கிறார்கள். அவர் களில் ஒருவர் நிர்மல் மிஸ்ரா. அவரோடு போகிற போது சொல்லுகிறார்கள். நமக்கு வெட்கமாக இருக்கிறது. வேதனை யாக இருக்கிறது.

"Nirmal Misra, now C.P.M. heao and other Members the course of distributiug relief, the Panchayat Babus go to the villages with sacks of rice, but out of 8 Kgs. of rice only 2 Kgs. art given. The rice is either hoarded or sold out in black-market,"

என்று எழுதியிருக்கிறார்கள். வறட்சி காலத்திலே 8 கிலோ அரிசி அரசு சார்பிலே கொடுக்கப்பட்டு கிராமப்புரங்களிலே உள்ள மக்களுக்குப் போய்ச் சேரவேண்டுமென்று சொன்னால் ஒழுங்காக

[திரு. ஜே. சி. டி. பிரபாகரன்] [1983 நவம்பர் 8

விவசாயிகளுக்கும் ஏழை எளிய மக்களுக்கும் போய்ச் சேர்ந்ததா
என்றால்—மேற்கு வங்கத்திலே—2 கிலோ தான் போய்ச் சேர்ந்
ததே தவிர மீதி 6 கிலோ எங்கே போயிற்று என்பதை ஆணித்தா
மாக ஆதாரத்தோடு சொல்லியிருக்கிறார்கள்.

Either hoarded or sold out in black-marke .

என்று படம்பிடித்துக் காட்டியிருக்கிறார்கள். தமிழ்நாட்டிலே
வறட்சி வந்தபோது எப்படியெல்லாம் நாம் சமாளித்தோம் என்ப
தற்குப் பல உதாரணங்களை என்னால் தரமுடியும்.

இன்று நிலவரியைத் தள்ளுபடி செய்தோமே, உள்ளூர் வரி
யைத் தள்ளுபடி செய்தோமே, தண்ணீர் தனித் தீர்வையைத்
தள்ளுபடி செய்தோமே. பணப்பயிர் தீர்வையைத் தள்ளுபடி
செய்தோமே இவைகளெல்லாம் உங்கள் கவனத்திற்கு வரவில்
லையா? கூட்டுறவுக் கடன்களைப் பொறுத்தவரைக்கும் விவ
சாயக் கடன்களைப் பொறுத்தவரைக்கும் குத்தகை பயிரிடு
வோருக்குக்கூட பயிர்க் கடன்கள் நிலமற்ற பண்ணைத்
தொழிலாளர்களுக்கு கடன்கள் என்று தந்திருக்கிற ஒரே மாநில
அரசு புரட்சித் தலைவருடைய அரசுதான். வட்டியைத் தள்ளுபடி
செய்தல் அல்லது திருப்பிக் கொடுத்தல் சிறு விவசாயிகள் கடன்
களைத் தள்ளுபடி செய்தல் முதலியவற்றிற்காக 96 கோடி
ரூபாய் நிதியுதவி அளித்து இருக்கிறோமே அது பாராட்டுக்குரிய
செயலில்லையா? பயிர்க் காப்புறுதித் திட்டம் வரும் என்று
சொன்னோம். பயிர் காப்புறுதித் திட்டம், கிராப் இன்ஷூரன்ஸ்
திட்டம், செய்து கொள்ளக்கூடிய அதிக அளவு 5,000 ரூபாய்
என்று வரையறை செய்திருக்கிறோமே அது பாராட்டுக்குரியதில்
லையா? விவசாயிகளுக்கு ஊக்கம் தரும் முறையில் கொள்முதல்
விலைக்கு மேலாக குவிண்டால் ஒன்றுக்கு ரூபாய் 15 வறட்சி
உதவித் தொகை வழங்கியிருக்கிற அரசாங்கம் புரட்சித் தலை
வருடைய அரசாங்கம்தான் என்பதை நான் நினைவூட்ட விரும்பு
கிறேன். சிறு விவசாயிகளுக்கு கடன் நிவாரணத்திற்கு ஏறத்தாழ
170 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது இந்த வறட்சிக்
காலத்திலே என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.
இப்படி தேர்தல் அறிக்கையிலே எதை சொன்னோமோ தேர்தல்
அறிக்கையிலே எவை எவை வரும் என்று அறிவித்தோமோ
அறிவித்து வாக்குகளைப் பெற்றோமோ அவைகளையெல்லாம்
செய்துகொண்டே வருகிறோம். எந்தத் தொழிலும் செய்ய
இயலாத ஆதரவற்ற வேளாண்மைத் தொழிலாளர்கள், 60
வயதான ஆதரவற்ற ஏழைகளுக்கு மாத ஓய்வூதியம் தரப்படும்
என்று சொன்னோம். 1981 ஆம் ஆண்டு முதல் 30 ஆயிரம்
பேர்கள் பயனடைகிறார்கள். இரண்டு இலட்சம் பேர்களுக்கு ஒரு
கிலோ அரிசி ரூபாய் 30 உதவிப் பணமாக தரப்படுகிறதே இதற்குப்



1983 நவம்பர் 8] [திரு. ஜே. சி. டி. பிரபாகரன்]

பாராட்டுக்கள் இல்லையா? வேலைவாய்ப்பு அலுவலகத்தில்
பதிவு செய்து வந்து வேலையற்ற இளைஞர்களுக்கு ஏழைக்
குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை அளித்து
வேலை தரப்படும் என்று சொன்னோம்.

ஒவ்வொரு குடும்பத்திலேயும் ஒருவருக்காவது வேலை தரப்படும்
என்று சொல்லோம் தேர்தல் அறிக்கையிலே. 15–1–1982இன்
படி ஏறத்தாழ 71,815 பேர்கள் பயன்பெற்றிருக்கிறார்கள்.
1980–81இல் இதற்காக 22 லட்சத்து 4 ஆயிரம் ரூபாய்
செலவிடப்பட்டிருக்கிறது. 1981–82ஆம் ஆண்டில் 43 லட்சத்து
60 ஆயிரம் ரூபாய் செலவிட்டிருக்கிறோமே தேர்தல் அறிக்கையை
நீங்கள் படிக்கவேண்டும். செய்திருக்கின்ற சாதனை
களோடு அதை நீங்கள் ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன். ஆதரவற்ற விதவை தாய்மார்களின்
மகளிர் திருமணத்திற்காக ஆயிரம் ரூபாய் தரப்படும் என்று
சொன்னோம். 1982இல் இதற்காக ஆணை பிறப்பிக்கப்பட்டது.
விதவைகள் மறுமணம் செய்துகொண்டால் 5 ஆயிரம் ரூபாய்,
7 ஆண்டுகளில் தேசிய சேமிப்பு சான்றிதழ் தரக்கூடிய அந்த
வாய்ப்பினை விதவை மறுமணத்திற்காக ஏற்படுத்தித் தந்திருக்
கிறோம். 1980–81இல் 373 விதவைகள் மறுமணம் செய்திருக்
கிறார்கள். பாராட்ட வேண்டாமா, போற்ற வேண்டாமா,
இந்த நம்பிக்கையில்லா தீர்மானத்தைத் திரும்பப் பெற
வேண்டாமா? எண்ணிப் பார்க்கவேண்டும். ஏழை விவ
சாயத் தொழிலாளர்களுக்கு 60 ஆயிரம் பேர்களுக்கு வேட்டி,
சேலை வழங்கியிருக்கிற ஒரே அரசாங்கம் இதய தெய்வம்
புரட்சித் தலைவரின் அரசாங்கம்தான் என்பதை நான் தெளிவு
படுத்த விரும்புகிறேன். பட்டினி சாவு நிகழக் கூடாது என்று
தேர்தல் அறிக்கையில் சொன்னோம். அவ்வாறு நேரக்கூடிய
சூழ்நிலை வந்தால் அரசு ஊழியர்களை, அலுவலர்களை அணுகி
னால் ரூபாய் 100 உதவி தரப்படும் வேலை வாய்ப்புத் தரப்படும்
என்று சொன்னோம். செய்தோமா இல்லையா? கணக்குக்
காட்டுகிறேன். 187 பேர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.
இன்றைக்கு 18,500 ரூபாய் செலவுத் தொகை என்று மாவட்டந்
தோறும் கணக்கு இருக்கிறது.

தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாக எல்லா ஊர்களுக்கும்
நிரந்தரமான அடிப்படைத் தேவைகளை பூர்த்திச் செய்கின்ற
பணியை முடித்து இருக்கிறோம். பல்கலைக் கழகங்களில்,
கல்வித்துறையில் ஆற்றியிருக்கிற பணிகளை கொஞ்சம் சொல்
வதற்கு நீங்கள் வழி விடவேண்டும் என்று மாண்புமிகு மாற்றுத்
தலைவர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன். கல்வித் துறையில்
அண்ணாப் பெயரால் பல்கலைக்கழகம், பாரதியார், பாரதி
தாசன் பெயரால் பல்கலைக்கழகம், தஞ்சை தரணியில்
தமிழ் பல்கலைக்கழகம் பாராட்ட வேண்டாமா? 1976–77ல்
கல்விக்காக செலவிடப்பட்ட தொகை 143 கோடி ரூபாய்.
ஆனால் 1983–84இல் 356 கோடி ரூபாய் நாம் செலவு செய்திருக்

கிறோம். மருத்துத் துறையையும் வேளாண்மைக் கல்வியையும் சேர்த்துக்கொண்டால் 382 கோடி ரூபாய்க்கு 2½ மடங்கு அதிகமாக செய்யக்கூடிய ஆற்றல் நாம் பெற்று இருக்கிறோம். 6ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒரு குறியீட்டு அளவு மத்திய அரசு நிர்ணயித்து இருக்கிற குறியீட்டு அளவு 6 முதல் 11 வயதுள்ள குழந்தைகள் 95 சதவீத பேர் பள்ளியில் சேரவேண்டும். 11 முதல் 16 வயது உள்ள பிள்ளைகள் 50 சதவீதம் சேர வேண்டும். நாம் 6 முதல் 11 வயதுள்ள குழந்தைகள் 96.2 சதவீதம் சேர்த்து இருக்கிறோம். 11 முதல் 16 வயதுள்ள பிள்ளைகள் மத்திய அரசினுடைய குறியீட்டு அளவு 50 சதவீதம் என்றால் நாம் 66.03 சதவீதம் பிள்ளைகளை இன்றைக்கு சேர்த்து இருக்கிறோம். ஏறத்தாழ 70 லட்சம் குழந்தைகளுக்கு சத்துணவு தருவதன் மூலமாக இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் பள்ளியில் இடையில் நின்று போகிற டிராப் அவுட்டை 40 சதவீதத்திலிருந்து 30 சதவீதமாக குறைத்து இருக்கிறார்கள். இந்தக் கல்வி மாற்றம் வேண்டாமா எண்ணிப் பார்க்கவேண்டும்.

96 ஆயிரம் ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்கள் 1—6—1981 முதல் அரசு ஊழியர்கள் என்று அறிவிக்கப்பட்டது. காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் கேட்டார்கள், திராவிட முன்னேற்றக்கழக ஆட்சிக்காலத்தில் கோரிக்கை வைத்தார்கள் செய்ய முடிந்ததா? புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பு ஏற்றப் பிறகு தான் ஆசிரிய பெருமக்கள் நலன்கள் காக்கின்ற முறையால் 96 ஆயிரம் ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்கள் அரசு ஊழியர்களாக 1—6—1981 முதல் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். 2ஆவது நிலை தமிழ் ஆசிரியர்கள் அனைவரையும் முதல் நிலை தமிழ் ஆசிரியர் களாக்கியது. ஈட்டிய விடுப்பு 10 நாள வேண்டும் என்று எத்தனை ஆண்டு காலம் கேட்டார்கள் ஆசிரிய பெருமக்கள் அதை செய்திட வில்லையா ? கிடப்பிலே போடப்பட்ட பல் கலைக்கழக மானியக்குழுவின் ஊதியத் திட்டத்தை முன் தேதியிட்டு அமுல்படுத்திய அரசாங்கம் புரட்சித் தலைவர் அரசாங்கம். கல்லூரி பேராசிரியர்கள் இன்றைக்கு புகழ் ஆரம் சூட்டிக்கொண்டு இருக்கிறார்கள். முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் டாக்டர் பட்டம் பெறுகிறபோது பல்கலைக் கழகத்தில் இருக்கிற பேராசிரியர்கள் வாழ்த்துச் சொல்கிறார்கள், பள்ளிக்கூட ஆசிரிய பெருமக்கள வணங்கு கிறார்கள், ஏழை எளிய தாய்மார்கள், படிப்பு அற்றவர்கள் பாமர மக்கள் அத்தனைபேரும் இவருக்கு டாக்டர் பட்டம் தந்ததால் பல்கலைக்கழகம் பெருமை பெறுகிறது. பட்டத்தால் அவருக்கு பெருமை இல்லை, சென்னை பல்கலைக்கழகத்திற்கு தான் பெருமை என்று பாராட்டுத் தெரிவித்தார்கள். எண்ணிப் பார்க்க வேண்டாமா ? 4 ஆண்டுகளில் 23பாலி டெக்னிக்குகள் துவங்க அனுமதிக்கப்பட்டு இருக்கிறது. கல்வித் துறையில் நாம் சிறப்பாக பணியாற்றிய காரணத்தால் இந்த ஆண்டு குரூப்ஸ்காயா பரிசு, மாமேதை லெனினின் மனைவியின்



பெயரால் அமைந்து இருக்கிற குருத்சேவ் பரிசை இந்த மாநிலம் பெற்று இருப்பதை பாராட்ட வேண்டாமா. இவற்றை எல்லாம் எடுத்துக்கொண்டு இந்தத் தீர்மானத்தை நீங்கள் திரும்பப் பெறவேண்டாமா ? ஒரு கோடிக்கு இலவச புத்தகம் ஏழை குழந்தைகளுக்கு பள்ளிக்கூடத்தில் வழங்கப்படுகிறது அதை எண்ணிப்பார்க்க வேண்டாமா ?

இன்னும் ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன், கல்வித் துறையை விடுத்து தொழிலாளர் நலத்துறையைப் பற்றி நீண்ட நேரம் பேசினார்கள். இந்த மாநிலத்தில தொழிலாளர் நலத்திற்காக சட்டங்கள் கொண்டுவந்து இருக்கிற நாம் இந்திய துணைக்கண்டத்தில் இருக்கிற எந்த மாநில அரசுகளோடு ஒப்பிட்டுச் சொன்னாலும் நீங்கள் புள்ளி விவரங்களைச் சொல்லலாம், ஆதாரங்களை காட்டலாம் நான் சவாலாக அல்ல, ஆணவத்தோடு அல்ல, அதிகாரபூர்வமான குறிப்புகளை சொல்கிறேன். இந்த மாநில அரசு கொண்டு வந்து இருப்பது போல தொழிலாளர் நலச் சட்டங்கள் எந்த மாநில அரசாலும் கொண்டுவரப்படவில்லை.

அடுத்து, சென்னையிலே கடுமையான வறட்சி, தண்ணீர் பஞ்சம் என்று வந்த போது எப்படி எல்லாம் சமாளித்தோம். பத்திரிகைகளிலே எப்படி எழுதினார்கள். இந்த ஆட்சி காலி, இத்தோடு வீட்டுக்குப் போகவேண்டியதுதான். சென்னை காலியாகிவிடும் என்று எழுதினார்கள். இவற்றை எல்லாம் தாங்கி சென்னை நகரத்தில் மட்டும் 2,870க்கும் மேற்பட்ட நீர் தொட்டிகளை அமைத்து லாரிகள்மூலம் தண்ணீர் கொடுத்தோம். வறட்சியை சமாளித்தோம், குழாய்களை போட்டோம். சென்னை நகரை காலி செய்கிற நிலைமை என்றைக்கும் வராது. 1882-ல் ஆங்கில ஏகாதிபத்தியம் போட்ட திட்டத்தை 1983-ல் பிரதம அமைச்சரை வைத்து மாண்புமிகு என்.டி.ஆர். அவர்களை வைத்து இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் துவக்கி இருக்கிறார்கள் கிருஷ்ணா நதி நீர் திட்டம் என்றால் காலத்தை வென்றவராக புரட்சித்தலைவர் இருக்கிறார். 1882ல் போட்ட திட்டத்தை புரட்சித் தலைவர் ஆட்சி நிறைவேற்றுகிறது என்று சொன்னால் காலத்தை வென்ற தனி மனிதர், சகாப்தம், சரித்திரம் படைத்து இருக்கிற தள நாயகர் புரட்சித் தலைவர் என்று நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். இரு மருந்து விளைக்கும் நன்னாட்டு பொருநன் நீ வாழ்க என்று சென்னை மக்கள் வாழ்த்துகிறார்கள். சென்னை நகர மக்களுக்கு தண்ணீரும் தந்து இருக்கிறார், உண்பதற்கு உணவும் தந்து இருக்கிறார் பள்ளிக்கூட பிள்ளைகளுக்கு. இரு மருந்து விளைக்கும் நன்னாட்டு பொருநன் நீ வாழ்க என்று வாழ்த்த வேண்டிய நீங்கள் இன்றைக்கு நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வந்து இருப்பதை பார்த்தால் வியப்பாக இருக்கிறது.

திருக்கோயில்களை பற்றி ஒரு ஆதாரத்தை மட்டும் சொல்லி முடிக்க விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-50)

3 ஆண்டுகளில் திருக்கோயில்களில் 4,917 ஆதி திராவிடர்களை அறங்காவலர்களாக நாம் போட்டிருக்கிறோம். அதிலே 121 பெண்களை நியமனம் செய்திருக்கிறோம். 15—8—1981 முதல் ஒவ்வொரு ஆகஸ்ட் 15ஆம் தேதியும் எல்லோரும் சமமாக உட்கார்ந்து ஜாதிமத வித்தியாசம் இல்லாமல் சம போஜனம் அருந்த வேண்டுமென்று புரட்சித் தலைவருடைய யோசனையின் படி, அவரே முன்னின்று நடத்தியிருக்கிறாரே பாராட்ட வேண்டாமா? 15—8—1981 முதல் ரூ. 5,84,557 செலவில் 747 இலவசத் திருமணங்களை, பிற்படுத்தப்பட்ட, ஆதி திராவிட மக்களுக்காக நாம் செய்திருக்கிறோமே, கோயில் பணம் முறையாக, சமுதாய நலத் திட்டங்களுக்குப் போக வேண்டுமென்று திட்டம் தீட்டியிருக்கிறோமே பாராட்ட வேண்டாமா?

1972-லே எத்தனை திருப்பணிகள்? 700 திருப்பணிகளைத் தாண்ட முடியவில்லை. 1982-லே 1,152 திருப்பணிகள் கோயில்களில் நடைபெற வேண்டுமென்று முயற்சி எடுத்து, மார்ச் மாதம் வரையில் 967 திருப்பணிகளை முடித்திருக்கிறோம் 208 கோயில்களிலே; 3 ஆண்டுகளிலே குடமுழுக்கு நடத்தினோம். ஏன் இந்தக் கோயில்களுக்குச் செய்திருக்கிற திருப்பணிகளைச் சொல்கிறேன் என்றால், கோயிலுக்குப் போகிற பக்தர்கள் சொல்கிறார்கள், எங்களாலே நிம்மதியாக கோயிலுக்குப் போக முடிகிறது. கோயில்களுக்குப் போகிறபோழுதுதான் அங்கேயிருக்கிற மக்கள் சொல்கிறார்கள், 1972-லேயிருந்து 1977 வரைக்கும் நிலைமையை வேறு. எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவர் 1977-லே பொறுப்பேற்ற பிறகு எத்தனை பெரிய மாற்றங்கள், எத்தனை பெரிய மறுமலர்ச்சிகள், திருக்கோயில்களில் என்று பாராட்டுகிறார்கள். கோயில்களின் பொற்காலமாக இருக்கிறது புரட்சித் தலைவர் அரசு— மத நம்பிக்கையிலும் அப்படியே— என்று மக்கள் சொல்கிறார்கள்.

அனைத்து ஆலயங்களிலே மிச்சப் படுத்திய தொகை ரூ. 4½ கோடி. இப்பொழுது மிச்சப் படுத்தியது ரூ. 20 கோடி. முன்னால் என்ன நிலைமை? முன்னாலே பணம் என்ன ஆனது? முன்னாலே ஏன் மிச்சப்படுத்தவில்லை? அந்த விவகாரத்திற்குள் நான் போக விரும்பவில்லை. நம்மாலே மிச்சப்படுத்த முடிந்திருக்கிறது. சமுதாய நலத் திட்டங்களுக்குத் தர முடிந்திருக்கிறது. கோயில் ஊழியர்களைப் பாதுகாக்க முடிந்திருக்கிறது. ஆலய அர்ச்சகர்களுக்கு இன்ஸ்யூரன்ஸ் திட்டம் கொண்டு வர முடிந்திருக்கிறது. 4 ஆண்டுகளில் குத்தகை பாக்கியை [illegible] 25 கோடியை [illegible] ப்யாமலேயே, அந்த



நிலமற்ற மக்களிடமிருந்து பணம் பெற முடியாத நிலையிலேயே, ரூ. 20 கோடியை நாம் வசூல் செய்து வைத்திருக்கிறோம் என்று சொன்னால், இதனை எண்ணிப் பார்க்கவேண்டும். கல்விக்காக, உழைக்கின்ற மக்களுக்காக, கோயில்களிலே இன்றைக்குச் சமுதாய நலப் பணிகளைச் செய்வதைப் பார்த்த பிறகும் கூடவா இந்த நம்பிக்கையில்லா தீர்மானம்?

புதிய 20 அம்சத் திட்டத்தைப் பற்றி நான் ஒன்று சொல்ல வேண்டும். பிரதம அமைச்சர் பாராளுமன்றத்திலே பேசுகின்ற நேரத்தில்— மற்ற அமைச்சர்கள் பேசுகின்ற நேரத்தில் புள்ளி விவரங்களைத் தருகிறார்கள். 20 அம்சத் திட்டம் நிறைவேற வேண்டுமென்று மைய அரசு சொல்லலாம். ஆனால், காங்கிரஸ் ஆளுகிற மாநிலங்களிலே கூட அவர்கள் குறித்திருக்கிற இலக்கை, அவர்களால் எட்ட முடியவில்லை. ஆனால், நாம், இந்த இந்தத் துறையிலே, இத்தனை திட்டங்களிலே, இவ்வளவு என்று அவர்கள் வரையறுத்துச் சொன்னாலும் 20 அம்சங்கள் என்று சொனனால், 25, 30 என்று அதிகமான அம்சங்களைச் சேர்த்து, இந்தத் தமிழ்நாடு அரசாங்கம் செய்திருக்கிறதே ஒழிய, 20 அம்சத் திட்டத்திலே பாராட்டுக்குரியவர்களாக, இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் இருக்கிற எல்லா மாநிலத்து முதலமைச்சர்களுக்கும் வழிகாட்டியாக இருக்கக்கூடிய நிலையில், தமிழகத்தினுடைய முதல்வர், புரட்சித் தலைவர் இருக்கிறார் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பேருந்து வசதிகளைப் பொறுத்தவரை நான் சொல்வேன், இந்த பஸ் வசதி ஒன்றுக்காகவே, இந்த ஆளுங்கட்சி இன்னும் 30 ஆண்டுகளுக்கு யாரும் அசைக்க முடியாத நிலைமையில் இருக்கும் என்பதை நான் தெளிவாக்க விரும்புகிறேன். 1980—ல் 6,754 வழித் தடங்கள். இன்றைக்கு 7,971 வழித் தடங்களை நம்மாலே கொண்டு வர முடிந்திருக்கிறது. இதிலே, இந்தியாவிலே யாருக்கு முதலிடம்? இதிலேயும் தமிழ்நாடு அரசாங்கம்தான் முதல் பரிசைத் தட்டிக் கொண்டு போகிறது, பாராட்டுக்குரியதாக இருக்கிறது. கட்டணமும் குறைவு, போக்குவரத்துத் துறையிலே புதிய கழகங்கள், முன்பு 8 இன்றைக்கு 12-க்கும் அதிகமாக கழகங்கள் இருக்கின்றன.

1980-லே தேசியமயமாக்கப்பட்ட பேருந்துகளின் விழுக்காடு 56. பேருந்துகளைத் தேசியமயமாக்குவதிலே காலதாமதம் ஆக்குகிறோம், இன்னும் முழுமையாக நிறைவேறுமா என்று கேட்டு வருகிறவர்களுக்கு நான் சொல்வேன், எங்கே பணிகளைத் தொடர்ந்தோமோ, அந்த 1980 ஆம் ஆண்டியிலேயிருந்து கணக்கிட்டால், 1983 ஆம் ஆண்டு 62%. அந்த அளவு அதிகமாக தேசியமயமாக்கப்பட்ட வண்டிகளைத் தமிழ்நாட்டிலே பார்க்கிறோம்.

3 ஆண்டுகளிலே புதிய வண்டிகள் 4,163. மொத்தம் 8,423 புதிய வண்டிகள். அன்றைக்குந் தமிழ் நாட்டிலே எந்த, எந்தகிராமத்திலே பஸ்ஸே நுழையாது, எந்த, எந்த கிராமத்திலே பேருந்தே போகாது என்று, ஏழை, எளிய மக்கள் 1980 ஆம் ஆண்டும் அதற்கு முன் னாலும் ஓட்டுக் கேட்கக் போகும்போதெல்லாம், பேருந்து வந் தால் ஓட்டு போடுவோம் என்று சொன்னார்களோ, எந்த எந்த இடத்திலே தேவை என்று கருத்து சொன்னார்களோ, விடுதலை அடைந்த காலத்திலேயிருந்து பஸ்ஸே நாங்கள் ஏறியது இல்லை என்று எங்கெல்லாம் சொன்னார்களோ, அந்த ஊர் களுக்கெல்லாம் பேருந்து விட்டிருக்கிறோம். அதற்காகவா இந்த நம்பிக்கையில்லா தீர்மானம் ?

ஜாதி மதத்தைப் பற்றியெல்லாம் இங்கே பேசினார்கள் நான் ஒன்றைச் சொல்கிறேன். இதய தெய்வம், தள நாயகன் புரட்டுத் தலைவரை விட்டால் தமிழ்நாட்டில் ஜாதிமத உணர்வு களுக்கு அப்பாற்பட்டு நின்று செயல்படக்கூடிய தலைவர் இல்லை என்று என்னாலே ஆணித்தரமாகச் சொல்லமுடியும்.

ஒரு புதிய யுகத்தை நாம் படைத்தாக வேண்டும். புதிய சிந்தனையை வளர்த்தாக வேண்டும். எங்களுக்குப் பின்னாலே இந்த ஆட்சி ஒரு சிறுகதையாக இல்லை ; பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்ன தொடர் கதையாக இந்த திராவிடர் இயக்கம் வளர வேண்டுமென்பதற்காக, எல்லா ஜாதி, மத, இன உணர்வுகளுக்கு அப்பாற்பட்டு செயல்களை செய்யக்கூடிய அந்தத் தங்கத் தலைவரை பார்த்தா நம் பிக்கையில்லை என்று தீர்மானத்தைக் கொண்டு வருகிறீர் கள் ? நான் உள்ளபடியே வேதனைப்படுகிறேன். மாண்பு மிகு புரட்சித் தலைவர் அவர்கள் மக்களை ஈர்க்கிற காந்த மாக இருக்கிற வரைக்கும், இப்படிப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் எல்லாம் கபட நாடகமாகதான் மக்கள் முன்னாலே நிற்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்பு கிறேன்.

பல்வேறு பிரச்னைகளைப் பற்றியும் பேசுகின்றபோது, அரசு ஊழியர்களைப் பற்றி ஒன்றைச் சொல்ல வேண்டும். தமிழ் நாட்டிலே இந்த அரசு பொறுப்பேற்றதற்கு பிறகு, இது ஏதோ அரசு ஊழியர்களுக்கெல்லாம் எதிர்ப்பான சர்க் கார் ; இந்த சர்க்கார் வந்தால் அரசு ஊழியர்கள் எல்லாம் அல்லோலகல்லோலப் பட வேண்டும், என்றெல்லாம் இருந்த நிலைமைகள் இன்றைக்கு மாறியிருக்கின்றன. அரசு ஊழியர் கள் சொல்கிறார்கள். நாங்கள் பலமுறை கேட்போம் ; கோஷம் போடுவோம் ; குரல் கொடுப்போம் ; போராட்டம் நடத்துவோம் ; ஆனால் கிராக்கிப்படி பெற்ற தொகை பத்து ரூபாய்க்கு மேலே இருக்காது. ஆனால் இன்றைக்கு, ஒரே தவணையில், புரட்சித் தலைவருடைய ஆட்சிக்காலத்தில் தான்



மூன்று கிராக்கிப்படிகளைப் பெற்றிருக்கிறோம் என்று சொன் னால், நாங்கள் எதற்காக குரல் கொடுக்க வேண்டும் ? எதற்காக கோஷம் போட வேண்டும் ? புரட்சித் தலைவர் அவர்கள் வாழ்க என்று தான் கோஷம் போடுவோம் என்று அரசு ஊழியர்கள் நிம்மதி பெருமூச்சு விடுகிறார்கள். அரசு அலுவலகங்களில் வேலை பார்க்கிற பெண்களுக்கு மெட்டர்னிட்டி லீவு 60 நாட்கள் போதாது என்று அங்க லாய்த்த தாய்மார்களுக்கு இப்போது 90 நாட்கள் லீவு கொடுக்கப்படுகிறது. இப்படி ஒவ்வொன்றாக நான் குறிப் பிட்டுச் சொல்ல முடியும். 1–8–81 முதல் லீவு சாலரி பற்றி வந்த ஒரு குறிப்பு ஏறக்தாழ அரசு ஊழியர்கள் அத்தனை பேருக்கும் மகிழ்ச்சி அளித்திருக்கிறது. தமிழ் நாட்டில் இந்த அரசு பொறுப்பேற்றதற்கு பிறகு தான் அரசு ஊழியர் களுக்கு லீவ் ட்ராவல் கன்செஷன் கொடுக்க வேண்டுமென்றி ருக்கிறது ; அரசுப் பணியில் சேர்வதற்கான வயது வரம்பை 26-லிருந்து 28-ஆக்கியதன் காரணமாக மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் அரசு இளைஞர்களின் ஏகோபித்த வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் பெற்றிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அரசு ஊழியர்களாக இருந்தாலும் சரி, விவசாயிகளாக இருந்தாலும் சரி, அல்லது எந்தத் துறையைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்களுக்காக இந்த அரசாங்கம் படைத்திருக்கிற சாதனைகள், ஏதோ தேர்தல் காலத்திற்கு மட்டும் பயன்படுபவை யாக இல்லை. 20 ஆண்டுகளுக்குப் பிறகு, 50 ஆண்டுகளுக்குப் பிறகு சரித்திரத்தின் ஏடுகளைத் திருப்பி பார்க்கிறபோது, இங்கே ஒரு முதலமைச்சர் இருந்தார் ; அவரால் தொலை நோக்குப் பார்வையோடு பார்க்க முடிந்திருக்கிறது. விஞ்ஞான கண்ணோட்டத்துடன் பிரச்னைகளை அவர் அணுகி யிருக்கிறார், என்று சரித்திரம் கூறக்கூடிய அளவிற்கு நாம் செய்திருக்கிறோம். இலங்கைப் பிரச்னையில் மாண்புமிகு முதல் வர் புரட்சித் தலைவர் அவர்கள் நிதானமாக, சமயோசித மாக, விவேகமாக, பொறுப்புணர்வோடு கூடிய கடமையுணர் வால் உந்தப்பட்டு எடுத்த சீரிய, ராஜதந்திர முடிவுகள், இந்த இலங்கைப் பிரச்னை தமிழ்நாட்டுப் பிரச்னை அலல ; இந்த இலங்கைப் பிரச்னை இந்தியப் பிரச்னை மட்டுமல்ல ; இந்தப் பிரச்னை உலகப் பிரச்னையென்று உலகத்தாருடைய கவனத்தை ஈர்க்கிற வகையிலே அமைந்திருக்கின்றன என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். ஆகஸ்ட் 2 ஆம் நாள் நடந்த அர்த்தாலும், அதற்கு பின்னாலே அடுக்கடுக்காக எடுத்துக் கொண்டிருக்கிற நடவடிக்கைகளும் குறிப்பிடப்பட வேண் டியவை. நேற்றையதினம் குட்டிமணியின் குடும்பத்திற்கு ஆயிரம் ரூபாய் உதவித் தொகை என்று அறிவிக்கப்பட்டி ருக்கிறது. எந்த குட்டிமணியை சிங்களவர்களிடம் ஒப்படைத் தார்களோ, எந்த குட்டிமணியை, இலங்கைக்கு மீண்டும் போக வேண்டுமென்று காவல் துறையிடம் ஒப்படைத்தார் களோ, அந்த குட்டிமணியின் மறைவிற்கு பிறகு அந்த

குடும்பத்திற்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் அரசு ஆயிரம் ரூபாய் மாத உதவித் தொகை மட்டுமல்ல, குடியிருப்பதற்கு வீடும் தருகிறேன் என்று அறிவித்திருக்கிறது. விடுதலைப் புலிகளைப் பற்றி சொல்கிறபோது, ஆணித்தரமாக, என்ன முடிவு என்பதைச் சொல்லக்கூடிய அந்த பண்பும், துணிவும் புரட்சித் தலைவர் அவர்களைத் தவிர வேறு எந்த முதலமைச்சருக்கும் தமிழ்நாட்டிலே இருந்ததில்லை. இன்னொன்றையும் தெரிவிக்க விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில் பின்னாலே உறுப்பினர்கள் பேசவிருக்கிறார்கள். பல கருத்துக்களைச் சொல்லக்கூடும். மறுத்துச் சொல்வதற்கு தயாராக இருக்கிறோம். 1972 ஆம் ஆண்டிலே மரியாதைக்குரிய கலைஞர் கருணாநிதி அவர்கள் இந்த மன்றத்திலே பேசுகின்றபோது ஒரு கருத்தைச் சொன்னார்கள். அந்த கருத்தை இப்போது சொல்வது கூட அவர்களுக்கு பொருத்தமாக இருக்கும். அதை அவர்கள் பேசுகிறபோது நினைவிலே வைத்துக்கொண்டால் நன்றாக இருக்கும் என்பதற்காக சொல்கிறேன். அதற்கு முன்னாலே இன்னொன்றைச் சொல்கிறேன். இந்தமன்றத்திலே நம்பிக்கையில்லா தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த, அன்பிற்குரிய உமாநாத் அவர்கள் ஒன்றை தெளிவாக்க வேண்டும்.

(பிற்பகல் 1—00)

இந்த அரசு செயல்படவில்லை. இந்த அரசு மக்கள விரோத சக்தியாக இன்றைக்கு இருக்கிறது என்று அவர்கள் கருதுவார்களேயானால் நான் அவர்களுக்கு ஒன்றைச் சொல்கிறேன். ஏதோ இப்பொழுது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கின்ற நீங்கள் இன்னும் கொஞ்சம் ஜனநாயக உணர்வோடு செயல்படுவதாகத் தெரிவதற்காக நான் அந்த யோசனையை உங்களுக்குச் சொல்கிறேன். 1980 ஆம் ஆண்டு தேர்தலில் தோழமைக்கட்சியாக இருந்து எத்தனையிடங்களில் வெற்றி பெற்றிருக்கிறீர்களோ அதில் ஏதேனும் ஒரு இடத்தை இராஜினாமா செய்து விட வேண்டும். அப்பொழுது தோழமையோடு இருந்தோம். இப்பொழுது பிரிந்து விட்டோம், தோழமையோடு இருந்த காலத்தில் பொறுப்புக்கு வந்தோம், எனவே இப்பொழுது அந்த இடங்களில் ஒரு இடத்தை இராஜினாமாக செய்துவிட்டோம் என்று மக்களிடத்தில் சொல்லி, இதையே அளவுகோலாக வைத்து இந்தச் சர்க்காரோடு நீங்கள் மோதிப்பார்க்க வேண்டும். பத்துப் பேர் அல்லது பதினான்கு பேர் என்று எத்தனைக் கட்சிகளோடு வேண்டுமானாலும் சேர்ந்து வந்து மோதிப் பார்க்கட்டும், அப்பொழுது பார்ப்போம். இப்படி ஏதேனும் ஒரு இடத்தில் இராஜினாமா செய்துவிட்டு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தேர்தலில் நிற்பதற்குத் தயாரா? அவ்வாறு



மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி இப்படிப்பட்ட புதியதொரு வரலாற்றைப் படைத்திருக்கிறது என்று எடுத்துக்காட்டினால் நாங்கள் அதை ஏற்றுக்கொள்வோம். சபாஷ் என்று பாராட்டியிருப்போம். ஆனால் அப்பொழுது பெற்ற இடங்களில் நீங்கள நம்பிக்கையை வைத்துக்கொண்டு, இந்த அரசாங்கத்தின்மீது நம்பிக்கையில்லை என்று சொன்னால் நாங்கள் எப்படி அதை நம்புவது ?

1972 ஆம் ஆண்டு மரியாதைக்குரிய கலைஞர் அவர்கள் குறிப்பிட்டதைப் படித்துக் காட்ட விரும்புகிறேன்.

''நாங்கள் இப்போது இராஜினாமாச் செய்ய வேண்டியதில்லை. எங்களைக் கொஞ்சம் பணியாற்ற விடுங்கள். ஐந்தாண்டுக் காலம் முடிந்ததும் தேர்தல் வரும். அப்போது நாம் எல்லாம் போட்டியில் கலந்து கொள்ளலாம். மக்கள் யாரை நம்புகிறார்களோ அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளலாம். அது வரையிலும் கொஞ்சம் பொறுத்துக்கொள்ளுங்கள். பதவியே பெரிதென்று நாங்கள் இங்கே ஒட்டிக்கொண்டிருக்க வேண்டுமென்று விரும்பவில்லை.'' என்று அன்றைக்குச் சொன்னார்கள். அன்றைக்கு அவர்கள் சொன்ன அந்த வாசகத்தை ஆணித்தரமாக, ஆளுங் கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர் என்ற வகையில் இன்றைக்கு நான் சொல்ல விரும்புகிறேன். ஐந்தாண்டுக் காலம் ஆள வேண்டிய இந்த ஆட்சிக்கு அகால மரணத்தை அளிக்க வேண்டுமென்பதற்காக, 1980 ஆம் ஆண்டு இந்த ஆட்சி பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகு, எத்தனையோ முறை டெல்லிக்குப் போனார்கள். எத்தனையோ புகார்ப் பட்டியல்களை அனுப்பிப் பார்த்தார்கள்; எத்தனையோ முறை விசாரணைக் கமிஷன்களைப் போட வேண்டுமென்று கேட்டார்கள் ; எத்தனையோ முறை உணவுப் பிரச்னையிலேயும், வேறு எந்தப் பிரச்னையிலேயும் டெல்லியில் பாராளுமன்றத்தில் கேட்கும் பொழுதெல்லாம் எப்படியெப்படியெல்லாம் கேட்டார்கள் என்பதையெல்லாம் நான் எண்ணிப் பார்க்கிறேன். அவர்களுக்கெல்லாம் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

ஐந்தாண்டுக் காலத்திற்கு ஆள வந்திருக்கிறோம், ஏறக்குறைய 41 மாதங்கள் ஆகிவிட்டன ; இன்னும் 19 மாதங்கள் தான் பாக்கி இருக்கின்றன. அதற்குள்ளே அவசரப்பட வேண்டாம் ; பொறுமையாக இருந்து, இந்த 41 மாதங்களுக்குள்ளாக இந்த மாநில அரசு தமிழ்நாட்டில் ஒரு சாதனையைப் படைத்திருக்கிறதா, ஒரு வரலாற்றைப் படைத்திருக்கிறதா, அதற்கான ஆதாரம் இருக்கிறதா என்பதைப் பற்றியெல்லாம் நீங்கள் பேசுகின்றபொழுது சுட்டிக் காட்ட வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

(திரு. ஜே. சி. டி. பிரபாகரன்) [1983 நவம்பர் 8

நம்மைப் பொறுத்த வரைக்கும் கிருஷ்ணா நதி நீரைச் சென்னைக்குக் கொண்டு வருவது போன்ற நல்ல திட்டங்கள் தான் மக்கள் மனத்தில் நிலைத்து நிற்க வேண்டும். வீராணம் திட்டத்தைப் பற்றி மக்களுக்கு இருக்கின்ற எண்ணம் போயாக வேண்டும் ; இங்கேயுள்ள கூவம் நதி பற்றிய எண்ணம் போய்த் தீர வேண்டும். நம்முடைய எண்ணமெல்லாம் தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் எடுத்துக் கொண்டாலும், சென்னை நகரத்தைப் பொறுத்த வரையில் எடுத்துக் கொண்டாலும் ஒட்டு மொத்தமாக ஐந்தாண்டுக் காலத்திற்கு ஆள வேண்டியவர் இந்தப் புரட்சித் தலைவர் அவர்களே ஆவார். ஒவ்வொரு துறையிலும் இந்த அரசு சாதனைகளைப் படைத்திருக்கிறது ; சவால்களை ஏற்றுச் சமாளித்திருக்கிறது ; காடு மேடுகளைத் தாண்டி வந்திருக்கிறது ; போராட்டங்களைச் சந்தித்திருக்கிறது. இவையெல்லாவற்றையும் சந்தித்துத்தான் புடம்போட்ட தங்கமாகப் புரட்சித் தலைவரவர்கள் வந்திருக்கிறார்கள். இந்தச் சக்தியோடு யார் இணைந்திருந்தாலும், யார் குரல் கொடுத்தாலும் மத்திய அரசைத் தட்டிக் கேட்டு, உரிமைகளைப் பெறுவதற்கு வாதாட வேண்டிய இடத்தில் வாதாடிப் பெறுகின்ற நல்ல அரசுக்கு எடுத்துக் காட்டாகப் புரட்சித் தலைவர் அவர்களின் இந்த அரசு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எழுபது இலட்சம் குழந்தைகள் இன்றைக்குப் பயன் பெறுகிறார்கள் என்றால், பெற்றோர்கள் 1 கோடியே 40 இலட்சம் பேர்கள் இருப்பார்கள். ஒரு வேளை ஒருவருக்கு இரண்டு குழந்தைகள், மூன்று குழந்தைகள் என்று வைத்துக் கொண்டாலும் 40 இலட்சம் பெற்றோர்களை விட்டு விடுவோம் ; நிச்சயமாக ஒரு கோடி பெற்றோர்கள் தமிழ்நாட்டிலே இன்றைக்குப் புரட்சித் தலைவரவர்களின் புகழைப் பாடிக் கொண்டிருக்கிறார்கள். 1980 ஆம் ஆண்டில் 62 இலட்சம் வாக்குகள் கிடைத்தன என்றால் இன்றைக்கு ஒரு கோடி பெற்றோர்கள் புரட்சித் தலைவர் பக்கம் இருக்கிறார்கள். அவர்கள் புரட்சித் தலைவருக்கு வாக்களிக்க இருக்கிறார்கள்.

எனவே, காலம் உங்களுக்குப் பதில் சொல்லும் ; நீதி நிலைக்கும் ; புரட்சித் தலைவரின் போர்ப் படையின் புனிதப் பயணம் இந்தியத் துணைக் கண்டத்திற்கு எடுத்துக்காட்டாக அமையும் ; அண்ணாவின் இலட்சியம் ஈடேறும் ; அண்ணாவின் கொள்கைகள், கோட்பாடுகள் ஆகியவற்றை இந்தத் தமிழ்ச் சமுதாயத்திற்கு எடுத்துச் சொல்லி, திட்டங்களைப் போடுவதற்குப் புரட்சித் தலைவரை விட்டால் வேறு தலைவர் இல்லை என்பதை ஆணித்தரமாகச் சொல்லி, இப்பொழுது கொண்டு வரப்பட்டிருக்கும் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒரு வெத்து வேட்டு, இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒரு புஸ்வானம் என்று சொல்லி முடிக்கிறேன், நன்றி, வணக்கம்.



1983 நவம்பர் 8]

திரு. ஏ. சாகுல் ஹமீது : மாண்புமிகு தற்காலிகத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களின் தலைமையின் கீழ் உள்ள அமைச்சரவையின் மீது கம்யூனிஸ்ட் கட்சித் தோழர் மாண்புமிகு திரு. உமாநாத் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற நம்பிக்கையில்லாத் தீர்மானத்தினை ஆதரித்து இந்திய யூனியன் முஸ்லீம் லீக் சார்பாக என்னுடைய கருத்தினை முன் வைக்கிறேன்.

நாட்டிலே உள்ள எத்தனையோ பிரச்சினைகளைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். வறட்சி பற்றியும், தன்னிறைவுத் திட்டம் பற்றியும் வானளாவச் சொன்னார்கள் ஆளும் கட்சியினைச் சேர்ந்த நண்பர்கள். ஆனால் நாட்டிலே என்ன நடக்கின்றது ? தன்னிறைவுத் திட்டம் போட்டார்கள். அந்தத் தன்னிறைவுத் திட்டத்தால் நாட்டு மக்கள் பயனடைந்தார்களா என்றால் இல்லை. தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் மோசடிகள் செய்யப்பட்டன என்பது தான் மக்கள் கண் கூடாகப் பார்த்த உண்மையாகும். அதே போன்று வறட்சி நிவாரணத் திட்டம் என்று பல்வேறு கிராமங்களில் செயல் படுத்தப்பட்டதா என்றால் நிச்சயமாக அது செம்மையாகச் செயல்படுத்தப்படவில்லை. வறட்சி நிவாரணத் திட்டம் யாருடைய வறட்சியை நீக்கியது என்றால் ஆளும் கட்சிக்காரர்களுடைய வறட்சியைத் தான் நீக்கியது. தன்னிறைவுத் திட்டம் யாருக்கு உதவியது என்றால் அதுவும் அவர்களை வளர்த்துக் கொள்வதற்குத்தான் உதவியது. எனவே வறட்சி நிவாரணத் திட்டம், தன்னிறைவுத் திட்டம் போன்றவற்றால் இந்த நாட்டு மக்களுக்கு பயன் ஏற்படவில்லை என்பது கண் கூடு.

அது மட்டுமல்ல. இன்றைக்கு நடை பெறுவது ஊழல் ஆட்சி என்று சொல்கிறார்கள். லஞ்ச லாவண்யத்துடன் கூடிய ஆட்சி என்று சொல்கிறார்கள். இந்த ஆட்சியிலே எங்கே பார்த்தாலும். இது தாண்டவம் ஆடுகின்றது. இதனை நீங்கள் மறுக்கலாம் நாங்கள் புண்ணியவான்கள், நாங்கள் லஞ்சம் வாங்கவில்லை என்று நீங்கள் சொல்லலாம். ஆனால் நாட்டு மக்கள் அதை நம்பத் தயாராக இல்லை. இந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியிலே சலுகைகளைப் பெறுவதற்கு கொடுத்திருக்கிறார்களே, நாட்டு மக்கள், வட்டார மக்கள், அவர்களுக்குத் தெரியாதா ? அவர்களுடைய நெஞ்சத்திற்குத் தெரியாதா ? எனவே இந்த நாட்டிலே நடை பெறுவது ஊழலற்ற ஆட்சிஎன்று உங்களால் சொல்ல முடியுமா ? நாட்டு மக்கள் இலட்சம் இலட்சமாகக் கொடுத்த பணம் பற்றி நாட்டிலே பேசப்படுகின்றது. கிராமங்களிலே பேசப்படுகின்றது. ஆனால் நீங்கள் அவற்றை மறுக்கலாம், நாங்கள் புண்ணியவான்கள் சுத்தசுயம்புகள் என்று ஆனால் இந்த நாட்டிலே உள்ள மக்கள் சலுகைகளைப் பெறுவதற்காகக் கொடுத்த லஞ்சங்கள் பல கோடியினை எட்டி இருக்கின்றது,

[திரு. ஏ. சாகுல் ஹமீது] [1983 நவம்பர் 8

குடும்பத்தில் ஒருவருக்கு வேலை என்ற திட்டத்தைக்கொண்டு
வந்தீர்கள். தேர்வாணைக் குழுவின் மூலம் 1,500 பேர்களுக்கு
கிராம முன்சீப் வேலை கிடைக்கும் என்று லட்சக்கணக்கான
மனுக்கள் வந்தன. அவற்றோடு சிபாரிசுகளுக்காகப் பெறப்பட்ட
இலச்சக்கணக்கான பணம் என்ன ஆயிற்று என்பது தெரியவில்லை.
காவல் துறையிலே 10,000 பேரை நியமிக்கிறோம் என்று சொன்
னீர்கள். அந்த பத்தாயிரம் பேருக்கு இலட்சக்கணக்கான மனுக்கள்
வந்தன. அந்த லட்சக்கணக்கான மனுக்களோடு லட்சக்
கணக்கான பணமும் தரப்பட்டன. ஆனால் வேலை வாய்ப்பு
கிடைக்கவில்லை. இப்படி எதற்கெடுத்தாலும் ஊழலும்,
லஞ்சமும் தாண்டவம் ஆடுகின்றது இந்த ஆட்சியிலே. மக்கள்
அன்றாடம் வாங்குகின்ற ரேஷன் பொருட்களுக்குக் கூட விலை
யேற்றம் வந்து அவையும் ஒழுங்காகக் கூட கொடுக்கப்படுவ
தில்லை என்ற நிலைமையில் தேர்தல் காலத்திலே நீங்கள்
கொடுத்த வாக்குறுதிகள் நாணயமற்ற வாக்குறுதிகளாகப் போய்
விட்டன என்பதை நாடு இன்றைக்கு அனுபவித்துக் கொண்
டிருக்கின்றது.

கட்டிடத் தொழிலாளர்கள் ஊர்வலம் நடத்தி தங்கள்
குறைகளைச் சொன்னார்கள். ஆனால் அவர்களால் புனிதமான
தீபாவளி நாளைக் கூட கொண்டாட முடியாத வகையில் அவர்
களை காராகிரகத்திற்குள்ளே அடைத்து விட்டீர்கள். அந்தத்
தொழிலாளர்களின் வாழ்க்கையை எண்ணிப்பார்க்க வேண்டாமா?
அதைப் போன்று பீடித் தொழிலாளர்களின் வாழ்க்கையை
எண்ணிப் பார்க்க வேண்டாமா ? நெசவுத் தொழிலாளர்களின்
வாழ்க்கையை எண்ணிப் பார்க்க வேண்டாமா ? தோல்
பதனிடும் தொழிலாளர்களின் வாழ்க்கையை எண்ணிப் பார்க்க
வேண்டாமா ? இந்த அரசு சாதித்தது சாதித்தது என்று
சொல்கிறீர்களே, எதைச் சாதித்தது ? உங்களுடைய சாதனை
பட்டியலை சொல்ல முடியுமா ? அவை எல்லாம் இன்றைக்கு
மக்கள் மத்தியிலே வேதனைப் பட்டியலாக நடமாடுகின்றன.
அவை நிச்சயமாக உங்களுக்குச் சோதனைப் பட்டியலாக மாறும்,
வருங்காலம் உங்களுக்கு அதை உணர்த்தும் என்பதை தெரிவித்துக்
கொள்கிறேன். அது மட்டுமன்று. அரிசன சமுதாய மக்களுக்கு
வீட்டு மனைப் பட்டா கொடுத்தோம், அரிசன சமுதாய மக்க
ளுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுத்தோம் என்று சொல்கிறீர்கள்.
எத்தனை பேர்களுக்கு அவ்வாறு கட்டிக் கொடுத்திருக்கிறீர்கள் ?
பத்திரிகைகளிலே முழுப் பக்கத்திற்கு விளம்பரங்களாகப் போட்
டிருக்கலாம். ஆனால் கிராமங்களுக்குச் சென்று பார்த்தால் அந்த
மக்களுக்கு வீடு கட்டித் கொடுத்தார்களா, காலி மனைப் பட்
டாக்கள் கொடுத்தார்களா என்றால் நிச்சயமாக இல்லை.
வீடு கட்டிக் கொடுப்போம் என்று சொன்னார்கள். நம்முடைய
அவையிலே உள்ள இந்திரா காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திரு.
இளையபெருமாள் அவர்கள் உண்ணாவிரதம் இருந்தார்கள்.
அரிசன மக்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கப்படவில்லை. அவர்
களுக்காக ஒதுக்கிய பணத்தைச் செலவழிக்கவில்லை இந்த அரசு
என்று சொல்லி அவர்கள் உண்ணாவிரதம் இருந்த காட்சியினை
நாம் கண்டோம். இப்படி எத்தனையோ பிரச்சினைகள்.



1983 நவம்பர் 8] [திரு. ஏ. சாகுல் ஹமீது]

காவல் துறையினை எடுத்துக் கொள்ளுங்கள். அனைத்திந்திய
அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியிலே காவல்
துறை எந்த அளவுக்கு இருக்கின்றது என்றால் கற்பழிப்பு நடந்
தால் காவல் துறையில், அடித்து கொலை செய்வது காவல் துறை
யில், என்ற நிலையில் இன்றைக்கு காவல் துறை களங்கப்பட்ட
துறையாக மாறி இருக்கின்றது. மக்களைக் காவல் செய்வதற்குப்
பதிலாக காவல் துறையிலே கொலை பாதகங்களும், கற்பழிப்பு
களும் தான் நடை பெறுகின்றன என்பதை நாட்டு நிகழ்ச்சிகள்
நிரூபிக்கின்றன.

(பிற்பகல் 1–10)

இன்றைக்கு தமிழக அரசு ஒரு ஆணை பிறப்பித்து இருக்
கிறது. 90 சதவீத நாள் பள்ளிக்கூடத்திற்கு மாணவர்கள்
வந்திருந்து, வகுப்புகளை அடெண்ட் செய்து இருந்தால் தான்
அவர்களுக்குக் கொடுக்கப்படுகிற உபகாரச் சம்பளம் வழங்கப்
படும் என்று ஆணைப் பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது. அந்த
ஆணையின் காரணமாக தாழ்த்தப்பட்ட மக்கள், அரிசன
மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள் மிகவும் பாதிக்கப்படு
வார்கள். தயவு செய்து அந்த தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்
பட்ட மக்களுக்கு வழங்கப்படும் சலுகையில் கை வைக்கா
தீர்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். 90 சதவீத நாள்
வரவேண்டும் என்று சொல்வது மிகவும் கொடுமையானது.
ஆகவே, அதை திரும்பப்பெறவேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

இன்றைக்கு நாட்டிலே எத்தனையோ பிரச்னைகளை
நாம் சந்தித்துக் கொண்டு இருக்கிறோம். இன்றைக்கு நாட்
டிலே உள்ள நிலைமைகள் பற்றி நம்முடைய நண்பர் உமா
நாத் அவர்கள் தெள்ளத்தெளிவாக புட்டுப்புட்டு வைத்
தார்கள். இங்கே நாட்டினுடைய நிலைமைகளைப் பற்றி
நாம் பேசிக்கொண்டு இருக்கிற இதே நேரத்தில், நான்
சார்ந்து இருக்கும் சமுதாயத்தின் பிரச்னையையும் இங்கே
நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அந்தச் சமுதாயத்தினர்
பிரச்னையைப் பற்றிச் சொல்வதற்கு என்னைத் தவிர
இந்த அவையில் வேறு உறுப்பினர் இல்லை என்ற காரணத்
தால், அந்த மைனாரிட்டி மக்களின் நிலையைப் பற்றி நான்
இங்கே எடுத்துக்கூற விரும்புகிறேன். ஆட்சியில் இருப்பவர்கள்
இதை எண்ணிப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வக்ப் வாரியம் என்று ஒரு வாரியம் இருக்கிறது. அது
இன்றைக்கு வக்கற்ற வாரியமாக இருக்கிறது. அதன் தலைவர்
ராசினாமா செய்து 6–7 மாதங்கள் ஆகியும் இன்றும்
அதற்குத் தலைவர் போடவில்லை. அந்த வக்ப் வாரியம்
இன்றைக்கு சீரழிந்த நிலையில் இருக்கிறது. அது மட்டுமல்ல.
பள்ளிவாசல் கட்டக்கூட முடியாத நிலை. இஸ்லாமியர்கள் தங்
களுடைய மதத்தை, மார்க்கத்தை வளர்ப்பதற்காக, இறைவனை

[திரு ஏ. சாகுல் ஹமீது] [1983 நவம்பர் 8

வணங்குவதற்காக தங்களுடைய சொந்த பணத்தைப் போட்டு
பட்டா வாங்கிய நிலத்தில் கூட பள்ளிவாசல் கட்ட அனுமதிக்கப்
படவில்லை என்று சொன்னால், அ.தி.மு.க. ஆட்சியைப் பற்றி
அந்த இஸ்லாமிய சமுதாய மக்கள் என்ன நினைப்பார்கள்
என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். உதாரணத்
திற்குச் சொல்கிறேன். எசன்சியாலிடி சர்ட்டிபிகேட் என்று
பள்ளிக்கூடத்திற்குச் சேருகின்றபோது வாங்குவதற்காக செல்
கிறபோது, ஆர்.ஐ.யிடத்திலும், தாசில்தாரிடத்திலும் சான்
றிதழ்கள் பெறுவதற்கு காலதாமதங்கள், சங்கடங்கள் ஏற்
படுகின்றன. அவைகள் நிவர்த்திக்கப்படவில்லை. அதைப்
பெறுவதற்கு அந்தச் சமுதாய மக்கள் பெரும் தொல்லைக்
குள்ளாக்கப்பட்டு இருக்கிறார்கள்.

தமிழகம் அமைதிப் பூங்காவாக இருக்கிறது என்று சொன்
னார்கள். ஆம், தமிழ் நாடு அமைதிப் பூங்காவாகத்தான்
இருக்கிறது. மண்டைக்காடு சம்பவத்தைச் சிந்தித்துப் பார்க்க
வேண்டாமா ? மண்டைக்காட்டுச் சம்பவம் பற்றி இங்கே
ஒத்தி வைப்புத் தீர்மானம் கொண்டு வந்தோம். அந்தச் சம்ப
வத்தின்போது முஸ்லீம் சமுதாயத்தினர், அதிலே சம்பந்தம்
இல்லாத சமுதாயத்தினர், அடித்துநொறுக்கப்பட்டார்கள்.
அவர்களுடைய சொத்துக்கள் தீயிடப்பட்டன. அவர்களுடைய
உடைமைகள், பொருள்கள் எல்லாம் அழிக்கப்பட்டன. அதுமட்டு
மல்ல, புளியங்குடியில் என்ன நடந்தது? புளியங்குடியில் அரிசன
சமுதாய மக்கள், இஸ்லாமிய சமுதாய மக்கள் பாதிக்கப்
பட்டார்கள். இந்த நாட்டின் 35 ஆண்டுகால சரித்திரத்தை
எடுத்துப் பார்த்தால், தமிழகத்தைப் பொறுத்தவரையில்,
அடிபடுகிற சமுதாயமாக, மிதிபடுகிற சமுதாயமாக, அடித்து,
ஒடுக்கப்படுகிற சமுதாயமாக, ஒன்று மைனாரிட்டி இஸ்லாமிய
சமுகத்தினர் இருக்கின்றனர் அல்லது அரிசன மக்கள் இருக்
கின்றனர். இந்த இரண்டு சமுதாயம் தான் இந்த நாட்டிலே
பாதிக்கப்பட்ட சமுதாயமாக, மிதிக்கப்படுகிற சமுதாயமாக,
அடித்து நொறுக்கப்படும் சமுதாயமாக இருக்கிறது.

புளியங்குடியில் நடந்த கலவரம் என்ன ? அதிலே இஸ்லாமி
யர் சொத்துக்கள் சூறையாடப்பட்டன. 9 அரிசனங்களை
வீடுகளில் புகுந்து பட்டப்பகலில் வெட்டிக் கொலை செய்யப்
பட்டார்கள். அந்த அரிசன காலனிக்குள் சென்று போலீசார்
துப்பாக்கிச்சூடு நடத்தி இரண்டு பேரை சுட்டுக் கொன்றார்கள்.
இது என்ன நியாயம் ? காவல் துறை எந்த அளவிற்கு அத்துமீறி
நடந்து இருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கவேண்டாமா ?
புளியங்குடியில் முஸ்லீம் சமுதாயத்தினர் சொத்துக்கள் சூறை
யாடப்பட்டதுபோல், வாசுதேவநல்லூர் என்ற ஊரிலும்,
அந்தக் கலவரத்திற்குச் சம்பந்தம் இல்லாத ஒரு கடைக்காரர்
அப்பாவி முகமது அலி என்பவர் கடையை சூறையாடி, வரை
அங்கேயே சுட்டுக்கொண்டு இருக்கிறார்கள். அந்த வழக்கு
என்ன ஆயிற்று ? இதையெல்லாம் எண்ணிப் பார்க்கிற
போது வேதனைப் படுகிறோம். இந்த ஆட்சியிலே மைனா



1983 நவம்பர் 8] (திரு. ஏ. சாகுல்ஹமீது)

ரிட்டி மக்களுக்கும், அரிசன சமுதாய மக்களுக்கும் பாது
காப்பு இல்லையே ? நீங்கள் கொடுத்த வாக்குறுதிகள் என்ன
ஆயிற்று ?

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

நீங்கள் சொன்னீர்கள்—மாண்புமிகு முன்னவர் அவர்கள்
கூட இங்கே காயல்பட்டினம் பற்றி ஒரு ஒத்திவைப்புத்
தீர்மானம் வந்தபோது சொன்னார்கள். இஸ்லாமிய சமுதாய
மக்களைத்தான் இந்த ஆட்சி ஆதரிக்கிறது என்று. இது தான்
உங்கள் கைமாறா ? உங்கள் உதவியா ? இப்படிச் செய்வது
தான் ஆதரவா ? என்பதை நான் இந்த நேரத்தில் நினைவு
படுத்த விரும்புகிறேன்.

புளியங்குடியில் பல கேஸ்கள் போடப்பட்டன. அதில்
7—8 கோர்ட்டில் தீர்ப்பாகி இருக்கிறது. என்ன தீர்ப்பு
என்றால், போலீஸ் போட்ட வழக்குகள் எல்லாம் பொய்
வழக்கு என்பதாகும். இந்த வகையில் கோர்ட்டில்
ஸ்டிரிக்சர்ஸ் பாஸ் செய்து இருக்கிறார்கள். முத்தாநத்தத்தில்
என்ன நடந்தது ? ஞானரதம் என்ற பெயரால் ஆர்.எஸ்.எஸ்.
இயக்கம், இந்து முன்னணி, விஸ்வபரிஷத் இயக்கம் போன்ற
இயக்கங்கள் எல்லாம் கலவரங்களை நடத்திக்கொண்டு இருக்
கிறார்கள். எங்களுக்குத் தெரியாதா ? நாங்கள் நடத்த
முடியாதா ? வேண்டாம் என்று இருக்கிறோம். இந்த
ஆர்.எஸ்.எஸ். இயக்கத்திற்கு நீங்கள் ஆவரவு தருகிற கார
ணத்தால், ஞான ரதம் என்ற பெயரால் புளியங்குடியிலும்,
முத்தாநத்தத்திலும் கலவரங்கள் நடந்தன. 4—10—82 அன்று
தஞ்சாவூர் மாவட்டம் முத்துப்பேட்டையில் ஒரு சம்பவம்.
இந்த முன்னணியைச் சேர்ந்த அம்பிகாபதி என்பவர் பேசு
கிறார். இஸ்லாமிய சமுதாயத்தைச் தரக்குறைவாக, எவ்வளவு
கேவலமாக பேச முடியுமோ, அவ்வளவு கேவலமாகப் பேசு
கிறார். ஆனால் போலீஸ்காரர்கள் அதைப் பார்த்து
ரசித்துக்கொண்டு இருக்கிறார்கள்.

அது மட்டுமல்ல. அந்த கூட்டம் முடிந்து முத்துப்
பேட்டைக்குப் போய் அங்கேயிருக்கிற தர்க்கா காம்பவுண்டு
சுவரை இடித்திருக்கிறார்கள். அங்கே இருந்த காவலாளி ஏன்
இடிக்கிறீர்கள் என்று கேட்டபோது, அந்தக் காவலாளியை
அடித்திருக்கிறார்கள். அந்தக் காவலாளி தொண்டையில்
இரத்தம் ஒழுக, காவல் நிலையத்திற்குச் சென்று முறையிட்டிருக்
கிறார். காவல் நிலையத்தில் இருந்த இன்ஸ்பெக்டர் அந்த
அம்பிகாபதியை தேடிப்போய் பார்த்திருக்கிறார். (மணியடிக்கப்
பெற்றது) இந்த மன்றத்தில் சிறுபான்மை சமுதாயமான
எங்கள் சமுதாயத்தைப் பற்றி சொல்வதற்கு நான்
ஒருவன் தான் இருக்கிறேன். வேறு உறுப்பினர்கள்
இல்லை. நான் இந்த சமுதாயத்தின் பிரச்சனையையும்
சொல்லவேண்டும், நாட்டுப் பிரச்சனையையும் சொல்ல
வேண்டும். ஆகவே, இன்னும் கொஞ்சம் நேரம் கூடுதலாக
ஒதுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அந்த முத்துப்பேட்டை சம்பவத்தைப்பற்றி காவல் நிலையத்தில் 'கம்பிளைன்ட்' கொடுக்கிறார்கள். குற்றவாளி மீது நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக அந்த இன்ஸ்பெக்டர் கம்பிளைன்ட் கொடுத்தவர்களை அரஸ்ட் செய்திருக்கிறார். அந்த ஜமாத் நிர்வாகத்தைச் சேர்ந்த 16 பேர்களை அரஸ்ட் செய்து, காவல் நிலையத்தில் வைக்கிறார்கள். மறுநாள் இரவு நேரத்தில் முத்துப்பேட்டை முஸ்லீம்கள் வீடுகளிலே போய், பெண்களிடம் போலீசார் ஆண்கள் எங்கே, ஆண்கள் எங்கே என்று கதவைத்தட்டி கேட்கிறார்கள். போலீசார் வந்து அப்படிக் கேட்கக்கூடாது, கதவைத் தட்டக்கூடாது என்பதற்காக 10,000 ரூபாய், 12,000 ரூபாய் கொடுத்த பிறகு தட்டுகின்ற நிலை இல்லாமல் தேடுகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

இன்றைக்கு முத்துப்பேட்டை முஸ்லீம் சமுதாய மக்கள் கொடுமைப்படுத்தப்படுகிறார்கள். இந்து முன்னணியினர் கூட்டம் போட்டு, அவர்கள் மீது கம்பிளைன்ட் கொடுத்தால் போலீஸ் இலாகா கம்பிளைன்ட் கொடுத்தவர்கள் மீதே நடவடிக்கை எடுக்கிறது. அது மட்டுமல்ல. இன்றைக்கு கிழக்கு இராமநாதபுரத்தில் என்ன நடக்கிறது? இந்த நாட்டிலே இருக்கிற தாழ்த்தப்பட்ட மக்கள் மனம் மாறி, இஸ்லாமிய சமுதாயத்தில் இணைகிறார்கள். இஸ்லாமிய சமுதாயத்தில் இணைய வேண்டுமென்று நாங்கள் யாரும் அவர்களை அழைக்கவில்லை. இந்திய அரசியல் சட்டத்தின் அடிப்படையில் வழங்கியிருக்கிற உரிமையின்படி அவர்கள் இஸ்லாமிய சமுதாயத்தில் இணைகிறார்கள். ஆனால் இன்றைக்கு என்ன நடக்கிறது? கிழக்கு இராமநாதபுரத்தில் இஸ்லாமிய சமுதாயத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் இணைந்தார்கள் என்பதற்காக எஸ்.பி. அங்கே வந்திருந்துகொண்டு, முஸ்லீம் மக்களை அரஸ்ட் செய்துகொண்டிருக்கிறார். நேற்றும் இன்றும் ஏறத்தாழ 20-க்கும் மேற்பட்ட மக்கள் கைதாகியிருக்கிறார்கள். அது மட்டுமல்ல. (மணியடிக்கப்பெற்றது).

இன்றைக்கு சிங்களத்திலே தமிழர் கடைகளுக்கு தீ வைக்கிறார்கள்; போலீசும் இராணுவமும் சேர்ந்து அங்கே இருக்கின்ற சிறுபான்மை தமிழர்களை கொடுமைப் படுத்துகிறார்கள் என்று சொல்கிறோம். ஆனால் இந்த நாட்டிலே மைனாரிட்டி மக்களாக இருக்கிற முஸ்லீம் மக்களும், தாழ்த்தப்பட்ட மக்களும் போலீசாரின் கொடுமைகளுக்கு ஆளாகப் படுகிறார்களே, அது உங்களுக்குத் தெரியவில்லையா? அதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கிறீர்கள்? காவல் துறையினர் இந்த சமுதாய மக்களை அடிக்கின்ற நிலைமை, அடித்து ஒடுக்குகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்த அண்ணா தி.மு.க. அரசு, மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள் தலைமையில் இருக்கிற இந்த அரசு தான் இதற்கெல்லாம் காரணம் என்று நான் குற்றஞ்சாட்டுகிறேன். அதை நிரூபிக்கின்ற



வகையிலேதான் உங்களுடைய நடவடிக்கை இருக்கிறது. நிச்சயமாக அழுத கண்ணீர் வீண் போகாது. நிச்சயமாக இந்த சமுதாய மக்களுக்கு நீதி கிடைத்தே தீரும்......(மணியடிக்கப்பெற்றது).

திரு. ஜி. மூர்த்தி: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு திரு. உமாநாத் அவர்கள் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக கொண்டு வந்திருக்கிற தமிழக அரசுமீது நம்பிக்கை இல்லை என்ற தீர்மானத்தின் மீது குடியரசுக் கட்சியின் சார்பாக ஒருசில கருத்துக்களைச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

அரசியல் நிலைமை மாற்றத்தைக் கருதி, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் சர்வாதிகார எண்ணம் கொண்ட காங்கிரஸ் கட்சியோடு தேர்தல் உடன்பாடு வைத்துக்கொள்கிறது என்ற காரணத்தின் அடிப்படையிலே அந்த சர்வாதிகார எண்ணத்திற்கு தமிழக அரசு துணை போகிறது. அண்ணா தி.மு.க. சார்பிலே புரட்சித் தலைவர் துணை போகிறார் என்ற குற்றச்சாட்டை இங்கே வலியுறுத்தி, அதன் காரணமாக இந்த அரசின் மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று முதல் கட்டமாக எடுத்துரைத்தார்கள்.

கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரையில் ஒரு தெளிவான கொள்கையை வைத்திருக்கிறார்கள் என்பதை என்னால் காணமுடிகிறது. எந்த நிலையிலும் காங்கிரஸ் கட்சியை எதிர்க்க வேண்டுமென்ற கொள்கையில் அவர்கள் மாறாத நிலையை வைத்திருக்கிறார்கள். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகமும், காங்கிரஸ் இயக்கமும் சென்ற தேர்தலிலே உடன்பாடு வைத்துக்கொண்டக் காரணத்தால் அண்ணா தி.மு.க.வோடு தேர்தல் உடன்பாட்டுக்கு வந்தார்கள் என்ற விவகாரம் எல்லோருக்கும் தெரியும். ஆக, சர்வாதிகாரம் கொண்ட காங்கிரஸ் கட்சியை எதிர்க்க வேண்டுமென்ற அந்த அரசியல் நோக்கத்தில் அவர்கள் பின்வாங்குவதாக இன்றைய தினம் வரையில் தெரியவில்லை.

(பிற்பகல் 1-20)

ஆனால் காங்கிரசை மையமாக வைத்து, காங்கிரசோடு துணை போகின்ற இயக்கங்களோடு கூட்டு சேரமாட்டோம் என்கின்ற எண்ணத்திற்கும் தாங்களே அவர்களை ஆட்படுத்திக் கொண்டு இருக்கிறார்கள். அதுதான் கடந்த தேர்தலிலே நிரூபணம் ஆனது. திராவிட முன்னேற்றக் கழகம் காங்கிரசோடு உறவு கொண்டிருக்கின்ற காரணத்தாலே தேர்தல் உடன்பாட்டை அதோடு வைத்துக் கொள்ளவில்லை. நான் இந்த நேரத்தில் கேட்கிறேன். நீங்கள் எப்படி காங்கிரசை தெளிவான கொள்கையோடு எதிர்க்கிறீர்களோ அந்த இயக்கத்திற்குத் துணை போகின்ற இயக்கங்களை சர்வாதிகாரத்திற்கு உடன் போகின்ற இயக்கமாக

எண்ணி அதை காங்கிரசோடு சேருகிற கட்சிகளையும் வெறுத்து விட்டு வருகிறீர்களோ அதையும் நான் இந்த நேரத்திலே ஞாபகப் படுத்த விரும்புகிறேன். கடந்த காலத்திலே திராவிட முன் முன்னேற்றக் கழகம் காங்கிரசோடு உடன்பாடு வைத்துக் கொண்டிருந்தது. சர்வாதிகார கட்சிக்குத் துணைபோகிறது என்பதை நீங்கள் ஒப்புக்கொள்வீர்களேயானால் மீண்டும் எந்த முகத்தோடு திராவிட முன்னேற்றக் கழகத்தோடு நீங்கள் உறவு வைத்துக் கொள்ள முடியும் என்பதை இந்த நேரத்தில் எண்ணிப் பார்க்க கம்யூனிஸ்ட்கள் நுணிவார்களா என்பதை இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் சர்வாதிகார கட்சியான காங்கிரசோடு உடன்பாடு வைத்ததால் அந்தக் கட்சியை நீங்கள் எதிர்த்தீர்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தோடு கூட்டுக்கு வந்தீர்கள். ஆனால் காங்கிரசை நிலையான சர்வாதிகாரியாக எதிர்க்கிற நீங்கள் அதற்குத் துணை போகிற கட்சிகளையும் அந்த கண்ணோட்டத்தோடு நீங்கள் பார்த்துக் கொண்டு இருக்கிறீர்கள். அதனாலேதான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தோடு நீங்கள் தேர்தல் உடன்பாட்டுக்கு வந்தீர்கள்.

ஆனால் அதே நிலை, திராவிட முன்னேற்றக் கழகம் காங்கிரசை விட்டு வந்தவுடன் அது எப்படி ஜனநாயக கட்சியாக மாறிவிட்டது என்று கம்யூனிஸ்ட்டுகள் அதற்குச் சான்று தருகிறார்கள் என்கின்ற விந்தை நிச்சயமாக எனக்குப் புரியவில்லை. அப்படி இதிலே அவர்கள் உறுதியாக இருப்பார்களானால் வருகிற தேர்தலிலே நிச்சயமாக தங்களுடைய கொள்கைக்கு ஏற்றவாறு மார்க்சிஸ்ட் தத்துவத்திற்கு ஏற்றவாறு, அதற்கு மதிப்பளிக்கின்ற வகையில் சர்வாதிகார கட்சிக்குத் துணை போன திராவிட முன்னேற்றக் கழகத்தோடும், அதன் தோழமைக் கட்சியோடும் கூட்டு சேரமாட்டோம் என்று சொந்தக் காலிலேயே நிற்கிற துணிவு கம்யூனிஸ்டுகளுக்கு நிச்சயமாக வருமா என்பதை இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் துணையோடுதான் தான் நீங்கள் வந்திருக்கிறீர்கள் என்பது ஒரு பக்கம் இருந்தாலும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய இந்த அரசின் மீது நீங்கள் சாட்டி இருக்கின்ற குற்றச்சாட்டு இந்த அரசியல் நோக்கம் என்று சொன்னால், நீங்கள் இந்த அரசியல் நோக்கத்தினுடைய கொள்கையினை கடைசிவரை பின்பற்றுவதிலே உறுதியாக இருக்க முடியுமா என்பதனை இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, திராவிட முன்னேற்றக் கழகம் அன்றைக்குக் காங்கிரசை ஆதரித்த காலத்திலே நீங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தை வர்ணித்தீர்கள் சர்வாதிகாரத்திற்குத் துணை போகிறது என்று. எப்போது பார்த்தாலும் காங்கிரசுக்கு ஓட்டுக்



காங்கிரசாக தி.மு.க. விளங்கி இருக்கிறது என்றெல்லாம் சொன்னீர்கள். அதை எதிர்த்துவிட்டு காங்கிரசை எதிர்த்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தோடு கூட்டு சேருகிறோம் என நீங்கள் வந்திருக்கிறீர்கள். ஆகவே காங்கிரசை எதிர்ப்பதுதான் உங்களுடைய முக்கியமான நோக்கம் என்று சொன்னால் அல்லது காங்கிரசை சந்தர்ப்பவாதத்திற்கு நாங்கள் எதிர்க்கிறோம் என்பதை நீங்கள் நிரூபித்துக் கொண்டிருக்கிறீர்கள். காரணம் காங்கிரஸ் என்கின்ற அந்தக் கோட்டையை நீங்கள் அகில இந்திய ரீதியிலே தகர்க்க வேண்டும் என்று எண்ணுகிறீர்கள். அந்தக் கொள்கையில் நீங்கள் தெளிவாக இருக்கிறீர்கள். ஆனால் தமிழகத்திலே அகில இந்திய கட்சிகளோடு உறவு வைத்து உங்களால் குடித்தனம் நடத்த முடியாது என்கிற காரணத்தினாலேதான் இங்கே மாநில கட்சிகள் வலிவு பெற்று இருக்கிற காரணத்தினாலே, ஒன்று நீங்கள் அந்தக் கூட்டணிக்குச் செல்ல வேண்டும், அல்லது இந்தக் கூட்டணிக்குச் செல்லவேண்டும்.

இன்றைக்குக் காங்கிரசோடு புரட்சித் தலைவர் செல்வார் என்ற அச்சத்தாலே நீங்கள் விலகி இருக்கிறீர்கள். உங்களை வரவேப்பதற்கு திராவிட முன்னேற்றக் கழகம் காத்திருக்கிறது. ஆகவே நம்மை ஏற்றுக் கொள்ள ஒரு அணி இருக்கிறது என்ற தைரியத்திலே இன்றைக்கு நீங்கள் புரட்சித் தலைவருடைய ஆட்சி மீது குற்றச்சாட்டை சுமத்திக் கொண்டிருக்கிறீர்கள்.

தன்னிறைவுத் திட்டம் பற்றியெல்லாம் சொன்னீர்கள். ஜாதி உணர்வை இந்த அரசு தூண்டுகிறது என்றெல்லாம் சொன்னீர்கள். ஜாதிக்கு ஒரு அமைச்சரை நியமித்திருகிறார்கள் என்றெல்லாம் சொன்னீர்கள். இங்கே சௌராஷ்டிரா சமுதாயத்தின் சார்பாக ஒருவரை நியமித்திருக்கிறீர்கள். ஜாதியின் பெயரால் நியமிக்கக் கூடாது என்கிறீர்களா ? நான் கேட்கிறேன். தாழ்த்தப்பட்ட ஒடுக்கப்பட்ட சமுதாயத்திலே இப்படி யாராவது வருவார்களா அவர்கள் பிரச்சினையைத் தீர்க்க அமைச்சர்கள் வருவார்களா என்று ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட சமுதாயத்திலே இருந்தும் ஒரு அமைச்சரை நியமித்திருக்கிறார்கள். அதை வேண்டாம் என்று சொல்லுகிறீர்களா ? அந்த சமுதாயத்தினுடைய முன்னேற்றத்தை அவர்களுடைய மந்திரி பதவியை வைத்துக் கொண்டு செய்ய வேண்டும் என்று எண்ணுகின்ற எண்ணத்திற்கு நீங்கள் மாசு கற்பிக்க நினைக்கிறீர்களா அல்லது நியமனம் செய்ததே தவறு என்று சொல்லுகிறீர்களா ? நீங்கள் எந்த விதத்திலே ஜாதிக்கு எதிர்ப்பானவர்கள் என்பதை யாவரு இந்த மன்றத்திலே விளக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். எங்கள் கட்சியைப் பொறுத்தவரை ஜாதி வெறி இல்லை என்று சொல்வார்களானால் அது வாதத்திற்குரிய பொருள், . அதற்குக்கூட கம்யூனிஸ்டுகள் பரிதாபத்திற்குரியவர்கள், ரிசர்வேசன் தொகுதியிலேதான் இங்கே இருக்ககூடிய கம்யூனிஸ்டுகள் நிற்கமுடிகிறதே தவிர,

அவர்களுக்குக் கூட அப்பாற்பட்ட கம்யூனிஸ்ட்கள் ஒரு கொள்கை
ரீதியாக முடிவை எடுப்பதற்கு இன்னும் கூட இந்த 20-ஆம்
நூற்றாண்டிலே துணிவு இல்லாத கம்யூனிஸ்டுகளாக இந்த
நாட்டிலே நடந்து கொண்டிருக்கிறார்கள். இது வெட்கப்பட
வேண்டிய விவகாரம். அதையும் சொல்லிவிட்டு ஜாதிக்காக,
ஜாதி உணர்வைத் தூண்டுகிற இயக்கம் என்று சொல்கிறார்கள்.
இதிலே நீங்கள் தெளிவாக இருப்பது உண்மையானால் உறுதி
யாக இருப்பது உண்மையானால் ஜாதி உணர்வு இல்லாத இயக்கம்
எது என்று அடையாளம் காட்டி. அதற்குப் பின்னாலே நீங்கள்
செல்லத் தயாராக இருக்கிறீர்களா? தி.மு. கழகம் அண்ணா
தி.மு.க. விலே இருந்து மாறுபட்டது என்பதை நீங்கள்
ஒப்புக்கொள்கிறீர்களா? அப்படி என்றால் இது சாதி மத
பேதத்திற்கு அப்பாற்பட்ட இயக்கம் என்று நீங்கள் கருது
கிறீர்களா? ஜாதியினுடைய அடிப்படையிலே அவர்கள்
பேசவில்லை என்பதை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா? ஆனா
லும் அண்ணா தி.மு. கழகம் இப்படி என்று சொல்லிவிட்டு,
நாளைக்கு நீங்கள் தி.மு. கழகத்தோடு அதே உணர்வைக்
கொண்ட இயக்கத்தோடுதான் நீங்கள் செல்ல இருக்கிறீர்கள்.
ஆகவே உங்களுடைய கொள்கையிலே தெளிவு. கொள்கையில்
இருக்கின்ற கட்டுப்பாடு, எந்த நேரத்திலே உறுதியாக இருந்
திருக்கிறது என்பதை நீங்கள் மனதார சிந்தித்துப் பார்க்க
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தன்னிறைவுத் திட்டத்திலேகூட குழாய்க் கிணறுகள் போட
வில்லை, குழாய்க் கிணறுகள் போடாததற்கே பில போட்டு
வாங்கிக் கொண்டார்கள் என்று இப்படி குறைபாடுகளைச்
சொல்லியிருக்கிறார்கள். நான் கூட என்னுடைய தொகுதியிலே
நிறைவேற்றப்பட்ட திட்டங்களைப் பாத்திருக்கிறேன். ஒன்றாக
செயல்பட்டிருக்கிறோம். அதிகாரிகள் ஒத்துழைக்கிறார்கள்.
ஆகவே தன்னிறைவுத் திட்டத்தையே நீங்கள் குறை சொல்கிறீர்
களா? அல்லது அந்தக் கொள்கை எல்லாம் தவறு என்று
சொல்கிறீர்களா? அல்லது அந்தக் கொள்கையிலே ஏற்பட்ட
தவறைச் சொல்கிறீர்களா? தவறைச் சொல்லி சுட்டிக் காட்டு
வது எதிர்க்கட்சிகளுடைய கடமை. கடமை போய் நம்பிக்கை
யில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வருகிற விந்தையினை நான்
இந்த அவையிலே தான் பார்த்துக் கொண்டிருக்கிறேன்.
எத்தனையோ குற்றச்சாட்டுக்களை இந்த அவையிலே சொல்லி
யிருக்கிறார்கள். தன்னிறைவுத் திட்டத்திலே இப்படி எல்லாம்
நடந்திருக்கிறது என்று. குற்றச்சாட்டுகளைச் சொல்வதற்கு
எதிர்க்கட்சிகளுக்கு உரிமையிருக்கிறது. ஆனால் தன்னிறைவு
திட்டமே தவறு என்கிறார்களா? தன்னிறைவு திட்டம் வந்த
பின்னாலேதான் இன்றைக்கு ஓரத்திலே ஒதுங்கி இருந்த தாழ்த்தப்
பட்ட மக்கள் வாழ்கிற சேரிகள் எல்லாம் நகரத்திற்கு வந்து
சேர்கிற அளவிற்கு பாதைகள் போடப்பட்டது, அவர்கள் எல்
லாம் நகரத்தைப் பார்க்கிறார்கள்., (மேசையை தட்டும் ஒலி)
இன்றைக்கு வந்து சேர்ந்திருக்கிறார்கள். பள்ளிக்கூடமே இல்லாத
ஊரே இல்லை என்ற அளவிலே, பள்ளிக் கட்டிடம் இல்லாத



ஊரே இல்லை என்ற அளவிலே இன்றைக்கு காலனிகள் வளர்ந்து
கொண்டிருக்கின்றன. நீங்கள் சொன்ன பிரச்சினை எந்த ஆட்சியி
லேயும் நடைபெற்றுக்கொண்டிருக்கிற பிரச்சினை. சமுதாய
பிரச்சினை. இது ஒரு அரசாங்கத்தை ஆட்சிசெய்கின்ற வர்க்
கத்தை குறை சாட்டி பேசுவதாலே முடிந்துவிடப் போவ
தில்லை. சமுதாய அமைப்பு அப்படி. எந்த ஆட்சி வந்தாலும்
ஜாதிப் பிரச்சினைகள் நடந்துதான் தீரும். அ.தி.மு.க. ஆட்சி
யானாலும் சரி, அண்ணா தி.மு.க. ஆட்சியாலும், சரி, ஏன்
கம்யூனிஸ்ட் ஆட்சியானாலும் சரி, ஜாதிக் கலவரம் வருவது
உண்டு. அதற்குத்க் காரணம் ஆளுகிற அரசு மாத்திரமல்ல.
ஆளுகிற எந்திரம் மாத்திரம் அல்ல. சமுதாயத்தினுடைய
அமைப்பு அப்படி. நாட்டிலே இருக்கிற ஜாதி வெறிகள், மேல்
ஜாதி, கீழ் ஜாதி என்றும், அதிலே பல ஜாதிகள் என்றும்
பிரித்துவிட்டு ,இந்து மதத்தின் கொடுமையாலே அதிலே உழன்று
கொண்டிருக்கிற — நான் துணிந்து சொல்கிறேன் — இந்து
மதத்தைவிட்டு வெளியே வந்த கம்யூனிஸ்ட்கள் இந்தியா
விலே ஒருவர் உண்டா? மதத்தில் ஜாதி உணர்வைத்
தூண்டுகிறார்களே, ஒருவராவது இந்துமதத்தை விட்டு வெளியே
வந்தவர்கள் உண்டா? அதன் உள்ளே இருந்து கொண்டு
அந்த மதத்திலே இருந்து கொண்டு இதிலே குறைகளைச்
சொல்லி, அதற்கு இன உணர்வை ஊட்டுகிறது இன்னொரு
இயக்கம் என்று சொல்கிறார்கள். இது வரையிலும்
ஒருவராவது ஜாதி யை விட்டு வெளியே வநது இருக்கிற
கம்யூனிஸ்டுகள் உண்டா? அப்படிப்பட்ட நிலையிலே தான்
சாதி உணர்வை ஒரு காரணம் காட்டி. இந்த அரசு சாதி உணர்வை
உண்டாக்குகிறது. தன்னிறைவு திட்டத்திலே இப்படிச்
செய்கிறது, ஆகவே இதற்கு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைத்
கொண்டு வரவேண்டும் என்பதுதான் எனக்கு ஆச்சரியமாக
இருக்கிறது. இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை திராவிட
முன்னேற்றக் கழகத்துக்காரர்கள் முன்மொழிந்து இருக்கிறார்கள்
தயவு செய்து எண்ணிப்பார்க்க வேண்டும். நாம் ஆண்ட நேரத்
திலே நடந்திருந்த விவகாரங்களை எல்லாம் இன்றைக்கு
நாடு பார்த்து சிரித்துக் கொண்டிருக்கிறது. (மேசையை தட்டும்
ஒலி) அதை மறந்துபோய் இந்த புனித ஆட்சியிலேஇந்தகம்யூனிஸ்ட்
கட்சிக்காரர்கள் கொண்டு வருகிற நம்பிக்கையில்லாத் தீர்
மானத்தை கேட்காமலேயே அருமை துணைத்தலைவர் அவர்கள்
முன்மொழிகிறார்கள். இது விந்தையாகத்தான் இருக்கிறது
ஆகவே நாம் ஆண்ட காலத்தின் வரலாறுகள் இன்றைக்கும்
தமிழகத்திலே இருந்துகொண்டிருக்கிறது. அந்தக் காலத்திலே
வறட்சி வந்தபோது தமிழகத்திலே வறட்சி நிவாரணப்பணி
என்று ஊர் ஊராக நாம் போட்ட திட்டங்கள் எல்லாம் மத்திய
சர்க்கார் ஆளும் கட்சியின் மீது வைத்திருந்த அசைக்க முடியாத
நம்பிக்கையின் காரணமாக கணக்கு கேட்டவரலாறு கூட தமி
ழகத்திலே உண்டு. ஆனால் புரட்சித் தலைவர் ஆட்சியிலே இதே
வறட்சி நிவாரணப் பணிகளுக்கு எல்லாம் பாராட்டுத் தெரிவித்து

## 2. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### (அ). சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

194. தமிழ்நாடு 1935-ஆம் ஆண்டு பந்தைய வரி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிக வரிகள் —சமய அறக்கட்டளைகள் துறையின் 10—3—1983 ஆம் நாளிட்ட 278-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிக்கை (தமிழ்நாடு 1935-ஆம் ஆண்டு பந்தைய வரிச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 20/1935) 10 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பட்டது].

195. சேலம் மாவட்டத்திலுள்ள கிழங்கு மாவு-சவ்வரிசி உற்பத்தியாளர் பணித் தொழில் கூட்டுறவுச் சங்கத்திடமிருந்து வாங்கி விற்கப்படும் சவ்வரிசி, மரவள்ளிக்கிழங்கு மீதான விற் பனை வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிகவரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 11—3—1983 ஆம் நாளிட்ட 291 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிக்கை. [தமிழ் நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பட்டது].

196. ஏனைய இடங்களில் நடை பெறும் குதிரைப் பந்தையத் திற்கு கிண்டியிலுள்ள குதிரைப் பந்தைய மைதானத்திற்குள் நடைபெறும் இடைநிகழ் பந்தையத்திற்கு வரி விதிப்பது குறித்து வணிகவரிகள் —சமய அறக்கட்டளைகள் துறையின் 1—4—1983 ஆம் நாளிட்ட 373 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிக்கை [தமிழ்நாடு 1935 ஆம் ஆண்டு பந்தைய வரிச் சட்டத் தின் (தமிழ் நாடு சட்டம் 20/1935) 10 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பட்டது].

197. நீலகிரி மாவட்டம் உதகமண்டலம் வட்டத்தில் நடை பெறும் ஒவ்வொரு குதிரைப் பந்தைய கூட்டத்திற்கும் வரி விதிப்பது குறித்து வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 5—4—1983 ஆம் நாளிட்ட 377 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிக்கை. [தமிழ்நாடு 1935 ஆம் ஆண்டு பந்தைய வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1935) 10 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பட்டது].

198. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 6—5—1983 ஆம் நாளிட்ட 504 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிக்கை. [தமிழ் நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பட்டது].



199. ஏலக்காய் விற்பனை செய்யும் எந்தவொரு வணிகருக்கும் விற்பனை வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிகவரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 7—5—1983 ஆம் நாளிட்ட 512 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பட்டது.]

200. இராஜபாளையத்திலுள்ள சென்னைக் காகித அட்டை அட்டைப் பெட்டி தொழிற்சாலை தயாரிக்கும் காகித அட்டை மீதான விற்பனை வரியை 13—3—1983 நாளிலிருந்து இரண்டாண்டு காலத்திற்கு 10 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாகக் குறைப்பது குறித்து வணிகவரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 1—7—1983 ஆம் நாளிட்ட 713 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிக்கை [தமிழ்நாடு 1959— ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு) சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பட்டது).

201. வணிகவரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 1—4—1978— ஆம் நாளிட்ட II (1) —வ.வ.ச.அ.து. 56(ஜி) 78 ஆம் அறிவிக்கையில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிகவரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 798 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிக்கை. (தமிழ்நாடு 1959— ஆம் ஆண்டு பொது விற்பனைவரிச் சட்டத்தின் (தமிழ்நாடுசட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பட்டது).

202. வேளாண் உதிரிப் பொருட்களை விற்பனை செய்யும் எந்த ஒரு வணிகருக்கும் விற்பனை வரி விலக்களிப்பது குறித்து வணிகவரிகள்சமய அறக்கட்டளைகள் துறையின் 25—7—1983 ஆம் நாளிட்ட 821 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பட்டது.]

203. தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (திருத்தச்) சட்டம் செயலுக்கு வரும் நாள் பற்றியும் தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்தும் வணிகவரிகள் — சமய அறக்கட்டளைகள் துறையின் 21—12—1982 ஆம் நாளிட்ட 1406 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிக்கை. [தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1939) 16 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பட்டது.]

204. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி முதல் விவர அட்டவணையில் திருத்த மொன்று செய்வது குறித்து வணிகவரிகள் —சமய அறக்கட்டளைகள் துறையின் 12—10—1982 ஆம் நாளிட்ட 1143 ஆம் எண் அரசாணையில் வெளியான

விட்டு போன மத்திய அமைச்சரும் உண்டு. ஆனால் இன்றைக்கு அவர்கள் எல்லாம் இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன் என்று சொல்கிறார்கள். இது அவர் களுடைய பாஷையிலே சொல்ல வேண்டுமானால் வேறாகப் போகும். ஆனால் இன்றைக்கு தமிழகம் உங்களைப் பற்றி மறக்காமல் இருந்து கொண்டு இருக்கிறது என்பதை தயவு செய்து நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். கம்யூனிஸ்டுகள் அன்றைக்கு ஒரு கட்சியோடு இருந்தார்கள். இன்றைக்குஇன்னொரு கட்சியோடு சேர்ந்து கூட்டணி அமைக்கிறார்கள். அன்றைக்கு ஒத்திவைப்புத் தீர்மானத்தை அருமை நண்பர் உமாநாத் அவர்கள் கொண்டு வந்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள். குமரிஅனந்தன் தாக்கப்பட்டிருக்கிறார்கள். பாரதிய ஜனதாக்கட்சித் தலைவர் தாக்கப்பட்டிருக்கிறார்கள். பாரதிய ஜனதாக் கட்சிக்காரர் களைப் பற்றிய பரிவு கம்யூனிஸ்டுகளுக்கு எப்போது வந்தது? என்று எனக்குப் புரியவில்லை. இனத் துவேசத்தை வெறுக்கின்ற கம்யூனிஸ்டுகள், இனத் துவேசத்திற்கு துணை போகின்ற பாரதிய ஜனதாவிற்கு கண்டனம் தெரிவிக்க வேண்டிய கம்யூனிஸ்டு கள், இன்றைக்கு அவர்களுக்கு அனுதாபம் காட்டுகிறார்கள், அந்த நிலைமையை இந்த அவையிலே அவர்கள் ஏற்படுத்தியிருக் கிறார்கள்என்பதை நான்இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட ஆசைப் படுகிறேன். ஒன்று சேர்ந்து கம்யூனிஸ்டுகள் கொடுத்த இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஏற்கனவே பல பேர்கள் முடிவு செய்து அவர்கள் மூலமாக வந்தது போல் தெரிகிறது.

(பிற்பகல் 1–30)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப் பெறுகிறது. குறுக்கீடுமாண்புமிகு உறுப்பினர் மூர்த்தி அவர்களை சீக்கிரமாக முடித்துக் கொள்ளும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ஜி. மூர்த்தி**: இன்றைக்கு காங்கிரஸ் கட்சியை சர்வாதிகார கட்சிஎன்று வர்ணித்து விட்டு, காங்கிரஸ் கட்சியை இன விரோத போக்குக் கொண்ட கட்சி என்று குற்றம் சாட்டி விட்டு, தமிழ கத்திலே இருக்கிற மற்ற கட்சிகளை, மாண்புமிகு உறுப்பினர் அருமை சகோதரர் உமாநாத் அவர்கள் நியாயப் படுத்தியிருக் கிறார்களே, அது எந்த அளவுக்கு உண்மை என்பதை சொல்ல வேண்டும். காங்கிரஸை இப்படி உருவகப் படுத்திவிட்டு, மற்ற வர்களை நியாயப் படுத்துவீர்களேயானால்-- உங்களுக்கும் மற்ற வர்களுக்கும் வித்தியாசம் உண்டு என்று இன்றைக்கும் ஒப்புக் கொள்கிறவன் நான்—நீங்களே இப்படி மற்றக்கட்சிகளைநியாயப் படுத்திப் பேசி காங்கிரஸை சர்வாதிகார கட்சியாக ஆக்கினால் நாளைக்கு நீங்கள் அவர்களோடு உறவாடுகிறபோது, நாட்டிலே இருக்கிற மக்கள் உங்களை கண்டிப்பாக அடையாளம் காணத் தவற மாட்டார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



இன்றைக்கு இந்த புண்ணியவான்நடத்திக் கொண்டிருக்கிற ஆட்சியிலே ஏற்படுகின்ற நன்மைகளை சரித்திரமாக இந்திய நாடு புகழ்ந்துக் கொண்டிருக்கிறது. பல கோடி நன்மைகளை ஏழை எளிய மக்களுடைய , விவசாய மக்களுடைய, கூலித் தொழிலாளர்களுடைய நன்மைக்காக, அவர்களுடைய பொரு ளாதார மேம்பாட்டுக்காக , இந்த அரசு செய்து கொண்டி ருக்கிற நன்மைகளை, புனிதர் புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு அளித்துக் கொண்டிருப்பதை பாராட்டி, இந்த நாடே பாராட்டுப் பத்திரம் வழங்கிக் கொண்டிருக்கிறது. அதற்கு களங்கம் ஏற்படுத்தாமல், இப்படிப் பட்ட அரசியல் நோக்கத் தோடு இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தி ருப்பதை எதிர்த்து குடியரசுக் கட்சியின் சார்பிலே கூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 9–11–1983 காலை 9 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1–31 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## உள்ளடக்கம்.


| | பக்கங்கள். |
|---|---|
| 1. வினாக்கள்—விடைகள் : | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. | 471—517 |
| 2. அறிவிப்புகள் : | |
| (அ) எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்ட முன்வடிவு, 1983 .. .. | 518 |
| (ஆ) மேலவை முன்னாள் உறுப்பினர் திரு. நா. வீராசாமி அவர்கள் மீதான உரிமை மீறல் பிரச்சினை .. .. | 518 |
| 3. அரசினர் சட்ட முன்வடிவுகள் : | |
| (அ) நகர்ப்புற நில உச்ச வரம்பு-முறைப்படுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1983 .. .. | 519 |
| (ஆ) பணிக்கொடை வழங்கல் (தமிழ் நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1983 .. .. .. .. | 519 |
| 4. அமைச்சரவையின்மீது நம்பிக்கையின்மையை தெரிவிக்கும் தீர்மானம் விவாதம் (தொடர்ச்சி) | 520—588 |
| திரு. துரைமுருகன் .. .. .. | 520—536 |
| திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் .. .. .. .. | 538—557 |
| திரு, சோ. அழகர்சாமி .. .. | 537—573 |
| **5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் ..** | **588** |

அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பட்டது]

205. தமிழ்நாடு சர்க்கரைக் கழகத்தின் 1980 ஆம் ஆண்டிற்கான ஆறாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619/ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பட்டது.]

206. கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தின் 1982 ஆம் ஆண்டிற்கான எட்டாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பட்டது]

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய தாள்கள்

41. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு சென்னை மாநகரக்காவல் தமிழ்நாடு மாவட்ட காவல் (இரண்டாவது திருத்த) சட்ட முன் வடிவு இணைப்புடன் (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண். 40/1983).

42. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்த ) சட்டமுன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண். 41/1983) இணைப்புடன்.

43. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (நான்காவது திருத்த) சட்டமுன் முவடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 42/1983) இணைப்புடன்.

44. தமிழ்நாடு கடன் நிவாரணச் (இரண்டாவது திருத்தம்) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 43/1983) இணைப்புடன்.

45. தமிழ்நாடுதொழிலாளர் நல வாரியத்தின் 1976–77 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை. (ஆங்கிலம்).

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1983 நவம்பர் 9 புதன்கிழமை

ஐப்பசி 23 ருத்ரோத்காரி—திருவள்ளுவர் ஆண்டு 2014

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

திறனறிந்து சொல்லுக சொல்லை அறனும்
பொருளும் அதனினூஉங்கு இல்

கேட்போருடைய உள்ளம் ஏற்கும் பாங்கினை அறிந்து சொல்லுக. அதைவிட அறத்தின் பயனையும், பொருளின் பயனையும் தருவன வேறொன்றும் இல்லை.

### 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

கறவை மாடுகளுக்குப் போடப்படும் ஆக்ஸிடோஸின் என்ற மருந்து.

*வினா எண். 128—திரு. எஸ். டி. உகம்சந்த், திரு. செ. சிவசாமி, திரு. செ. செம்மலை : மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அதிக பாலை கறக்க வேண்டி ஆக்ஸிடோஸின் என்ற மருந்தை ஊசி மூலம் கறவை மாடுகளுக்குப் போடப்படுவதை அரசு அறியுமா ?

(ஆ) இதனால் கறவை மாடுகள் மற்றும் மக்களுடைய நலம் பாதிக்கப்படுவது உண்மையா ?

(இ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள்

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** (அ) ஆம்.

(ஆ) ஆக்ஸிடோஸின் மருந்தை உபயோகிப்பதால் கறவை மாடுகளின் நலம் பாதிக்கப்பட வாய்ப்புண்டு. ஆனால் இம்மருந்து ஊசி மூலம் கறவை மாட்டிற்கு செலுத்தி கறந்த பாலை உட்கொள்வதால் மக்களுக்கு யாதொரு தீங்கும் ஏற்படுவதில்லை.

(இ) சில மாடுகள் பாலைச் சுரக்காமல் இருப்பதால் அவற்றின் மடியிலிருந்து பாலை பெற இயலாத நிலையில் உள்ள போது, ஆக்ஸிடோஸின் மருந்து, கால்நடை மருத்துவரின் ஆலோசனையின் பேரில் தங்கியுள்ள பாலை எடுக்கக் கொடுக்கப்படுகிறது. இம்மருந்து கால்நடை மருத்துவர் பரிந்துரைத்தலின் பேரில் மருந்து கடைகளில் அளிக்கப்படுகிறது. பிராணி வதை தடுப்புச் சட்டத்தில் மாடுகளுக்கு ஊசி மூலம் மருந்து ஏற்றுவது, சான்றிதழ் பெற்ற கால்நடை மருத்துவர்களே செய்ய வேண்டும் என்றுள்ளது.

**திரு. எஸ். டி. உகம்சந்த் :** தலைவர் அவர்களே, இந்த கடுமையான குற்றத்தின் காரணமாக கறவை மாடுகளின் கன்றுகளுக்கு பால் இல்லாமல் மிகவும் பாதிக்கப்படக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்ற விவரத்தை அமைச்சர் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். அந்த மருந்து விற்பனைக்கு அரசு கட்டுப்பாட்டைக் கொண்டு வருமா? அது மட்டுமல்லாமல் அதனால் மக்கள் நலம் பாதிக்கப்படவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் ஒரு சில பத்திரிகைகளில் அதனால் வியாதிகள் வருகின்றன என்று சொல்லியிருக்கிறார்களே அதைப்பற்றி அரசு தீவிரமாக ஆராயுமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** தலைவர் அவர்களே, அது பற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் கருத்தை வைத்துக் கொண்டு அதே துறைக்குச் சொல்லி அது குறித்து ஆய்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. செ. சிவசாமி :** தலைவர் அவர்களே, இந்த ஆக்ஸிடோஸின் மருந்தைப் பயன்படுத்துவதன் காரணமாக மாடுகள் அதிகமாகப் பாலைக் கறக்கின்றன என்று சொன்னார்கள். ஆனால் அதனால் மனிதர்களுக்கு எந்த விதமான ஆபத்தும் இல்லையென்றும் சொன்னார்கள். அதற்காக ஏதாவது ஆராய்ச்சி நிலையத்தில் ஆராய்ச்சி செய்யப்பட்டதா? அப்படியானால் அந்த ஆராய்ச்சி எந்த அளவுக்கு செய்யப்பட்டது? என்னைப் பொறுத்தவரையில் பல டாக்டர்களைக் கலந்தாலோசித்துப் பேசிய போது இது ஆபத்தானது என்றும் நல்லதல்ல என்றும் சொல்கிறார்கள். மாடுகளுக்கும் நல்லதல்ல என்கிறார்கள். பசு மாடுகளின் மடுவின் ஹார்மோன் சக்தி அதிகரிக்கப்பட்டு அதன் காரணத்தினால் மீண்டும் பசுமாடுகள் கருத்தரிக்கிறபோது பால் குறைந்துவிடும் என்று சொல்கிறார்கள். அது எந்த அளவுக்கு உண்மை என்று அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி ;** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல் இது கால்நடைகளுக்கு தீமையை விளைவிக்கக் கூடிய மருந்துதான். ஆனால் தவிர்க்க முடியாத கட்டாயத்தில் 'நெசசரி ஈவில்' என்று சொல்லுவார்களே அந்த முறையில் இதைப் பயன்படுத்த வேண்டியிருக்கிறது, மாடுகளின் மலட்டுத் தன்மையைப் போக்குவதற்கு இது பயன்படுத்தப்படுகிறது. சில நேரங்களில் பால் கட்டிவிடுகிறது, கட்டிய பாலை எடுப்பதற்கும் இது பயன்படுத்தப்படுகிறது. இருந்த போதிலும் குறிப்பிட்ட மருத்துவர்களின் சான்றிதழ் பெற்று தான் பயன்படுத்த வேண்டுமென்று கட்டுப்பாடுகளை விதித்து இருக்கிறோம். அதை மீறுகிறவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஆகவே இதை நல்ல முறையில் பயன்படுத்துவதற்கு என்ன என்ன நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமோ அந்த நடவடிக்கைகளையெல்லாம் அரசாங்கம் எடுத்து வருகிறது. அதிக பால் தருகிறது என்பதற்காக பயன்படுத்தப்படவில்லை, மலட்டுத் தன்மையைப் போக்குவதற்கும் பால் சுரக்காமல் இருக்கிற தன்மையைப் போக்கவும் ஹார்மோன்களின் மூலம் சுரக்கும் சக்தியை ஏற்படுத்தவும் பயன்படுத்தப்படுகிறது. அதிகப் பால் உற்பத்தியைச் செய்வதற்காகப் பயன்படுத்தப்படுற மருந்தல்ல.

**திரு. செ. சிவசாமி :** தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக பல நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். என்ன என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரம் இல்லை. தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. செ. செம்மலை :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆக்ஸிடோஸின் மருந்து மூலம் ஆபத்து இல்லை என்று சொன்னாலும் மக்கள் மத்தியில் ஏற்பட்டு இருக்கின்ற ஒரு பயத்தை, பீதியை போக்குவதற்கு இந்த பால் விநியோகத்தின்போது அதை விற்பனைக்கு அனுப்புகிற சமயத்தில் அந்தப் பாலில் ஆக்ஸிடோஸின் நச்சுத் தன்மை கலந்து இருக்கிறதா என்பதை ஆராய்ந்து அல்லது பரிசோதித்து விற்பனைக்கு அனுப்புவதற்கு துறையின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரையில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இந்த உணர்வுகள் கவனத்தில் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1983 நவம்பர் 9

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிக பால் கறக்க வேண்டி ஆக்ஸிடோஸின் என்ற மருந்து உபயோகிப்பதனால் பல தீமைகள் விளைகிறது என்று அமெரிக்காவில் பல சர்ச்சைகள் எழுந்து இந்த மருந்தை அங்கே தடை செய்தது மாண்புமிகு அமைச்சருக்குத் தெரியுமா ? அதே மாதிரி இங்கேயும் தடை செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை நாம் தடை செய்ய முடியாது. இது மத்திய சட்டத்தின் கீழ் உள்ள மருந்துகள் கட்டுப்பாடு அலுவலக அதிகார வரம்பிற்குள் வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினரின் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

## தமிழகத்தில் சீட்டு நிதி நிறுவனங்களை ஆரம்பிக்கும் திட்டம்

*வினா எண் 129—திரு. சி. கணேசன், திரு. பெ. சு. திருவேங்கடம், திரு. டி. மணி : மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் சீட்டு நிதி நிறுவனங்களை ஆரம்பித்து அரசின் பேரால் நடத்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

(ஆ) ஆம் எனில், அது எப்போது செயல்படத் துவங்கும் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: (அ) மற்றும் (ஆ). தமிழ்நாடு சீட்டு நிதிக் கழகம் என்ற பெயரில் ஒரு பொதுத் துறை நிறுவனத்தை ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டு அதனை கம்பெனி சட்டத்தின் கீழ் பதிவு செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. பதிவு செய்த பின்னர் சீட்டு நிதிக் கழகமும் அதன் கிளைகளும் செயல்படத் துவங்கும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சீட்டு நிதிக் கழகம் எந்த எந்த மாவட்டத்தில் முதலில் ஆரம்பிக்கப்பட அரசுக்கு உத்தேசம் இருக்கிறது ? அதனுடைய பணி எப்படி இருக்கும் என்பதை நான் அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10 இடங்களில் முதல் கட்டமாக தொடங்க இருக்கிறது. குறிப்பாக சென்னை வடக்கு, சென்னை தெற்கு, வேலூர், சேலம், கோயம்புத்தூர், திருப்பூர், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, மதுரை, நாகர்கோயில் ஆகிய 10 இடங்களில் தொடக்கத்தில் தொடங்குவதற்கு அரசு முடிவு செய்திருக்கிறது.



1983 நவம்பர் 9]

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சீட்டு நிதிக் கழகத்தினுடைய பணி எப்படி இருக்கும் என்று நான் கேட்டேன். அதற்கு அமைச்சர் பதில் அளிக்கவில்லை. ஏற்கனவே தனியார் பல பேர் இந்த சீட்டு நிதிக் கழகம்—பைனான்ஸ் கார்ப்பரேஷன்—என்ற பெயரால் சீட்டு எல்லாம் பிடித்து பல நடுத்தரக் குடும்பங்கள், பாமர மக்கள் ஏமாற்றப்பட்டு இருக்கிறார்கள். அது அரசுக்கும் தெரியும். அவைகளை எல்லாம் தடை செய்யவும், அரசாங்கமே இதுபோன்ற பணியை 10 இடங்களில் செய்வதற்கும் உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல் நடவடிக்கையாக நிரந்தர வருமானம் பெற்ற அரசு ஊழியர்களுக்கும் மற்றும் நிறுவனங்களில் பணியாற்றுகின்ற நண்பர்களுக்கும் இந்த திட்டம் தொடங்கப்படுகிறது. இது விரிவாக்கப்பட்டு எல்லா சமூகத்தில் உள்ளவர்களுக்கும், எல்லாப் பகுதியினருக்கும் நன்மை ஏற்படுகின்ற வகையில் திட்டம் விரிவாக்கப்படும் விரைவில்.

திரு. டி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சீட்டு நிதிக் கழகம் தமிழகத்தில் ஆரம்பிக்கின்றபோது இந்த நிதி ஆண்டில் அது ஆரம்பிக்கப்படுமா ? ஏற்கனவே தனியார் துறையைச் சார்ந்த பலர் உரிமம் பெறாமல் சீட்டு நடத்துவதால் பல்வேறு குடும்பங்கள் அதனால் பாதிக்கப்படுகின்றன. ஆகவே இந்த அரசு சீட்டு நிதி நிறுவனம் ஆரம்பிக்கின்றபோது மற்ற தனியார் நடத்துகின்ற சீட்டு நிறுவனங்களைத் தடை செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் நிறுவனங்களாக நடைபெறுகின்ற சீட்டு கம்பெனிகளில் இருக்கின்ற முறைகேடுகள், ஒழுங்கீனங்கள், மோசடிகள் இப்படிப்பட்ட தீமைகளைக் களைவதற்கு தக்க நடவடிக்கை எடுக்கப்படும். அதே நேரத்தில் அரசு சார்பாக இது நடத்தப்படயிருக்கின்ற காரணத்தால் இந்த தீமைகளை கட்டுப்படுத்த முடியும் என்று அரசு நம்புகிறது.

திரு. டி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சீட்டு நிதிக் கழகம் இந்த நிதி ஆண்டில் ஆரம்பிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்பிக்கப்படும்.

[1983 நவம்பர் 9

திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சீட்டு நிறுவனத்தின் மூலம் ஆரம்பிக்கின்ற அந்த வங்கியில், நிறுவனங்களில் பணியாற்றுகிறவர்களுக்கும் அரசு உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கும் கடன் வழங்கப்படுமா ? அப்படி வழங்கப்படுகின்றபோது என்ன வட்டியாக இருக்கும் ? இந்த ஆண்டு அந்த 10 மாவட்டங்களில் ஆரம்பிக்கின்ற அந்த நிறுவனங்களுக்கு ஒட்டுமொத்தமாக எந்த அளவுக்கு தொகை அரசால் ஒதுக்கப்பட்டு இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9–10)

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, இது தொடக்க நிலையிலே இருக்கின்ற காரணத்தாலே, தொடங்குகின்ற காலத்திலே தெளிவாக விளக்கங்கள் அளிக்கப்படும்.

திரு. இ. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார்கள் பதிவு செய்து சீட்டு நடத்தினால்கூட, ஒரு சீட்டு என்று பதிவு செய்து விட்டு, 4, 5 சீட்டுகள் நடத்தி, அதனால் சீட்டு கட்டுகிறவர்களுக்கு இழப்பு ஏற்படக் கூடிய நிலையிருக்கிறதே, அதை முறையாகக் கண்காணிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தமிழகத்திலே ஏறத்தாழ ரூ. 20 கோடி அளவுக்கு அதிலே முதலீடுகள் செய்து, சீட்டு நிதிக் கழகத்தின் சார்பாக தனியார்கள் அதைச் செயல்படுத்தி வருகிறார்கள். அதிலே முறைகேடுகள் இருக்கின்றன என்ற தகவல் வந்து கொண்டிருக்கிறது. சட்டபூர்வமாக அந்த முறைகேடுகளைத் தடுப்பதற்கு அரசு பல கருத்துருக்களை ஆய்ந்து கொண்டிருக்கிறது.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் சீட்டுக் கம்பெனி நடத்த வேண்டுமென்பதே தனியார் சீட்டுக் கம்பெனிகளிலுள்ள மோசடிகளிலிருந்து பொது மக்களைக் காப்பாற்ற வேண்டுமென்பதற்காகத்தான் இருக்கவேண்டும். தற்போது பெரிய சீட்டுக் கம்பெனிகள் பல இலட்சக்கணக்கான ரூபாய்கள் மோசடி செய்துள்ளதாகப் பத்திரிகைகளில் செய்திகள் வருகின்றன. எதிர்காலத்தில் அவ்வாறு நடைபெறாமல் இருக்க அரசு என்ன முனைப்பான நடவடிக்கைகளை எடுக்கும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்மிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றிய தகவல் விளக்கமாக இப்பொழுது என்னிடத்திலே இல்லை. தனிக் கேள்வி போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1983 நவம்பர் 9]

## பால் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் நடத்தும் திட்டம்

*வினா எண் 130—திரு. சி. கணேசன் : மாண்புமிகு, பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

பால் உற்பத்திக் கூட்டுறவு சங்கங்களுக்குத் தேர்தல் நடத்துவது பற்றிய அரசின் திட்டம் இப்போது எந்த நிலையில் இருக்கிறது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : இந்தியக் குடியரசுத் தலைவரால் சமீபத்தில் அங்கீகரிக்கப்பட்ட தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் புதிய சட்ட முன்வடிவில், கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் நடத்துவது பற்றியும் உள்ளடங்கியுள்ளதால் மேற்படி சட்டம் அமல்படுத்தப்படும்பொழுது பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் நடத்தப்படும்.

## பாவேந்தர் பாரதிதாசன் படைப்புகள் அனைத்தையும் நாட்டுடைமையாக்கும் திட்டம்

*வினா எண் 131—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பாவேந்தர் பாரதிதாசன் படைப்புகள் அனைத்தையும் நாட்டுடமையாக்க இந்த அரசு ஏதேனும் முயற்சி மேற்கொண்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(ஆ) சட்ட சிக்கல்கள் ஏதும் தோன்றாத வகையில் பாரதிதாசனின் நூல்களை நாட்டுடமையாக்கும் முயற்சியில் அரசு ஈடுபட்டுள்ளது. இது தொடர்பாக அரசு தேவையான நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. து. புருஷோத்தமன் : பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய பாவேந்தருடைய நூல்களை, ஏற்கனவே அவரிடம் உரிமை பெற்று வெளியிட்டுள்ளவர்கள் பலர் பெரும் அளவு நஷ்டம் அடைந்துள்ளனர். அவர்களுக்கு இந்த அரசு ஏதாவது நஷ்டஈடு கொடுக்குமா ? பாரதிதாசன் வாரிசுகளுக்கு உரிய முறையிலே நஷ்டஈடு கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[1983 நவம்பர் 9

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, பாரதிதாசன் அவர்களுடைய வாரிசுகளுக்கு, அந்த உரிமையை அவர்கள் தருவதற்காக ஒரு குறிப்பிட்ட தொகையைத் தருகின்ற பிரச்னையும் பேச்சுவார்த்தையில் இருந்துகொண்டிருக்கிறது. அதற்கடுத்து, இந்தப் புத்தகப் பதிப்பாளர்கள், குறிப்பாக, பூம்புகார் பதிப்பகத்தார் 19 நூல்களை வெளியிட்டிருக்கிறார்கள். அவர்களிடத்திலே கேட்டபொழுது, பதிப்புரிமையை நாங்கள் தந்து விடுகிறோம். ஆனால், நாங்கள் அச்சடித்து வைத்திருக்கிற மீதமுள்ள புத்தகங்களை அரசே வாங்கிக் கொள்ளவேண்டுமென்ற நிபந்தனையை அவர்கள் போட்டிருக்கிறார்கள். வேறு சில பதிப்பகத்தாரும் உரிமை கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, உரிமை பல பேரிடத்திலே இருக்கிற காரணத்தாலே, அந்த நாட்டுடைமையாக்குகிற திட்டம் தாமதமாகி வருகிறது. இருந்தாலும் அரசு அதை விரைவில் முடிப்பதற்காக நடவடிக்கை எடுக்கும்.

திரு. து. புருஷோத்தமன் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி பாவேந்தருடைய நூல்களை அரசுடைமையாக்குகின்ற திட்டத்தை வரவேற்கின்றோம். அதேபோல் பேரறிஞர் அண்ணா அவர்கள் இயற்றிய பல்வேறு அரிய நூல்களை அரசுடைமையாக்க அரசிடம் திட்டம் ஏதாவது உள்ளதா ? அதைப் போல் கலைஞர் அவர்கள் இயற்றிய பல்வேறு நூல்களை ஆராய்ந்து (Master of Philosophy, Doctorate) பட்டங்கள் பெற்றுள்ளனர் அப்படிப்பட்ட நூல்களை அரசு ஏற்று அரசுடைமையாக்குகின்ற திட்டம் ஏதேனும் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்போதைக்கு அப்படிப்பட்ட திட்டம் இல்லை.

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சிக் கவிஞன் பாரதிதாசன் அவர்களின் படைப்புகள் பாமர மக்களுக்கும் பயன்படுகிற வகையிலே மலிவு விலை வெளியீடுகள் வெளியிட அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டுடைமையாக்கப்பட்ட பிறகு அதைப்பற்றி நாம் யோசிக்கலாம்.



1983 நவம்பர் 9]

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக மகாகவி பாரதியாரின் சிஷ்யன் பாரதிதாசன்.

''ஓடப்ப ராயிருக்கும் ஏழையப்பர்
உதையப்ப ராகிவிட்டால் ஓர்நொடிக்குள்
ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி
ஒப்பப்பர் ஆய்விடுவார் உணரப்பாநீ.''

என்று புரட்சி கீதங்கள் இசைத்த அந்த பாரதிதாசன் நூல்களை விரைவிலே நாட்டுடைமையாக்கி, மலிவு விலையில் வெளியிட அரசாங்கம் முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களுக்கு மாண்புமிகு உறுப்பினர் அம்பிகாபதி அவர்களை விட நாங்கள் நெருக்கமானவர்கள். ஆகவே நாட்டுடைமையாக்குவதற்கு மிகுந்த ஆர்வத்தோடு செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

### ஆரம்பப் பள்ளிகளில் படிப்பை இடையிலேயே நிறுத்திக் கொள்ளும் மாணவ மாணவியர்

*வினா எண் 132— திரு. செ. செம்மலை : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரம்பப் பள்ளிகளில் மாணவ, மாணவியர் இடையிலேயே படிப்பை நிறுத்திக் கொள்வது (Drop-out) தற்போது குறைந்திருக்கிறதா?

(ஆ) ஆம் எனில் சென்ற கல்வியாண்டில் (1981-82) எத்தனை சதவீதம் குறைந்துள்ளது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(ஆ) 1977-78-ல் 40.14 சதவீதமாக இருந்தது, 1981-82-ல் 30.36 சதவீதமாகக் குறைந்துள்ளது.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு தலைவர் அவர்களே, பத்து சதவீதம் அளவிற்கு டிராப்-அவுட்ஸ் குறைந்திருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இப்படி டிராப்-அவுட்ஸ் குறைந்ததற்கு சத்துணவுத் திட்டம் ஒரு முக்கியமான காரணம் என்று சொல்கிறார்கள். அது எந்த அளவிற்கு உண்மை என்பதையும், டிராப்-அவுட்ஸ் மட்டுமல்லாமல், கூடுதலாக மாணவ, மாணவியர்கள் எத்தனை பேர்கள் இந்தத் திட்டத்தின் வாயிலாக சேர்ந்திருக்கிறார்கள் என்ற விவரத்தையும் அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுத் திட்டத்தின் காரணமாக இடையிலே நிற்கிற மாணவர்களின் எண்ணிக்கை குறைந்திருக்கிறது என்பது உண்மைதான். அதுபற்றி விவரம் இப்போது என்னிடத்தில் இல்லை. டிராப்-அவுட் எப்படி கணக்கிட வேண்டுமென்றால், முதல் வகுப்பில் எவ்வளவு பேர்கள் சேர்ந்தார்கள், அவர்கள் 5-வது வகுப்பிற்கு வருகிறபோது எத்தனை பேர்கள் இருக்கிறார்கள், அதில் எத்தனை பேர்கள் குறைந்திருக்கிறார்கள் என்று பார்த்து அந்தக் கணக்கைத்தான் டிராப்-அவுட் என்று சொல்கிறோம். அப்படி பார்க்கிறபோது 1973–74-ல் 13 லட்சத்து 93 ஆயிரத்து 425 பேர்கள் சேர்ந்திருக்கிறார்கள். அவர்கள் 5 வது வகுப்பிற்கு வருகிறபோது 1977–78-ல் 8 லட்சத்து 34 ஆயிரத்து 119 பேர்கள் இருந்திருக்கிறார்கள். ஆகவே 5-லட்சத்து 59 ஆயிரத்து 306 பேர்கள் குறைந்திருக்கிறார்கள். இதுதான் டிராப்-அவுட். இதனுடைய சதவீதம் 40.14 ஆகிறது. இப்போது 1981–82-ஐ நாம் பார்க்கிறபோது 1977–78-ல் முதல் வகுப்பில் சேர்ந்தவர்கள் 1981–82-ல் ஐந்தாவது வகுப்பிற்கு வருகிறார்கள். 1977-ல் முதல் வகுப்பில் 15 லட்சத்து 39 ஆயிரத்து 987 பேர்கள் சேர்ந்திருக்கிறார்கள். அவர்கள் 5-வது வகுப்பிற்கு வருகிறபோது 1981–82-ல் 10 லட்சத்து 72 ஆயிரத்து 470 பேர்கள் இருந்திருக்கிறார்கள். ஆக 4 லட்சத்து 67 ஆயிரத்து 517 பேர்கள் டிராப்-அவுட்டாக இருந்திருக்கிறார்கள். அது 30.36 சதவீதமாகிறது. இப்போது சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்திருப்பதால் டிராப்-அவுட் எவ்வளவு குறைந்திருக்கிறது என்பதை இனிமேல் வருகிற நான்கு, ஐந்து வருடங்கள் கழித்து பார்த்தால்தான் தெரியும்.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த டிராப்-அவுட்ஸ் குறைவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற சத்துணவுத் திட்டம் ஒரு காரணம் என்று சொல்கிறார்கள். பிரதமர் அவர்களின் 20 அம்சத் திட்டத்திலே எலிமெண்டரி எஜுகேஷனும் ஒரு அம்சமாக இருக்கிறது. ஆகவே ஆரம்ப கல்வியை தீவிரப்படுத்துகிற இந்த நிலையில், சத்துணவுத் திட்டம் டிராப்-அவுட்டை குறைப்பதற்கு வழிவகை செய்கிறது என்ற காரணத்தால் இதற்காக மத்திய அரசிடமிருந்து ஏதாவது நிதியுதவி பெற்று மேலும் தீவிரப்படுத்த நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்ப கல்வி அளிப்பது 20 அம்சத் திட்டத்தில் மட்டுமல்ல, அரசியல் சட்டத்தில் இருக்கிற 17 வயதிற்கு உட்பட்டவர்களுக்கு எல்லாம் கல்வி தரவேண்டுமென்ற அடிப்படை ஆணையை அமலாக்குகிற ஒரு கொள்கை ஆகும். அந்தக் கொள்கையை நிறைவேற்ற நாம் எடுத்துக்கொள்ளும் எல்லாவிதமான நடவடிக்கையும் வரவேற்கத்தக்க ஒன்றாகும்; மத்திய அரசால் ஆதரிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்; அதைத்தான் நாம் மத்திய அரசிற்கு எடுத்துச் சொல்லி வருகிறோம். சத்துணவுத் திட்டம் என்பது உணவுத் திட்டமல்ல; குறிப்பாக அது ஒரு கல்வி திட்டம். அது கல்வித் திட்டத்தின் ஒரு பகுதியாக கருதப்படவேண்டும்.

(முற்பகல் 9–20).

திரு. எஸ். இளையபெருமாள் ; மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொல்லுகின்ற நேரத்தில் டிராப்-அவுட் குறைந்திருப்பதாகச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. செம்மலை அவர்கள் கூட சத்துணவுத் திட்டத்தின் காரணமாக டிராப்-அவுட் குறைந்திருக்கிறதா என்று கேட்டார்கள். 1-வது முதல் 5-வது வரையில் படித்த பிள்ளைகள் அதற்குமேல் படிக்க முடியாத அவல நிலை இருந்து வருகிறது. வறுமை அல்லது பெற்றோர்களின் முயற்சியின்மைதான் அதற்குக் காரணமாக இருக்கிறது, 5-வது வகுப்புவரை படிக்கின்ற பிள்ளைகளுக்குச் சத்துணவும் இன்னும் புத்தகம் போன்றவைகளைக் கொடுத்தபிறகு அந்தப் பிள்ளைகள் மேற்கொண்டு படிக்க முடியாமல் இருப்பதற்கு வறுமைதான் முதல் காரணம். 15 வயதிற்கு உட்பட்டவர்களுக்குக் கட்டாயக் கல்வி கொடுக்க வேண்டுமென்று இருந்தாலும் கிராமங்களில் அது சரிவர நடைமுறையில் இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா? சத்துணவுத் திட்டத்தின் காரணமாக டிராப் அவுட் குறைந்திருக்கிறது என்று நாம் கணக்கில் கொண்டாலும் அந்தப் பிள்ளைகள் உணவு அருந்துகின்ற நேரத்தில் அட்டென்டென்ஸ் ரிஜிஸ்தரில் மார்க் செய்துகொண்ட அடுத்த நிமிடமே பிள்ளைகள் அங்கிருந்து சென்று விடுகிறார்கள். இதனால் அவர்களின் படிப்பு நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வருகிறது. 1-வது முதல் 5-வது வகுப்புவரை படித்த பிள்ளைகள் மேற்கொண்டு 6-வது படிக்க முடியாத அவல நிலைமையும் இருப்பதால். இதையெல்லாம் மனதிற் கொண்டு டிராப்-அவுட்டை வருங்காலத்தில் மேலும் குறைக்கவும், இன்னும் நல்லமுறையில் செய்யவும் அரசிடம் ஏதேனும் திட்டம் உண்டா? அதை எப்படி அமல் நடத்தப் போகிறார்கள்?

[1983 நவம்பர் 9

**மாண்புமிகு** திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலை
வரவர்களே, **சத்துணவுத்** திட்டம் என்பது, அந்தக் குழந்தை
களுக்குச் **சத்துண**வு கிடைக்க வேண்டுமென்பதற்காகவும், அதே
நேரத்தில் **அவர்**கள் கல்வி கற்க வந்து நல்லமுறையில் கற்க
**வேண்டுமென்பத**ற்காகவும் நடத்தப்பட்டு வருகிற சீரிய
திட்டமாகும். அதனால் நிறையக் குழந்தைகள் இப்போது
பள்ளிகளுக்கு வந்து கொண்டிருக்கிறார்கள் என்ற விவரம்
நமக்குத் தரப்பட்டிருக்கிறது. இன்றைக்குப் பல்வேறு பள்ளி
களில் அந்தக் குழந்தைகள் நல்ல முறையில் படிக்கிறார்கள்
என்ற தகவல் ஆசிரியர்கள் மூலமாக நமக்கு வந்து கொண்
டிருக்கிறது. வகுப்புகளில் சோம்பலாக இல்லாமல் நல்ல
முறையில் அட்டென்டிவாக இருந்து—கவனமாக இருந்து கல்வி
கற்கிறார்கள் என்ற தகவல் நமக்குச் சொல்லப்படுகிறது.
உண்மை அதுவாகத்தான் இருக்க முடியும். ஏனென்றால்
சாப்பாடு இல்லாமல் படிக்காமல் இருந்தவர்கள் இப்பொழுது
சாப்பாடு கிடைக்கும்போழுது நிச்சயமாக படிப்பார்கள் என்ற
அந்த உண்மையை நாம் ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும்.
அந்த வகையில் கல்வியின் முன்னேற்றம் இருந்து கொண்டிருக்
கிறது. இப்பொழுது ஆறாவதோ அல்லது ஏழாவதோ படித்து
மேலே படிப்பைத் தொடராமல் இருப்பதற்கோ **அல்லது**
ஐந்தாவது வகுப்புக்கு மேல் படித்த குழந்தைகள் **அதற்கு**
மேல் படிப்பைத் தொடராமல் இருப்பதற்கோ வறுமைதான்
காரணம் என்பதை நாம் ஓரளவுக்கு வேண்டுமானால் ஏற்க
முடியுமே தவிர, பெரும்பாலும் தாய் தந்தையர்கள் கடமை
தவறுவதுதான் காரணம் என்பதை நாம் **ஒத்து**க்கொள்ள
வேண்டும். அத்தகைய தாய் தந்தையர்களுக்கு நாம் **விளக்கங்**
களைத் தந்து, அவர்கள் அவ்வாறு செய்வது **தவறு**
என்பதை எடுத்துச் சொல்லி அவர்கள் தங்கள் குழந்தை
களைப் பள்ளிக் கூடங்களுக்கு அனுப்புகின்ற வகையில் நாம்
பிரச்சாரம் செய்யவேண்டும். அப்படிப் பிரச்சாரம் செய்வது
என்பதோடு மட்டும் நின்றுவிடாமல், குழந்தைகள் படிக்காமல்
இருப்பதை ஒரு சமுதாயக் குறைபாடாக நாம் எடுத்துக்
கொண்டு, ஒரு ஊரில் இரண்டு குழந்தைகள் படிக்காமல்
இருக்கிறார்கள் என்றால், அவர்கள் யாருடைய குழந்தைகள்
என்று பார்க்காமல், அவர்கள் நம்முடைய குழந்தைகள்
என்று நினைத்து அந்தப் பிள்ளைகள் பள்ளிக்குப் போக
வேண்டுமென்ற உணர்வை எல்லோருடைய **மத்தியிலேயும்**
வளர்ப்பது அவசியமாகும். அப்படிச் செய்வதுதான் **இதில்**
நமக்கிருக்கின்ற நல்ல பாதுகாப்பாகும். **அத்தகைய சமுதாய**
**உணர்வை** வளர்ப்பதற்கு நாம் முயற்சியெடுக்க **வேண்டும்.**



1983 நவம்பர் 9]

திரு. சு. **பாலன்** : மாண்புமிகு அவைத் தலைவரவர்களே,
நம் நாடு சுதந்திரம் பெற்று தற்போது 35 ஆண்டுக்
காலத்திற்கு மேலாகியும் பிள்ளைகள் படிக்க வேண்டுமென்ற
**எண்ணம்** பெரும்பாலான மக்களிடத்தில் ஏற்படாமல் இருக்
கிறது. அப்படியே ஒருசிலரிடத்திலே அத்தகைய **எண்ணம்**
ஏற்பட்டாலும்கூட, குழந்தைகளின் படிப்பை நடுவிலே நிறுத்தி
விடுகிறார்கள். ஆகவே, ஆறாவது முதல் எட்டாவது
வரையில் ஒவ்வொரு குடும்பத்திலும் உள்ள பிள்ளைகள்
கட்டாயமாகப் படிக்க வேண்டும் என்ற நிலைமையை
உருவாக்குவதற்கு அரசு சட்டம் இயற்ற நடவடிக்கை
எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு** திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு
தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இளைய
பெருமாள் அவர்கள்கூட பிள்ளைகள் படிப்பைப் பாதியிலே
நிறுத்தி விடுவதைப் பற்றிச் சொன்னார்கள். நான் அதற்குப்
பதில் சொல்ல மறந்துவிட்டேன். அவர்கள் கட்டாயமாகப்
படிக்க வேண்டுமென்ற சட்டம் இப்பொழுதேகூட இருக்கிறது.
ஆனால் கட்டாயப் படுத்துவது என்றால் என்ன என்பதைத்
தாங்கள் உணர்ந்தால் இப்பொழுது பேசுவதிலேயிருந்து
கொஞ்சம் வேறுபட்டுப் பேசியிருப்பீர்கள். அதைக் கட்டாய
மாக அமல் நடத்த வேண்டுமென்றால் குழந்தைகளைப்
பள்ளிக்கு அனுப்பாத தாய் தந்தையரை ஜெயிலுக்குக்கூட
அனுப்ப வேண்டிய நிலைமை வரலாம். குழந்தைகள் படிக்
கவில்லை என்பதற்காகத் தாய் தந்தையர்மீது நடவடிக்கை
யெடுக்கக்கூடிய எந்தவொரு சட்டத்தையும் எப்படி அமல்
நடத்துவது, அதில் எவ்வளவு சிரமங்கள் இருக்கின்றன என்பதை
நினைத்துப் பார்க்க வேண்டும். சில குறிப்பிட்ட பிரிவினரே
படிக்கக்கூடாது என்று இருந்த அந்த நிலைமைகளை
மாற்றி, சமுதாய உணர்வுகளை வளர்த்து, சமுதாயப்
பழக்க வழக்கங்களை அந்த அளவிற்குக் கொண்டுவந்தபிறகும்
கூட அந்த மக்கள் **விழிப்படைந்து** விட்டார்களா என்று
சரிவர உணராத நிலையில் இப்படிப்பட்ட கட்டாயக் கல்விச்
சட்டத்தைக் கொண்டு அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பது
என்பது சரியாக இருக்காது. எனவே, நல்ல புத்திமதிகளைச்
சொல்லி, பிரச்சாரம் செய்து, நான் ஆரம்பத்திலே
குறிப்பிட்டதுமாதிரி, சமுதாயப் பொறுப்புகள் என்ற வீதத்தில்
இன்றைக்கு இதற்கு விரிவான தீர்வு கண்டால் அதில்
சங்கடங்கள் இருக்காது. குறிப்பாகச் சட்டமன்ற உறுப்பினர்
களைப் போன்றவர்கள், பொது வாழ்க்கையிலே இருக்கின்றவர்
கள் இதற்கு முயற்சித்தால் மிக எளிதிலே இந்தக் காரியங்
கள் நடைபெறும்.

[1983 நவம்பர் 9

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கும்படியான கணக்குப் பிர காரம் 1973–74 ஆம் ஆண்டிலிருந்து 1977–78 ஆம் ஆண்டு வரை உள்ள 3 ஆண்டு காலத்தில் 40 சதவீதம் டிராப்-அவுட் இருந்தது. அதற்குப் பிறகு உள்ள மூன்றாண்டு காலத்தில் 10 சதவீதம் குறைந்து 30 சதவீதம் ஆகி இருக்கின்றது என்று சொல்கிறார்கள். 30 சதவீதம் என்று சொன்னால் கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பகுதி குழந்தைகள் படிப்பிலிருந்து விடுபடுகிறார் கள் என்று தான் அர்த்தம். எனவே இது மிகவும் சீரியஸான விஷயமாகும். ஆகவே இதற்கான அடிப்படை காரணம் என்ன என்பதை அரசு ஆராய்ந்து பார்த்துள்ளதா ? அதற்காக ஏதா வது கமிஷனோ, குழுவோ நியமித்து விசாரணை செய்து விவரங் களைப் பெற்றிருக்கின்றதா ? சமூக உணர்வு போதாது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படி அது மட்டும் தான் காரணம் என்று இந்த அரசு உறுதியாக நம்புகின்றது என்று சொன்னால் அதைத் தீர்ப்பதற்கு என் னென்ன நடவடிக்கைகள் அரசின் பக்கத்திலிருந்து எடுக்கப்படு கின்றது என்பதை அறிய விரும்புகிறேன். கட்டாயக் கல்வி என்று சொல்லி தாய், தகப்பனைச் சிறையில் போடுவதல்ல, அரசு அந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்ற வகை யிலேதான் அது கட்டாயக் கல்வியாக வரவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. எனவே அதற்கு இந்த அரசு என்ன செய்து இருக்கின்றது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, 40 சதவீதமாக இருந்தது 30 சதவீதமாகக் குறைந்திருக்கின்றது என்பதே அகில இந்தியாவில் உள்ள நிலைமைகளை எடுத்துப் பார்க்கும்போது நமக்கு ஒரு குறிப்பிடத்தக்க வெற்றியாக இது கருதப்படுகின்றது. இந்த அளவுக்குக் குறைந்திருப்பதற்காக அனைவரும் பாராட்டுகிறார்கள். எனவே நாம் எடுத்துக் கொண்ட முயற்சிகள் பலன் அளித்துக் கொண்டிருக்கின்றன என் பதைத் தான் இந்தப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. ஆனால் இதனைத் தனித்துப் பார்க்கின்றபோது அச்சப்படத்தக்க அளவுள்ள ஒரு எண்ணிக்கையாகத் தோன்றலாம். ஆனால் இந்தியாவிலே உள்ள மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கின்ற போது, மற்ற மாநிலங்களில் 40 சதவீதம், 50 சதவீதம், 60 சதவீதம் என்றெல்லாம் இருக்கின்ற நிலைமையில் நமது மாநிலத்தில் 30 சதவீதம் என்று குறைந்திருப்பது வர வேற்கத்தக்க ஒன்றுதான். மேலும் இதனைக் குறைப்பதற்குத் தான் நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு இருக்கிறோம். சமுதாய உணர்வினை அதிகப்படுத்துவதற்காகத்தான் இப்போது எல்லா பள்ளிகளிலும் பெற்றோர்-ஆசிரியர் சங்கங்கள் துவங்க வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறோம். அதுவும் தேர்தல் முறையிலே நடத்தி அந்தச் சங்கங்களை உருவாக்க வேண்டும் என்று சொல்லி இருக்கிறோம். இன்றைக்கு இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் தேர்தல் மூலமாக பெற்றோர்-ஆசிரியர்



1983 நவம்பர் 9]

கழகங்களை நாம் உருவாக்கி இருக்கிறோம். பெற்றோர்களாக அவர்கள் இருப்பதன் காரணத்தால் பிரச்சாரம் செய்து குழந் தைகளைக் கொண்டு வந்து சேர்ப்பதிலே ஆர்வம் காட்டுகிறார் கள். குழந்தைகளைக் கொண்டு வந்து சேர்ப்பதிலே ஆசிரியர் களும் ஆர்வம் காட்டுகிறார்கள். ஏனென்றால் குழந்தைகளின் எண்ணிக்கை குறைந்தால் ஆசிரியர்களை வேறு இடங்களுக்கு மாற்றுதல், ஆசிரியர்களுக்கு வேலை இல்லாமல் போய்விடுகின்ற நிலைமை ஏற்படுதல், போன்ற சூழ்நிலைகள் ஏற்படக்கூடும். எனவே இதன் காரணமாக ஆசிரியர்களும் ஆண்டுதோறும் வீடு வீடாகச் சென்று குழந்தைகளைக் கொண்டு வருகிறார்கள். மேலும் குழந்தைகளின் தாய்-தந்தையர் படிக்காமல் இருக்கின்ற காரணத்தை உணர்ந்து முதியோர் கல்வித் திட்டத்தையும் வேக மாக நாம் பரப்பி வருகிறோம். அதனுடைய அடிப்படைக் கருத்து என்னவென்றால் தாய்-தந்தையர் படித்திருந்தால், குழந்தைகளையும் படிக்க வைக்க வேண்டும் என்ற ஆர்வம் அவர் களுக்கு இருக்கும் என்பதுதான். அந்த அடிப்படைக் கருத்தினை வைத்துத்தான் முதியோர் கல்வித் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறோம். 3 ஆவது வகுப்பு வரை குழந்தைகளை நிறுத்தக் கூடாது என்பதற்காகத்தான் அவர்களுக்குப் புத்தகங்கள் தருவது, உடைகள் தருவது இன்னும் பல்வேறு சலுகைகளைச் செய்வது என்ற வகையில் பல்வேறு திட்டங்களை மேற் கொண்டிருக் கிறோம். அத் திட்டங்கள் பலனளித்துக் கொண்டிருக்கின்றன. எனவே இப்போது இருக்கின்ற இந்த 30.36 சதவீதம் என்பதிலே நாங்கள் திருப்தி அடைந்துவிடவில்லை. மேலும் இதனைக் குறைப்பதற்கு என்னென்ன செய்ய வேண்டுமோ அவை அனைத் தையும் செய்து வருகிறோம்.

**மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கான என். சி. சி. பயிற்சி.**

*வினா எண் 133—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு [+2 மாணவர் கள்] என்.சி.சி. பயிற்சி பெறுவதற்கான வசதி இல்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில் இதற்கான வசதியை அனைத்து மேல் நிலைப் பள்ளிகளிலும் ஏற்படுத்த அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (ஆ) மேல் நிலைப்பள்ளி மாணவர்களுக்கும் முதலாம் ஆண்டு அதாவது XI ஆம் வகுப்பில் மட்டும் தற்போது தேசிய மாணவர் படைப் பயிற்சி தரப்படுகிறது.

[1983 நவம்பர் 9

**திரு. என். பழனிவேல்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேல்நிலைப் பள்ளியின் முதலாண்டு மாணவர்களுக்கு மட்டுமே என்.சி.சி. பயிற்சி கொடுக்கப்படுவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். ஆனால் சில பகுதிகளில் முதல் ஆண்டு மாணவர்களுக்குக் கூட அம்மாதிரி பயிற்சி கொடுக்கப்படுவதில்லை என்பது அரசுக்கு தெரியுமா? அப்படிக் கொடுக்கப்படாமல் இருப்பதற்கான காரணம் என்ன? எனவே அவர்களுக்கும் அந்த பயிற்சியினை உடனடியாகக் கொடுப்பதற்கு அரசு முயற்சிக்குமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்** : தலைவர் அவர்களே, 11 ஆவது வகுப்பில் இப்போது நாம் தேசிய மாணவர் படைப் பயிற்சியை ஆரம்பித்திருக்கிறோம். 1978–79 ஆம் ஆண்டிலே மேல்நிலைப் பள்ளிக் கல்வி முறை வந்தது. அந்த ஹையர் செகண்டரி வகுப்பு மாணவர்களுக்கு என்.சி.சி. பயிற்சி இல்லாமல் இருந்தது. அதற்குப் பிறகு டெல்லியிலே பேசி 11, 12ஆவது வகுப்பு மாணவர்களுக்கும் என்.சி.சி. பயிற்சி கொடுக்கப்பட வேண்டும் என்பதைக் கொண்டு வந்திருக்கிறோம்.

(முற்பகல் 9—30)

அந்த ஜூனியர் டிவிஷன் பயிற்சியை 11 இல் பெறாதவர்கள் 12 இல் பெற முடியும். எல்லா மாணவர்களுக்கும் என்.சி.சி. பயிற்சி தருவதில்லை. எல்லாப் பள்ளிகளிலும் தருவதில்லை. டெல்லியிலிருந்து நமக்கு அனுமதிக்கிற அளவிற்கு வைத்துக் கொண்டு எவ்வளவு பள்ளிகளுக்குத் தரமுடியுமோ அந்தளவு பள்ளிகளுக்கு அந்தப் பயிற்சியைத் தந்து கொண்டிருக்கிறோம்.

**திரு. என். பழனிவேல்** : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது எல்லா மாணவர்களுக்கும் இம்மாதிரிப் பயிற்சி கொடுப்பதில்லை என்றும் டெல்லியிலிருந்து அனுமதி கிடைக்கக்கூடிய அளவிற்குத்தான் இங்கே பயிற்சி கொடுக்கப்படுகிறது என்றும் சொன்னார்கள். ப்ளஸ் 2 படிக்கக் கூடிய மாணவர்கள் எல்லோரும் ஓரே தரத்தில் இருப்பவர்கள் என்றுதான் நாம் கருத வேண்டியுள்ளது, அவர்கள் வேலைக்கோ அல்லது மேல் படிப்பிற்கோ செல்லும்போது கூட சில சர்டிபிகேட்டுகளைக் கேட்கிறார்கள். அவற்றிற்கு என்.சி.சி. சர்டிபிக்கட் உதவிகரமாகயிருக்கிறது. ஆகவே எந்தவித பாரபட்சமும் இல்லாமல் தமிழகத்தில் உள்ள எல்லாப் பள்ளிகளிலும் உள்ள ப்ளஸ் 2 மாணவர்களுக்கு இந்தப் பயிற்சியைக் கொடுப்பதற்கு அரசு முயற்சிக்குமா என அறிய விரும்புகிறேன்.



1983 நவம்பர் 9]

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்** : தலைவர் அவர்களே, எல்லா மாணவர்களுக்கும் அப்படித் தரவேண்டும் என்ற கருத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வைத்திருக்கிறார்கள். அந்தக் கருத்தை டெல்லிக்கு அனுப்பிய போது அவர்கள் அதை இப்போதிருக்கிற நிலைமையில் ஏற்றுக் கொள்வதற்கில்லை என்று சொல்லிவிட்டார்கள். ஆனால் என்.சி.சி. என்று சொல்கிறபோது என்.சி.சி. என்று மட்டுந்தான் இல்லை. என்.எஸ்.எஸ். பயிற்சி தருகிறோம். அந்த சர்டிபிகேட்டு வாங்கினாலும் அதற்கு மதிப்பு இருக்கிறது. ஸ்கௌட் மூவ்மெண்ட் இருக்கிறது. இப்படி வேறு பல வாய்ப்புகள் இருப்பதால் ஒவ்வொரு மாணவனும் ஏதாவது ஒன்றில் சேர்ந்து அந்த சர்டிபிகேட்டைப் பெறுவார்களானால் வேலைக்கோ அல்லது மேல் கல்விக்கோ போகிறபோது அதைக் கணக்கில் எடுத்துக் கொள்வார்கள்.

**திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான்** : தலைவர் அவர்களே, இப்போது பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள் இவற்றில் இன்டிஸிப்ளின் அதிகமாகிக் கொண்டு வருகிறது என்று சொல்கிறார்கள். இந்தக் காரணத்தால் எல்லா மாணவர்களுக்கும் என்.சி.சி. பயிற்சி கொடுப்பது என்பது அவசியம் என்பதை அரசு அறியுமா ? அதோடு இந்த என்.சி.சி. பயிற்சியை எல்லா மாணவர்களுக்கும் கொடுக்க வேண்டுமென்றால் அதற்கு டெல்லியிலிருந்து அனுமதி கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். அதற்குக் காரணம் என்ன என அறிய விரும்புகிறேன். ஒன்று பைனான்ஷியல் டிபிகல்டீஸ் இருக்கிறதா ? அப்படி டிபிகல்டீஸ் இருந்தால் அரசாங்கம் இருக்கக்கூடிய நிலைமைகளைச் சொல்லி இன்னும் அதிகப்படியான நிதி வாங்குவதற்கு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்** : தலைவர் அவர்களே, இந்த என்.சி.சி. அட்வைஸரி கமிட்டி பாதுகாப்புத் துறை அமைச்சரின் தலைமையில்தான் செயல்பட்டு வருகிறது. அவர்கள் இதுபற்றி தீர்மானித்துத்தான் பல முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்கள். அந்த டைரக்டர்-ஜெனரல் சென்னைக்கு வந்திருந்தபோது நமது மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள், அவர்களிடம் சொல்லியிருக்கிறார்கள். எல்லா மாணவர்களுக்கும் பயிற்சி தருவது நல்லது என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆக, நமக்கு சந்தர்ப்பம் கிடைக்கும்போது டெல்லிக்கு எழுத்து மூலமாகவும் நேரில் பேசுகிற போதும் நாம் எடுத்துச் சொல்லி வருகிறோம். அவர்கள் பணத்தை அடிப்படையாக வைத்து— பணத்தோடு கூட பாதுகாப்புப் பிரிவைச் சார்ந்த அதிகாரிகளையும் அதற்குப் பயன்படுத்த வேண்டும். இது ஏறக்குறைய ஒரு மிலிட்டரி ட்ரெயினிங் மாதிரி இருக்கிற காரணத்தால் அதிலுள்ள வேறு சில சிரமங்களையும் வைத்துக்கொண்டு எல்லா மாணவர்களுக்கும் இந்தப் பயிற்சி பெறுகிற வாய்ப்பைத் தருவதற்கு இன்னும் ஒத்துக் கொள்ளவில்லை என்பதைத்தான் நான் இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

[1983 நவம்பர் 9

மாணவர்களுடைய ஒழுங்கின்மை பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். நான்கைந்து ஆண்டுகளுக்கு முன்னால் இருந்ததை விட இப்போது கொஞ்சம் முன்னேற்றம் அடைந்து கொண்டு வருகிறோம். இதில் ஓரளவிற்கு நல்ல நிலைமைக்கு வந்து விடும் என நம்புகிறேன். என்.சி.சி. இல்லாமலேயே பள்ளிக்கூடங்களிலும், கல்லூரிகளிலும் நல்ல ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் நாம் காப்பாற்ற முடியும். அதற்கு மாணவர்கள் ஒத்துழைப்பும், ஆசிரியர்கள் ஒத்துழைப்பும் இப்போது இருந்து வருகிறது என்பதை இங்கே நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி : தலைவர் அவர்களே, என்.சி.சி. பயிற்சி கொடுப்பதன் நோக்கம் என்ன ? அப்படி பயிற்சி கொடுக்கப்படுகிற மாணவர்கள் படிப்பை முடித்து விட்டு வெளியே சென்று விடும்போது அப்பயிற்சி அவர்களுக்கு உதவிகரமாக இருக்கும் வகையில் ஆண்டுக்கு ஒரு மாதம் மீண்டும் அவர்களை அழைத்து அந்தப் பயிற்சியைப் புதுப்பித்து அதை நாட்டுக்குப் பயன்படுத்தும் வகையில் ஆவன செய்ய அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, என்.சி.சி. பயிற்சி தருவது, ஒன்று அவர்கள் படிக்கிற காலத்தில் ஒழுங்கோடும், கட்டுப்பாட்டோடும் இருப்பார்கள் என்ற நோக்கம். இன்னொன்று, அப்படி அந்தப் பயிற்சி பெற்றவர்கள் எதிர் காலத்தில் பாதுகாப்புப் படையில் சேர்ந்து இந்த நாட்டினுடைய பாதுகாப்பை காப்பதில் அவர்கள் பங்கெடுத்துக் கொள்வார்கள் என்ற ஒரு நோக்கமும் அதில் இருக்கிறது. அதில் எந்தளவிற்கு அவர்கள் போய் அந்தப் பாதுகாப்புப் படையில் சேருகிறார்கள் என்றால், தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் அது கவலைக்குரிய ஒன்றாகும். நம் இளைஞர்கள், மாணவர்கள் பட்டாளத்திற்குப் போவதில் அதிகப்படியான ஒரு ஆர்வத்தோடு வருவதில்லை என்பதைத்தான் நாம் இன்று பார்க்கிறோம். மாணவர்களில் ஒரு பெரும் பகுதி பேர் படையில் சேர வேண்டும், பல்வேறு பிரிவுகளுக்கு வரவேண்டும் என்ற ஆர்வத்தோடு வந்தால், என்.சி.சி. பயிற்சியை ஆரம்பித்ததன் பயனை நாம் பெறுவோம்.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு இளைஞர்களுக்கு போர்ப் பயிர்ச்சி அளிக்க வேண்டுமென்ற அவசியம் அதிகமாகியிருக்கிறது என்பதை இந்த அரசு அறிந்திருக்கிறதா ? அதை மனதிலே வைத்து, எல்லா மாணவர்களுக்கும் என். சி. சி. பயிற்சியைக் கொடுக்கும் திட்டத்தை உடனடியாக கொண்டுவர, மத்திய அரசை இந்த அரசு வற்புறுத்துமா என்று அறிய விரும்பகிறேன் ?



1983 நவம்பர் 9]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, எல்லா மாணவர்களுக்கும் என்.சி.சி. பயிற்சியைத் தர வேண்டுமென்ற முடிவெடுத்து, இரண்டு ஆண்டுகள் ஆகின்றன. அதற்கான தொடர்புகள் வைத்துக்கொண்டுகூட இரண்டாண்டுகள் ஆகின்றன. இன்றைய தேவையை மனதில் கொண்டு, என்றைக்கும் நாம் தயாராக இருக்க வேண்டும், கட்டுப்பாடோடும், ஒழுங்கோடும் இருக்க வேண்டும், பாதுகாப்புப் படையிலே மற்ற மாநிலங்களைப் போல் அதிகமான அளவுக்கு நம் மாநிலத்து மாணவர்கள் அதிக எண்ணிக்கையில் சேர வேண்டும் என்ற எண்ணத்தில்தான் இப்போது எல்லா மாணவர்களுக்கும் அந்தப் பயிற்சியை நாம் தரவேண்டும் என்று விரும்புகிறோம்.

நலிந்த நிலையிலுள்ள கலைஞர்களுக்கு உதவி
செய்யும் குழுவின் உறுப்பினர்கள்.

*வினா எண். 134 – திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நலிந்த நிலையிலுள்ள கலைஞர்களுக்கு உதவி செய்யும் குழுவில் எத்தனை உறுப்பினர்கள் உள்ளனர் ?

(ஆ) 1983 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் முடிய எத்தனை கலைஞர்கள் குடும்பம் இத்திட்டத்தினால் உதவி பெற்றுள்ளது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஐந்து உறுப்பினர்கள்.

(ஆ) 1,416.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நலிந்த கலைஞர்கள் பிரிவில் நாடகக் குழுவினரும் சேர்க்கப்பட்டிருந்தாலும், நாதஸ்வர வித்வான்களில் எத்தனை பேர்களுக்கு இந்த நிதி உதவி கொடுக்கப்பட்டிருக்கிறது ? அவர்கள் மனுக்கள் அனுப்பியும் இன்னும் கிடைக்கவில்லை ; நானே அமைச்சர் அவர்களிடம் இது சம்பந்தமான கடிதத்தைக் கொடுத்திருக்கிறேன். ஆகவே, எல்லோருக்கும் கிடைப்பதற்கு, எல்லா நலிந்த நாதஸ்வர வித்வான்களுக்கும் நிதி உதவி கொடுப்பதற்கு வருங்காலத்திலாவது இந்த அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன் ?

[1983 நவம்பர் 9

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, எல்லோருக்கும் கொடுப்பது என்பது முடியாத காரியம். நலிந்த கலைஞர்களுக்கு நாம் குறிப்பிட்ட எண்ணிக்கையில்தருவதுஎன்கிறஒரு முடிவை எடுத்திருக்கிறோம். இப்போது 1982—83 ஆம் ஆண்டில் 200 பேர்களுக்கு தருகிறோம். இந்த 200 பேர்களிலே பல்வேறு கலைஞர்கள் இருப்பார்கள். அவர்களிடம் விண்ணப்பம் பெறப்பட்டு, அவர்கள் உண்மையான நலிந்த கலைஞர்களா என்று பார்க்க கலெக்டர் மூலம் விசாரித்து, அந்த அடிப்படையிலே இந்த 200 பேர்களைத் தேர்ந்தெடுக்கிறோம். ஆகவே, இதிலே வாய்ப்பு கிடைக்கின்றவர்களுக்கு இந்த உதவி கிடைக்கும்.

**திரு. எல். இளையபெருமாள் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குழுவிலே 5 உறுப்பினர்கள் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் யார் ? யார் ? இந்தக் கலைக் குழுவிலே நாதஸ்வரக் கலையில் தேர்ச்சி பெற்றவர்கள் இருக்கிறார்களா ? என்ற விவரத்தை அறிய விரும்புகிறேன் ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, செயலாளர், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் ; கௌரவ இயக்குநர், அரசு இசைக் கல்லூரி. தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் செயலாளர் திரு. டீ. வி. நாராயணசாமி ஆவார்கள் ; அரசு இசைக் கல்லூரியின் கௌரவ இயக்குநர் திரு. சிதம்பரம் ஜெயராமன் ஆவார்கள். முதல்வர், அரசு கலை, கைத்திறன் கல்லூரி, சென்னை. தலைவர், அரசு திரைப்பட மற்றும் தொலைக் காட்சி நிறுவனம், சென்னை. செயலாளர், தமிழ்நாடு ஓவியம் நுண்கலை குழு (அமைப்பாளர்). இந்த ஐந்து பேர்களும் இந்தக் குழுவில் இருந்து ஓவியம், நாடகம், நாட்டியம், இசை இதுபோன்ற பலதரப்பட்ட கலைஞர்களைத் தேர்ந்தெடுத்து, அதிலே தகுதியானவர்களுக்கு தந்து கொண்டிருக்கிறார்கள்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாகவத மேளம் என்பது ஒரு அற்புதமான கலையாகும். இந்தக் கலையைப் பரப்பி வந்த ஒரு கலைஞர் இன்று வறுமையால் வாடியதாகவும், அவருக்கு அண்டை மாநில ஆளுநர் ரூ. 500-க்கு செக் கொடுத்ததாகவும் பத்திரிகையில் செய்தி வந்தது. இதுபோன்ற கலைஞர்களுக்கு அவர்களது கோரிக்கையை ஏற்று உடனடியாக உதவ அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.



1983 நவம்பர் 9]

[முற்பகல் 9-40]

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்டவர்களுக்காகத்தான் நாம் இந்தத் திட்டத்தை நடத்திக்கொண்டு வருகிறோம். ஆனால் அதிலே இருக்கும் முக்கியமான ஒன்று, இந்தக் கலைஞர்கள் வறுமையில் ஏன் வாடுகிறார்கள் என்பதை நாம் பார்க்க வேண்டும். அவர்கள் நலிந்து போனதற்குக் காரணம், வறுமையால் வாடுவதற்குக் காரணம், அவர்கள் பயிலுகின்ற அந்தக் கலை மக்களோடு தொடர்பு இல்லாமல் இருக்கின்ற காரணத்தால் ஏற்படுவதாகும். அவர்கள் மக்களைப் பற்றி கவலைப் பட்டு, மக்களோடு தொடர்பு கொண்டு இருந்தால் யாரும் வறுமையால் வாடும் நிலைக்கு மக்கள் விடமாட்டார்கள் என்பதை இந்த நேரத்தில் சொல்லி இப்போது இருக்கும் கலைஞர்கள் அதை உணர்ந்து, மக்களுடைய ஒரு நிலையை உணர்ந்து, தங்களுடைய கலையைப் பயன்படுத்துவார்களானால், எந்த நேரத்திலும் அவர்கள் வறுமையில் வாட வேண்டியிருக்காது.

**திரு. மு. அம்பிகாபதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நலிந்த கலைஞர்களுக்கு உதவுகின்ற திட்டத்தின் கீழ், நலிவுற்று இருக்கின்ற அனைத்துக் கலைஞர்களுக்கும் உதவி தர அரசு முன் வருமா ? உதாரணமாக, வறுமையில் வாடும் நாடக நடிகர் எம். என். முருகையா, கிளாரினெட் வித்வான் மன்னை தாஸ், சினிமா நடிகர் சி. எஸ். பாண்டியன் போன்ற கலைஞர்களுக்கு உதவி செய்ய அரசு முன்வருமா ? மேலும், ஒரு கட்டுப்பாடு வைத்து இவ்வளவு கலைஞர்களுக்கு உதவி என்று இல்லாமல், அனைவருக்கும் உதவி வழங்க அரசு முன் வருமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, இதிலே கலைஞர்கள் அல்லாத பலரும், நலிந்த கலைஞர்கள் என்ற போர்வையில், அந்தப் பயனை அடையக்கூடிய வாய்ப்பு இருக்கிறது என்பதை நாம் உணர வேண்டும். அரசு இந்தத் திட்டத்தை எதற்காகக் கொண்டு வந்ததோ அதற்கு ஊக்கம் அளிக்கிறபோது, நாம் அதிலே ஏமார்ந்து விடக்கூடாது. ஒரு கட்டுப்பாடு இல்லாமல் போய்விட்டால், இரண்டு நாளைக்கு நாதஸ்வரம் வாசித்து விட்டு நானும் கலைஞன் என்று சொல்லி, தற்போது நலிந்த நிலையில் இருக்கிறேன் உதவி தாருங்கள் என்று கேட்கக் கூடிய நிலைமையேற்படும். நாம் எழுத்தாளர்களுக்கும் இப்படிப்பட்ட உதவி தருவதற்கு இருக்கிறோம். இரண்டு பக்கம் எழுதிவிட்டு நானும் ஒரு எழுத்தாளன் என்று சொல்லி, உதவி கேட்கும் நிலைமையேற்படும். அப்படிப்பட்ட நேரத்தில் நாம் ஆமாம் என்றும் சொல்ல முடியாது, இல்லை என்றும் சொல்ல முடியாது. இந்தத் திட்டத்தை நாம் யாருக்காகக் கொண்டு வந்தோமோ அவர்களுக்கே கூட பின்னால் கிடைக்காமல் போய்விடுக்கூடிய நிலைமையேற்படும். ஆகவே, இதிலே ஒரு கட்டுப்பாடு தேவை.

திரு. வே. இராஜசேகரன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்த அந்த 5 உறுப்பினர்களும் அரசு துறையைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். அரசின் சார்பாக அமைக்கப்பெற்ற மற்ற குழுக்களில் பொதுமக்கள் பிரதிநிதிகள் இடம் பெற்று இருப்பதால், இந்தக் குழுவிலும் பொது மக்களின் பிரதிநிதி ஒருவரை நியமிக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட எண்ணம் இப்போது இல்லை.

## தமிழ்நாட்டிலுள்ள சைனிக் பள்ளி.

*வினா எண் 135—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள சைனிக் பள்ளியில் சேரும் தமிழ் நாட்டைச் சேர்ந்த மாணவர்களுக்குத் தமிழக அரசுஉதவிப் பணம் கொடுத்து வருகிறதா ?

(ஆ) ஆம் எனில் எந்தெந்த தகுதியின் அடிப்படையில் உதவித் தொகை வழங்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(ஆ) மாணவர்களின் பெற்றோரின் வருமானத்தின் அடிப்படையில் படிப்பு உதவித் தொகை வழங்கப்படுகிறது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர்களுக்கு வழங்கப்படும் உதவித்தொகை மட்டுமல்லாமல், அந்தப் பள்ளியை நடத்துகின்ற ரிஜிஸ்டிரார், பள்ளி முதல்வர் போக மற்றவர்கள் செலவையும் மாநில அரசே ஏற்றுக்கொள்கிறதா ? ஆமெனில், இதேபோன்று மற்றொரு சைனிக் பள்ளியை தமிழகத்தில் உருவாக்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்குச் சம்பந்தம் இல்லாத கேள்வியாக இருக்கின்ற காரணத்தால் தனியாகக் கேட்டால் ஏதாவது விவரங்களைச் சேகரித்து நான் தர முடியும்.



## விபத்துக்குள்ளாகி மரணமடையும் டாக்சி, ஆட்டோ, லாரி டிரைவர்களின் குடும்பத்திற்கான அரசு உதவி.

*வினா எண் 136—திரு. சு. முத்துக்கிருஷ்ணன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) டாக்சிகள், ஆட்டோக்கள், லாரிகள் ஓட்டி விபத்துக் குள்ளாகி மரணம் அடையும் டிரைவர்களின் குடும்பத்திற்கு அரசு உதவி அளிக்குமா ?

(ஆ) தனியார் வண்டிகளை ஓட்டும் டிரைவர்களின் பணிப் பாதுகாப்புக்கு அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :(அ) டாக்சிகள், ஆட்டோக்கள், லாரிகள் ஓட்டி மரண மடையும் டிரைவர்களது குடும்ப திற்கு முதலமைச்சரது விபத்து நிவாரண நிதியிலிருந்து ரூபாய் 1,000 உதவி அளிக்கப்படுகிறது.

(ஆ) தனியார்கள் வண்டிகளை ஓட்டும் டிரைவர்களின் பணிப்பாதுகாப்பு மற்றும் ஏனைய நிலைமைகளுக்கு 1961 ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்து தொழிலாளர்கள் சட்டத்தின் கீழ் வகை செய்யப்பட்டு இருக்கிறது. 1947 ஆம் ஆண்டு தொழில் தகராறு சட்டத்தின்கீழ் அத்தகையவர்கள் வேலையிழப்பு ஊதியம் போன்றவைகளில் தீர்வு காண வகைசெய்யப்பட்டு இருக்கிறது. அத்தகைய தொழிலாளர்கள் பணி புரியுங்கால் விபத்துக்குள்ளாகி மரணம் அடைந்தாலோ அல்லது உடல் ஊன முற்றாலோ அவரைச் சார்ந்தவரோ. அல்லது அவரோ 1923 ஆம் ஆண்டு வேலையாள் இழப்பீட்டுச் சட்டத்தின் கீழ் இழப்பீடு பெறத் தகுதியுடையவர் ஆவர்.

திரு. சு. முத்துக்கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, டாக்சி டிரைவர்கள், ஆட்டோ டிரைவர்கள், லாரி டிரைவர்கள் விபத்தில் மரணம் அடைந்தால் முதலமைச்சர் நிவாரண நிதியில் இருந்து ரூ. 1,000 கொடுப்பதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். பனைத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் விபத்தில் மரணம் அடைந்தால் 5,000 ரூபாய் கொடுக்கப்படுகிறது. அதே போல் இந்த டிரைவர்களுக்கும் இப்போது கொடுக்கப்படும் ரூ. 1,000 என்பதை ரூ. 5,000 என்று உயர்த்திக்கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, பனைத் தொழிலில் ஈடுபடக்கூடியவர்களுக்கு இன்ஷூரன்ஸ் போன்ற வாய்ப்பு அதிகமாக இல்லை. மேலும் அவர்கள் தாங்களாகவே அந்தத் தொழிலை ஏற்றுக்கொண்டு செய்கிறார்கள். ஆனால் இந்த ஓட்டுநர்களைப் பொறுத்தவரையில், யாராவது ஒருவர் அவர்களை பணியிலே அமர்த்தியிருக்கிறார்கள். எனவே ஓட்டுநர்களுக்கு இதுபோன்ற மற்ற வாய்ப்புகள் அதிகமாக இருப்பதால் அவர்களையும் இவர்களையும் ஒப்பிட்டுப் பேசுவது சரியல்ல.

திரு. சு. முத்துக்கிருஷ்ணன் : தலைவரவர்களே, விபத்திலே மரணம் அடைகின்ற தனியார் போக்குவரத்துக்களை ஓட்டுகின்ற பல டிரைவர்களுடைய குடும்பங்களுக்கு, அவர்களுக்கு உரிய பணம் கொடுக்கப்படவில்லை என்று பல இடங்களிலிருந்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு புகார் செய்துள்ளார்கள். அதைப்போன்று எத்தனை பேர்களுக்கு இன்னும் உதவிப்பணம் கொடுக்கப்படவில்லை? அந்தக் குடும்பங்களுக்கு உடனடியாக அந்த வசதியை செய்துகொடுக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, சில விதிகளைப் போட்டு அந்த விதிகளுக்கு உட்பட்டு நாம் பணம் கொடுக்கிறோம். அந்த விதிகளுக்கு உட்பட்டு வருகின்ற அத்தனை பேர்களுக்கும் பணம் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்கிறது. அந்த விதிமுறைகளுக்கு கட்டுப்படாமல் இருந்தால், உதாரணமாக லைசென்ஸ் இல்லாமல் விபத்து அடைந்திருப்பார்கள், அவர்களுக்கு கொடுக்க முயற்சி எடுக்க முடியாது. எவ்வளவு பேர்கள் இன்னும் பணம் வாங்காமல் இருக்கிறார்கள் என்ற பட்டியல் என்னிடம் இல்லை. அரசாங்கம் சட்டப்படி கொடுக்க வேண்டியதைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : தலைவரவர்களே, தற்போது சில இடங்களில் ஓட்டுநர் மது அருந்திவிட்டு லாரிகளையும் மற்ற வண்டிகளையும் ஓட்டிச் செல்வதால் விபத்து அதிகமாக இருக்கிறது என்பதை அரசு அறியுமா? அதைத் தடுக்க, தவிர்க்க அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது அல்லது இனிமேல் எடுக்க உத்தேசித்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்,





மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, இப்படிப்பட்ட நேர்வுகளில் மாண்புமிகு உறுப்பினர்களுடைய ஒத்துழைப்போடு கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று அரசு முயற்சி செய்கிறது. மது அருந்தி விட்டு லாரி, பேருந்துகளை ஓட்டக்கூடாது; அப்படி ஓட்டுகிறார்களா இல்லையா என்பதை போக்குவரத்துத் துறையும் காவல் துறையும் கவனித்து வருகின்றன. நம்முடைய கட்டுப்பாட்டை மீறி நடக்கிறவர்கள்மீது நடவடிக்கை எடுக்கிறோம். சில சம்பவங்களில் இப்படி நடவடிக்கை எடுக்கும்போது அரசியல் ரீதியிலோ மற்ற வகையிலோ அவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்ற உணர்வு நமக்கு வராமல் இருந்தால் இன்னும் நல்லமுறையில் செயல்படுத்த முடியும்.

திரு. கோவைத்தம்பி : தலைவரவர்களே, மது அருந்திவிட்டு பேருந்துகளை ஓட்டினாலும் அல்லது லைசென்ஸ் இல்லாமல் பேருந்துகளை ஓட்டினாலும் விபத்து ஏற்பட்டால் சம்பந்தப்பட்ட டிரைவர்களுக்கு மரண தண்டனை அளிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனையை ஆலோசிக்கவே வழியில்லாமல் இருக்கிறது என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ராஜகுமார் விஜயரெகுநாத தொண்டமான் : தலைவரவர்களே, ஒருசில தனியார் பஸ்கள், லாரிகளை ஓட்டுகின்ற டிரைவர்கள் இறந்துபோகிற நேரத்தில் அவர்களுக்கு சேர வேண்டிய காம்பன்சேஷன் தொகையை அந்த தனியார் பஸ் லாரி கம்பெனிகளிலிருந்து கோர்ட் உத்தரவு போட்டபின்னாலும் கூட கொடுக்காமல் இருக்கிறார்களே. அதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது? உடனடியாகக் கொடுக்க இனிமேல் என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, அரசாக இருந்தாலும் தனியாராக இருந்தாலும் நீதிமன்றம் போடுகின்ற உத்தரவை அல்லது கொடுக்கின்ற தீர்ப்பை ஏற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்த வேண்டும். அப்படி யாராவது செய்யாமல் இருந்தால் மீண்டும் நீதிமன்றத்திலே முறையீடு செய்து, மேல் நடவடிக்கையாக என்ன செய்யவேண்டுமென்று அரசாங்கத்திற்கே கூட தாக்கீது அனுப்ப ஏற்பாடு செய்ய முடியும். ஆகையால் அந்த வகையிலேதான் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**திரு. இரா. கருப்பையா :** தலைவரவர்களே, லாரி, பேருந்துகளை ஓட்டுகின்ற ஓட்டுநர்கள் விபத்துகள் காரணமாக மரணம் அடையக்கூடிய நிலை ஏற்பட்டால் சில விதிமுறைகளுக்கு உட்பட்டு, முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து நிவாரணம் அளிக்கப்படுகிறது என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவித்தார்கள் அரசு விதித்துள்ள விதிமுறைகளுக்கு உட்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கவேண்டும் என்ற முறையில் அதற்கு உட்பட்டு பரிந்துரை செய்யப்பட்டவர்களுக்குகூட ஓராண்டுக்கு மேலாகியும் போக்குவரத்துத் துறையிலிருந்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் ரெவின்யூ டிவிஷனல் ஆபீசர்களுக்கும் நிதி ஒதுக்கீடு செய்து அனுப்பாத காரணத்தால் அவர்களுக்கு நிவாரணம் அளிக்கப்படவில்லை என்ற புகார் அரசுக்கு வந்திருக்கிறதா? உடனடியாக நிவாரணம் அளிக்க நிதி அனுப்பி வைக்கப்பட்டு கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

(முற்பகல் 9-50)

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட ஒரு நிலைமை இருப்பதாக அரசுக்குப் புகார் எதுவும் வரவில்லை. அரசாங்கம் உத்தரவு போட்டால் நிறைவேற்ற வேண்டியது அதிகாரிகளுடைய பொறுப்பு. குறிப்பிட்ட இடத்தில் நடந்தால் அதை அரசாங்கத்திற்கு உடனே தெரிவிக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூட மொத்தமாகச் சொன்னார்கள். ஒரு குறிப்பிட்ட இடத்தைச் சொன்னால் அதை கண்டு பிடிக்க வாய்ப்பாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு) திருச்சி மாவட்டத்தில் இருப்பதாகச் சொல்கிறார்கள். அப்படி இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடம் யாராவது புகார் கொடுத்திருந்தால், அதை என்னிடம் கொடுத்தால் அதைக் கண்டு பிடிப்பதற்கு வசதியாக இருக்கும். இப்படிச் சொல்கிறபோது, அந்தப் புகார் மனுக்களைக் கொடுத்தால் இன்னும் கொஞ்சம் கடுமையாகவும் வேகமாகவும் செய்வதற்கு வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### அரசு போக்குவரத்துக்கழகங்களில் பணி புரியும் தினக்கூலி தொழிலாளர்கள்.

வினா எண் 137—**திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) அரசு போக்குவரத்துக் கழகங்களில் தினக்கூலி தொழிலாளிகள் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளார்களா ?

(ஆ) ஒவ்வொரு கழகத்திலும் எத்தனை தொழிலாளர்கள் அவ்வாறு நியமிக்கப்பட்டுள்ளார்கள் ?

(இ) அவர்களை நிரந்தரமாக்குவதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?



**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** (அ) ஆம்.

(ஆ)

| கழகத்தின் பெயர். | தினக்கூலி தொழிலாளர்கள் எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| (1) சேரன் .. .. .. .. | 90 |
| (2) கட்டபொம்மன் .. .. | 44 |
| (3) திருவள்ளுவர் .. .. .. | 16 |
| (4) பல்லவன் .. .. .. | 644 |
| (5) தந்தை பெரியார் .. .. | 399 |
| (6) பட்டுக்கோட்டை அழகிரி ஏனைய கழகங்களில் இல்லை. | 331 |

(இ) தினக்கூலி தொழிலாளர்கள் 240 நாட்கள் வேலை செய்த பின்னர் அவர்களின் பணி கழக விதிகளின் கீழ் நிரந்தரம் செய்யப்படுகின்றது.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் 1—9—1983 முதல் அமல் படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்ட ஊதிய உயர்வு கழகத்தில் உள்ள ஏறத்தாழ எங்களுடைய தகவல்படி 20 ஆயிரம் தொழிலாளர்களுக்கும் அதிகமான தினக்கூலிகள் இருக்கின்றார்கள். அந்தத் தொழிலாளர்களுக்கு ஏற்கனவே கிடைத்துவந்த 529.30 ரூபாய் ஊதியத்தில் இருந்து 10 காசு குறைவாகக் கிடைத்திருக்கின்ற காரணத்தாலே, அதிலும் விகிதாசாரத்தில் தினக்கூலிதான் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதாலும் தினக்கூலி தொழிலாளர்களுக்கு பிராவிடன்ட் பன்டு, ஹவுஸ்ரென்ட் அலவன்சு, ஊதிய உயர்வு கிடைக்கவில்லை என்ற காரணத்தினாலே 1—9—1983-க்கு முன் பணியில் இருந்த அனைத்துத் தினக் கூலி தொழிலாளர்களை நிரந்தரப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** துணை வினாக்களை சுருக்கமாகக் கேட்கவேண்டும்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) வேலை நேரத்தை குறைக்க வேண்டும் என்று எழுத்து மூலமாக விண்ணப்பம் நிர் வாகப் பணியாளர்கள் சங்கத்திடமிருந்து சமீப காலத்தில் அரசுக்கு ஏதும் வரவில்லை. ஆனால் அவர்கள் வாய் மூலமாக அநேக தடவை பல்லவன் போக்குவரத்துக் கழக நிர்வாகத்தை கேட் டிருக்கின்றனர்.

(ஆ) அவர்கள் வேண்டுகோள் போக்குவரத்துக் கழக நிர் வாகத்தால் பரிசீலிக்கப்பட்டு ஏற்கப்பட இயலாதது என்று முடிவு செய்யப்பட்டது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே; பணி நேரத்தை குறைக்கவேண் டும் என்று போக்குவரத்துக் கழக நிர்வாகப் பணியாளர்கள் வைத்த கோரிக்கையை அரசு ஏற்க வில்லை என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். பணி நேரம் இப்போது காலை 9 மணி என்று இருக்கிறது. எனவே பெரு நகரங்களிலாவது அந்தப் பணி நேரத்தை அரைமணி நேரமாவது குறைப்பதற்கு அரசு பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : அதை பரிசீலிப்பதற்கான வாய்ப்பு இல்லை.

## தனியார் பேருந்துகளிலும் வேகக் கட்டுப்பாட்டுக் கருவி பொருத்தும் திட்டம்.

வினா எண். 139 – திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனியார் பேருந்துகளிலும் வேகக் கட்டுப்பாட்டு கருவி பொருத்த வேண்டும் என்ற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், மேற்படி செயற்குறிப்பு எப்பொழுது நடைமுறைக்கு வரும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) மற்றும் (ஆ). 1-2—1983 முதல் அனைத்துத் தனியார் பேருந்துகளிலும் வேகக் கட்டுப் பாட்டுக் கருவி பொருத்தப்பட வேண்டும் என அரசு ஆணை இட்டது. சில தனியார் பேருந்து உரிமையாளர்கள் இதை எதிர்த்து வழக்குகள் தொடர, சென்னை உயர்நீதி மன்றம் இவ் வாணையை உடனடியாக நடைமுறைப் படுத்துவதற்குத் தடை விதித்துள்ளது. இத்தடையை நீக்குவதற்கான ஏற்பாடுகளை அரசு மேற்கொண்டுள்ளது. தடை நீங்கியபின் இது நடை முறைப்படுத்தப்படும்.





திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, வேகக் கட்டுப்பாட்டு கருவி பொருத்துவதால் விபத்துக்கள் கூடி யிருக்கிறதா? அல்லது குறைந்திருக்கிறதா? இந்தக் கருவிகள் பொருத்தினாலும், சில நேரங்களில் இயங்காமல் இருப்பதால், அவைகளை பழுது பார்க்காமலேயே ஓட்டுகிறார்கள். அதனால் மீண்டும் வேகத்தோடு ஓட்ட வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அதைக் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர் களே, இந்த வேகக்கட்டுப்பாட்டு கருவி பொருத்துவதன் மூலமாக விபத்துக்கள் குறைகிறதா? அதிகமாகிறதா? என்பனதப்பற்றி நாம் விரிவாக ஆய்வு செய்ய வேண்டும் என்று சொன்னால் அத்தனை பேருந்துகளுக்கும், அத்தனை கனரக வண்டிகளுக்கும் இது பொருத்தப்பட்ட பின்புதான் சொல்ல முடியும். இன்றைக்கு நமக்கு ஏற்பட்டிருக்கிற அனுபவம், இதன் மூலமாக டீசல் செலவாகி இருக்கிறது. அதேபோல் விபத்துக்கள் குறை கின்ற சூழ்நிலைகள்தான் நம்முடைய போக்குவரத்துக் கழகங் களில் இருக்கிறது. வேறு இடங்களில் இந்தக் கருவி பொருத்தப் படாத வாகனங்கள் வந்து மோதுகிறபோது ஏற்படுகிற விபத்து களின் கணக்குகளை எல்லாம் இதிலே எடுத்துக்கொள்ள முடி யாது. இதைப் பறறி நாம் விரிவான ஆய்வு செய்துதான் ஒரு முடிவுககு வந்திருக்கிறோம். எனவே வழக்கு மன்றத்திலே ஒரு முடிவு தெரிந்த பிறகு அதைப்பற்றி என்னால் தெளிவாகச் சொல்ல முடியும்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநாட்டிலே வேகமாகப் போனால் விபத்து வருவது கிடை யாது. மெதுவாகப் போனால்தான் விபத்து வருகிறது. ஆனால் நமது நாட்டில் வேகமாகப் போனால் விபத்து வருகிறது. ஆதலால், நமது போக்குவரத்து விதிமுறைகளையும் ரோடு அமைப்புகளையும் மாற்றி அமைக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வெளிநாட்டிலே அதிகமாக சுற்றிவிட்ட காணத்தால் அதைப்பற்றி பேசிக் கொண் டிருக்கிறார்கள். அவருடைய அனுபவத்தைச் சொன்னால், அதைச் செய்யலாமா என்பதைப் பற்றி ஆலோசிக்கலாம். நம் முடைய நாட்டின் அமைப்பும், அந்த நாட்டின் அமைப்பும் வேறு. அங்கே இருக்கின்ற மக்களின் எண்ணமும், இங்கே இருக்கின்ற மக்களின் எண்ணமும் வேறு, அனைத்தும் எதிரும்புதிருமாக இருக்கின்ற காரணத்தாலே, அதையெல்லாம் செய்ய முடியுமா என்பது பெரிய கேள்விக்குறியாகத்தான் இருக்கிறது. அதைச் செய்ய முடியும் என்று சொன்னால் நாம் எல்லாம் பாக்கியசாலி கள்தான்.

[1983 நவம்பர் 9

**சலவைத் தொழிலாளர்களைத் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்ப்பதற்கான விண்ணப்பம்.**

வினா எண். 36 — திரு. இரெ. இராசமாணிக்கம் மற்றும் மே. அ. இராஜ்குமார்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சலவைத் தொழிலாளர்கள் தங்களைத் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கக் கோரி அரசிற்கு விண்ணப்பம் அனுப்பி உள்ளார்களா?

(ஆ) ஆம் எனில் அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: (அ) ஆம்.

(ஆ) தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்ப்பதற்குரிய அடிப்படைப் பண்புகள், சலவைத் தொழிலாளர்களிடையே இல்லையாதலால் இவர்களை இப்பட்டியலில் சேர்க்க இயலாது என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது.

(முற்பகல் 10-00).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்டல் கமிஷன் அறிக்கையில் சலவைத் தொழிலாளர்கள் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்து அவர்களுக்கு எல்லா வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டும் என்று அறிக்கையில் உள்ளதா? அந்த அறிக்கையின் அடிப்படையில் அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்பதை தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பிட்ட எந்த இனத்தைப் பொறுத்த வரையிலும் அவர்களை தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் அல்லது பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க, மாநில அரசைப் பொறுத்த வரையில் எந்த அதிகாரமும் இல்லை. அதற்கான பரிந்துரைகளை மட்டும் நாம் செய்ய முடியும். ஆனால் குறிப்பிட்ட எந்த இனத்தையும், அவர்களைத் தாழ்த்தப்பட்ட, அல்லது பழங்குடியினர் பட்டியலில் சேர்த்துக் கொள்ளக் கூடிய அதிகாரம் மத்திய அரசுக்கு இருக்கிறது. நம்மைப் பொறுத்த அளவில் நாம் பரிந்துரைகளை மட்டுமே செய்ய அதிகாரம் இருக்கிறது. அந்த வகையிலே தான் நாம் அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி, பரிந்துரையை மத்திய அரசுக்கு செய்கிறோம்.





திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சலவைத் தொழிலாளர்கள் தங்கள் அனைவருக்கும், அரசு செலவிலே வீடு கட்டிக் கொடுக்க வேண்டும், சலவைத் துறைகள் கட்டிக் கொடுக்க வேண்டும், சலவைக்குத் தேவையான சாதனங்களை மானிய விலையிலே அளிக்க வேண்டும், சலவைக்குத் தேவையான பொருள்கள் அனைத்தையும் மானிய விலையிலே வழங்க வேண்டும், அவர்களுடைய பிள்ளைகளுக்கும் அரசு செலவிலே படிப்பு வசதி செய்துக் கொடுக்க வேண்டும் என்கின்ற முக்கியமான கோரிக்கைகளை வைத்து, போராட்டம் நடத்தி வருகிறார்கள். அவர்களுக்கு அந்த கோரிக்கைகளை நிறைவேற்றிச் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்க முன் வருமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சலவைத் தொழிலாளர்களைப் பொறுத்த அளவிலே அவர்கள் தற்போது பிற்படுத்தப்பட்ட வகுப்பிலே தான் இருக்கிறார்கள். அந்தத் துறை அமைச்சருக்கு இந்தக் கேள்வியை போடுமாறு மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சலவைத் தொழில் செய்யும் ஜாதியினர், ஷவரத் தொழில் செய்யும் ஜாதியினர், ஆகிய இந்த இரண்டு இனத்தவரையுமே ''ஷெட்யூல்டு கேஸ்ட்'' லிஸ்டிலே சேர்க்க வேண்டும் என்று ஏற்கெனவே திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே இருந்த சமயத்தில் மத்திய அரசுக்கு பரிந்துரை செய்திருக்கிறது. மத்திய அரசாங்கம் அதை அப்போது ஏற்றுக் கொள்ளவில்லை என்றாலும், மாநில அரசாங்கம் தொடர்ந்து வற்புறுத்தி, அந்த இரண்டு இனங்களையும் ''ஷெட்யூல்டுகேஸ்ட்'' லிஸ்டிலேசேர்க்கும் வகையில் தன்னுடைய பரிந்துரைகளை இப்பொழுதாகிலும் தொடருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே பதில் அளிக்கிறபோது சொல்லியிருக்கிறேன். ஒரு குறிப்பிட்ட இனத்தவரை தாழ்த்தப்பட்ட இனப் பட்டியலிலோ, பழங்குடியினர் இனப்பட்டியலிலோ

சேர்த்துக் கொள்ளக்கூடிய அந்தப் பொறுப்பு மத்திய அரசிடத்திலே தான் இருக்கிறது. நம்மைப் பொறுத்த வரையில் இல்லை. பரிந்துரை செய்கிற அளவிலேதான் நாம் இருக்கிறோம். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டுக் கொண்டதற்கு ஏற்ப நம்மைப் பொறுத்தவரையில், குறிப்பிட்ட இனத்தவர்களிடையே இருக்கக்கூடிய சமூகக் கல்வி, மற்றும் பொருளாதார துறையில் அவர்களுக்கு இருக்கக்கூடிய பின் தங்கிய நிலைமையைப் பொறுத்தும், அவர்களுடைய சமுதாயத்தை பொறுத்த அளவிலே நீண்ட நெடுங்காலமாக நடைமுறையில் இருந்து வருகிற தீண்டாமையினால் அவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனரா என்கிற அடிப்படையிலும், தற்போது இருந்து வருகிற தாழ்த்தப்பட்ட இனத்தில் பிற்படுத்தப்பட்ட இனத்தவரை சேர்த்துக் கொள்ளவேண்டும் என்று விதிமுறைகளையும், நெறிமுறைகளையும், மத்திய அரசாங்கம் வகுத்திருக்கிறது. அந்த அடிப்படையிலேதான் நாம் இருக்கக்கூடிய இனங்களை தேர்வு செய்து, மத்திய அரசுக்கு பரிந்துரை செய்கிறோம்.

### ஆதிதிராவிட விவசாயிகளுக்கு உழவு மாடுகள் வாங்க வழங்கப்படும் தொகை

*வினா எண். 37—திரு. க. பாரமலை : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதிதிராவிட விவசாயிகளுக்கு இலவசமாக உழவு மாடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் ஒரு ஜோடி உழவு மாடுகளுக்கு வழங்கப்படும் தொகை எவ்வளவு ?

(ஆ) எத்தனை ஆண்டுகளாக இதே தொகை வழங்கப் படுகிறது ?

(இ) இதை உயர்த்திக் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) ஒரு ஜோடி உழவு மாடுகளுக்கு வழங்கப்படும் தொகை ரூ. 525 ஆகும். இத்துடன் ரூ. 75 உழவு கருவிகள் மற்றும் விதைகளுக்குகாகவும் வழங்கப்படுகிறது.

(ஆ) 1974-75 லிருந்து இந்த தொகை மனிய வழங்காமாகப்படுகிறது.

(இ) இப் பொருள் அரசின் பரிசீலனையில் உள்ளது.





திரு. க. பாரமலை : தலைவர் அவர்களே, கடந்த 10 ஆண்டுக் காலமாக உழவு மாடுகள் வாங்குவதற்குகாக ஒரு ஜோடிக்கு 600 ரூபாய் என்ற முறையிலே வழங்கப்பட்டு வருகிறது. இப்போது ஏறியிருக்கிற விலைவாசிகளைப் பார்க்கிறபோது இந்த 600 ரூபாய்க்கு ஒரு ஆட்டுக்குட்டிகூட வாங்கமுடியாத நிலை இருக்கிறது. பொதுவாகவே அரிசன நலத் துறையால் வழங்கப்படுகிற கடன்கள் மற்றும் இனாம்கள் எல்லாம் தேவைக்கேற்ப இல்லையென்ற காரணத்தினால் எந்த நோக்கத்திற்காக வழங்கப்படுகின்றனவோ அந்த நோக்கம் நிறைவேறாமல் போய் விடுகிறது என்பது அரசுக்கு தெரியுமா ? ஆகவே வருகிற நிதியாண்டிலாவது அந்தத் தொகைகளை உயர்த்திக் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருக்கு நன்றாக நினைவு இருக்கும் என்று கருதுகிறேன். சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தைக் கூட்டிய போது சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டத்திலே இந்தக் கருத்தை எடுத்துச் சொன்னார்கள். அரசுக்கும் அது ஏற்ற கருத்தாக இருந்த காரணத்தினால் அண்மையிலே ஆணைகளைப் பிறப்பித்து இருக்கிறோம். அந்த அடிப்படையில் தாழ்த்தப்பட்ட ஆதிதிராவிட மக்களுக்கு மற்றும் பழங்குடியினருக்கும் மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிடர்களுக்கு தற்போது நாம் வழங்குகிற 600 ரூபாயை மொத்தமாக மானியமாக வழங்கி. மீதம் 1,200 ரூபாயை வங்கி கடனாக வழங்க இந்த அரசு ஆணைகளைப் பிறப்பித்து இருக்கிறது. இதன் மூலம் அவர்களுக்கு 1,800 ரூபாய் கிடைக்க வழிவகை செய்திருக்கிறோம்.

திரு. க. பாரமலை : தலைவர் அவர்களே, இந்தத் தொகையை உயர்த்திக் கொடுத்திருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள், அதற்காக நன்றியைத் தெவித்துக் கொள்கிறேன். அதே நேரத்திலே இந்தத் தொகை அதிகமாக்கப் பட்டிருக்கிற காரணத்தினால் ஏற்கனவே எத்தனை பேர்களுக்கு இது வழங்கப்பட்டு பயன் பெற்றார்களோ அந்த எண்ணிக்கை குறைந்து விடாமல் அதே அளவுக்கு இந்த ஆண்டும் வழங்க அரசு ஏற்பாடுகளைச் செய்யுமா ?

[1983 நவம்பர் 9

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, 1,524 பேர்தான் என்னுடைய தகவல்படி இங்கே இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்களுக்கு எப்படி இந்தத் தகவல் கொடுத்தார்கள் என்று எனக்குப் புரியவில்லை. ஆனால் அவர்கள் 240 நாட்களிலேயே நிரந்தரமாக்கப்படுகிறார்கள். இதற்கிடையிலே முதலிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற சம்பளம் இப்போது குறைந்திருக்கிறது என்று சொல்லுகிறார்கள். அப்படிப்பட்ட நிலைமை இருப்பதாக தகவல் இல்லை. இப்படி இருந்தால் அதை நிவர்த்திக்க சரியான முறையை பின்பற்றுவதற்கு வேண்டிய அறிவுரைகளை அரசு, போக்குவத்துக் கழகங்களுக்குக் கொடுக்கும்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : தலைவர் அவர்களே, கேசுவல் அப்ரன்டிஸ் என்ற முறையிலே தொழிலாளர்களை வைத்துக் கொண்டு அவர்களை டெய்லி பெய்டுபோன்றதொழிலாளர்களாக கணக்கில் எடுத்துக் கொண்டு அப்படி 20 ஆயிரம் பேர்கள் இருப்பதாக தகவல் வருகிறது. ஏற்கெனவே, டிரைவர், கன்டக்டர் போன்ற அவர்களை தினக்கூலி தொழிலாளர்களாக வைத்து, நிரந்தரமான தொழிலாளர்களுக்குக் கிடைக்கும் ஊதியம் கிடைக்காமல் இருக்கிறது. ஒரே வேலைக்கு சம வேலைக்கு சம ஊதியம் என்ற கொள்கையை ஏற்று டெய்லி பெய்டு கேசுவல் அப்ரன்டிஸ் போன்ற தொழிலாளர்களுக்கும் அந்த ஊதிய உயர்வையும் மற்ற உரிமைகளையும் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, ஓட்டுநர்கள் 5 ஆண்டு காலம் பணியிலே இருந்தாலும், 20 ஆண்டு காலம் பணியிலே இருக்கக்கூடியவர்களும் ஒரே வேலையைத்தான் செய்கிறார்கள். ஆனால் சம்பளத்தில் வித்தியாசம் இருக்கின்றது அதேபோலத்தான் தற்காலிகமாக எடுத்த ஓட்டுநர்களானாலும், நிரந்தரமான ஓட்டுந, களானாலும் நிச்சயமாக சம்பளத்தில் மாற்றம் இருந்துதான் தீரும். அதை மாற்றப் போவதில்லை. சட்டத்தை மீறி நாம் எடுக்க முடியாது. நாங்கள் எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்ச் மூலமாகத்தான் எடுக்கிறோம். 240 நாட்கள் பணியாற்றினால் அவர்கள் நிரந்தரமாக்கப் படுகிறார்கள். இதுதான் சட்டம். எதையும் மீறி நாம் செய்யவில்லை. கேசுவல் லேபரர் பற்றிச் சொன்னார்கள். சில இடங்களிலே கட்டடங்கள் சட்டுகிறோம்சில இடங்களிலே பாடி பில்டிங் வேலை அதிகமாக செய்யவேண்டும் என்றால் கேசுவல் லேபரர்களை எடுக்க வேண்டியது தவிர்க்க முடியாது. அதுதான் நடைமுறையில் இருக்கிறது அந்தத் தொழிலாளர்களைப் பாதிக்காத வகையில் போக்குவரத்துக் கழகங்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றது. அவர்களை நிரந்தரம் செய்வதற்கான நடவடிக்கைகளை சட்டப்படி நாங்கள் செய்வோம்.



1983 நவம்பர் 9]

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய பதிலில், 240 நாட்கள் வேலை செய்தால் அவர்கள் நிரந்தரமாக்கப்படுவார்கள் என்று சொல்கிறார்கள். ஆனல் சமீபகாலத்தில் 2 ஆண்டுக்கு முன்பு, பி.ஏ.எம்.ஏ. படித்த பட்டதாரிகள் வேலையிலிருந்தபோது, அவர்களை 31—10—83ஆம் தேதியன்று உங்களை வேலையிலிருந்து நீக்கம் செய்யப்பட்டிருக்கிறது என்ற உத்தரவை கொடுத்திருக்கிறார்கள். இது அமைச்சரின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? அப்படி வந்திருந்தால் அவர்களை மீண்டும் பணியில் அமர்த்த நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, எனக்கு இது பற்றி முழுக்க முழுக்க தெரியும். மத்திய அரசு ஒரு முறையைக் கையாண்டு இந்த படித்து பட்டம் பெற்ற பட்டதாரிகளுக்கு ஒரு ஆண்டுக்காலம் அவர்களுக்கு பயிற்சி கொடுக்க வேண்டும் என்று ஒரு ஏற்பாட்டைச் செய்தார்கள். அந்தப் பயிற்சிக் கொடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை நாங்கள் மட்டுமல்ல, தனியார் துறைகள் கூட ஏற்றுக் கொண்டு அந்தப் பயிற்சியை கொடுக்கிறார்கள். அந்த பயிற்சி முடிந்த பிறகு அவர்களை அனுப்பிவிடுகிறோம். மத்திய அரசாங்கம் சொன்னதால் பயிற்சி கொடுக்கிறோம். அவர்களை கட்டாயம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதல்ல, அதற்கும், இதற்கும் சம்பந்தமில்லை. அந்தப் பயிற்சி பெற்றவர்களில் எவ்வளவு பேர்களை எடுக்க முடியுமோ, எவ்வளவு பேருக்கு வாய்ப்பு இருக்கிறதோ' இடம் இருக்கிறதோ, அவ்வளவு பேர்களை நாம் எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

## பல்லவன் போக்குவரத்துக்கழக நிர்வாகப் பணியாளர்களுக்கான அலுவலக நேரம்.

வினா எண். 138 – திரு வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா –

(அ) பல்லவன் போக்குவரத்துக் கழக நிர்வாகப் பணியாளர்கள் தங்கள் அலுவலக நேரத்தைக் குறைக்க வேண்டுமென அரசைக் கேட்டு கோரிக்கை வைத்துள்ளனரா?

(ஆ) ஆம் எனில் அரசு அதன்மீது எடுத்துள்ள நடவடிக்கைதான் என்ன?

[1983 நவம்பர் 9

(முற்பகல் 10-10.)

திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே 90 சதவீதம் வருகை இல்லாத மாணவர் களுக்கு ஸ்காலர்ஷிப் கிடையாது என்று அரசு உத்தரவிட்டிருக் கிறது ஆனால் 75 சதவீதம் வருகை இல்லாதவர்கள் தேர்வு எழுத இயலாத நிலை இருந்தாலும் உடல் நிலை குறைவு என்ற காரணத்திற்காக அப்படிப்பட்ட நிலை ஏற்படுகிற போது டாக்டர் சான்றிதழ் கொடுக்கப்பட்டு கண்டோநேஷன் செய்யக் கூடிய நிலைமை இருக்கிறது. அதே நேரத்தில் இந்த 90 சதவீதம் வருகை குறைவாக இருக்குமானால் ஸ்காலர்ஷிப் மறுக்கப்படு கிறது டாக்டர் சான்றிதழ் அங்கே அனுமதிக்கப்படுவது இல்லை. இதனால் மதுரை போன்ற இடங்களில் நூற்றுக்கணக்கான மாணவர்கள் கல்வியை இழக்கக்கூடிய அவல நிலை ஏற்பட்டு இருப்பது அரசுக்கு தெரியுமா ? 90 சதவீதம் வருகை என்பதை விசேஷ காரணத்திற்காக குறிப்பாக உடல் நலக் குறைவு அல்லது சில நேரங்களில் குறைபாடு உடைய கல்லூரி மீது குற்றங்களை எடுத்துச் சொல்லு கிறபோது அந்த மாணவர்களுடைய வருகை கூட வரவில்லை என்று திருத்துகின்ற ஏற்பாடுகள் இருக்கலாம். அப்படிப்பட்ட நிலையை செக் அப் செய்வதற்கு எந்த ஏற்பாடும் கிடையாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தில் சொற் பொழிவு ஆற்றிக்கொண்டு இருந்தால் அதை நான் அனுமதிக்கப் போவது இல்லை. எதிர்க்கட்சிகள் கேள்விகள் கேட்பதும் அதற்கு அமைச்சர் விளக்கம் கொடுப்பதும்தான் முறை. ஆனால் இங்கே இது மாறிபோய் கொண்டிருக்கிறது.

திரு. ரா. கிருஷ்ணன் : இப்படிப்பட்ட சூழ்நிலையை களை வதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டால் விளக்கமாகப் பதில் அளிக்கப்படும்.

திரு. கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1982-83 ஆம் ஆண்டு பிற்பட்ட இனத்தைச் சார்ந்த மாணவர்களுக்கு வழங்கப்பட்ட உதவித் தொகை எவ்வளவு ? அதனால் எத்தனை மாணவர்கள் பயனடைந்தார் கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கேள்வியே ஸ்பெசிபிக் குவஸ்ட்டின் தான். அதற்கு போய் தனிக் கேள்வி போடவேண்டும் என்று சொல்வது எப்படி சரியாகும்,



1983 நவம்பர் 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தனிக் கேள்வி போட வேண்டும் என்று கேட்பதற்கு அமைச்சருக்கு எந்த நேரத்திலும் உரிமை இருக்கிறது. அதனால் கேட்டார். அத்தோடு அது முடிந்துவிட்டது.

திரு. ரா. கிருஷ்ணன் : எல்லா விதமான கேள்விகளுக்கும் தனிக் கேள்வி போடவேண்டும் என்று சொன்னால் எப்போது பதில் வரும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சீக்கிரமாக பதில் வரும்.

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அவர் போட்டு இருக்கிற கேள்வியே அது தான் என்று சொல்கிறார். அதற்கு பதில் சொல்லலாமே ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தனிக் கேள்விப் போட் டால் விளக்கம் தருகிறேன் என்று சொல்வதற்கு அமைச்சருக்கு உரிமை உண்டு. அந்த உரிமையை அவர் இப்போது பயன் படுத்தியிருக்கிறார். இப்போது அமைச்சர் திரு. செங்கோட் டையன் அவர்கள் கேள்விக்கு பதில் சொல்வார்.

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1982-83-ஆம் ஆண்டு வழங்கப் பட்ட உதவித் தொகை பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு 3,61,01,000 ரூபாய்கள். அதனால் பயனடைந்த மாணவர்களின் எண்ணிக்கை 3,61,000 பேர்கள். பிற்பட்ட மாணவர்களுக்கு 3,19,63,000 ரூபாய், டி. என். சி. மாணவர்களுக்கு 41,38,000 ரூபாய் பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்பட்ட உதவித் தொகை ரூபாய், 42,05,000 கல்லூரி மாணவர்களுக்கு வழங்கப்பட்ட உதவித் தொகை ரூபாய் 3,18,96,000, பயனடைந்த மொத்த மாணவர்கள்' கல்லூரி மாணவர்கள் 1,13,000 பேர்கள். பள்ளி மாணவர்கள் 2,48,000 பேர்கள்.

கோவை மாவட்டத்தில் ஆய்விலுள்ள நீர்ப்பாசனத் திட்டங்கள்.

*வினா எண். 140—திரு. மா. சின்னராசு : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :

(அ) கோவை மாவட்டத்தில் ஆய்வில் உள்ள நீர்ப்பாசனத் திட்டங்கள் எத்தனை ?

(ஆ) அவைகளின் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவர் அவர்களே, 1983-84-ஆம் ஆண்டிற்கு இதற்காக ரூ. 2.45 லட்சம் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. அந்த அடிப்படையில் ஏறத்தாழ 408 பேர்கள் பயன்பெறுகிற நடவடிக்கையை நாம் எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

திரு. ஜே. எஸ். இராசு : தலைவர் அவர்களே, இனாமாக உழவுமாடுகள் வழங்குகிற திட்டத்தின் கீழ் தரப்படுகிறவர்களின் எண்ணிக்கையை தாழ்த்தப்பட்ட மக்களுடைய மக்கட் தொகையின் அடிப்படை மீது ஆராய்ந்து ஆண்டுதோறும் அதிகமான அளவில், இப்போது இருக்கிற எண்ணிக்கையைவிட அதிகமான அளவுக்கு வழங்குகிற ஏற்பாட்டைச் செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவர் அவர்களே, வருகிற நிதியாண்டுகளில் இருக்கக்கூடிய நிதிநிலைமையைப் பொறுத்து உயர்த்துகிற நடவடிக்கையை அரசு பரிவோடு கவனிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### ஆதிதிராவிடர் பழங்குடியினர் பள்ளி மாணவர்களுக்காகத் தனியார்களால் நடத்தப்படும் இல்லங்கள்

*வினா எண். 38 — திரு. சி. கணேசன் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் — கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா —

தமிழகத்தில் ஆதிதிராவிடர், பழங்குடியினரின் பள்ளி மாணவர்களுக்காகத் தனியார்களால் நடத்தப்படும் இல்லங்களை அரசே ஏற்று நடத்தும் உத்தேசம் ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தமிழகத்தில் ஆதிதிராவிடர் பழங்குடியினரின் பள்ளி மாணவர்களுக்காக தனியார்களால் நடத்தப்படும் இல்லங்கள் சரிவர செயல்படாமல் இருப்பது பற்றி அரசுக்கு தெரிய வந்தால் அது போன்ற இல்லங்களை அரசே ஏற்று நடத்தும். இதுவரை இம்மாதிரி கோரிக்கைகள் வரவில்லை.





### மாணவர்களுக்கு வழங்கப்படும் உபகாரச் சம்பளம்.

*வினா எண். 39 — திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் — கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மாணவர்களுக்கு வழங்கப்படும் உபகாரச் சம்பளம் அனுமதி வழங்க, பள்ளி அல்லது கல்லூரி முதல்வருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதா ?

(ஆ) குறைபாடுள்ள பள்ளி, கல்லூரி நிர்வாகம் பற்றி முறையிடும் மாணவர்களுக்கு உதவித்தொகை அனுமதிக்காத நிலை ஏற்படுவது அரசுக்குத்தெரியுமா ?

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : (அ) 1982-83-ஆம் ஆண்டிலிருந்து கல்லூரிகளைப் பொறுத்தவரை சம்பந்தப்பட்ட கல்வி நிறுவனங்களின் முதல்வர்களே மாணவர்களுக்கு உபகாரச் சம்பளங்கள் வழங்கிட அரசால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. பள்ளிகளைப் பொறுத்த வரையில் அந்தந்த மாவட்ட பிற்பட்டோர் நல அலுவலர்களே தொடர்ந்து வழங்கி வருகின்றனர்.

(ஆ) குறைபாடுள்ள பள்ளி கல்லூரி நிர்வாகம் பற்றி முறையிடும் மாணவர்களுக்கு தொகை அனுமதிக்காத நிலை ஏற்பட்ட விபரம் குறித்து அரசுக்கு இதுவரை தகவல் வரவில்லை. தகவல் கிடைக்கப்பட்டால் அத்தகு குறைகளைப் போக்க முயற்சிகள் உடன் மேற்கொள்ளப்படும்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இந்த உதவித் தொகை பெற வரக்கூடிய மனுக்களைப் பரிசீலனை செய்வதற்காக ஏற்கனவே பிற்பட்டோர் நலத்துறை இந்தப் பணியைக் கவனித்து வந்தபோது இதற்கென்று ஒரு எழுத்தர் இருந்தார். அவர் பரிசீலனை செய்தார். ஆனால் இப்போது அந்தப் பணியை அந்தப் பள்ளிகளே செய்ய வேண்டியிருப்பதால் அந்தப் பொறுப்பை அவர்களிடம் ஒப்படைத்தவுடனே அந்தப் பணியைச் செய்ய ஒரு எழுத்தர் நியமனம் செய்யப்படவில்லை, அதனால் ஆசிரியர்களே அந்தப் பணியைச் செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே அந்தப் பணிக்கென ஒரு எழுத்தரை நியமனம் செய்ய ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : தலைவர் அவர்களே, தற்போதுள்ள நடைமுறையிலே குறித்த காலத்திலே உதவித் தொகையை வழங்க உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது, எனவே எழுத்தர் நியமிக்கவேண்டிய அவசியமும் இல்லை,

[1983 நவம்பர் 9

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : (அ) இரண்டு.

(ஆ) (1) கோவை தாலுக்காவில் சின்னவேடம்பட்டி கிராமத்தினருகே ஒரு நீர்த்தேக்க திட்டம் இதற்கான ஆய்வு வேலைகள் முடிவடைந்து திட்ட அறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது. (2) பொள்ளாச்சி தாலுக்காவில் பேஜிபாளையம் கிராமத்தில் சோலகூலகள்ளி ஓடையின் குறுக்கே நீர்த்தேக்கம் கட்டும் திட்டம். இது தலைமைப் பொறியாளர் (ஆய்வு) அவர்களின் ஆய்வில் உள்ளது.

இது போக நொய்யல் பூண்டி திட்டம் ஒன்றும், ஜம்பு கண்டி அணைக்கட்டுத் திட்டம் ஒன்றும், முண்டந்துரை திட்டம் ஒன்றும ஆய்வு செய்வதற்கான உத்தரவுகள் போடப்பட்டு, ஆய்வுகள் துரிதமாக நடத்த நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டு வருகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தைப் பொறுத்த அளவில் பெரும் பகுதி நதி வளம் இல்லாத பகுதி. ஆகவே, சிறு ஓடைகளைத் தடுத்து, மழைக்கால வெள்ளத்தைத் தடுப்பதன்மூலம்தான் பாலைவனம் ஆகிற பேரபாயத்திலிருந்து அப்பகுதியைக் தடுக்க முடியும் என்று அறிஞர்கள் கருத்து தெரிவித்து இருக்கிறார்கள். ஆகவே, கோவை மாவட்டத்தைப் பொறுத்த அளவில் சிறு ஓடைகளின் குறுக்கே சிறிய அணைகளைக் கட்டி, இந்த பி. சி. ரேஷியோவைத் தளர்த்தி, பல பகுதிகளில் சிறிய அணைக் கட்டுகளைக் கட்ட சிறப்புத் திட்டம் ஒன்றை வகுக்கவேண்டுமென்று அரசை நான் ஏற்கெனவே கேட்டிருக்கிறேன். ஆகவே, அந்தத் திட்டத்தை நிறைவேற்ற பி. சி. ரேஷியோவை தளர்த்தவும், இந்தத் திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்தவும், இந்த அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கடந்த காலத்தில்கூட, திட்டத்தின் அளவையும் நாட்டு மக்களுக்கு அது எவ்வளவு தூரத்திற்குத் தேவைப்படும் என்பதையும் கருத்தில் கொண்டு இந்த அரசு பெனிபிட் காஸ்ட் ரேஷியோவை கவனத்தில் கொள்ளாமல் நடவடிக்கை எடுத்து வந்திருக்கிறது. அதே போன்று, தேவைப்படுமானால் இந்தத் திட்டம் உரிய ஆய்வுகளுக்குப் பிறகு, உரிய முறையிலே பயன் கிடைக்கும் என்று கருத்து அரசால் ஏற்றுக் கொள்ளப்படுமானால் நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டு, பெனிபிட் காஸ்ட் ரேஷியா கணக்கில் எடுத்துக் கொள்ளப்படமாட்டாது என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.



1983 நவம்பர் 9]

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக அதிகமான அளவில் நீர்ப்பாசனத் திட்டங்கள் தேவைப்படுகிற கோவை மாவட்டத்தில் இன்வெஸ்டிகேஷன் டி. இ. இல்லை, ஈரோட்டில்தான் இருக்கிறார்கள். ஆகவே, கோவைமாவட்டத்திற்கென்று ஒரு இன்வெஸ்டிகேஷன் டிவிஷனை ஏற்படுத்தித் தர அரசு முன் வருமா என்பதை அறியவிரும்புவதோடு, அமைச்சர் அவர்கள் அறிவித்த சின்னவேடப்பட்டி திட்டம் எப்பொழுது துவக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவர் அவர்களே, இன்வெஸ்டிகேஷன்டிவிஷனைப்பொறுத்த மட்டிலும், ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கைக்கேற்ப அலு தனி டிவிஷனல் இன்ஜினியருடைய (இன்வெஸ்டிகேஷன்) அறி வலகம் ஒன்று கோவையில் அமையப்பட வேண்டுமென்ற அறி வலகம் ஒன்று கோனவயில் அமையப்பட வேண்டுமென்ற நான் வுரையைச் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு ஏற்கெனவே நான் தந்திருக்கின்றேன். ஆகவே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிவோடு பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்துக் கொண்டு, சின்னவேடப்பட்டி திட்டம் பொறுத்த மட்டிலும் ஏற்கெனவே ஆய்வுகள் செய்து அரசு ஏற்றுக்கொள்வதைப் பற்றி பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது என்றாலும், அரசு பரிசீலனைக்குச் செல்வதற்கு முன்பாக, நிலநிர்வாக ஆணையர் அவர்களும், வேளாண்மை இயக்குநர் அவர்களும் அறிக்கையை அனுப்ப வேண்டியிருக்கிறது. அந்த அறிக்கைகளை எதிர் பார்த்துக் கொண்டிருக்கின்றோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, நமது அமைச்சர் அவர்கள் சொல்லும்போது இரண்டு திட்டங்கள் ஆய்வில் உள்ளன என்றும், மற்றும் 3 திட்டங்கள் ஆலோசிக்கப்படும் என்றும் குறிப்பிட்டார். அதில் சின்ன வேடப்பட்டி திட்டம் பற்றி சொல்லும்போது இன்னமும் ஆய்வில் இருக்கிறது என்று சொல்லிக்கொண்டே இருக்கிறார். இந்தத் திட்டம் ஆய்வுசெய்ய ஆரம்பிக்கப்பட்டு பல வருடங்கள் ஆயிற்று. இந்த அரசு வருவதற்கு முன்பாகவே இது இருக்கிறது. ஆகவே, இந்த ஆய்வு முடிந்து எந்தக் காலத்திற்குள் வேலைக்கான உத்தரவுகள் போடப்படும் ? இந்தத் திட்டத்திற்கு என்ன செலவாகும் ? எவ்வளவு ஏக்கர் நிலங்கள் இதனால் பாசனம் செய்யப்படும் ? கிணற்றில் குடிநீர் வருவதற்கும் இதனால் உத்தரவாதம் கிடைக்குமா என்பதை அமைச்சர் அவர்கள் தயவு கூர்ந்து சொல்ல வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

[1983 நவம்பர் 9

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே பதில் அளிக்கின்ற நேரத்தில இந்தத் திட்டம் ஆய்வில் இருப்பதாகச் சொல்லவில்லை. தமிழகத்தின் தலைமைப் பொறியாளர் (ஆய்வு) அவர்கள் திட்டத்தை ஆய்வு செய்து அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள் என்றும் அதற்கு முன்பாக அரசு அதை ஏற்றுக்கொள்வதா, வேண்டாமா என்று முடிவிற்கு வருவதற்கு முன்பாக சம்பிரதாயப்படி நிலநிர்வாக ஆணையர் அவர்களும், வேளாண்மை இயக்குநர் அவர்களும், தங்களுடைய அறிக்கையினைத் தரவேண்டியிருக்கிறது. அது போக, இந்தத் திட்டமதிப்பீடு ரூபாய் 302 இலட்சம் என்றும், இந்தத் திட்டத்தின் வாயிலாக 27.58 மில்லியன் கன அடி கொள்ளளவுள்ள அணைக்கட்டு கட்டப்படும் என்றும் இதன் வாயிலாக 560 ஏக்கர் புஞ்சை நிலம் பயனடையும் என்றும், எனக்குத் தரப்பட்ட விவர அறிக்கையில் கூறப்பட்டிருக்கின்றது. இதற்குண்டான பெனிபிட் காஸ்ட் ரேஷியோ விவரத்தையும் கேட்டிருக்கிறார்கள். அந்த விவரத்தைப் பார்த்தால், 14.1 என்ற ரேஷியோ இருக்கிறது. ஆகவே, அதைப்பற்றி கேட்பதை விட, இந்தத் திட்டத்தை விரைவில் நிறைவேற்றுவதற்கான கோரிக்கை வைத்தால் மிகவும் நன்றாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விளாத்திகுளம் தொகுதி டி. புதுப்பட்டியில் புதிய கண்மாய் அமைக்கும் திட்டம்.

*வினா எண். 141—திரு. ரா. கு. பெருமாள்: மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம் விளாத்திகுளம் தொகுதி டி. புதுப்பட்டியில் புதிய கண்மாய் ஆரம்பிக்கும் திட்டம் உண்டா ?

(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பீடு என்ன ?

(இ) இத் திட்டம் எப்பொழுது ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : (அ) ஆம்.

(ஆ) ரூபாய் 13.60 இலட்சம்.

(இ) இத் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. ஒப்புதல் அளிக்கப்பட்ட பின் திட்ட வேலை ஆரம்பிக்கப்படும்.



1983 நவம்பர் 9]

(முற்பகல் 10-20)

திரு ரா. கு. பெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டம், விளாத்திகுளம் தொகுதி டி. புதுப்பட்டியில் சிறிய நீர்ப்பாசன குளம் அமைப்பதற்கு ஏறத்தாழ 5, 6 ஆண்டுகளாக ஆய்வு செய்யப்பட்டது. சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரில் இந்தக் கேள்வியை நான் எழுப்பிய போது, அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது, விரைவில் துவங்கப்படும் என்று சொன்னார்கள். ஓராண்டு ஆகியும் அது முடிவுறாமல் இருப்பதற்குக் காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் ஆய்வெல்லாம் முவடைந்து, இப்போது அரசினுடைய தீவிர பரிசீலனையில் உள்ளது ஆகவே காலதாமதத்தைப் பற்றி இப்போது யோசனை செய்யக் கூடிய நிலையெல்லாம் கடந்து, அரசு ஏற்றுக்கொள்வதைப் பற்றிய ஆய்வை செய்து வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் தமிழகத்தின் முதல்வராக பொறுப்பேற்ற உடனே வானத்திலிருந்து பொழிகிற நீர் வீணாக கடலிலே வீழாமல், அந்த தண்ணீர் விவசாயிகளுக்கு பயன்படக்கூடிய நிலையில் இருப்பதற்கு அரசாணை ஒன்றை பிறப்பித்தார்கள். இருந்தாலும் நெல்லை மாவட்டத்திலே பல திட்டங்கள் தாமதமாகியிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் சின்னராசு அவர்கள் தெரிவித்ததைப் போலவே நெல்லை மாவட்டத்திலும் கண்காணிப்பு பொறியாளர் ஒருவர் முன்பு இருந்தார். அவர் இப்போது இல்லையென்பதால் சில ஆய்வுகளில் மதிப்பீடு தயாரித்தும் கூட......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆபீசிலிருந்து ஆரம்பித்து கால்வாய்க்கு வருவதற்கு இவ்வளவு நேரமா ? கேள்வியை முதலில் கேளுங்கள்.

திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களில் பலமுறை இதுபற்றி கூறியும் கூட இதுவரையில் அது நிறைவேற்றப்படவில்லை. ஆகவே இந்த நிதியாண்டிலே ஆரம்பிப்பதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[1983 நவம்பர் 9

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உணர்ச்சி வசப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். அவர்களுடைய உணர்ச்சி தணிக்கக்கூடிய அளவிற்கு, குளிர்ச்சியூட்டக்கூடிய அளவிற்கு அரசு துரிதமாக நடவடிக்கை எடுக்குமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் 1967-ல் சட்டமன்ற உறுப்பினராக ஆனதிலிருந்து இந்தத் திட்டம் சொல்லப்பட்டு வருகிறது. என்னுடைய தொகுதிக்கு பக்கத்தில் இருப்பது. என்னுடைய தொகுதி மிகவும் வறட்சியானது என்பது அனைவருக்கும் தெரியும். எனவே அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்று அமைச்சர் சொல்வது, அமைச்சர் தானே பரிசீலனை செய்யவேண்டும். ஆகவே இந்தத் திட்டம் எத்தனையோ தடங்கல்களை கடந்து இப்போது வந்திருக்கிற போது அரசு பரிசீலனை செய்து— மார்ச், ஏப்ரலிலிருந்து ஏழெட்டு மாதங்கள் ஆகிவிட்டதே, ஏன் இவ்வளவு காலதாமதம்—உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நீண்ட அனுபவம் பெற்றவர்கள். அரசு ஒரு திட்டத்தை ஆய்வு செய்யக் கூடிய நிலையில், அந்தத் திட்டத்தால் ஏற்படுகின்ற பயன், அந்தத் திட்டத்தை மேற்கொள்வதற்கான அவசியம், அந்தத் திட்டத்தை மேற்கொள்வதற்கு ஆகக்கூடிய செலவு, அந்த செலவுகளுக்கான நிதி ஒதுக்கீடு ஆகிய இவைகளையெல்லாம் கணக்கிலே எடுத்துக்கொண்டுதான் அந்தத் திட்டத்தை மேற்கொள்ளவேண்டும். அவர்கள் சொன்னதைப்போல, அத்தனை காலக்கட்டங்களையும் கடந்து இப்பொழுது அரசு இந்தத் திட்டத்தை ஏற்றுக்கொள்வதா அல்லது தள்ளிப் போடுவதா என்ற ஆய்வைத்தான் செய்து கொண்டிருக்கிறது. ஆகவே, அதிக காலதாமதம் ஏற்படாமல் விரைவில் நல்ல முடிவு வரும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



93 நவம்பர் 9]

### தாமிரபரணி பாசனம் கடம்பாகுளம் கீழ்பகுதி குளங்களுக்குத் தனி கால்வாய் அமைக்கும் திட்டம்.

வினா எண் 142.—திரு. இரா. அமிர்தராஜ் : மாண்புமிகு ர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை ளிப்பாரா—

(அ) தாமிரபரணி பாசனம், கடம்பாகுளம் கீழ் பகுதி ளங்களுக்குத் தனி கால்வாய் அமைக்கும் திட்டம் அரசின் ய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் திட்ட மதிப்பீடு என்ன ?

(இ) எப்பொழுது இத்திட்டம் செயல்முறைக்கு வரும் ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : (அ, ஆ மற்றும் இ) )த்திட்டத்தைப்பற்றி விரைவில் ஆய்வு செய்து முடிக்க களப் ணியாளர்கள் பணிக்கப்பட்டுள்ளார்கள் என தலைமைப் பாறியாளர் (ஆய்வு) அவர்கள் தெரிவித்துள்ளார்.

திரு. இரா. அமிர்தராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவ வர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் தாமிரபரணி பாசனம், டம்பாகுளம், கீழ் பகுதி குளங்களுக்குத் தனிக் கால்வாய் அமைக்கும் திட்டம் பற்றிச் சொன்னார்கள். தனிக் கால்வாய் அமைக்கும் திட்டம் என்பது அந்தப் பகுதி விவசாயிகளின் நீண்ட ாள் கோரிக்கையாகும். இதனால் தண்ணீர் வீணாவதைத் தடுக்க முடியும். காலதாமதம் இல்லாமல் விரைவில் நேரடியாகக் குளங்களுக்குத் தண்ணீர் கிடைப்பதற்கு வழிகோலும். ஆதலால் விரைவாக ஆய்வு செய்யப்படுமா என்று அறிய வி ரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஏற்கெனவே இந்தத் திட்டம் பற்றி பிரிலிமினரி இன்வெஸ்டிகேஷன் என்று சொல்வார்களே அந்த ஆரம்ப ஆய்வு வேலைகள் நடத்தப்பட்டு, தற்பொழுது ஐம்பது இலட்சம் ரூபாய் செலவாகும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. ஆகவே, உடனடியாக இதற்குத் தீவிர ஆய்வுக்கு உத்தரவு போடப்பட்டு, தற்போது தலைமைப் பொறியாளர் (ஆய்வு) அவர்கள் அதை ஆய்வு செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்களுடைய கோரிக்கை ஏற்கப்பட்டு, விரைவில் ஆய்வுகள் நடத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. அமிர்தராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஆய்வுகள் விரைவில் நடத்தி முடிக்கப்பட்டு, நடப்பாண்டிலேயே இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு உரிய ஆணையை அமைச்சரவர்கள் பிறப்பிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஆய்வே முடியவில்லை. அதற்குள் ஆய்வு அறிக்கையைப் பெற்று, இந்த ஆண்டே திட்டத்தை மேற்கொள்வதா, கூடாதா என்று உத்தரவு போட முடியுமா என்பதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

### வேதாரண்யம் பகுதியில் பட்டுப்பூச்சி வளர்க்கும் திட்டம்

*வினா எண் 40.—திரு. எம் எஸ். மாணிக்கம் : மாண்புமிகு ஊரகத்தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் வேதாரண்யம் பகுதியில் பட்டுப்பூச்சி வளர்க்கும் திட்டம் செயல்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், எத்தனை ஏக்கரில் முசுக்கொட்டை பயிர்செய்யப்பட்டுள்ளது ?

(இ) விவசாயிகளுக்கு என்னென்ன உதவிகள் செய்யப்பட்டுள்ளன ?

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : (அ) ஆம்.

(ஆ) தற்போது 162.50 ஏக்கர் பரப்பளவில் முசுக்கொட்டைச் செடி நடவு செய்யப்பட்டுள்ளது.

(இ) 1982–83 ஆம் வருடம் 133 விவசாயிகளுக்கு பட்டுப்புழு வளர்ப்பில் பயிற்சி அளிக்கப்பட்டு ரூ. 39,900 பயிற்சித் தொகையும், ரூ. 39,900 மதிப்புடைய புழு வளர்ப்பு தளவாட சாமான்கள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. மேலும் 89 விவசாயிகளுக்கு புழு வளர்ப்பு தளவாட சாமான்கள் வாங்கவும் புழு வளர்ப்பு மனை கட்டுவதற்காகவும், ரூ. 3,78,900 வங்கிக்கடன் வழங்கப்பட்டு அதற்கு அரசு மான்யமாக ரூ. 94,725 வழங்கப்பட்டுள்ளது.



திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தப் பட்டுப்பூச்சி கூடுகளையெல்லாம் முன்பு அதிக விலைக்கு வாங்கிக்கொண்டிருந்தார்கள். ஆனால் இப்பொழுது குறைவான விலைக்கு அவைகளை வாங்குவதால் விவசாயிகளிடம் உற்சாகம் குறைவாக இருக்கிறது. ஆகவே, அவர்களுக்கு நியாயமான விலை கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு இரா. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வேதாரண்யம் பகுதியில் மருதூர் தெற்கு, மற்றும் செங்கோட்டை ஆகிய இரண்டு இடங்களில் ஆரம்பிக்கப்பட்டு, இளம் புழு வளர்ப்பு மையங்களில் நன்முறையில் நோயற்ற புழுக்கள் வளர்க்கப்பட்டு, விவசாயிகளுக்கு கொடுக்கப்பட்டு வருகிறது. வேதாரண்யம் பகுதி விவசாயிகள் உற்பத்தி செய்யும் கூடுகளை வேதாரண்யம் பகுதியிலேயே பயன்படுத்துவதற்காக காதி வாரியம் 20 பேசின்கள் கொண்ட கூட்டுறவுச் சங்கம் ஒன்றைப் பதிவு செய்திருக்கிறது. எனவே, இந்தச் சங்கம் செயல்பட ஆய்வு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கான அலுவலகம் வேதாரண்யத்திற்கு வெகு தூரத்தில், கும்பகோணத்தில் இருப்பதால் இன்னும் பல விவசாயிகள் பலன் பெறாமல் இருக்கிறார்கள். எனவே, இதற்கான அலுவலகத்தை வேதாரண்யத்தில் அமைத்தால், பட்டுப்பூச்சி உற்பத்தியில் விவசாயிகள் இன்னும் அதிக உற்சாகத்துடன் ஈடுபட முடியும். அதற்கு ஆவன செய்வார்களா ?

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பட்டுப் புழுவளர்ப்பதற்கு வேண்டிய வசதிகள் அனைத்தும் செய்யப்பட்டுள்ளன. வேதாரண்யம் பகுதியைப் பற்றிய தகவல் தற்போது இல்லை. அதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2 அறிவிப்புகள்.

### (அ) எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்ட முன்வடிவு 1983.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில், தமிழ்நாடு 1983-ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 37/1983) ஆய்வு செய்யப்பெற்று, பரிந்துரைகள் ஏதுமின்றி திருப்பி அனுப்பப் பட்டதாக மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது.

### (ஆ) மேலவை முன்னாள் உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் மீதான உரிமை மீறல் பிரச்சினை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மேலவை முன்னாள் உறுப்பினர் திரு. நா. வீராசாமி அவர்கள் மீது பேரவையில் எழுப்பப்பெற்ற அவை உரிமை மீறல் பிரச்சினை குறித்து, மேலவைத் தலைவரிடமிருந்து வந்துள்ள செய்தியினை அவைக்கு அறிவிக்கிறேன்.

'' இந்த உரிமைப் பிரச்சினையில் அடங்கியுள்ள செயல் உறுப்பினர் திரு. ஆற்காடு நா. வீராசாமி அவர்கள் இந்த அவையில் ஆற்றிய உரைக்காகவோ, அல்லது இந்த அவையில் உறுப்பினர் என்ற முறையில் அவையில் கடமைகளை ஆற்றும் பொழுது எழுந்தது அல்ல. இந்த அவைக்கு வெளியில், அவைக்கு சம்பந்தப்படாத செயல் குறித்தது. எனவே, சட்டமன்றப் பேரவை இதன் மீது மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதில் இந்த அவைக்கு எந்தவிதமான ஆட்சேபமும் இருக்க முடியாது. இருப்பினும் இரு அவைகளின் சுமுக உணர்வைக் காப்பதில் ஆர்வமுள்ள சட்டமன்றப் பேரவைத் தலைவர் என் கருத்தைக் கோரியுள்ளார்கள். அவர்களுக்கு இந்த அவையின் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10–30.)

உரிமைப் பிரச்சினையில் அடங்கியுள்ள செயல் இந்த அவைக்கு தொடர்பில்லாததாலும், அவைக்கு வெளியில் நடந்துள்ளபடியாலும், இந்த அவையின் உறுப்பினர் என்ற முறையில் அவையின் கடமைகளை ஆற்றும்போது எழுந் தது அல்ல என்பதாலும், சட்டமன்றப் பேரவை இது குறித்து பரிசீலித்து முடிவெடுக்கலாம் என்று பேரவைத் தலைவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



## 3. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

### (அ) நகர்ப்புற நில உச்சவரம்பு முறைப்படுத்தல் திருத்தச் சட்ட முன்வடிவு 1983.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன். '' தமிழ் நாடு 1983-ஆம் ஆண்டு நகர்ப்புற நில உச்சவரம்பு-முறைப்படுத் தல்) திருத்தச் (திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறி முகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற் றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : : தலைவர் அவர்களே, இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

### (ஆ) பணிக்கொடை வழங்கல் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு 1983

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

'' 1983-ஆம் ஆண்டு பணிக்கொடை வழங்கல் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்ற பெற்று ,அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : : தலைவர் அவர்களே இச் சட்டமுன்வடிவை பேரவை முன்அறிமுகம் செய்கிறேன்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

## 4 அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம் விவாதம் (தொடர்ச்சி)

**திரு. துரைமுருகன் :** தலைவர் அவர்களே, இந்த அமைச்ரவையின மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை மார்க்சிஸ்ட்கம்யூனிஸ்டு சட்சியினுடைய சட்டப் பேரவைத் துணைத் தலைவர் மாண்புமிகு உமாநாத் அவர்கள் முன்மொழிந்திருக்கிறார்கள். அதை எங்கள் கட்சியின் துணைத் தலைவர் மாண்புமிகு திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் வழிமொழிந்திருக்கிறார்கள். எனவே அந்தத் தீர்மானத்தின் மீது நான் சார்ந்திருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சில கருத்துக்களை இந்த மாமன்றத்திலே எடுத்து வைக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்படுகின்றது என்றால் ஓட்டின் மூலம் இந்த அமைச்சரவையைக் கவிழ்த்து விடுவோம் என்ற ஆசையால் அல்ல. அதன் காரணத்தால் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டதல்ல. அது முடியாது என்று எனக்குத் தெரியும். காரணம், ஆளும் கட்சி வரிசையில் அதிகமான அங்கத்தினர்கள் அமர்ந்து இருக்கிறார்கள் என்பதையும் நான் மறக்கவில்லை. அப்படி இருக்கிறபோது எதற்காக நம்பிக்கையில்லாத் தீர்மானம் என்று கேட்டால் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மூலமாகத்தான் இந்த அமைச்சரவையின் குற்றம், குறைகளை நிர்வாகத் திறமையின்மையை நாட்டிலே நீங்கள் புரிந்து இருக்கும் கொடுமைகள் லஞ்சத்திலே புழுத்த புழுக்களாக நெளிவதை, மற்றும் நடத்தி இருக்கும் அராஜகத்தை—தொழிலாளி வர்க்கம், விசாய சமுதாயம், பாட்டாளித் தோழர்கள், மற்றும் பல்வேறு சமுதாயப் பிரிவினருக்கு இழைக்கப் பெற்று இருக்கும் கொடுமைகள், ஆகியவற்றை நாட்டு மக்களின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்கு இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானம் ஒரு துணையாக இருக்கும் என்பதற்குத்தான் இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை நாங்கள் கொண்டு வந்து இருக்கிறோம்.

ஆனால் நேற்று பேசிய ஆளும் கட்சி உறுப்பினர் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நீங்கள் கொண்டு வந்து இருக்கிறீர்கள். ஆனால் நாட்டு மக்கள் எங்களிடத்தில் நம்பிக்கை வைத்து இருக்கிறார்கள். இடையிலே இரண்டு இடைத்தேர்தல் வந்து விட்டது. பெரிய குளத்திலே, திருச்செந்தூரிலே இடைத்தேர்தல் வந்தது. அதிலே மக்கள் எங்களிடத்தில் நம்பிக்கை வைத்து வெற்றி வாய்ப்பினை எங்களுக்கு அளித்து இருக்கிறார்கள். ஆகவே, நாட்டு மக்களிடத்திலே போய் நீங்கள் என்ன பதில் சொல்லப் போகிறீர்கள் என்று கேட்டார்கள். ஒரு இடைத்தேர்தலில் ஒரு கட்சி வெற்றி பெற்று விட்டாலேயே அந்தக் கட்சியின்முடிவு



இறுதி அத்தியாயம் எழுதி வைக்கப்பட்டுவிட்டதாகக் கருதி விடக்கூடாது. 1980-ஆம் ஆண்டில் முழுமையாக நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றது. 1977-ஆம் ஆண்டில் மிக அபரிதமான வாக்குகளைப் பெற்று சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட நீங்கள், நாடாளுமன்றத் தேர்தலில் படுதோல்வி அடைந்தீர்கள். உடனே நாட்டு மக்கள் எங்களுக்கு அங்கீகாரம் கொடுக்கவில்லை என்று இந்த அமைச்சரவை ராசினாமா செய்து இருந்தால் ஜனநாயக உணர்வு உங்கள் உள்ளத்திலே கொஞ்சமாவது ஒட்டிக்கொண்டு இருக்கிறது என்று நாங்கள் எண்ணுவோம். பாராளுமன்றத்தில் எல்லா இடங்களிலும் பல்லாயிரக் கணக்கான ஓட்டு வித்தியாசத்தில் நீங்கள் தோற்கடிக்கப்பட்டீர்கள். அன்று அதை நீங்கள் மக்கள் சக்தி என்று எடுத்துக் கொண்டது உண்டா? கிடையாது.

1965-ஆம் ஆண்டு தமிழகத்தில் இந்தி எதிர்ப்புப் போராட்டம் தொடங்கி, தமிழகம் ரத்தச் சகதியாகி, திருச்செங்கோடு, திருவண்ணாமலை, பாண்டிச்சேரி, பவானி, வெள்ளக்கோயில், வள்ளியூர் போன்ற இடங்களில் இயந்திரக் குழல் துப்பாக்கியால் சுடப்பட்டு ஏறத்தாழ 500-க்கும் மேற்பட்டவர்கள் சுடப்பட்டு உயிரிழந்த நிலைமைகள், பலர் பெட்ரோல் ஊற்றி கொளுத்தப்பட்ட நிலைமைகள் என்று தமிழகத்தில் அத்தகைய பெரிய கொடுமைகள் நடந்த பிறகு, தர்மபுரியில் இடைத்தேர்தல் நடைபெற்றது. அன்றைக்கு இருந்த காங்கிரஸ் ஆட்சி நாங்கள் செய்தது சரி என்று சொல்லி அந்தத் தேர்தலில் போட்டியிட்டது. அங்கே காங்கிரஸ் வேட்பாளர் வெற்றி பெற்றார். காங்கிரஸ் ஆட்சி செய்தது அவ்வளவும் சரி என்று மக்கள் சொல்லி விட்டார்கள் என்று அன்றைக்குச் சொன்னார்கள். அப்போது கலைஞர் அவர்கள் பத்திரிக்கை நிருபர்களிடத்தில் பேட்டி அளிக்கிறபோது சொன்னார். இடைத்தேர்தல் என்பது கையிலே இருக்கும் நகத்தை வெட்டியெறிவதற்கு ஒப்பாகும். ஒரு நகத்தை வெட்டி விட்டால் அது மீண்டும் வளராது என்று பொருள் அல்ல. ஒரு இடைத் தேர்தலில் வெற்றி பெற்று விட்ட காரணத்தாலே காங்கிரஸ் என்றும் இங்கே ஆட்சியில் உட்கார்ந்து இருக்க முடியாது என்று சொன்னார்கள். அதையே நான் திருப்பிச் சொல்கிறேன். நீங்கள் ஏதோ ஒரு இடைத் தேர்தலில் வெற்றி பெற்று விட்ட காரணத்தாலே உங்கள் பக்கம் எப்போதும் அலை வீசும் என்று கருதினால், நீங்கள் போடுகிற கணக்கு தப்புக் கணக்காய் போய் விடும் என்பதை நான் இங்கே எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

இன்னொன்றையும் கூடச் சொன்னார்கள். நாங்கள் தேர்தலில் கொடுத்த வாக்குறுதிகளை எல்லாம் நிறைவேற்றியிருக்கிறோமே இதற்காகவா நம்பிக்கையில்லாத் தீர்மானம் என்று கேட்டார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட வெளியே பொள்ளாச்சியிலே பேசியது பத்திரிகையில் பார்த்தேன். நான் தெரி

வித்துக் கொள்வது எல்லாம் நீங்கள் எத்தனையோ வாக்குறுதிகளைக் கொடுத்து இருக்கிறீர்கள். தேர்தல் காலத்தில் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளை நான் அவ்வளவாக எடுத்துக் கொள்ளவில்லை. காரணம் வாக்குகள் சேகரிக்கிற மும்முரத்தில் சொல்லியிருப்பீர்கள். வி ஆர் ஆல் பாலிடீஷியன்ஸ். ஆனால் இந்த மாமன்றத்திலே கொடுத்த வாக்குறுதிகள் என்னவாயிற்று? இந்த மாமன்றம் தான் சுப்ரீம் பாடி—இங்கே கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்பது ஜனநாயக மரபு. அந்த மரபுப்படி நீங்கள் செய்து இருக்கிறீர்களா என்று கேட்டால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

இதே மாமன்றத்தில் சொன்னீர்கள். 6 மாதத்திற்குள் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் வரும். மாண்புமிகு சட்ட அமைச்சர் அறிவிப்பு. முதலமைச்சர் உத்தரவு என்று தினமணியில் 8 காலம் தலைப்பில் செய்தி வருகிறது. அந்தத் தேர்தல் நடைபெற்றதா ? ஜுலையில் நகராட்சித் தேர்தல் நடப்பது உறுதி. முதலமைச்சர் அறிவிப்பு. இட ஒதுக்கீடு தடை விதித்தால் பழைய முறைப்படி தேர்தல் நடக்கும். இதே மாமன்றத்தில் அவர்கள் சொன்னார்களே அதை நடத்தினார்களா ? ஜுலையில் நடந்தே தீரும் என்று எம்.ஜி.ஆர். அறிவிப்பு இது மாலை முரசு-இல் வந்த 8 காலம் செய்தி. குடும்ப கார்டுகளுக்கு அரிசி அளவு குறையும். அதற்கு பதிலாக கோதுமை தரப்படும் என்று சொன்னார்கள். இன்றைக்கு 6 கிலோ கூட கிடைக்காத அவல நிலை இருக்கிறது. இப்படி எதையும் செய்யவில்லை. நகராட்சி தேர்தல் ஜுலையில் வரும் என்று சொல்லப்பட்டது. ஜுலை போய் விட்டது. தேர்தல் வந்ததா? நம்முடைய அமைச்சர் குழந்தைவேலு அவர்கள் நல்லகாலம் அமைச்சராக இருக்கிறார், நீதிபதியாகப் போய் இருந்தால் வாய்தா கொடுத்தே எல்லா கேஸ்களளயும் ஒத்தி வைத்து விடுவார்.

(முற்பகல் 10-40)

பிறகு என்ன செய்தார் என்று கேட்டால் ஆகஸ்ட் 1981-ல் நகர சபைகளுக்குத் தேர்தல் வரும், உள்ளாட்சி நிறுவனங்களுக்கு எப்படியும் செப்டம்பர் 1981 இல் தேர்தல் முடிந்து விடும் என்று சொன்னார். இதுவும் எட்டுக் காலச் செய்தியாக வந்திருக்கிறது. நம்முடைய மாண்புமிகு அமைச்சர் வீரப்பன் அவர்கள் குத்தகைத்தாரர் சட்டத்திலிருந்து கோவில் நிலங்களுக்கு விலக்கு அளிக்கும் சட்டம் வரும் என்று சொன்னார்கள். இதுவும் எட்டு காலச் செய்தி. ஆனால் அமைச்சர் எஸ்.டி.எஸ். அவர்கள் கோவில் நிலங்களுக்கு நாங்கள் விதிவிலக்கு அளிக்கமாட்டோம் என்று சொல்கிறார். இதுவும் தினமணியில் செய்தியாக வெளி வருகிறது. இப்படி ஒன்றுக்கொன்று முரண்பாடாக இருக்கிறது.



இந்த மன்றத்திலே கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளை நீங்கள் நிறைவேற்றினீர்களா ? ஊரிலே சொன்ன வாக்குறுதிகள் ஒரு பக்கம் இருக்கட்டும். இந்த அவையிலே கொடுத்த வாக்குறுதிகளையாவது நிறைவேற்றியிருக்கிறீர்களா ?

அதைப் போல பஞ்சாயத்துக்கள், நகராட்சிகள், மாநகராட்சிகள், கூட்டுறவுச் சங்கங்களுக்கு எல்லாம் தேர்தல் வரும் என்று கூறினார்கள். என்ன ஆயிற்று ? பத்திரிகையிலே எட்டுப் பக்கச் செய்தி வந்தாச்சு ; அடுத்த பரபரப்பு என்னாச்சு ? அது அப்படியே போயாச்சு, என்று குறிப்பிட விரும்புகிறேன்.

''மழைக் காலத்தில் குயில் கூவாது'' என்று சொல்வார்கள். அதைப் போன்று அ.தி.மு.க. ஆட்சியில் உள்ளாட்சி நிறுவனங்களுக்கு தேர்தல் வராது என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறன்.

இன்றைக்கு பஞ்சாயத்துக்களும், நகராட்சிகளும், மாநகராட்சிகளும் கமிஷனர், அதிகாரிகள், ஆளும் கட்சிக்காரர்களின் மேய்ச்சல் காடாக மாறியிருக்கின்றன என்புதைத் தெருவித்துக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன். ஜனநாயகம் உருவாகிற இடமே பஞ்சாயத்துக்கள், உள்ளாட்சி நிறுவனங்கள், இப்படிப்பட்ட உள்ளாட்சி நிறுவனங்களுக்கு தேர்தல் நடைபெறாமல் அந்த ஜனநாயகக் கருவையே கலைத்திருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இன்னும் சொன்னார்கள். தன்னிறைவுத் திட்டம் போட்டிருக்கிறோம் உங்களுக்குத் தெரியாதா ? என்.ஆர்.டி. பி. திட்டத்தின் கீழ், ஏரி, குளம், கண்மாய்கள்எல்லாம் தூர் எடுக்கப்படுகின்றன. இன்னும் என்ன என்ன திட்டங்கள் என்று கே.பி. சுந்தராம்பாள் பாட்டைப் போல சொன்னார்கள். அங்கே என்னென்ன நடந்தன என்பது எங்களுக்குத் தெரியும். அங்கே நடைபெற்ற கொடுமைகளை இங்கே பலரும் எடுத்துச் சொன்னார்கள். நேரம் இல்லாத காரணத்தால் மாண்புமிகு உமாநாத் அவர்கள் ''ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்'' என்பதைப் போல சிலவற்றை இங்கே குறிப்பிட்டார்கள். அதைத் தொடர்ந்து நானும் ஒன்றிரண்டைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

உள்ளாட்சி நிறுவனங்களிலே இன்றைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லாத காரணத்தால் அங்கே ஆளும் கட்சிக்காரர்கள் அதிகாரம் செலுத்துகிறார்கள். சில முக்கியஸ்தர்கள் யூனியன்களிலே டேரா அடித்துக்கொண்டு, ஐயாதான் ஷெட்யூல் கொடுக்க வேண்டும் ; ஐயாவிடம்தான் ஷெட்யூல் கேட்க வேண்டும் என்ற நிலையை உருவாக்கியிருக்கிறார்கள்.

[திரு. துரை முருகன்] (1983 நவம்பர் 9

திருவண்ணாமலை பஞ்சாயத்து யூனியனில் திருவானை முகம்வலசை என்ற ஊரில் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் சாலை போடுகிறார்கள். அதற்கு 5,000 ரூபாய் பேமென்ட் ஆகிறது. அதன் பிறகு திருவானைமுகம்வலசை என்ற பெயரை சிறிது மாற்றி, அதாவது திருவானைமுகம்வலசை என்பதில் வலசை என்ற பகுதியை விட்டுவிட்டு, திருவானை முகம் என்ற பெயரில் அந்த ஊருக்கு சாலை போட என்று 5,000 ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது.

அதைப் போன்று ஆண்டியப்பன்பாளையம் என்ற அரிசனக் காலனிக்கு சாலை போட்டதாகச் சொல்லி 5,000 ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. திருவண்ணாமலை சட்டமன்ற உறுப்பினர் இங்கே இருக்கிறார். அப்படி ஒரு அரிசனக் காலனி அங்கே கிடையாது. ஆனால் அரிசனக் காலனிக்கு சாலை போட்டதாகச் சொல்லி 5,000 ரூபாய் பெறப்பட்டிருக்கிறது. ஆக இப்படிப்பட்ட பல்வேறு காரியங்களில் தன்னிறைவுத் திட்டம் என்ற பெயரால், உங்களுடைய தன்னிறைவுத் திட்டம் உங்களுக்கு நிறைவு அளித்திருக்கிறது ; உங்கள் கட்சிக்காரர்களுக்கு நிறைவு அளித்திருக்கிறது ; உங்கள் பக்கத்தில் இருக்கிறவர்கள் தன்னிறைவு பெற்றிருக்கிறார்கள் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

இப்படிப்பட்ட நிலைமைகளுக்கு காரணம் என்ன ? இந்த அரசுக்கு ஒரு நிலையான கொள்கை இல்லை. திட்டமிடும் செயல் முறை இல்லை. குழம்பிப் போன இலட்சியம் ; இலட்சியம் இல்லாத காரணத்தால் இந்த அமைச்சரவைக்கு இப்படிப்பட்ட நிலைமை வந்திருக்கிறது. ஒரு மந்திரி சொல்கிறார் கோவில் நிலத்திற்கு விதிவிலக்கு என்று மற்றொரு மந்திரி சொல்கிறார் விதிவிலக்கு கிடையாது என்று. இப்படி இரண்டு பேர் சொல்லுகிறபோது நாம் எப்படி யாரை நம்புவது ? ''யாரைத்தான் நம்புவதோ ஏழை நெஞ்சம்'' என்பதைப் போல இருக்கிறது.

ஆனால் நம்முடைய நிதியமைச்சர் நாவலர் சொல்வார், ''துரைமுருகனுக்குத் தெரியாததா ? கருத்து மாறுபாடு இருக்கத் தான் செய்யும். டிஃபரன்ஸ் ஆஃப் ஒப்பினியன் இருக்கத்தான் செய்யும்'' என்று. நான் அவரிடம் தான் பாடம் படித்தேன். டிஃபரன்ஸ் ஆஃப் ஒப்பினியன் நான்கு சுவர்களுக்குள்ளே இருக்க வேண்டும் ; வெளியே சொல்லக் கூடிய அளவுக்கு வரக்கூடாது. வெளியே வந்தால் வேறு மாதிரியான எண்ணம்தான் வரும். ஆக, இத்தகைய நிலைமை உருவாகி இருப்பதற்குக் காரணம் உங்களுக்கு தெளிவு இல்லை. மாண்புமிகு முதலமைச்சருக்குக் கூட சில விஷயங்கள் எப்படி புரியாமல் இருக்கிறது என்று எனக்குப் புரியவில்லை.



1983 நவம்பர் 9) [திரு. துரைமுருகன்]

அவரே திருச்சியிலே பேசுகிறார். ''பஸ் கட்டணங்களை உயர்த்தாமல் அரசு வருவாய் 1,500 கோடியாக அதிகரித்திருக்கிறது என்றும், அண்ணாதுரை அரசு காலத்தில் வருவாய் 1,000 கோடியாக இருந்தது என்றும் முதல்வர் எம்.ஜி.ஆர். திருச்சியிலே நிருபர்களிடம் கூறியதாக தினமணி 31–8–1983 சென்னைப் பதிப்பில் வெளியாகி இருக்கிறது''. ''நாங்கள் ஆட்சிக்கு வந்த போது அரசின் வருமானம் ஆண்டுக்கு சுமார் 1,000 கோடி ரூபாய். தற்போது 3,500 கோடி ரூபாய் வருமானம் வருகிறது என்று அவர் பேசியிருக்கிறார்.'' அதுவும் 31–8–1983 தேதி பத்திரிகையிலே வந்திருக்கிறது.

தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்தினுடைய நிதி வருவாய் 3,500 கோடியா ? பட்ஜட்டை அளித்த நிதி அமைச்சர் உட்கார்ந்திருக்கிறார். அந்த விவாதத்திலே கலந்து கொண்டு நாங்கள் பேசி இருக்கிறோம். நான் தெரிவித்துக் கொள்கிறேன். 1966–67-லே பெரியவர் பக்தவச்சலம் முதலமைச்சராக இருந்த காலத்தில் மாநிலத்தினுடைய வருவாய் 188 கோடி. 1967–68-லே பேரறிஞர் அண்ணா அவர்கள் முதல் அமைச்சராக இருந்த காலத்தில் 248 கோடி ; 1975–76லே கலைஞர் முதலமைச்சராக இருந்த காலத்தில் 501 கோடி ; 1983–84-லே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில் 1,774 கோடி.

1,774 கோடி தான் ஆண்டு வருமான பட்ஜெட் சமர்ப்பித்துவிட்டு, 3,500 கோடி எங்கள் ஆட்சியில் ஆண்டு வருமானம் என்று சொல்லிவிட்டு, அண்ணா காலத்திலே 1,000 கோடி என்று சொன்னால், நாடாளுகின்ற முதலமைச்சருக்கு நாட்டின் வருமானம் தெரியாவிட்டால் திட்டங்களை நீங்கள் எப்படிப் போடப் போகிறீர்கள் ? வீட்டிலே இருக்கிற பெண்களுக்கு பானையிலேஎவ்வளவு அரிசிஇருக்கிறது. ஏதேனும் விருந்தினர்கள் வந்தால் எவ்வளவு பேருக்கு போடலாம் என்று கேட்டால் சரியான கணக்கு எந்தப் பெண்மணியும் சொல்வாள். அந்தக் கணக்கு கூட இங்கே நாடாளுகின்றவர்களுக்குத் தெரியவில்லை என்று சொல்கிறபோது நான் வேதனைப்படுகிறேன். ஆனால் அதற்கும் நம்முடைய நாவலர் அவர்கள் விளக்கம் அளிப்பார்கள். இப்போது அல்ல, பின்னால் அளிப்பார் என்று கருதுகிறேன். அவரும் சொல்லியிருந்தார், ஒரு குத்து மதிப்பாகச் சொல்லிவிட்டார் என்று. எவ்வளவு தூரம் இந்த ஊர் என்று கேட்டால், ஒரு 10 மைல், 15 மைல் இருக்கும் என்று சொல்லலாம். அதைத்தான் குத்து மதிப்பாகச் சொல்ல முடியுமே தவிர, இப்படிச் சொல்வது நியாயமா என்பதை மனசாட்சியோடு நாவலர் அவர்கள் விளக்கவேண்டும், பதிலுரையிலே என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(திரு. துரை முருகன்) (1983 நவம்பர் 9

இந்த வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பற்றி கூட
முதலமைச்சர் அவர்கள் பேசியிருக்கிறார். ''இன்றைக்கு
வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கிறது. தமிழகத்திலே
15 இலட்சம் பேர் வேலையில்லாமல் இருக்கிறார்கள் இந்த
நிலைமை ஏன்? இதற்கு முன் ஆட்சியிலே இருந்தவர்கள்
சிந்தித்து செயல்பட்டிருந்தால், இந்த நிலைமை இன்றைக்கு
வந்திருக்காது'' என்று அதே 31–8–83 அன்று பேசியதாக
தினத்தந்தி பத்திரிகை எழுதியிருக்கிறது. தலைவர் அவர்களே,
இந்திய அரசின் தொழில் துறை பீயூரோ தயாரித்த புள்ளி
விவரத்தை இந்தியன் ஜர்னல் என்ற மாத இதழ் வெளியிட்
டிருக்கிறது. அதிலே தமிழ்நாட்டைப் பற்றி தனியாக
ஒரு புள்ளிவிவரம் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. 1969-ஆம்
ஆண்டு நவம்பர் திங்கள் வரையிலே வேலை வாய்ப்பு கோரி
பதிவு செய்தவர்கள் 3,22,318 பேர். அதாவது $3\frac{1}{4}$ லட்சம்
பேர். 1975 ஜூலை திங்களில் 7,32,000 பேர்கள். கழக
ஆட்சி இறுதியில் கலைக்கப்பட்டது. 1976-லே கவர்னர்
ஆட்சியிலே 8,33,000 பேர்கள். 1977 முதல் 1983 ஏப்ரல்
மாதம் வரையிலே இந்த எண்ணிக்கை 16 இலட்சம். இங்கே
முன்னால் இருந்தவர்கள் செம்மையாக செயல்படவில்லை
என்கிறார்கள். முதலமைச்சர் அவர்களே நான் உங்களிடம்
ஒரு விளக்கத்தைக் கேட்கிறேன். 1969 முதல் 1975 வரையில்
வேலையில்லாதவர்களுடைய தொகை 4 இலட்சம் தான்
அதிகமாகியிருக்கிறது. ஆனால் 1977 முதல் 1983 வரை உங்கள்
ஆட்சியில் அது 6 இலட்சம் பேர் அதிகமாகியிருக்கிறதே,
எங்களைப் பார்த்து சிந்தித்து செயலாற்றியிருந்தால். வேலை
யில்லாத் திண்டாட்டத்தைப் போக்கியிருக்கமுடியும் என்கி
றீர்களே, முதலமைச்சர் அவர்களே, தாங்கள் இந்த வேலை
யைச் செய்வதுதானே. ஆனால் செய்தீர்கள்., யாருக்கு?
பாம்பு கடிக்கு மருந்து கொடுத்திருக்கிறீர்கள். பாம்பு கடிக்கு
மருந்து கொடுக்க ஒருவருக்கு ரூ. 100 சம்பளம். 24 மணி
நேரம் வேலை. வருகிறது எமது திட்டம். நாகதேவதை
விஷத்தை எடுக்கிற நல்ல மருந்து என்று வைத்தியர் ஊரிலே
போர்டு போட்டு உட்கார்ந்திருப்பார். நான் கேட்கிறேன்.
இது என்ன? பார்ட்-டைம் ஓர்க்கா? புல் டைம் ஓர்க்கா?
24 மணி நேரம் பாம்பு வருமா, பாம்பு வருமா என்று உட்
கார்ந்திருக்கவேண்டும். ஆளைப்பார்த்தாலே, பாம்புக்காரன்
என்ற நிலை உருவாகும். தாங்கள் யானைப் பசிக்கு சோளப்
பொறி போடுவதைப் போல, பாம்பு கடிக்கு நீங்கள் ஆளைப்
போட்டிருக்கிறோம், என்று சொல்கிறீர்களே, ஒரு ஆட்சி
இதற்காக வெட்கப்பட வேண்டாமா?

நான் கேட்கிறேன், 12 ஆயிரம் போலீஸ்காரர்களை
எடுப்போம் என்றீர்களே, என்னவாயிற்று? எடுத்திருந்தால்
12 ஆயிரம் பேர்களுக்கு வேலை கிடைத்திருக்காதா? எஸ்.ஐ.,
எடுத்தீரிகளே, 3 தரம், 4 தரம் இண்டர்வியூ வைத்தீர்களே



1983 நவம்பர் 9] [திரு. துரை முருகன்]

அது முடிந்து விட்டதா, அதுவும் கிடையாது. பள்ளிகளிலே
ஆசிரியர்களே கிடையாது. திருவேங்கடம் எழுதி கொடுத்
திருக்கிறார். அவர் தொகுதியிலே பல பள்ளிகளுக்கு ஆசிரி
யர்கள் கிடையாது என்ற நிலை இருக்கிறது. இவைகளெல்லாம்
ஒரு சிறு சிறு இடங்களிலேதான் வேலைவாய்ப்பை குறைக்கும்.

(முற்பகல் 10–50)

ஆனால் பெரும் தொழில்கள் பெருகவேண்டும். அப்படிப்
பட்ட பெரும் தொழில்களை நீங்கள் ஆரம்பித்திருக்கிறீர்களா?
ஆகவே லட்சக்கணக்கான, ஆயிரக்கணக்கான பேர்களுக்கு
வேலை வாய்ப்பு தருகின்ற அந்தக் காரியத்திலே இந்த அரசு
ஈடுபடவில்லை. ஆனால் விளம்பரம் செய்கிறீர்கள். விளம்
பரங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. இந்த ஆண்டு அறிஞர் அண்ணா
பிறந்த நாளிலே ஒரு விளம்பரத்தைக் கொடுத்து இருக்
கிறார்கள். நான் அண்ணா பத்திரிகையிலே பார்த்தேன்.
உங்கள் ஆட்சியிலே யார் அதிகமாக நன்மை அடைந்திருக்
கிறார்கள் என்று கேட்டால், உங்களை ஆதரிக்கிற பத்திரிகைக்
காரர்கள் தான். பக்கம், பக்கமாக விளம்பரங்கள். வெளி
நாட்டுக்குப் போனாலும் விளம்பரம். வந்த பின்னாலும்
விளம்பரம். அரசு விழா வந்தால் விளம்பரம். காமராஜ் பிறந்த
நாள், அண்ணா பர்த் டே போன்ற நாட்களில் விளம்பரம்.
இப்படி, விளம்பரம், விளம்பரம், 365 நாளிலே பாதி நாள்
விளம்பரம்தான். பத்திரிகைக்காரர்களுக்கு நல்ல லாபம்.
உங்களை ஆதரிக்சணும் அது ஒரு கண்டிஷன். இந்த 3 ஆண்டு
களிலேயும், ஆதி திராவிடர்களுக்கு வீடு கட்ட அவர்களுக்கு
நிலம் வாங்க மாணவர்கள் இல்லங்கள் தொடங்க, 303
கோடி ரூபாய் செலவாகி இருக்கிறது என்று விளம்பரப்
படுத்தியிருக்கிறார்கள். உங்களுடைய அண்ணா பத்திரிகை
யிலே இந்த விளம்பரம் வந்திருக்கிறது. நான் கேட்கிறேன்.
3 ஆண்டுகளிலே கட்டப்பட்ட வீடுகள் எத்தனை? விளம்பரப்படி.
95,675 வீட்டு மனைகள் பெற்றவர்கள் தொகை 79,695.
தொடங்கப்பட்ட மாணவர் இல்லங்கள் 675. இதற்கு
எவ்வளவு செலவு என்று சொல்லியிருக்கிறார்கள்? 303 கோடி
ரூபாய் செலவாம். தலைவர் அவர்களே, நான் ஒரு சின்ன
கணக்கைக் கேட்கிறேன். ஒரு வீடு கட்ட 5 ஆயிரம் ரூபாய்
என்று கூட வைத்துக்கொள்ளுங்கள். அந்த திட்டமே மத்திய
அரசினுடைய திட்டம். யாருக்கு இல்லையோ அவர்களுக்கு
6 ஆயிரம் ரூபாய் வரையிலும் வீடு கட்டவேண்டும் என்று மத்திய
அரசு அவர்களுக்கு பணம் உதவி அளிக்கிறது. ஆனால் அதைக்
குறைத்திருக்கிறார்கள். அதைக் குறைக்கிற அதிகாரம் இந்த
அரசாங்கத்திற்குக் கிடையாது. ஆனால் அதைக் குறைத்து
விட்டது மட்டுமல்லாமல், 3 ஆயிரமோ, 3,500 ரூபாய்யோ
தான் தருகிறார்கள். அதுவும் ஒரே தவணையில் அல்ல. அதற்கு
வேறு 4 பேர்களை பிடித்துக்கொண்டு போகவேண்டும். அவர்

களுக்கு உப்புமா வாங்கிக்கொடுக்கவேண்டும். அந்தச்
செலவு எல்லாம் போக அவர்களுக்கு 2 ஆயிரம் ஆல்லது 3
ஆயிரம்தான் போய்ச்சேரும். ஆனால் இன்று வரையிலும்
அந்த வீடுகள் சரியாக கட்டப்படவில்லை. ஆனால் 303 கோடி
ரூபாய் செலவு என்று சொல்லுகிறார்கள். நான் கேட்கிறேன்.
95,675 என்றெல்லாம் வேண்டாம். 96 ஆயிரம் வீடுகள்
என்றே வைத்துக் கொள்ளுங்கள். வீட்டுக்கு 5 ஆயிரம் என்றே
வைத்துக்கொள்ளுங்கள். அப்படிப் பார்த்,காலும் 48 கோடி
ரூபாய்தான் வருகிறது. 79,675 மனைப் பட்டா கொடுத்த
தாகச் சொல்கிறார்கள். 80 ஆயிரம் என்றே வைத்துக் கொள்
ளுங்கள். பெரும்பாலும வீட்டுமனைப் பட்டா புறம்
போக்குகளிலேயிருந்துதான் கொடுப்பார்கள். இல்லை, நான்
நஞ்சை நிலத்திலேயிருந்து வாங்கிக் கொடுக்கிறேன் என்று
கூட வைத்துக்கொள்ளுங்கள். சரி, நான் ஒத்துக் கொள்கிறேன்.
80 ஆயிரம் வீடுகள். ஒரு வீட்டுக்கு 5 ஆயிரமே கொடுங்கள்
கிராமப்புறத்திலே. அதற்கு ஒரு 40 கோடியாகும்.
675 இல்லங்கள் கட்டுவதற்குச் சொல்லுகிறார்கள். ஒரு இல்லத்
திற்கு 50 ஆயிரம்கூட வையுங்கள். அப்படி வைத்தாலும்கூட
அதற்கு என்ன செலவாகிறது? ஏறக்குறைய மொத்தம்
சேர்ந்தால், 120 கோடி அல்லது 130 கோடி செலவாகிறது.
ஆனால் விளம்பரத்திலே காட்டுகிறார்கள். 303 கோடி
ரூபாய் செலவாயிற்று என்று. நான் கேட்கிறேன். பத்திரிகை
பார்க்கிறவர்கள், ஆஹா, அரிசன மக்களுக்கும், தாழ்த்தப்
பட்ட பழங்குடி மக்களுக்கும், அண்ணா தி.மு.க. ஆட்சியிலே
303 கோடி ரூபாய்ச் செலவு செய்து இருக்கிறார்கள் என்று
நினைப்பார்கள். நிதி அமைச்சர் அவர்கள்தான் சொல்வார்கள்,
சீனி சர்க்கரை சித்தப்பா, சீட்டில் எழுதி சுவைந்து பாரப்பா,
என்று. அப்படி ஏட்டுச் சுரைக்காயாக இருக்கிறதே தவிர,
வேறு இல்லை, சரி, அந்த அரிசனங்களுக்காவது நீங்கள்
ஒழுங்காகக் கட்டுகிறீர்களா என்றால், உதாரணத்திற்கு
சொல்கிறேன். தென் ஆர்க்காடு மாவட்டத்திலே விருத்தா
சலம் பக்கத்தில் சின்னப்பரூர் என்ற ஒரு கிராமம் இருக்
கிறது. அந்தக் கிராமத்திலே இருக்கிற அரிசன காலனிக்கு
சுடுகாட்டுக்குப் போவதற்கு வழியில்லை. எனவே பக்கத்திலே
இருக்கிற பிரைவேட் லேண்டை ஆர்ஜிதம் செய்கிறார்கள்.
ஆர்ஜிதம் செய்து முடிந்த பிறகு அதை எதிர்த்து அந்த நிலத்
துக்காரர்கள் கோர்ட்டுக்குப் போகிறார்கள். ஹைக்கோர்ட்டிலே
வழக்கு வருகிறது. ஏன் அரிசன காலனிக்குத்தானே எடுக்
கிறார்கள், அதை எடுப்பதற்கு சர்க்காருக்கு அதிகாரம்
உண்டே, விதி விலக்கு உண்டே, சட்டத்திலே இருக்கிறதே
என்று நீதிபதி கேட்கிறார். அதற்கு இந்த ரிட் மனுதாரர்,
நீதிபதி அவர்களே, இந்த இடத்தை அரிசனங்கள் கால
னிக்காக எடுக்கிறோம் என்று எங்காவது ஒரு வரி உண்டா?
என்று கேளுங்கள் என்று கேட்டார். கடிதத்தைப் பார்த்தார்





உடனே எல்லாவற்றையும அடித்து கீழே தள்ளிவிட்ட பிறகு
இன்றைய தினம் என்ன ஆயிற்று என்று கேட்டார். பிறகு
இதிலே சொன்னார் நீதிபதி மோகன் அவர்கள், ஒரு குதி
ரைக்கு லாடம் அடிப்பதற்கு ஆணி இல்லையாம்; ஆணி
இல்லாத காரணத்தாலே, லாடம் அடிக்கவில்லையாம்;
லாடம் அடிக்காத காரணத்தாலே, போர் வீரன் போருக்குப்
போக முடியவில்லையாம்; போர் வீரன் குதிரை போக
முடியாததாலே களத்திற்குப் போகமுடியாத காரணத்தாலே
எதிரி உள்ளே நுழைந்துவிட்டானாம்; நாடே இழந்ததாம்
ஒரு ஆணி இல்லாத காரணத்தாலே நாட்டை பறி கொடுத்
தார்கள் என்ற வகையிலே ஒரு ஆங்கிலக் கவிதையை எடுத்துச்
சொல்லி, அப்படித்தான் இருக்கிறது இந்த ஆட்சியில் அரிசனங்
களுக்கு நிலம் எடுத்த கதை. அரிஜனங்களுக்கு என்று எழுதா
ததை அதிகாரிகள் பார்க்கவில்லையா? அமைச்சர்கள் பார்க்க
வில்லையா? இத்தியாதிகள் நோக்கவில்லையா என்று கண்டித்து
இருக்கிறார்கள். இது போன்ற நிலைமைகளை எதிர்த்துத்தான்
நம்முடைய மதிப்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர் இளைய
பெருமாள் அவர்கள் கூட உண்ணாவிரதம் மேற்கொண்டார்கள்
சமீபத்திலே என்பதை நாம் அனைவரும் அறிவோம். எனவே
அப்படிப்பட்ட நிலைமைகள் மாற்றப்பட வேண்டும். அரிசனங்
களுக்கு வீடு கட்டிக் கொடுக்கப் போகிறோம் என்று விளம்பரம்
செய்திருக்கிறீர்களே தவிர, அவர்களுக்கான எந்த நன்மையையும்
நீங்கள் செய்யவில்லை.

ஆனால் இந்த ஆட்சியிலே எதற்கு அரசு கோர்ட்டுக்குப்
போனாலும், நீதித்துறை தலையிலே குட்டிக் கொண்டேயிருக்
கிறது. தொடர்ந்து இப்படி நடக்கிறது. 1979 ஆம் ஆண்டு
மருத்துவக் கல்லூரி தேர்விலே ஒரு மாணவர் வழக்கு தொடர்ந்
தார். அவருடைய மார்க் லிஸ்ட்டையே திருத்தி விட்டார்கள்.
அப்போது நீதிபதியாக இருந்த இராமசாமி ரத்தினம் அவர்கள்
இந்தத் திருத்தம் நீதிமன்றத்தை அலட்சியப்படுத்துகிறது, நீதி
மன்றத்தை திசை திருப்புவதற்காக செய்யப்பட்டது என்று
கண்டித்தார். நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும்
நடவடிக்கை எடுக்கிறேன் என்றார். நடவடிக்கை எடுத்தார்
களா? அப்போதாவது திருந்தினார்களா?

அதே போல எம். எஸ். தேர்வு நடைபெற்றபோது, தனக்கு
அதில் இடம் அளிக்க வேண்டும் என்று 1979 ஆம் ஆண்டு.
பார்த்தசாரதி என்ற மாணவர் வழக்குமன்றத்திற்கு போனார்
பத்மநாபன் என்ற நீதிபதி விசாரித்தார். அவருக்கு இடம்
அளிக்க வேண்டும் என்று தீர்ப்பு சொன்னார்கள். அரசு மறுக்
கிறது. பிறகு பெஞ்சுக்கு போகிறது, அங்கேயும் அந்த மாண
வருக்கே சாதகமாக தீர்ப்பு. உடனே உச்ச நீதிமன்றத்திற்கு
அரசு போகிறது, அங்கேயும் அந்த மாணவருக்கே தீர்ப்பு.
இப்படி தலையிலேயே குட்டப்பட்டு வந்து சேர்ந்தார்கள்.
இடம் கொடுத்தார்களா. அப்பொழுதும் திருந்தியது உண்டா?

1982 ஆம் ஆண்டு, பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த விசயலட்சுமி என்ற ஊனமுற்ற பெண்ணுக்கு, ஊனமுற்றோருக்குக் கொடுக்கப்படும் சலுகையைக் கொடுத்து, இடம் தர வேண்டும் மருத்துவக் கல்லூரியில் என்று கேட்ட போது, அந்தப் பெண் ஊனம் உற்றவளே அல்லள் என்று சொல்லி தேர்வுக் குழு தடுத்தது. அந்தப் பெண் வழக்கு மன்றத்திற்கு போனாள். நீதிபதி சத்தியதேவ் அவர்கள் அந்தப் பெண்ணை ஹாஸ்பிடலுக்கு அனுப்பி, இவள் ஊனம் உற்றவள்தானா என்று பார்த்துச் சொல்லுங்கள் என்று சொன்னார். மருத்துவர்கள் அந்தப் பெண்ணை பரிசோதித்து, இவள் ஊனம் உற்றவள்தான் என்று சொன்னார்கள். பிறகு அந்தப் பெண்ணுக்கு இடம் கொடுத்தார்கள். அப்போது நீதிபதி சத்தியதேவ் அவர்கள் தேர்வுக் குழுவினரைக் கண்டித்துச் சொன்னார்கள், ''தேர்வுக் குழுவினர் யோக்கியமாகவும், நியாயமான முறையிலும், கடமை உணர்வோடும் நடந்துகொள்ள வேண்டும்'' என்று கண்டித்தார்கள்.

பெரியார் மாவட்டத்தைச் சேர்ந்த வாடியப்பனுக்கு மது சாராய விற்பனை லைசன்ஸ் கொடுக்கவில்லை என்று கோர்ட்டுக்கும்போனார். நீதிபதி சத்தியதேவ் அவர்கள்தாம் அந்த விசாரணையை நடத்தினார்கள். வாடியப்பனுக்கு கொடுக்க வேண்டும் என்று தீர்ப்புச் சொல்லிவிட்டு, ''அரசாங்கம் ஒவ்வொரு முறையும் ஒரு அரசு ஆணையைக் காட்டி, நீதிமன்றத்தின் நேரத்தை வீணாக்குகிறது'' என்று கண்டித்தார்கள். அதற்குப் பிறகாவது திருந்தியது உண்டா ?

சேலம் மாவட்டத்திலே முனுசாமி செட்டியார் என்பவருக்கு சுரங்கம் வெட்ட காண்டிராக்ட் கொடுப்பதிலே தகராறு ஏற்பட்டு, இந்த மாமன்றத்திலேயே அது பற்றி விவாதிக்கப்பட்டது எல்லோருககும் தெரியும். அவர் கோர்ட்டிற்கு போனபோது, அந்த வழக்கிலே நீதிபதி இராமானுஜம், ''மனுதாரர் மூலைக்கு மூலை, இந்த அரசின் முரட்டுத்தனம் காரணமாக, இந்த அரசின் பிடிவாதம் காரணமாக அலைக்கழிக்கப்படுகிறார். இந்த அரசு நீதிபதி அளித்த முதல் ஆணையை புறக்கணித்திருக்கிறது. இந்த அரசு சட்டங்களை காற்றில் பறக்கவிட்டிருக்கிறது. இந்த நீதிமன்றத்தின் உத்தரவுகளை அலட்சியமாகப் புறக்கணிக்குமேயானால், நாட்டின் குடிமகன் நீதிமன்றத்தை புனிதமாக கருதுவது என்பது போலியாகப் போய் விடுகிறது. அரசின் போக்கு நீதிமன்றத்தின் கண்ணியத்தை குலைக்கின்ற காரணத்தால், தண்டிக்கப்பட வேண்டி உள்ளது. இந்தக் காரணங்களால் இந்த அரசு குற்றவாளி என்று தீர்ப்பளித்து, 26—11—1981 ஆம் தேதி அன்று நீதிபதியின் உத்தரவை புறக்கணித்த, அவமதித்த குற்றத்திற்காக 2 ஆயிரம் ரூபாய் அபராதம் போடுகிறேன்'' என்று போட்டார்கள்.





அதைப்பற்றி கலைஞர் அவர்களும் கேட்டார் முதலமைச்சர் அவர்கள் இந்த அரசுகுத்தானே, அப்பீலுக்கு போகிறோம் என்றார்கள். ஜெயித்தார்களா என்றால், மன்னிப்புக் கேட்டுக் கொண்டு வந்து விட்டார்கள். அதற்குப் பிறகாவது திருந்தினார்களா? இப்படி எதை எடுத்தாலும் பழிவாங்குகின்ற போக்கினை கடைப்பிடித்து, நீதியைப் புறக்கணிக்கின்ற தன்மையில் செயல்படுவது ஆகிய இவைகள்தாம் உங்களுடைய இலட்சியமாகக் கொண்டிருக்கிறீர்களா என்று நான் கேட்க விரும்புகிறேன். இப்படி எதை எடுத்தாலும் கோர்ட்டுக்குப் போனால்தான் நீதி கிடைக்கும் என்ற நிலை இருந்தால் நிர்வாகம் எதற்காக இருக்கிறது ?

இங்கே இருக்கிற பி.டபிள்யூ.டி.யிலே ஷெட்யூல் கேட்டால் கூட கொடுக்கமாட்டேன் என்கிறார்கள். அதற்காக ராமநாதன் என்ற காண்டிராக்டர், வழக்கு மன்றத்திற்குப் போய் ரிட் போட்டிருக்கிறார்கள். காண்டிராக்டர்களாக இருப்பவர்களுக்கு, போய் கேட்டால் ஷெட்யூல் கொடுக்க வேண்டும். ஆனால் கொடுக்க மறுத்து அதிலே கையெழுத்து வாங்கி வா என்கிறார்கள். ஒரு ஷெட்யூல வாங்க வேண்டுமென்றால் கூட கோர்ட்டுக்கு போகக் கூடிய கொடுமை இருந்தால், இது என்ன ஆட்சியா அல்லது ஏதாவது காட்சியா ?

நாட்டிலே அரசு ஆட்சி நடக்கிறதா இல்லையா? மற்றத் துறைகளில் இன்றைக்கு என்ன நிலைமை ? அதே நிலைமை ? எம். பி. பி.எஸ். தேர்விலே நடந்த ஊழல்படிகளின் நிலைமை என்ன ? எல்லோருக்கும் தெரியும். என்ஜினியரிங் காலேஜில் 500 சீட்டுகள் காலியாக இருக்கின்றன என்று சொல்கிறார்கள். அதற்கு காரணம் பட்டியலை வெளியிடுவதிலே காலதாமதம். அதற்கு மேல் குழப்பங்கள். இப்படி குழப்பத்திற்கு மேல் குழப்பங்களை உருவாக்குவதிலே நீங்கள் கெட்டிக்காரர்களாக, வல்லவனுக்கு வல்லவனாக இருக்கிறீர்கள்.

(முற்பகல் 11-00.)

எம்.டி., எம்.எஸ்., டி.ஜி.ஓ. ஆகிய மருத்துவ மேற்படிப்பிற்கு முதலிலே இன்டர்வ்யூ நடத்தி ஒரு பட்டியல் போட்டு மாணவர்களைச் சேர்த்து விட்டார்கள். போன மாணவர்கள் இரண்டு மாத காலமாகப் படித்துக் கொண்டிருக்கிறார்கள். திடீரென்று முதலமைச்சரிடமிருந்து ஒரு பட்டியல் புறப்பட்டு லலிதா காமேஸ்வரன் அம்மையாருக்குப் போய் அங்கிருந்து நேராகக் கொண்டு போய் 20 பேர்களைச் சேர்த்து இருக்கிறீர்களே, என்ன காரணம்? எந்தத் தேர்வுக் குழுவாலே ஒதுக்கப்பட்டார்களோ அவர்களை எல்லாம் பின் கதவைத் திறந்து உள்ளே விட்டீர்களே, இரண்டு மாதம் கழித்து. என்ன நிலைமை யார்? யார்? பல்கலைக் கழக துணைவேந்தருடைய மகன், சினிமா அதிபர் நாகிரெட்டியாருடைய மகன், மத்திய அமைச்சர் திரு. ஆர். வெங்கட்டராமன்—அவருக்கு அல்ல—அவருடைய நேர்முக

உதவியாளருடைய மகள். பார்த்தீர்களா? இவர்களுக்குத் தரு
வதற்காக இப்படிப்பட்ட நிலைமையா ? இன்றைக்குப் பத்திரி
கையிலே எழுதியிருக்கிறார்கள். நம்முடைய நாவலர் அவர்கள்
தான் முன்னாலே எல்லாம் பேசுவார். இந்த நாட்டிலே ஒரு
டாக்டர் வந்துவிட்டால் அவன் வீடு பூராவும் டாக்டராக இருக்க
வேண்டும், ஒரு எஞ்சினியர் வந்துவிட்டால் அவன் வீடு பூராவும்
எஞ்சினியராக இருக்க வேண்டும் ஏன்பது கூடாது என்று ஒரு
முறை பேசினார். அப்படி ஒரு டிரடிஷன், பரம்பரை, ஒரு
வீட்டுச் சொத்து என்ற நிலைமை இருக்கிறது. ஒரு பெரிய
டாக்டருடைய மகன் 51 பர்சன்ட் தான். H is eligible to apply
for MBBS Cours:, H has not at all secured 60 perc nt கிடையவே
கிடையாது. 51 பர்சன்ட். எனவே அப்ளிகேஷனை கையிலே
கூட தீண்டக் கூடாது, கொறடாலே எடுத்து வெளியே
போட்டிருக்க வேண்டும், ஆபீசை விட்டு. அது தீண்டத்தகாத
அப்ளிகேஷன். ஆனால் அந்த பையனை கூப்பிட்டு எம்.பி.பி.எஸ்.
கொடுத்திருக்கிறீர்களே நியாயந்தானா? இங்கே உட்கார்ந்து
இருக்கிற திரு. வி. கிருஷ்ணமூர்த்தி—என் கட்சிக்காரர் என்பதற்
காக அவருடைய பெண் 87 சதவிகிதம் வாங்கியிருக்கிறது. நான்
பச்சையாகச் சொல்கிறேன். தமிழ்நாட்டிலே மிகப் பிற்படுத்தப்
பட்ட முக்குலத்தோரும், அரிசனங்களும், வன்னியர்களும் இருக்
கிறார்களே, அந்த வன்னிய சமுதாயத்திலே எம்.பி.பி.எஸ்.க்குப்
போக இரண்டாவது மெரிட்டிலே இருக்கக் கூடிய பெண், 87
சதவிகிதம் வாங்கியிருக்கக் கூடிய பெண் இங்கே இருக்கக் கூடிய
உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தியினுடைய பெண் பிற்படுத்தப்
பட்ட பெண்—87 சதவிகிதம் பெற்று வருவது துணைத் தலைவர்
அவர்களே, உங்களுக்கும் தெரியும் எனக்கும் தெரியும், w are
sailing inthe same boat. இப்படிப்பட்ட நிலைமை இருந்து கொண்டு
இருக்கிறது. 87 சதவிகிதம் வாங்கிய ஒரு பெண்ணுக்குத் தரா
மல் 51 சதவிகிதம் வாங்கிய ஒரு டாக்டருடைய மகனுக்கு தந்து
இருக்கிறீர்களே இங்கே நீதி பிறண்டது, நியாயம் அழிந்தது,
நேர்மை சீர்குலைந்தது உங்கள் ஆட்சியிலே, இந்த ஒரே காரணத்
திற்காக இந்த அரசு நாணயமானதாக இருந்தால் ராஜிநாமா
செய்ய வேண்டாமா ? என்ன சொல்கிறீர்கள். மதிப்பிற்குரிய
டாக்டர் ஹண்டே அவர்கள் எதிர்க் கட்சியிலே இருந்திருப்பாரே
யானால் இந்த சப்ஜெக்ட்அவரிடம்இருந்திருந்தால்எப்படிப் பேசி
இருப்பார்? நான் பார்த்தறிந்தவன். என்ன சொல்வார்? ஆமாம்
துரைமுருகன், அவர்களை எல்லாம் பார்ட்டியாக சேர்க்கவில்லை,
கோர்டிலே கேஸ் தள்ளப் போகிறார்கள் தெரியுமா? Alright
Durai Murugan This is a v ry serious allegation. I will include
him also as a party என்று சொல்வார். இருக்கட்டும்.
பார்ட்டியை சேர்ப்பதா கூடாதா என்பது லீகலாக இருக்கட்டும்,
ஆனால் நான் நியாயததின் பேரால் கேட்கிறேன். ஒரு தவறு
செய்தால் அதைத்தெரிந்து செய்தால் அவன் தேவன் என்றாலும்
விடமாட்டேன் (குறுக்கீடு). பாட்டெல்லாம் எனக்கு ஞாபகம்.



இருக்காது. தெரிந்து செய்திருக்கிறீர்கள், வேண்டுமென்றே
இண்டன்ஷனலாக, வான்டன்லி செய்திருக்கிறீர்கள். இது
நியாயம் தானா ? நேர்மைதானா? என்று இங்கே இருக்கிற
பெரியவர்களும் மற்றவர்களும் உணர வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். (சிரிப்பு). சட்ட சபையிலே பேசி ரொம்ப
நாளாகிவிட்டது, பொதுக் கூட்டத்திலே பேசுகிற ஞாபகம்.

தமிழ்நாடு கெமிக்கல் புராடக்ட்ஸ் என்ற ஒரு நிறுவனம்
துவக்கப்படுகிறது. தமிழ்நாடு இரசாயனப் பொருள் நிறுவனம்
என்ற கூட்டுத் துறை நிறுவனத்தை டிட்கோ நிதி நிறுவனங்களின்
உதவியுடன் தனி நபரை ஒரு கூட்டாக சேர்த்து 1971 ஆம் ஆண்டு
அந்த நிறுவனம் ஆரம்பிக்கப்படுகிறது. அந்தக் கூட்டு நிறுவனத்
திலே டிட்கோவினுடைய பங்கு 33.8 லட்சம். அந்தத் தனி
நபரின் முதலீடு—யார், ஒரு ஆளை பார்ட்னராகப் போடு
கிறார்களோ அவருடைய முதலீடு—32.5 லட்சம், மற்ற நிதி
நிறுவனங்களுடைய முதலீடு 63.7 லட்சம். 1973 ஆம் ஆண்டு
இந்தக் கூட்டுத் துறையினுடைய திட்ட மதிப்பீடு 445 லட்சம்.
அதை மறு பரிசீலனை செய்து பார்க்கிறார்கள். ரிவைஸ்டு
எஸ்டிமேட் ஆகிறது. 1977-ல் 445 லட்சத்திலிருந்து 690 லட்ச
மாக அந்த புராஜக்ட் இன்கிரீஸ் ஆகி விடுகிறது. எனவே என்ன
செய்வது? 445 லட்சத்திலிருந்து 690 லட்சத்திற்கு அதிகரித்து
விட்ட காரணத்தினாலே 245 லட்சம் அதிகமாகியிருக்கிறது.
இதை எப்படி சரிக்கட்டுவது என்று பார்க்கிறார்கள். இது
ஒரு அருமையான கதை, நீங்கள் கேட்க வேண்டும், 245
லட்சத்தை எப்படி சரிக் கட்டுவது என்பதற்காக இந்தக் கூட்டுத்
துறையிலே தனி நபர் ஒருவரைச் சேர்த்தார்களே அவர் தான்
எம்.டி.யாக ஆகி விட்டார். அவர் ஒரு ஐடியா சொல்கிறார்.
210 லட்சத்தை மற்ற நிறுவனங்கள் ஐ.டி.பி. போன்றவற்றில்
இருந்து வாங்கலாம், பணம் வாங்கலாம் மீதித் தொகையாகிய
35 லட்சத்திலே எம். டி.யாகிய நானும் பார்ட்னராகிய.
டிட்கோவும் சம பங்காக பிரித்துக் கொண்டு முதலீடு செய்வோம்,
செய்கிறார்கள். அதற்கு இணங்க நம்முடைய கவர்ன்மென்டி
னுடைய டிட்கோ தன் பங்கு $17\frac{1}{2}$ லட்சத்திலே $7\frac{1}{2}$ லட்சத்தை
1976 ஆகஸ்ட் மாதத்திலேயும் மீதியை 10 லட்சத்தை அக்டோபர்
மாதத்திலேயும் 16 பர்சன்ட் இடைக்கால தவணையிலே கட்டி
விடுகிறது. இப்படி டிட்கோ தன் பங்கைக் கட்டிவிடுகிறது.
அவர் என்ன செய்கிறார். அவர்கள் செய்ததைப் போலவே
தானும் செய்துவிட்டதாக வங்கியினுடைய கம்பெனி கணக்குக்
அனுப்பிவிட்டதாக எம்.டி.யாகிய அந்த தனி நபரும் செய்கிறார்.

மீதி இருக்கிற 210 லட்சம் ரூபாய்க்கு ஐ.டி.பி.-ஐ கிட்டே
போய் லோன் கேட்கிறார்கள். ஐ.டி.பி.யில். கேட்கிறார்கள்.
நீங்கள் எவ்வளவு பங்கு போட்டு இருக்கிறீர்கள் என்று. 47
லட்சத்தில் டிட்கோ 17 லட்சம் போட்டு இருக்கிறது என்று
சொல்கிறது. உடனே ஐ.டி.பி.-ஐ சும்மா இல்லாமல் எங்கே

(திரு. துரை முருகன்) (1983 நவம்பர் 9

போட்டு இருக்கிறீர்கள் என்று கேட்டது. பாங்கில் போட்டு இருக்கிறோம் என்று சொன்னவுடன் அவன் போய் பாங்கியில் பார்க்கிறான். டிட்கோ போட்ட பணம் மட்டும் இருக்கிறது. இந்த தனி நபர் எம். டி.யாகிய அந்த முதலாளி பணமே போட வில்லை. பணம் போடவில்லை என்று சொன்னவுடனே டிட்கோ விழித்துக் கொண்டது. விழித்துக் கொண்டவுடன் டிட்கோ என்ன செய்தது. உடனே போய் பார்த்ததோடு அவன் நம்மை ஏமாற்றி விட்டான் ''நெற்றியில் நீர் உண்டு நெஞ்சில் வஞ்சம் உண்டு'' ஏமாற்றிவிட்டான் என்று தெரிந்தவுடன் என்ன செய்கிறார்கள் என்றால் அந்த டிட்கோ அந்த எம். டி. மீது போலீஸ் கேஸ் கொடுக்கிறது 1977-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம். இது குறித்து போலீசில் புகார் செய்கிறது. புகாரின் அடிப்படையில் 1977 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30 ஆம் தேதி போலீஸ் அவரை கைது செய்து பின்னால் ஜாமீனில் விட்டுவிடுகிறது. இந்தப் பிரச்சனை பல இடங்களுக்கு வருகிறது. நம்முடைய மேலவை யிலும் மரியாதைக்குரிய முதலமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்சனைப் பற்றி பேசுகிறார்கள். நீங்கள் கேள்விப்பட்டு இருப்பீர்கள்'' நண்பர் அனந்தசாமி ஜாமீனில் வந்து இருக்கிறார். அவர் மீது இன்னொரு வழக்கையும் போடப் போகிறோம். அது மிகப் பெரிய மோசடி வழக்கு. அது இங்கே சொல்லக் கூடாது என்பது இல்லை. அவர் எப்படிப்பட்டவர் என்பதை இந்த நாடே புரிந்துகொள்ளும் என்பதற்காக சொல்ல மனம் வரு கிறது. பணமே போடவில்லை அவருடைய கணக்கில் பணம் வருகிறது. எவ்வளவு சாமர்த்தியசாலி. யாரும் கண்டு இருக்க முடியாத அவர் எல்லாக் கட்சியிலும் இருந்து எல்லோரிடமும் நண்பராக இருந்து இருக்கிறார். என்னைப் பார்க்கும் போது உற்ற துணைவரைப் போல் பழகுகிறார். அப்படிப்பட்டவர்கள் எல்லாம் தவறு செய்தால் இந்த அரசு வேடிக்கைப் பார்த்துக் கொண்டு இருக்காது'' என்று சொல்கிற முதலமைச்சர் அனந்த சாமி என்கிற அந்த ஆள் பணமே போடாமல் இருந்தார். அவரை அரஸ்டு செய்து விட்டார்கள்.

உடனே அந்த கெமிக்கல் புராடக்ட் நிருவாகக் குழுவைக் கூட்டி அவரை எம். டி.யிலிருந்து சஸ்பெண்டு செய்கிறார்கள். எம்.டி.யிலிருந்து அவர் போன பிறகு என்ன நடக்கிறது என்றால், ஆடிட் போட்டு விசாரிக்கிறார்கள். ஆடிட் சொல்கிறது இந்த 17 லட்சம் ரூபாய் போடாதது மட்டும் இல்லை, கம்பெனி கணக்கிலிருந்து 40.78 லட்சத்திற்கு பொய் கணக்கு காட்டி எடுத்துக் கொண்டு இருக்கிறார் என்று சொல்லி இருக்கிறார்கள். ''உள்ளதும் போனதடா நொள்ளக் கண்ணா'' இவன் கட்டாதது மட்டும் இல்லாது கம்பெனி கணக்கிலிருந்து 40 லட்சம் ரூபாயை மோசடி செய்து ஆகி விட்டது. இப்படிப்பட்ட ஒரு பெரும் மோசடியான அந்த ஆளை (மணியடிக்கப்பட்டது) என்ன செய் வது என்ற நிலைமை உருவாகிறது. அதற்கு பிறகு பார்த்தால் திடீர் என்று அவர் மீது இருந்த வழக்கை இந்த அரசு 1980 ஆம்



1983 நவம்பர் 9) (திரு. துரைமுருகன்)

ஆண்டு பிப்ரவரி மாதம் வாபஸ் வாங்குகிறது. அரசாங்கத் தினுடைய பகுதியாக இருக்கிற டிட்கோ நிறுவனத்தை ஏமாற்றி பல லட்ச ரூபாயை ஏமாற்றி பொய் கணக்கு காட்டி பணத்தை எடுத்த முதலமைச்சரால் மேலவையில் கண்டிக்கப்பட்ட அனந்த சாமி என்ற ஆள் மீது தொடுக்கப்பட்ட கிரிமினல் வழக்கை இந்த அரசு வாபஸ் வாங்கியது ஏன்? காம்ட்ரோலர் அண்டு ஆடிட்டர் ஜெனரல் சொல்கிறது என்ன காரணம் என்றே எங்களுக்குத் தெரியவில்லை என்று 1978-79 ஆம் ஆண்டு ஆடிட் கணக்கில் சொல்கிறது. நான் கேட்கிறேன். தலைவர் அவர்களே, இப்படிப் பட்டவர்கள் இப்படி செய்கிறார்கள். இவர்கள் மீது எடுக்கப் பட்ட நடவடிக்கை என்ன? (மணியடிக்கப்பெற்றது). நீங்கள் நடவடிக்கை எடுக்கிறீர்களா ? கிடையாது. இதே மன்றத்திலே நான் பல குற்றச்சாட்டுக்களை அடுக்கடுக்காகச் சொன்னேன். திரு. பிரபாகரன் பேசும்பொழுது, இந்த ஆட்சி யிலே நம்முடைய கல்விக்குத் செய்திருக்கின்ற தொண்டு எவ் வளவு பெரிது என்று சொன்னார். நான் குறைத்து மதிப்பிட வில்லை. ஆனால், நான் கேட்கிறேன், பல்கலைக் கழகத்திலே நடைபெற்ற ஊழல்களை எவ்வளவு எடுத்துச் சொன்னேன். இங்கு என்ன நிலைமை தெரியுமா இன்றைக்கு ?

(முற்பகல் 11—10)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : இந்தப் பொருள்பற்றி, 3, 4 முறைகள் இந்த மன்றத்திலே பேசியாகி விட்டது. திரும்பத் திரும்பச் சொல்ல வேண்டாம்.

திரு. **துரைமுருகன்** : நான் வேறு சொல்கிறேன். இன் றைக்கு என்ன நிலைமை ? வெளியிலே சிமெண்ட் வாங்கிக் கொண்டு வந்து அங்கே இறக்கிக் கொண்டிருக்கிறார்கள். துணைத் தலைவர் அவர்களே, இப்பொழுது என்னோடு வாருங் கள். இப்பொழுதுகூட செனட்டினரி பில்டிங்கில் டி. என். ஜி. 3733 மெட்டாடர் வானிலே கொண்டு வந்து டபிள்யூ. பி. பாக்கு களிலே, ' மேட் இன் ஜப்பான் சிமெண்ட்டை ' இறக்கிக் கொண்டிருக்கிறார்கள். நான் கொரியன் சிமெண்ட் போனது என்று சொன்னேன். இவர்கள் ஜப்பான் சிமெண்ட்டை இறக்கிக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு மேலே ஒரு கமிட்டி போடு கிறேன் என்று சொன்னார்கள். அந்தக் கமிட்டியை வைஸ் சான்சலர் கலைத்துவிட்டார். நான் அதற்காகத்தான் உங்கள் மூலமாகச் சொல்லிக் கொள்கிறேன். யூனிவர்சிட்டி ஆக்டிலே பிரிவு 12 என்ன சொல்கிறது என்றால், இந்த அரசாங்கத்திற்கு எல்லாவிதமான அதிகாரங்களும் உண்டு. எனவே, அவர்கள் நேரடியாக இந்தப் பிரச்சினையிலேஇறங்கி, அவர்களேநடவடிக்கை எடுக்க முடியும் என்று சொல்கிறது. 'பெனாரஸ் யூனிவர்சிட் டியிலே அப்படி எடுத்திருக்கிறார்கள். மற்ற யூனிவர்சிட்டியிலே

530 கோடியே 42 லட்சம். ஆகவே 957 கோடியே 39 லட்சம். அதைத்தான் தோராயமாக ஆயிரம் கோடி ரூபாய் என்றும், தோராயமாக 3,000 கோடிக்கு மேல் இருக்கும் என்றும் சொல்லப் பட்டது. அவர்கள் சொன்ன மாதிரி வருவாய் கணக்கு மட்டு மல்ல, இந்த மாநிலத்திற்கு வருகிற எல்லா வருவாய்களும் கணக் கிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவேதான் ஒட்டுமொத்தமாக தோராயமாக எடுத்துச் சொன்னார்கள் என்ற விளக்கத்தை மட்டும் இந்த அவைக்கு தெரிவிக்க விரும்புகிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது............

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இப்போது வேண்டாம். கடைசியில் பேசிக் கொள்ளலாம். உட்காருங்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே துரைமுருகன் அவர்களின் ஐயப்பாட்டிற் கான விளக்கத்தை நான் தந்தேன் ஆகவே மறுபடியும் அது விவாதமாகிவிடக் கூடாது. நீங்களும், நானும் பேசினால் விவாத மாகி விடும். வேறு ஒரு வாய்ப்பு வருகிறபோது பேசிக் கொள்ள லாம்.

*திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் முன்மொழிந்திருக்கிற, இந்த அமைச்சரவை மீது நம்பிக்கையில்லா தீர்மானத்தின் மீது எங்களுடைய கருத்துக் களை சொல்லவருகிற நேரத்திலே, இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முன்மொழிந்தவர்களும் அதை வழி மொழிந்த வர்களும் பேசியுள்ள பேச்சுக்களை பார்க்கிறபோது, கொண்டு வந்தவர்களுக்கும், அதை வழிமொழிந்தவர்களுக்கும், இந்த நம்பிக்கையில்லா தீர்மானத்திலே இதய சுத்தியான நம்பிக்கை —வாக்கின் அடிப்படையிலே சொல்லவில்லை, தர்மத்தின் அடிப் படையிலே—இந்த அரசை பார்த்து நம்பிக்கையில்லை என்று சொல்வது நியாயம்தானா என்ற கேள்விக்குறி அவர்கள் இதயத் திலே பிறந்திருக்கிறது என்பதைத் தான் அவர்களின் பேச்சுக்கள் தெளிவாக இங்கே காண்பித்தன. கடந்த காலத்தில், பல்வேறு கால கட்டங்களில் சொல்லப்பட்டு, அமைச்சர் பெருமக்களால் ஆணித்தரமாக, ஆதாரத்தோடு மறுக்கப்பட்டதை மீண்டும் மீண்டும் இங்கே பேசிய அருமை நண்பர் துரைமுருகன் போன்றவர் களால் கூறப்பட்டது. இங்கே பேசுகிறபோது கூட துரைமுருகன் அவர்கள் மன்றத்திலே கொடுத்த வாக்குறுதி பற்றிச் சொன்னார் கள். தேர்தல் வாக்குறுதி என்றார்கள். மாண்புமிகு புரட்சித்த. தலைவர் அரசை பொறுத்தவரையில் தேர்தல் வாக்குறுதியாக கொடுக்காதவைகளையும் செய்து கொண்டிருக்கிறது இந்த அரசு. மக்களுக்காக பலகோடி ரூபாய்களை செலவழித்துக் கொண்



டிருக்கிறது இந்த அரசு. இப்படி செயல்பட்டுக் கொண்டிருக்கிற போது முரண்பாடு என்றார்கள். பல்வேறு சட்டங்களைக் கொண்டு வருவதில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் முரண்பாடு இருக்கிறது; கருத்து வேறுபாடு என்றெல்லாம் சொன்னார்கள். அருமை திராவிட முன்னேற்றக் கழகம் உறுப் பினர்களை வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறேன் தயவு செய்து பதில் சொல்லுங்கள். உங்களிடம் இருக்கிற கொள்கை குழப்பம், உங்களிடம் இருக்கிற கொள்கை முரண்பாடு, உங்களிடம் இருக் கிற கருத்து வேறுபாடு ஆகியவைகளை எண்ணிப் பார்க்க மறந்து இங்கே பேசுகிறீர்கள். இலங்கை பிரச்சினையில் திராவிட முன் னேற்றக்கழகம் இரட்டை வேடம் போட்டது. திரு.ரகுமான்கான் அவர்கள் இராணுவத்தை அனுப்ப வேண்டுமென்று முழங் கினார். அதற்காக ஒரு திருத்தத்தைச் சட்டமன்றத்திலே கொடுத்தார்கள்.

(முற்பகல் 11—20)

ஆனால் 28—7—1983 ஆம் நாளன்று இராஜ்ய சபையில் தி. மு. க.வைச் சேர்ந்த திரு. எல். கணேசன் அவர்கள் என்ன பேசியிருக்கிறார்கள் ? இராணுவத்தை அனுப்ப வேண்டு மென்று இங்கே நீங்கள் சொல்லுகிறீர்கள் ? இலங்கை மீது போர் பிரகடனம் செய்ய வேண்டுமென்று நீங்கள் சொல்லு கிறீர்கள், தமிழகத்து மேடைகளிலேயெல்லாம் பேசும்பொழுது இராணுவத்தை இலங்கைக்கு அனுப்ப வேண்டுமென்று சொல்லுகிறீர்கள், சட்டமன்றத்திலே பேசும்பொழுது இராணு வத்தை அனுப்ப வேண்டுமென்று அருமை நண்பர் ரகு மான்கான் அவர்கள் சொல்கிறார்கள். ஆனால் 28—7—1983-ஆம் நாளன்று இராஜ்ய சபையிலே பேசிய திரு. எல். கணேசன் அவர்கள் இராணுவத்தை அனுப்ப வேண்டும் என்று சொல்ல வில்லை. மாறாக அனுப்ப வேண்டாம் என்று தி.மு.க. சார்பில் ராஜ்ய சபையில் பேசியுள்ளார்கள். எல். கணேசன் என்ன சொன்னார் : "We do not want to send Indian Army to Srilanka"

1—8—1983 ஆம் தேதிய முரசொலி பத்திரிக்கையில் வந்த செய்தியை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். 1983-ஆம் ஆண்டு ஆகஸ்ட நான்காம் தேதி மாலை 5 மணிக்குள் இலங் கைக்கு இராணுவம் செல்லவில்லை என்றால் தொடர்ந்து மைய அரசை எதிர்த்துப் போராட்டம் என்று தி. மு. க. வினர் அறிவிக்கிறார்கள். முரசொலி பத்திரிக்கை இந்தச் செய்தியைச் சொல்கிறது.

உங்கள் (தி. மு. க.) ஆலோசனையைக் கேட்பதற்காக பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் உங்களை அழைக்கிறார்கள். என்னென்ன நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்பதற்கு நீங்கள் ஆலோசனை சொல்ல வேண்டு மென்பதற்காக உங்களை அழைக்கிறார்கள். திராவிட முன்

(திரு. துரைமுருகன்) (1983 நவம்பர் 9

அப்படி எடுத்திருக்கிறார்கள். எனவே, அருள்கூர்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

பல்வேறு பொருள்கள் இருந்தாலும், இந்த ஆட்சியிலே உள்ள பலவற்றை நான் சுட்டிக்காட்டியிருக்கிறேன். இந்த ஆட்சிக்கு ஆளுகிற எண்ணம் இல்லை, சம்பாதிக்கிற எண்ணம் உண்டு, கோடிக்கணக்கான பணத்தைச் சேர்த்திருக்கின்றனர். அமைச்சர்களாக இருப்பவர்களுக்குப் பட டிஸ்டிரிபியூஷன் களுக்கும் மற்றும் உறுப்பினர்களுக்குப் படம் எடுப்பதற்கும் நேரம் போதவில்லை. மந்திரிக்கோர் டிஸ்டிரிபியூஷன் ஆபீஸ், இங்கே அவர்களுக்கு வேலை. இப்படி நடக்கிறது நிர்வாகம். எல்லாவற்றிற்கும் இலஞ்சம்; எதைத் தொட்டாலும் இலஞ்சம். துளசிச் செடியைக் கிள்ளினால் மணக்கும். அண்ணா தி.மு.க. ஆட்சியை தொட்டாலே இலஞ்சம் வாடை வரும் என்று கூறி'— அதோடு ஒன்று.

கடைசியாகச் சொல்லிவிடுகிறேன். நம்முடைய காங்கிரஸ் ஆட்சியிருந்த காலத்திலே திரு. வெங்கடராமன் அவர்கள் அமைச்சராக இருந்த காலத்திலே, கன்னியாகுமரியில் பஸ்களை தேசியமயமாக்கினார்கள். அதற்குப் பிறகு சென்னையில் தேசிய மயமாக்கினார்கள். அதற்குப் பிறகு, 100 மைலுக்கு அப்பாலே போகிற பஸ்களை தேசியமயமாக்கினார்கள். அண்ணா அவர் கள் 75 மைலுக்கு மேல் ஓடும் பஸ்களை தேசியமயமாக்கினார்கள் கலைஞர் அவர்கள் நீண்டதூர பஸ்களை தேசியமயமாக்க வேண்டு மென்று சட்டம் கொண்டு வந்தார்கள். அந்தச் சட்டம் சுப்ரீம கோர்டுக்குப் போனது. அன்றைக்கு அந்தச் சட்டத்தை எதிர்த்து முதலாளிகள் எல்லாம் போனார்கள். அதற்கு தேசியமயமாக்கப்பட்டிருப்பது சிறந்த கொள்கை, அதை எந்த மாநிலமும் செய்வதில்லை. கர்நாடகம் செய்தது. சோஷலிச சமதர்ம சமுதாயத்தை அமைக்க வேண்டுமானால், இன்றைக்கு இந்த தமிழ்நாடு, பஸ்களை தேசியமயமாக்குவது தான் சிறந்தது என்று அரசாங்கத்திற்கு அனுசரணையாக டைரக் ஷன்ஸ் கொடுப்பதைப் போல், எல்லோரும் யுனானிமஸ்ஸாக ஜட்ஜ்மென்ட் கொடுத்திருக்கிறார்கள். நான் இந்த அரசைக் கேட்கிறேன். நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள் ? உங்களுக்கு எந்தத் தடங்கலும் இல்லை. எனவே, நீங்கள், பகுதி, பகுதியாக கூட அல்ல. எல்லாவற்றையும் ஒரே நேரத்திலே எடுக்க நட வடிக்கைகள் எடுக்கப் போகிறீர்களா ? இல்லாவிட்டால், பேரம் நடத்துவீர்களா . . . . . . . . . . . . . . . (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்மீது மாண்புமிகு உறுப்பினர் கூறுகின்ற கருத்துக்



1983 நவம்பர் 9) (டாக்டர் இரா. நெடுஞ்செழியன்)

களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இறுதியிலே தக்க விளக்கங்கள், ஏற்ற முறையிலே தருவார்கள். ஆனாலும், மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் கிளப்பிய ஒரே ஒரு பிரச்சினையை மட்டும் தெளிவுபடுத்துவதற்கு விளக்கம் என்ற முறையிலே நான் விளக்கம் தர விரும்புகிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு பொதுக் கூட்டத் திலே கூறுகின்றபொழுது, இந்த மாநிலத்தினுடைய வருவாய் ரூ. 3,000 கோடிக்கு மேல் இருக்கும் என்றும் பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சாக இருந்தபொழுது ரூ. 1,000 கோடி இருக்கும் என்றும் குறிப்பிட்டார்கள். அதைப் பற்றி நான் சொல்கின்றபொழுது, தோராயமாக அவர்கள் சொன்னார் கள் என்று சொன்னேன். அதைப் பற்றிய விளக்கங்களை மாண்புமிகு துரைமுருகன் அவர்கள் கேட்டார்கள். 1983—84 வது ஆண்டு வருவாய் கணக்கிலே இருக்கிற வருவாய் ரூபாய் 1,774.87 கோடி. வருவாய் துறை கணக்கின்படி அது சரி. இந்த மாநிலத்தினுடைய வருவாய் என்று எடுக்கும்பொழுது, 1983-83 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம்—நிதி நிலை அறிக்கை—இங்கே வைக்கப்பட்டபொழுது, எல்லாக் கணக்குகளும் மிகத் தெளிவாக, திட்பமாக தரப்பட்டிருக்கிறது. இதிலே வருவாய் கணக்கிலே வருவாய் மட்டும் 1,774 கோடியே 87 லட்சம். பொதுக் கடன் கணக்கில் வருவாய் 408 கோடியே 47 லட்சம். கடன்களும், முன் பணங்களும் கீழ் வருவாய் 46 கோடியே 89 லட்சம். பொதுக் கணக்கிலே வருவாய் 1,758 கோடியே 29 லட்சம். இவைகள் எல்லா நிதி நிலை அறிக்கையிலே தெளிவாக கூறப்பட்டிருக்கிறது. ஆகவே இப்படி 3,988 கோடியே 52 லட்சம் ரூபாய் எல்லா வருவாயும் சேர்ந்து மாநிலத்தினுடைய மொத்த வருவாய். அதே மாதிரி வருவாய் கணக்கிலே செலவு 1,653 கோடியே 81 லட்சம். பொதுக் கடன் கணக்கிலே் 289 கோடியே 18 லட்சம். கடன் களும், முன் பணங்களும் என்ற வகையிலே செலவு கணக்கு 296 கோடியே 54 லட்சம். பொதுக் கணக்கிலே செலவு 1,658 கோடியே 99 லட்சம். மூலதனக் கணக்கு 185 கோடியே 53 லட்சம். கிட்டத்தட்ட 4,084 கோடி ரூபாய் அளவிற்கு செலவினம் வருகிறது. ஆகவே அதன் மூலமாக பற்றாக் குறை 95 கோடியே 53 லட்சம். 1982—83-ல் பற்றாக்குறை 89 கோடியே இரண்டு லட்சம். ஆகவே 1983—84-ல் மொத்தம் பற்றாக்குறை 184 கோடி என்று மொத்தம் போட்டதற்கு காரணம்—ஆக மொத்தம் வருவாய், மொத்தம் செலவினம் என்ற வகையிலே வருகிறபோது 3,000 கோடிக்கு மேலே வருகிறது. 1967—68-ல் பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த போது வருவாய் கணக்கிலே அவர்கள் சொன்னபோது 233 கோடியே 39 லட்சம். ஆகவே பொதுக் கடன் கணக்கிலே வரவு 193 கோடியே 58 லட்சம். பொதுக் கணக்கிலே வருவாய்

[திரு. அ. ரகுமான்கான்] [1983 நவம்பர் 9

ஆலோசனை, முதலாவதாக, ஐ.நா வில் இதை எழுப்ப வேண்டும், இரண்டாவதாக, ஐ.நா. சமரசப் படையை அனுப்ப வேண்டும், மூன்றாவதாக ஐ.நா. வினால் பார்வையாளர்கள் அனுப்பப்பட வேண்டும். நான்காவதாக இராணுவம் அனுப்பப் பட வேண்டும் அடுத்து தனி ஈழம்......................
(குறுக்கீடு) இதை நான் எந்தக் கட்டத்திலும் மறுக்கவில்லை. இந்திராகாந்தி அம்மையார் அவர்களிடத்தில் பேசுகின்றபொழுது எல்லாக் காரியங்களையும்பற்றி நாங்கள் தெளிவாகச் சொல்லு கின்ற கால கட்டத்தில் நிச்சயமாக இராணுவம் அனுப்பப் படக் கூடாது என்பதைப் பிரதிபலிக்கவில்லை என்பதைத் தான் சொல்ல விரும்புகிறேன்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமனியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே நான் மீண்டும் சொல் கிறேன் 28—7—1983 ஆம் நாளன்று இராஜ்யசபையில் திரு. எல். கணேசன் அவர்கள் பேசுகிறார்கள்.

We do not want our Indian Government to send army to Sri Lanka.

We do not want our Indian Government to wage war against Sri Lanka

International Troops கூட இலங்கையில் நிறுத்த வேண்டும் என்று சொல்லவில்லை;

International Observers நிறுத்தப்பட வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

இராணுவத்தை அனுப்ப வேண்டுமென்று தீர்மானத்தை இங்கே கொடுக்கிறார்கள். ஆனால் இவர்களுடைய அரிய ஆலோசனையைப் பெற வேண்டுமென்று பிரதமர் அழைத்த நேரத்தில் அப்படிப்பட்ட பொன்னான வாய்ப்பு கிடைத்த நேரத்தில் தி.மு.க. பொதுக் குழுவில் போட்ட தீர்மானத்தைப் பற்றிப் பிரதமரிடம் சொல்வதற்கு என்ன பயம்? கொள்கைக் குழப்பமா?

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழ கத்தைப் பொறுத்த வரையில் எந்த இடத்திலும் கொள்கைக் குழப்பம் இல்லாமல் கருத்துக்களைச் சொல்லி வருகின்றது. இங்கே இந்த மன்றத்திலே அளித்த வாக்குறுதியைப் பற்றி குறிப்பிட்டார்கள் உறுப்பினர்கள்....(குறுக்கீடு)..........
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே எனக்கு அதிகப் படியான நேரம் கொடுப்பதாக இருந்தால் குறுக்கீடுகளுக்குத் தாங்கள் அனுமதி கொடுக்கலாம்,



1983 நவம்பர் 9]

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : குறுக்கீடுகள் வேண்டாம் தாங்கள் சீக்கிரம் பேசி முடியுங்கள்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : தேர்தல்
காலத்திலே கொடுக்கப்பட்ட வாக்குறுதி என்ற குறுகிய வட்
டத்திலே நிற்காமல் இந்த மாநிலம் முன்னேற வேண்டும்.
மாநிலம் வளரவேண்டும் என்பதற்கான காரியங்களை எல்
லாம் செய்வதிலேதான் நாம் எடுத்துக்காட்டாக இருக்க
வேண்டும் என்ற வகையில் பல்வேறு முன்னேற்றத் திட்டங்
களைப் போட்டிருக்கிறார்கள். மற்றைய மாநிலங்களோடு ஒப்
பிட்டுப் பார்க்கின்றபோது நமது மாநிலம் வளர்ச்சித் திட்டங்
களுக்கு அதிகமாகச் செலவிடுகின்றது. அவ்வாறு நமது மாநிலம்
வளர்ச்சித் திட்டங்களுக்காக அதிகமாகச் செலவிடுகின்றது என்
பதை மத்திய நிதியமைச்சர் திரு. பிரணாப் முகர்ஜி அவர்கள்
சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். இம்மாநிலம் செலவு செய்
கின்ற தொகையிலே 36 சதவீதத்தை வளர்ச்சிப் பணிகளுக்ாகவே
புரட்சித் தலைவரின் அரசு செய்து கொண்டிருக்கின்றது
என்ற கருத்தை திரு. பிரணாப் முகர்ஜி அவர்கள் தெரிவித்
திருக்கிறார்கள். எனவே சமுதாய நலத் திட்டங்கள் குறித்து
தேர்தல் வாக்குறுதியிலே சொல்லியிருந்தாலும் அந்த வாக்குறுதி
களை செயல்படுத்துகின்றபோது குறுகிய அளவில் இல்லாமல்
காரியங்களைச் செய்து வருகிறார்கள். ஒரு இலட்சம் வேலை
யில்லா பட்டதாரிகளுக்கு உதவித் தொகை கொடுப்பது என்
பதைப் பொறுத்தவரையில் திரு. உமாநாத் அவர்கள் கூட
இங்கே குறிப்பிட்டார்கள். ஆனால் அப்படி அனைவருக்கும்
வேலை கொடுக்க முடியவில்லை என்றாலும் கூட ஓரளவுக்
கேனும் செய்யப்பட்டிருக்கின்றது. இப்படி பல்வேறு சமுதாய
நலத் திட்டங்களைப் பொறுத்தவரையில் அவை அனைவருக்
கும் கிடைக்கவில்லை என்றால் அதற்குக் காரணம் நிதிப்
பற்றாக் குறையாக இருக்கலாம் அதன் காரணமாக ஒரு இலட்
சம் பட்டதாரிகளில் 50 ஆயிரம் பேருக்குத்தான் கொடுக்க
இயலும். மீதியுள்ள 50 ஆயிரம் பேருக்குக் கொடுக்கவேண்டும்
என்றால் புரட்சித் தலைவரின் அரசுக்கு வேறு யாரும் எந்த
எந்த வகையிலேயும் உதவ மாட்டார்கள். ஆகவே அப்படி
கொடுக்க வேண்டும் என்றாலும் அதையும் அரசு கஜானா
விலே இருந்துதான் கொடுக்கவேண்டிய பொறுப்பு
இருக்கின்றது. எனவே மன்றத்திலே அளித்த வாக்குறுதி
யின்படி செய்வது என்றால் கூடுதல் செலவாகும் என்ற
காரணத்தால்தான் உரிய டார்கெட்டை அடைய முடியாமல்
இருக்கலாம். ஆனால் திராவிட முன்னேற்றக் கழக நண்பர்
களைப் பார்த்து நான் ஒன்று கேட்க விரும்புகிறேன்.

இதே மன்றத்திலே செலவு இல்லாத பல்வேறு திட்டங்களை செயல்படுத்தப் போவதாக கரவொலிக்கு இடையே நீங்கள் அறிவித்தீர்கள். மால்கோ நிறுவனம் தேசியமயமாக்கப்படும்

னேற்றக் கழக நாடாளுமன்ற உறுப்பினர் சி. டி. தண்டபாணி
அவர்களும், இராஜ்ய சபை உறுப்பினர் முரசொலி மாறன்
அவர்களும் சென்றார்கள. அங்கே சென்று என்னென்ன
ஆலோசனைகளைச் சொன்னார்கள் ? அதைப்பற்றியும்
17 – 8 - 1983 ஆம் தேதி சென்னைப் பதிப்பு முரசொலியில்
செய்தி வெளியிடுகிறது. இராணுவத்தை அனுப்ப வேண்டும்
என்று அங்கே சொல்லியிருக்கிறார்களா ? இங்கே தீர்மானம்
கொடுத்த ரகுமான்கான் 'அவர்களைக் கேட்கிறேன். ஏன் தி.மு.க.
விற்கு இந்தக் குழப்பம், ஏன் தி. மு. க. வுக்கு இந்தக் கொள்கை
முரண்பாடு ? ஏன் இந்தக் கருத்து முரண்பாடு? ஏன் தி. மு. க.வின்
கொள்கையிலே மடக்கம்– அதை விளக்க வேண்டும்.

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தினுடைய துணைத் தலை
வரவர்களே, ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினர் விளக்கம்
கேட்பதால் நான் என்னுடைய கருத்தைத் தெரிவிக்க விரும்பு
கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயற்குழுவிலேயும் சரி,
திராவிட முன்னேற்றக் கழகம் நடத்திய இராமநாதபுரம்
மாவட்ட மாநாட்டிலேயும் சரி, இனப்படுகொலையைத்
தடுப்பதற்காக இலங்கைக்கு இராணுவத்தை அனுப்ப
வேண்டும் என்பதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்
கிறது. 'முரசொலி மாறன் அவர்களும், கோபால்சாமி
அவர்களும், மற்றவர்களும், நாடாளுமன்றத்தின் மேலவை
யிலும், கீழ் அவையிலும் பேசியிருக்கிறார்கள். இப்பொழுதும்
அது தான் நிலைமை ; அதுதான் அர்த்தம். அதுகுறித்து
வேறுப்பட்ட அயிப்பிராயத்திற்கு இடமில்லை.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :– துணைத்
தலைவரவர்களே, நான் மிகச சரியாகக் கேட்கிறேன். மீண்டும்
ஒரு முறை அதை மறுப்பதற்கு ரகுமான்கான் அவர்களுக்கு ஒரு
வாய்ப்பைத் துணைத் தலைவரவர்கள் கொடுக்க வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

17–8–1983 ஆம் தேதிய சென்னைப் பதிப்பு முரசொலீ
பத்திரிகையில் வெளியாகியிருக்கின்ற செய்தியை நான் சொல்
இறேன். அதில் அவர்கள், தி.மு.க. எம். பிக்கள் இராணுவத்தை
இலங்கைக்கு அனுப்ப வேண்டுமென்று சொல்லவில்லை. முரசொலி
பத்திரிகையில் வந்த வாசகத்தையே நான் அப்படியே சொல்
இறேன்.

''இலங்கைய்ல் இன்று நிலவுகிற சூழ்நிலையில் என்ன
செய்யலாம் என்று கழகத்தின் கருத்தறிய பிரதமர் இந்திரா
காந்தி விடுத்த அழைப்பை ஏற்று நாடாளுமன்ற கழகக்





குழுவின் தலைவர் முரசொலி மாறனும், மக்களவைக்
கழகத் குழுத் தலைவர் சி.டி. தண்டபாணியும் இன்று
பிரதமர் இந்திரா காந்தியை சந்தித்தனர். இச்சந்திப்பின்
போது அவர்கள் இலங்கைத் தமிழர் பிரச்சனை குறித்து
விவாதித்தனர். இதுபற்றிய விவரம் வருமாறு :–

இலங்கையில் இன்று நிலவும் சூழ்நிலை குறித்து என்ன செய்ய
லாம் என்று கருத்தறிய விரும்பிய பிரதமர் இந்திராகாந்தி முர
சொலிமாறனுக்கும், சி.டி. தண்டபாணிக்கும் விடுத்த அழைப்பினை
ஏற்று அவர்கள் இருவரும் இன்று பிற்பகல் 12-45 மணிக்கு
பிரதமரை நாடாளுமன்றத்திலுள்ள அவரது செயலகத்தில் சந்
தித்து கழகத்தின் சார்பில் கீழ்க்கண்ட யோசனைகளைத் தெரி
வித்தனர்.

''இலங்கையில் சித்திரவதைக்கும் படுகொலைக்கும் உள்
ளாக்கப்படும் தமிழர்களுக்குப் பாதுகாப்பு வழங்கிட சர்வ
தேசப் பார்வையாளர்களை (இன்டர்நேஷனல் ஆப்சர்வர்ஸ்)
இலங்கையில் நிறுத்த வேண்டும்.'' Not International troops.
but International observers.

ஏன் இந்தக் கொள்கை முரண்பாடு? 1-ஆம் தேதிய முர
சொலியில் செய்தி வருகிறது. 4-ஆம் தேதி மாலை 5 மணிக்
குள் இலங்கைக்கு இந்திய இராணுவம் செல்லவில்லை என்றால்
தொடர்ந்து மைய அரசை எதிர்ப்போம் போராடுவோம் என்றும்.
ஆனால் 17-ஆம் தேதியன்றைக்கோ என்ன நிலைமை? உங்
களை பிரதமர் அழைத்திருக்கிறார்கள் என்று நீங்களே சொல்லி
யிருக்கிறீர்கள். அப்படி உங்களுடைய அரிய ஆலோசனையைப
பெறுவதற்காக அழைக்கப்பட்ட நேரத்தில், இராணுவத்தை
அனுப்ப வேண்டுமென்று சொல்வதில் உங்களுக்கு என்ன பயம்
வந்தது? ஏன் இந்தக் கொளகை முரண்பாடு? ஏன் தி.மு. கவுக்கு
கொள்கை மயக்கம்?

உங்களில் யாரை நம்புவது? கலைஞர் கருணாநிதியை நம்பு
வதா? அல்லது துரைமுருகன் பாஷையில் சொல்ல வேண்டு
மென்றால், யாரைத்தான் நம்புவதோ தமிழனின் பேதை
நெஞ்சம் என்றுதான் சொல்லவேண்டும்.

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தினுடைய துணைத் தலை
வர் அவர்களே, ஆளுங்கட்சி உறுப்பினரவர்கள் தயவு செய்து
தவறான தகவலை அவைக்குக் கொடுக்கக்கூடாது என்பதற்
காகச் சொல்ல விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழ
கத்தின் சார்பாக, பிரதமராக இருந்தாலும், மத்திய
அரசாங்கமாக இருந்தாலும், சொல்லப்பட்டிருக்கக்கூடிய

1982-ஆம் ஆண்டு ஜனவரி 19-ஆம் தேதி நாடு தழுவிய பந்த் அறிவித்தீர்கள். புரட்சித் தலைவர் பந்த் அறிவித்து இருக் கிறார் மைய அரசை எதிர்த்து காவிரிப் பிரச்சினையில். இந்த மாநிலத்தில் உள்ள அலுவலகங்கள் செயல்படாது என்று துணிந்து அறிவித்தார் மைய அரசை எதிர்த்து உண்ணா நோம்பு புரட்சித் தலைவர் மேற்கொண்டார். ஆனால். 19 ஆம் தேதி பந்த் சமயம் அப்படி ஜோதிபாசு அவர்களால் ஆதரித்தது உண்டா? திருபுராவின் முதலமைச்சர் நிர்பன் சக்கரவர்த்தி சர்க்கார் ஆதரித்தது உண்டா? அந்த பந்துக்கு நாங்கள் அறிவிப்பு விடவில்லை. எங்களுடைய லெப்ட் ப்ரன்ட் தான் விடுகிறது என்று சொல்கிறார். அரசாங்கம் அழைப்பு விடவில்லை என்று சொல்கிறார். மேற்கு வங்கத்தை ஆளும் திரு ஜோதி பாசு அவர்கள் I quote from the Indian Express dated 20-1-82 Madras Pag -9.

"The Chief Minister Mr. Jothi Basu told pressmen that the Bandh was nearly total. He made it clear that the State Governmnet had not given the call for the Bandh".

ஏன் மைய அரசைக் கண்டு, இந்திராவைக்கண்டு ஜோதி பாசுக்கு இந்த பயம். புரட்சித் தலைவர் மைய அரசுக்கு எதிராக மாநில அரசு செயல்படாது இந்த மாநிலமே செயல் இழந்து உங்களுக்குத் மைய அரசுக்கு எதிர்ப்பைத் தெரிவிக்கிறது என்று காவிரிப் பிரச்சினையில் கூறி யிருக்கிறார். இலங்கைப் பிரச்சினையில் கூறியிருக்கிறார் நாடு தழுவிய போராட்டம் கருப்புச் சட்டத்தை எதிர்த்து தொழிலாளர் விரோத சட்டங்களை எதிர்த்து என்று அறிவித்து விட்டு, அதற்கு ஜோதி பாசு சொல்கிறார். நாங்கள் அரசின் சார்பாக அறிக்கை கொடுக்கவில்லை லெப்ட் ப்ரன்ட் அறிக்கை விட்டது என்று சொல்கிறார். நான் மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்களைப் பார்த்துக் கேட்கிறேன். இந்திரா காந்தியைப் பார்த்து ஜோதி பாசுக்கு என்ன பயம்? நாங்கள் கேட்கலாமா?

தாங்கள் எதற்காக எதிர்ப்பைக் கிளப்பாமல் இருக்கிறோம் என்பதற்கு நம்பூதிரிபாட் சொல்லியிருக்கிறார். அரசின் நல்ல காரியங்களை நாங்கள் ஆதரிப்போம். இலங்கை தமிழர் பிரச்சினையில் இத்தனை ஆண்டுகளாக மைய அரசு எடுக்காத ஒரு நடவடிக்கை ஓரளவிற்கு திருப்தி அளிக்கும் நடவடிக்கை எடுத்து இருக்கிறபோது நாங்கள் பாராட்டு கிறோம். அப்படி பாராட்டுகிறபோது. அதே சமயத்திலே, விற்பனை வரி உரிமை மாநில அரசுக்கு இருப்பதை விட்டுக் கொடுக்க முடியாது என்று அங்கே குரல் கொடுத்து இருக்கிறார்கள் புரட்சித் தலைவர் அவர்கள். மொத்தம் 80,000 டன் அரிசி அனுப்பியாக வேண்டும் என்று டாக்டர்





நாவலர் அவர்கள் குரல் கொடுத்து இருக்கிறார்கள். நல்ல வைகளை ஆதரிக்கிறோம் என்று நீங்கள் சொல்கிறீர்களே, அதற்கு என்ன அர்த்தம்? பாரதப் பிரதமரை நீங்கள் சந்தித்த பிறகு நிருபர்கள் கேட்கிறபோது அதற்கு நம்பூத்திரிபாட் கூறியது இந்துப் பத்திரிகையில் செய்தியாக வந்து இருக்கிறது I quote from the Hindu dated 6-11-83-page 12.

"While the CPM has always been prepared to extend co-operation to the Government on any issue on which it takes a correct stand but it is opposed to the basic principles f the Government" கரெக்ட் ஸ்டான்டர்ட் என்று சொன்னால் அதை முடிவு செய்வ தற்கு ஒட்டுமொத்தமான லைசென்சு மாக்சிஸ்ட் கம்யூ னிஸ்ட்டுக்கு மட்டுமா இந்த நாட்டில் கொடுக்கபபட்டு இருக்கிறது அதை நிர்ணயிக்கவேண்டியவர்கள் பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்கள் பல்வேறு தரப்பைச் சேர்ந்தவர்கள். நாங்கள் அமைதியாக இருப்பதால் நெருங்குகிறோம் என்று சொன்னால், அதை மறுத்து இரண்டு கட்சிகளும் கூறி யிருக்கிறார்கள் மதுரையில் அவர்கள் மறுத்து இருக்கிறார்கள். அவையில் புரட்சித் தலைவர் அவர்கள் மறுத்து இருக்கிறார் கள். அதற்குப் பிறகும் கற்பனையில் பேசினால், அதனால் தான் கேட்டார்கள் ஏன் எரிச்சல் ஏற்படுகிறது என்று.

ஜோதி பாசு அவர்கள் சொல்கிறார். நான் அழைப்பு விடவில்லை என்று. திருபுரா முதலமைச்சர் என்ன சொல் கிறார். இந்த பந்த் நன்றாக நடந்தது. ஆனால் இந்த அரசாங்கம் நியுட்ரல்லாக இருக்கிறது எங்களுடைய சர்க் கார் நடுநிலை வகிக்கிறது. I quote from Statesmen dated 19-1-82 page 1 column 2

"In Tripura the Chief Minister Mr. Nipen Chakraborthy to-day suoported the cane of the striking trade unions but said his govern- ment would remain natural. ஏன் இந்த பயம். இலங்கை தமிழர் பிரச்னையில் ஆதரவுதெரிவித்தோம் என்ற ஒரே காரணத்திற்காக நெருங்குகிறோம். என்றால், நியுட்ரல் என்று சொல்கிற முதலமைச்சரையும், பந்துக்கு இந்த அரசு அழைப்பு விடவில்லை என்று சொல்கிற முதலமைச்சரையும் பார்த்து, நள்காங் கேட்கிறோம் உங்களுக்கு என்ன பயம்?

நம்பூதிரிப்பாட் சொல்கிறார் நல்லவைகளை ஆதரிப்போம். என்று. அதைப்போன்றுதான் நான் குறிப்பிட்டேன். இலங் கைத் தமிழர் பிரச்சினையில் ஓரளவுக்கு திருப்தி அளிக்கத்தக்க வகையில் நடவடிக்கை எடுத்தார்கள். அதை ஆதரித்தோம். இந்த மன்றத்திலே கூட பாராட்டு தெரிவிக்கிறோம். அதற் காக விற்பனை வரியை மாநில அரசிடமிருந்து மத்திய

[திரு. வேடசந்துார் வி.பி. பாலசுப்பிரமணியன்] [1983 நவம்பர் 9

அரசு எடுக்க வேண்டுமென்று சொல்கிறபோது ஆமாம் என்று ஒத்துக்கொண்டு வந்தார்களா நம்முடைய முதலமைச்சர் அவர்கள்? அதற்கு எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறார்கள். மாநிலங்களுக்கு உரிய அரிசியைவழங்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இந்த நிலையில்தான் நாங்கள் பேசிகிறோம்.

எத்தனை பிரச்சினைகள்? அமைதியை ஒரு காரணமாக வைத்தார்கள் இந்த நாட்டிலே மின்சாரப் பற்றாக்குறை ஏற்பட்டபோது இந்த மாநில மின்சாரஅமைச்சர் மாண்புமிகு பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் நிலக்கரி பற்றாக்குறை என்று சொன்னார்கள் மாநில அரசுக்கு மத்திய அரசு தேவையான நிலக்கரியை வழங்கவில்லை என்று சொன்னார்கள் "பஃப்பர் ஸ்டாக்" கையிருப்புக்கு ஆஸ்திரேலியாவிலிருந்து நிலக்கரியை இறககுமதி செய்து கொள்ள அனுமதி கொடுக்கவில்லை' மின்சாரப் பற்றாக்குறைக்கு நிலக்கரி இல்லாததுதான் காரணம் என்று "இந்த அரசின் சார்பிலே சொல்லப்பட்டபோது அன்றைக்கு இடது கம்யூனிஸ்ட்கட்சி என்ன சொல்கிறது? இங்கே தினமணி பத்திரிகையில் வந்த செய்தியைக் குறிப்பிடுகிறேன். தினமணிக் சென்னை எடிஷன், 10—1—1983, பக்கம் 3, பாரா 3-ல் இந்த செய்தி இருக்கிறது. "தமிழ்நாட்டில் மின்சாரப் பற்றாக் குறைக்கு முழுக்க முழுக்க மின் வாரியமும் தமிழக அரசும்தான் காரணம்" என்று இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சித் தலைவ இராமமூர்த்தி கூறினார்.

நாங்கள் மைய அரசுதான் காரணம் என்கிறோம் நீங்கள் மாநில அரசுதான் காரணம் என்கிறீர்கள் நிலக்கரி பற்றாக் குறைதான் மின்சாரத் தட்டுப்பாட்டிற்குக் காரணம். அதன் காரணமாக இந்த மாநில விவசாயம் பாதித்திருக்கிறது, என்று சொல்கிறபோது 'முழுக்க முழுக்க தமிழக அரசு தான் காரணம்" என்று சொல்கிறீர்கள் அப்படியானால் நாங்கள் சொல்லலாம் அல்லவா நீங்கள் காங்கிரஸ் பக்கம் நெருங்குகிறீர்கள் என்று ஏன் இந்த மாற்றம்? ஒவ்வொரு இடத்திலும் இந்த நிலை இதை நாங்கள் சொல்லவில்லை மேற்கு வங்கத்தில் இருக்கிறவர்கள் லெஃப்ட் ஃபிரண்டில் இருக்கிறவர்கள் சொல்லியிருக்கிறார்கள் பல்வேறு இடங்களிலே இரட்டை நடவடிக்கைகளை இன்றைக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி எடுத்து வருகிறது என்று அவர்களே சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்.



1983 நவம்பர் 9] [திரு.வேடசந்துார்வி.பி.பாலசுப்பிரமணியன்

விலைவாசி ஏறுகிறது என்றால் அதற்கு
கர்நாடகத்திலே
ஹெக்டே அரசுதான் காரணம் என்று சொல்கிறார்கள். அதே
நேரத்தில் மேற்கு வங்கத்தில் விலைவாசி ஏறுகிறது என்றால்
மத்திய அரசு காரணம் என்று சொல்கிறார்கள் இதை நாங்கள்
சொல்லவில்லை. அங்கே இருக்கிற கூட்டணி கட்சியினர்
சொல்கிறார்கள்

I quote—from "statesman", 25th October 1983, page 9, column6
*CPM following double standard—That is caption.*

Some CPM leaders of the left front are buzzled over the double
standard followed by the CPM as a ruling party and as an Opposi-
tion party elsewhere on the issue of holding price line. The CPM
has criticised the Hegde Government in Karnataka for not taking
effective measures to hold the price line; but on the same issue, it
is silent in West Bengal. Whenever the matter come up at Left
Front meeting, the Centre was made responsible for the price rise.

மத்திய அரசை போய்ச்
நாங்கள் இதை வைத்துக்கொண்டு,
ஹெக்டே அரசை போய்ச்சொல்லும்
சொல்வதற்குப் பதிலாக காங்கிரசிடம் நெருங்குகிறீர்கள் என்று
போது, நீங்கள் இந்திரா காந்தியை ஆதரிக்கப்போகிறீர்
சொன்னால், நீங்கள் இந்திரா நாங்கள் சொன்னால் நீங்கள் என்ன
கள் என்ற வாதத்தை எங்களுக்கு என்று ஒரு கொள்கை இருக்கிறது
நினைப்பீர்கள்?

1972-லே திராவிட முன்னேற்றக் கழக அரசை வீழ்த்த
வேண்டுமென்ற இயக்கம் தொடங்கியது. திராவிட முன்
னேற்றக் கழக அரசு இன பேதங்களை உருவாக்குகிற அரசு
ஊழல் மலிந்த அரசு-அது மீண்டும் தமிழ்நாட்டில் வரக்கூடாது
அவர்களைத் தனிமைப்படுத்த எந்த நடவடிக்கையை வேண்டு
மானாலும் எடுப்போம். நீங்கள் மட்டும் காங்கிரஸை
தனிமைப்படுத்துவதற்கு என்ன நடவடிக்கை வேண்டுமானாலும்
எடுப்போம் என்று சொன்னால் நீங்கள் இந்த மாநில
மக்களால் புறக்கணிக்கப்படுவது மட்டுமல்ல; இந்த மாநில மக்கள்
திராவிட முன்னேற்றக் கழகத்தை ஏற்றுக் கொள்ளமாட்டார்
கள். காங்கிரசும் திராவிட முன்னேற்றக் கழகமும் கூட்டாக
இருக்கும்போது கலைஞர் கருணாநிதி அவர்களை முதல
மைச்சர் என்று அறிவித்ததால்தான் தோல்வி ஏற்பட்டது
தமிழகத்தில் என்று காங்கிரஸ் கட்சியினர் குற்றஞ்சாட்டி
னார்கள். காங்கிரஸ் கட்சியினர் அப்படிச் சொன்னபோது,
இந்த மாநில மக்களே முடிவு எடுத்திருக்கிறார்கள் என்று நாங்கள்
சொன்னோம். அதை தனிமைப்படுத்த நாங்கள் எடுக்கிற
முடிவுக்கு உரிமை கிடையாது என்றால், அதனால் காங்கிரஸ்
பக்கம் போய்க்கொண்டிருக்கிறீர்கள், காங்கிரஸ் உறவு என்று
சொன்னால் அது நியாயமா என்பதை மட்டும் எண்ணிப்
பார்க்க வேண்டும்.

[திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்][1983 நவம்பர் 9

பல்வேறு பிரச்சினைகளைப்பற்றிச் சொன்னார்கள். பத்திரிக்கை சுதந்திரத்தைப்பற்றிக கூட சொன்னார்கள். அது பற்றி இந்த அரசை மாண்புமிகு உமாநாத் அவர்கள் மனம் திறந்து பாராட்டியிருக்க வேண்டும். 292-A ஐ.பி.சி. பற்றிச் சொன்னார்கள். அந்தச் சட்டத்தைக் கொண்டுவந்த உடனே நிறைவேற்ற வேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் கருதவில்லை. அதை மீண்டும் பரிசீலிக்க ஒரு குழுவை அமைத்தார்கள். ஜனநாயக அடிப்படையில் எதிர்க் கட்சியினரை மதிக்க வேண்டும் அவர்கள எல்லாம் கருத்து தெரிவிக்கின்ற வகையிலே அந்த பத்திரிக்கை சட்டத்தின் மீது இந்த அரசு நசவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது அதை மனம் திறந்து பாராட்டியிருக்க வேண்டும்; அவர்கள் பாராட்டவில்லை. ஆனால் என்ன நிலைமை என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

(முற்பகல் 11-40).

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த பத்திரிக்கை தடை சட்டத்தை வாபஸ் பெறுவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள் அங்கே பீகாரிலே ரெசல்யூஷன் போட்டு வாபஸ் வாங்கியாகிவிட்டது. பிரஸ் தடை சட்டத்தை கொண்டு வருகிறபோது ஆர்டினன்ஸ் ஆக அவசரச் சட்டமாகக் கொண்டு வந்த நீங்கள், அது ''டெட்'' என்று சொல்கிற போது, அதை ''ரிப்பீல்'' பண்ணுவதையும் ஆர்டினன்ஸ் போட்டு ரிப்பீல் பண்ணி இருக்கலாம் அல்லவா? எடுத்துக் கொண்டிருக்கிறது என்றால் என்ன அர்த்தம்?

திரு வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: அதைப் பொறுத்தமட்டில், குழு நியமிக்கப்பட்டிருக்கிறது என்று ஒன்று. இதிலே பல்வேறு பிரச்சினைகள் இருப்பது என்பது மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்களுக்கு தெரிய நியாயம் இருக்கிறது. ஏனென்றால், திருத்தத்திலே ஒரு பகுதியாக நடைமுறைப் புரோசிஜர் இருக்கிறது. 1973-ஆம் ஆண்டு கிரிமினல் புரொசிஜர் கோடை பார்லிமென்ட் திருத்துகிறபோது நடைமுறைச் சட்டத்திலே ஒட்டுமொத்தமாக நீக்கிவிட்டது. நடைமுறைச்சட்டம் பற்றி மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்களுக்கு நிச்சயமாகத் தெரிந்திருக்கவேண்டும். As a practising lawyer நடைமுறை ஷெட்யூல், அது 73-ஆம் ஆண்டு நீக்கப்பட்டிருக்கிறது. நாம் குழு அமைத்தாவது. பரிசீலிக்க முடிவு எடுத்திருக்கிறோம் உரிமையை பறிக்கவேண்டும் என்ற நோக்கம் புரட்சித் தலைவர் அரசிற்கு இருந்தால், இந்தச் சட்டத்தை **கடுமையாக** அமல்படுத்தியிருககலாம்.



1
983 நவம்பர் 9] [திரு வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்]

ஆனால், மேற்கு வங்கத்திலே என்ன நிலைமை என்று எண்ணிப்பாருங்கள். மேற்கு வங்கத்திலே இருக்கிற சிறைக் கொடுமைகள். மேற்கு வங்கத்திலே இருக்கிற சிறையில் நடைபெற்ற தவறுகள், மேற்கு வங்கத்திலே சிறையிலே இருக்கின்ற கைதிகள் படுகின்ற இன்னல்கள் போன்றவைகளை பிப்ரவரி மாதம் 1983 ஆம் ஆண்டு ''சன்டே'' பத்திரிக்கை புகைப் படம் எடுத்துப்போட்டது. அதற்கு கல்கத்த உயர் நீதி. மன்றத்திலே தடை கோரி அரசாங்கம் மனு செய்தது பத்திரிக்கை சுதந்திரம் மேற்கு வங்கத்தில் படுகின்ற பாடு இது. அதை எண்ணிப்பார்க்க வேண்டும். அப்படிப்பட்ட நடவடிக்கைகள் இங்கு உண்டா? எதிர்க்கட்சிகளின் உணர்வுகளை புரட்சித் தலைவர் எவ்வளவு மதிக்கிறார்? ஜனநாயகத்திலே எதிர்க்கட்சிகளின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கவேண்டுமென்ற அடிப்படையிலே எவ்வளவு நிலைமைகளில் சரியாக செயல் பட்டிருக்கிறார். என்பதை மட்டும் தயவுசெய்து எண்ணிப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காவல் துறையைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள் காவல் துறையைப் பற்றி மாண்புமிகு உமாநாத் அவர்கள் கூறுகிற நேரத்தில், நான் சொல்வதைவிட மேற்கு வங்க முதலமைச்சர் ஜோதிபாசு அவர்கள் இதற்கான விளக்கங்களை சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு ஜோதிபாசு அவர்கள் மேற்கு வங்க சட்டமன்றத்திலே தமிழகத்தைப் பல்வேறு மாநிலங்களோடு ஒப்பிட்டு, இந்த மாநிலம் அமைதியாக இருக்கிறது என்று சொல்லுகிறபோது மேற்கு வங்கத்தினுடைய குற்றங்களை விட, கொலைகளை விட தமிழகத்திலே குறைவாக இருக்கிற சூழ்நிலையை சுட்டிக் காட்டினார் இன்று அகில இந்தியாவிலே பல்வேறு மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கிற போது உண்மையிலேயே குற்றங்கள் குறைவாக தமிழகத்தில் இருக்கின்ற சூழ்நிலை. மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்ற போது குற்றங்கள் எண்ணிக்கை கூடுகிறது என்று சொல்லலாம். குற்றங்களுடைய எண்ணிக்கை கூடுகிறது என்பதற்கு மேலை நாடுகள் கூட விதிவிலக்கு இல்லை. இந்தியாவில் எந்த மாநிலமும் விதிவிலக்கு இல்லை. ஆனால் க்ரைம் இன்டெக்ஸ் என்ன? ஒரு மாநிலத்தினுடைய குற்றக் குறியீட்டெண் என்ன? நான் மிக்க தைரியமாகச் சொல்கிறேன். குற்றக் குறியீட்டெண் இந்த மாநிலத்தில் மிகக்குறைவு புரட்சித் தலைவர் ஆட்சியிலேதான். இந்தக் குற்றச் சாட்டுக் குறியீடு எண் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் என்றாவது இறங்கியதாக வரலாறே கிடையாது. ஆனால் நான் இங்கே ஒன்றைச் சொல்லவிரும்புகிறேன். 1980-ஆம் ஆண்டு தமிழகத்தில் 243,1 ஆக இருந்த குற்றக் குறியீட்டெண் இந்த மாநிலத்திலே 1981-ஆம் ஆண்டு 238.1 ஆக குறைந்திருக்கிற சூழ்நிலை. எந்தச் சூழ்நிலையில் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். இந்த மாநிலத்திலேதான்.

[திரு வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்] [1983 நவம்பர் 9

Free-Registration of cases கொடுக்கின்ற புகார்களையெல்லாம்பதிய
வேண்டுமென்று உத்தரவு போட்டது இந்த மாநிலம்தான்
ஸ்ட்ரேசி தலைவர் பொறுப்பிலே இருக்கின்றபோது இந்த.
உத்தரவு போட்டார்கள். ஆர்.ஓ.சி. எண் 153048 சி.
பதிவு 4-லே சொல்லியிருக்கிறார். எந்தப் புகார் என்றாலும்
பதிவு செய்யவேண்டுமென்று. இந்த நிலையை எடுத்தபிறகும்,
இந்தக் குற்றக் குறியீட்டெண் குறைகின்ற ஒரு சூழ்நிலை இருக்
கிறது. தமிழகத்திலே குற்றங்கள் குறைந்திருக்கிறது என்பது
மட்டுமல்ல. குற்றங்களைக் குறைப்பதற்கு வெறும் Adminis-
trative instructions நிர்வாக உத்திரவுகள் மட்டும் போதாது.
நடைமுறை விதிகளை வகுத்தால் மட்டும் போதாது. மக்களுடைய
ஒத்துழைப்பு இருந்தால் தான் (குறுக்கீடு). தயவு செய்து
கம்யூனிஸ்டு நண்பர்கள் சிரிக்காதீர்கள். இதை நான் சொல்ல
வில்லை. மேற்குவங்க முதல்வர், மார்க்சிய கம்யூனிஸ்ட் அரசை
நடத்தும் முதல்வர் ஜோதிபாசு அவர்களே சொல்கிறார்கள்.

I quote—from 12th March 1982 Statesman:

Mr. Jothi Basu said that in 1980, the number of murders recorded in Andhra Pradesh was 1467, in Bihar 2,114, in Madhya Pradesh 2,347, in Maharashtra 1,641, in Tamil Nadu 1,267, in Uttar Pradesh 5,316 and in West Bengal 1,369.

12th March 1982 Statesman:

" Mr. Jyothi Basu said in the West Bengal Assembly on Thursday that popular co-operation was necessary to control crime in the State. Administrative action alon would not be enough. The Chief Minister was replying to the debate on the Governor's Address ".

பல்வேறு மாநிலங்களைச் சுட்டிக்காட்டி இங்கே சட்டம் ஒழுங்கு
முறை சீராகத்தான் இருக்கிறது. கொள்ளைகள், கொலைகள்
குறைவாகத்தான் இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டி, சட்ட
மன்றத்திலே பேசுகின்றபோது கூட, மேற்கு வங்கத்திலே நடக்
கின்ற கொலைகள், மேற்கு வங்கத்திலே சட்டம், ஒழுங்கு சரி
யாக இருக்கிறது என்று நியாயப்படுத்துகின்ற விவரங்கள் சொல்
கிறபோது, அங்கே 1,369 கொலைகள் நடந்ததாகவும், ஆனால்
தமிழ் நாட்டிலே அதே ஆண்டு 1,227 என்று அவரே ஜோதி
பாசே சொல்லியிருக்கிறார். The Government as well as the
people supporting it were determined to resist any attempt to
create communal tension in the State. அவர்களே ஒத்துக்
கொள்கிறார்கள். குறைகளைச் சொல்வதற்காக நாங்கள்
சொல்வதாக நினைக்கவேண்டாம். எனவே பப்ளிக்
கோ-ஆப்பரேசன், பொதுமக்களுடைய ஒத்துழைப்பு இருந்தால்
தான், குற்றங்களைக் குறைக்க முடியும் என்று
ஜோதிபாசே மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்,



1983 நவம்பர் 9] [திரு வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்]

பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு பிரச்சினையின்
கீழ் வருகிறபோது, குற்றங்களைப் பற்றிச் சொல்கிறபோது, இந்
தக் குற்றக் குறியீட்டு எண் குறைந்திருக்கிறது. வேறு எந்த
மாநிலத்திலேயும் இல்லாத வகையிலே பொதுமக்கள் கொடுக்
கின்ற புகார்களை எல்லாம் பதிவு செய்யவேண்டும் என்று
தமிழகத்திலே உத்தரவினை ஸ்ட்ரேசி அவர்கள் தலைமைப்
பொறுப்பிலே இருந்தபோது போட்டிருக்கிறார்கள். அதையும்
மீறி காவல்துறையைப் பற்றி புகார் சொல்கின்றபோதெல்லாம்
எத்தனை காலகட்டங்களில் மாண்புமிகு புரட்சித் தலைவர்
அவர்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். பல்வேறு பிரச்சினை
களுக்காக அளிக்கப்பட்ட கமிஷன் தீர்ப்புகள் இந்த மன்றத்திலே
வந்து விவாதிக்கப்பட்டிருக்கின்றன. அதிலே திருப்தி இல்லை
என்று சொல்கிறபோது, ஜனநாயக உணர்வுடன், ஜனநாயகப்
பண்புகளைக் காக்கவேண்டுமென்ற அடிப்படையில், எதிர்க்கட்சி
கள் சொல்லுகின்ற கருத்தை ஏற்றுக்கொண்டு பல்வேறு விசா
ரணைக்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். இவைகள் எல்லாம் மாண்பு
மிகு புரட்சித் தலைவர் அவர்கள்—காவல் துறையாக இருந்
தாலும்—பின்பற்றுகின்ற உயர்ந்த ஜனநாயகக் கொள்கை
யாகும். காவல் துறை செய்கின்ற தவறுகளை பாராட்டியதே
கிடையாது. தவறு என்றால் தவறு இருக்கிறது என்று சுட்டிக்
காட்டினால், நடவடிக்கை எடுக்கின்ற நல்ல உள்ளம் படைத்த
வர், முதலமைச்சராக இருக்கிறார்கள். ஏன் பல்வேறு பிரச்சினை
களுக்கு கமிஷன் அறிக்கையை வைத்து, விவாதித்து, அதிலும்
எதிர்க்கட்சிகளுக்கு உரிய மதிப்புகளையும், மரியாதைகளையும்
கொடுத்து ஜனநாயகப் பண்புகளைக் காக்கின்ற வகையிலே எத்
தனையோ உத்தரவுகளைப் பிறப்பித்திருக்கிறார்கள். மறைத்
திருக்கிறார்களா ? ஆனால் மார்க்சீய கம்யூனிஸ்ட் ஆளும்
மாநிலத்தில் நிலைமை என்ன என்பதைப் பாருங்கள். திரிபுரா
மாநிலத்திலே, திரிபுரா மாநில சர்க்கார் அமைத்த அந்த விசா
ரணைக் கமிஷன் அறிக்கையை அந்த அரசே ஏற்றுக்கொள்ள
முடியாது என்று சொல்கிறது. ஏ. கே. டே என்பவர் தலைமை
யிலே விசாரணைக் கமிஷன் திரிபுரா கம்யூனிஸ்டு அரசாலே ஏற்
படுத்தப்பட்டிருக்கிறது. நான் இவைகளைச் சொல்வதற்குக்
காரணம், 25—2—1980-லே அங்கே 10 நக்சலைட்டுக்கள் ஒரே
கிராமத்திலே சுடப்படுகிறார்கள். 584 ரவுன்ட்ஸ் அந்த கிராமத்
திலே போலீஸ் துப்பாக்கிச் சூடு நடத்துகிறது. இதைக் கமிஷன்
மிகத் தெளிவாகச் சொல்கிறது. திரிபுரா அரசு அமைத்த
ஏ.கே.டே கமிஷன் மிகத் தெளிவாகச் சொல்கிறது. அரசின்
சார்பிலே காவல்துறை சார்பிலே சொல்லப்பட்ட ஒவ்வொரு
குற்றச்சாட்டும் பொய் என்று நிரூபிக்கப்பட்டதாக கமிஷன் சொல்
கிறது. அவர்கள் சுடப்பட்ட ஏழுபேர் தேடப்பட்ட குற்றவாளி
கைதிகள் என்று அரசாங்கம் சொல்கிறது. கமிஷன் சொல்
கிறது, ஸ்பெசல் டிவிசனல் போலீஸ் ஆபீசர், யார் யார் தேடப்
படுகிறார்கள். குற்றவாளிகள் என்ற கைதிகள் புஸ்தகத்தை வைத்
திருக்க வேண்டும். இதிலே போலீசால் சுடப்பட்டவர்கள் பெயர்

[திரு வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்] [1983 நவம்பர் 9

காணப்படவில்லை. இப்படி ஒரு குற்றச்சாட்டை, அரசாங்கம்
சொல்லுகின்ற கருத்தை மறுத்து திரிபுரா அரசு நியமித்த கமிஷன்
சொல்லியிருக்கிறது. அந்தக் கமிஷன் அறிக்கையை ஏற்கமுடி
யாது என்று கம்யூனிஸ்டு அரசு சொன்னால் கூட பரவாயில்லை.
மாண்புமிகு உறுப்பினருடைய கவனத்திற்குக் கொண்டு வர
விரும்புகிறேன். ஏற்க முடியாது என்று சொன்னதோடு நிற்காமல்
திரிபுரா அரசு காவல்துறையை பராட்டியிருக்கிற வாசகங்களை
அருள்கூர்ந்து உமாநாத் அவர்கள் எண்ணிப்- பார்க்க
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

I quote from the Hindu, dated August 23, 1983. P 7.
" The Tripura Government has rejected the findings of the
Commission which it appointed with Mr. A. K. Dey, a retired
Judge of the Calcutta High Court to enquire into the Police firings
at Hurua in North district. 7 Naxalites died in the firing."

The conclusions reached by the Commission are: "The
Government has not only rejected the findings of the Enquiry
Commission but has praised the Police for its performance and
said the firing resorted to by the Police was done in accordance with
law, bonafide and in good faith.

கமிஷன், அரசு சொன்ன அத்தனை காரியங்களையும்
ணங்களையும் மிகத் தெளிவாக விவாதித்திருக்கிறது. கார
நான் சொல்வதற்குக் காரணம், மற்றைய மாநிலங்களோடு ஒப்
பிடுகிறபோது, ஜனநாயகப் பண்புடன் காவல்துறை என்றாலும்
மற்றைய துறை என்றாலும், எதிர்க்கட்சிகளுக்கு அளிக்கின்ற
மரியாதையும், ஜனநாயகப் பண்பின் அடிப்படையிலே தவறு
என்று சுட்டிக்காட்டினாலும் கூட அதைத் திருத்திக்கொள்கின்ற
அடிப்படையிலே புரட்சித்தலைவர் அரசு இருக்கிறபோது, மாண்பு
மிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் பாராட்டியிருக்கவேண்டும்.
நாங்கள் வாக்குறுதிகள் மட்டும் தரவில்லை. தேர்தல் வாக்
குறுதியிலே சொல்லாத சத்துணவுத் திட்டம், 180 கோடி ரூபாய்ச்
செலவிலே இன்றைக்கு செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்
புரட்சித் தலைவர் அவர்கள். தன்னிறைவுத் திட்டம், கிருஷ்ணா
நதி நீர்த் திட்டம், சரித்திரத்தை மாற்றும் திட்டம், சரித்திரம்
பாராட்டுகின்ற திட்டம், பல ஆண்டுக்காலமாக முடிக்க முடி
யாமல், அதைப்பற்றி முயற்சிகளை மேற்கொள்ளாத சூழ்நிலை
யில் அந்த திட்டம் செயல்படுத்தப் பட்டிருக்கிறது.

(முற்பகல் 11-50).

பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்கள் புரட்சித் தலைவர்
ஆட்சியில் இயற்றப்பட்டிருக்கின்றன. 480 நாட்கள் பணியாற்றி
னால், பணி நிரந்தரம் என்ற சட்டம். தொழிலாளர்களின்
வேலை நிறுத்தத்தைக் குறைப்பதற்கு, பேச்சு வார்த்தைகளின்
மூலம்தான் முடிக்கவேண்டும் என்ற சட்டம் பேச்சு வார்த்தை



1983 நவம்பர் 9] [திரு வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்]

களின் அடிப்படையிலே அப்படி குறைக்கப்படவேண்டும் என்
பதால், பல்வேறு தொழில் தகராறுகள் தீர்க்கப்பட்டிருக்கின்றன.
தொழிலாளர்கள் நேரடியாக நீதிமன்றத்திற்கு செல்ல முடியும்.
பேச்சு வார்த்தைக்கு வராத தொழிலாளர்களாக இருந்தாலும்,
தொழிற்சாலை அதிபர்களாக இருந்தாலும், சமன் செய்ய முடி
யும் என்ற சட்டம். 24 மாதங்களில் 480 நாட்கள் பணியாற்றி
னால் நிரந்தரம் என்ற சட்டம். கைத்தறித் தொழிலாளர்
களுக்கு பாதுகாப்புச் சட்டம். கட்டிடத் தொழிலாளர்களுக்கு
பாதுகாப்புச் சட்டம், என்று தொழிலாளர்களுக்காக தொழி
லாளர் நல நிதிச் சட்டங்கள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆண்ட 6 ஆண்டுக் காலத்தில்
தொழிலாளர் நலச் சட்டம் என்று கொண்டு வந்தது ஒன்றே
ஒன்றுதான். அது தொழிலாளர் வைப்பு நிதி. இதிலே கூட,
முன்பு தி.மு.க. ஆட்சியில் தொழிலாளர்கள் ஒரு ரூபாய் போட
வேண்டும், அரசு 2 ரூபாய் போடவேண்டும் என்ற நிலை இருந்
தது. மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு
தொழிலாளர்கள் இரண்டு ரூபாய் என்றால், தொழிற்சாலை அதி
பர்கள் 4 ரூபாய், அரசு வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கக்
கூடாது, கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு
உடைக்கக்கூடாது, அதை இந்த அரசு ஏற்காது என்று—அரசும்
சமமாக 2 ரூபாய் போடவேண்டும் என்று தொழிலாளர் நல
நிதிச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே தொழி
லாளர் நலனுக்கு எதிராக போடப்பட்ட ஸ்கீரினிங் கமிட்டியை
ஒழித்தார்கள். அது மட்டும் அல்ல, திராவிட முன்னேற்றக்
கழகம் இந்த மாநிலத்தை ஆண்டபோது 20
முறைகள், நடந்து கொண்டிருந்த தொழிலாளர் வேலை நிறுத்
தத்தை தடை செய்திருக்கிறார்கள். ஒரு ரன்னிங் ஸ்டிரைக்கை
தடை செய்தது உண்டா அண்ணா திராவிட முன்னேற்றக் கழக
ஆட்சி? தடை செய்யமாட்டார்கள். ஏன் தொழிலாளர் நலம்
பேணுகிற ஆட்சி. புரட்சித் தலைவர் ஆட்சி (மணியடிக்கப்
பெற்றது).

நான் ஒன்றை மட்டும் சொல்லி முடித்துக் கொள்கிறேன்.
மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் பேசுகிறபோது
நிர்வாகத் திறமை இன்மை இருக்கிறது என்று சொன்னார்கள்.
அத்துணை துறைகளிலும், கடந்த கால ஆட்சிகளினுடைய தவறு
கள் நீக்கப்பட்டு, மின்சார துறையிலேயிருந்து, ஒவ்வொரு துறை
யிலும் நிர்வாகத் திறமை நீடிக்கப்பட்டு இருக்கிறது என்பதற்கு
அத்தாட்சியாகத்தான், போக்குவரத்துத் துறையிலே செய்யப்
பட்டிருக்கிற சாதனைகள்.

என்றும் உழுகின்ற மக்களுக்கே நிலம் சொந்தம் ஆக்கப்படும் என்றெல்லாம் கரவொலிகளுக்கு இடையே அறிவித்தீர்கள் உங்கள் ஆட்சியின் போது. இவை எல்லாம் பணச்செலவு இல்லாத திட்டங்கள்தானே. 1973-ஆம் ஆண்டு கலைஞர் கருணாநிதி அவர்கள் உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்ற சட்டத்தைக் கொண்டுவருவோம் என்று கைதட்டல்களுக்கிடையே அறிவித்தார்கள். விவசாயிகளுக்காக மறுநிதிக் கார்ப்ப ரேஷன் அமைக்கப் போகிறோம் என்று அறிவித்தார்கள் 1973-ஆம் ஆண்டிலே அரசியல் அமைப்புச் சட்டம் தோன்றிய காலத் திலிருந்து நில உச்ச வரம்புச் சட்டத்தின்கீழ் ட்ரஸ்டுகளுக்கு வழங்கப்பட்டு வருகின்ற விதிவிலக்குகளை ரத்து செய்யப் போகிறோம் என்று இதே சட்டமன்றத்திலே சொல்லி இருக் கிறார்கள். இப்படிப்பட்ட எத்தனையோ வாக்குறுதிகளைக் கொடுத்திருக்கிறார்கள். அவற்றை எல்லாம் நிறைவேற்றி னார்களா?

ஆனால் இப்போது நாங்கள் கொடுத்த வாக்குறுதியின்படி ஒரு இலட்சம் பட்டதாரிகளுக்கு உதவித்தொகை கொடுக்க முடியவில்லை. 50 ஆயிரம் பேர்களுக்குத்தான் கொடுக்க முடி கின்றது என்றால் அதற்கு நிதிப்பற்றாக்குறை காரணமாக இருக் கலாம். ஆனால் மால்கோவை தேசிய மயமாக்குவோம். உழு பவனுக்கே நிலத்தைச் சொந்தமாக்குவோம், அரசியல் அமைப்பு தோன்றிய காலத்திலிருந்து நில உச்சவரம்புச் சட்டத்திலிருந்து ட்ரஸ்ட்டுகளுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டு வருவதை ரத்து செய்வோம் என்றெல்லாம் நீங்கள் கொடுத்த வாக்குறுதிகளே என்ன ஆயிற்று என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். ஆனால் இப்போது புரட்சித் தலைவர் அவர்களின் அரசு எந்த வகையில் செயலாற்றி வருகின்றது என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். அவர்கள் சமுதாயத்தினை எண்ணிப் பார்த்து திட் டங்களை அறிவிக்கிறார்கள். ஆனால் நீங்கள் அறிவித்த திட்டங்கள் எல்லாம் மால்கோ நிறுவனத்தை மிரட்டுவதற்காக வும், தஞ்சாவூரிலே இருக்கின்ற நிலப்பிரபுக்களையும், ட்ரஸ்ட் நிலங்களை வைத்திருப்பவர்களையும் மிரட்டுவதற்காகவும் தான். ஆனால் எங்களுடைய இந்த அரசு எப்படிப்பட்ட நல்ல காரியங்களை எல்லாம் செய்து வருகின்றது என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்கவேண்டும் ................. (குறுக்கீடு).... நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை வழிமொழிந்திருக்கின்ற திரா விட முன்னேற்றக் கழகம் ஆணித்தரமாக ................. (குறுக்கீடு)..................

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலசுப்பிரமணியன் தொடர்ந்து பேசுங்கள். குறுக்கீடுகளை அனுமதிப்பதற்கு நேரம் இல்லை.





(முற்பகல் 11-30)

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : இந்தத் தீர்மானத்தை வழிமொழிந்திருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களால் ஆணித்தரமாக இந்த நாட்டு மக் களுக்கு இந்த அரசு கொடுத்து இருக்கின்ற வாக்குறுதிகளைச் செய்யத் தவறி இருக்கின்றது என்று குற்றச்சாட்டு சொல்ல முடியாத சூழ்நிலை இருப்பதன் காரணத்தால்தான் அவர்கள் அரைத்த மாவையே அரைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அருமை நண்பர் பிரபாகரன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒரு புஸ்வாணம் என்பதை நேற்றைய பேச்சும், இன்றைய பேச்சும் நிரூபித்து விட்டன. மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் பேசும்போது கூட இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்திலே அவர்களுக்கே கூட இதைய சுத்தியோடு நம்பிக்கையில்லை. அந்த உணர்வு இருந்த காரணத்தால் தான் பெரும்பகுதியான நேரம் அரசியல் கட்சிகளின் உறவுகளைப் பற்றி எடுத்துக் கூறினார்கள். அரசியல் கட்சிகள்—காங்கிரஸ் கட்சியும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் நெருங்குகிறது என்பதைப் பற்றிச் சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் மிகத் தெளிவாகச் சொல்லிவிட் டார்கள். அதைப்போலவே காங்கிரஸ் கட்சியும் மதுரை கூட்டத்திலே அவர்களே சொல்லிவிட்டார்கள். அதைப் பற்றி பேச்சே இல்லை. இங்கே மௌனமாக இருக்கிறீர்கள், பேச்சுக் களில் தொனி குறைகிறது என்பதால் சர்வாதிகாரத்திற்கு நாங்கள் துணை போகிறோம் என்றால் மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்களைப் பார்த்து நான் கேட்க விரும்பு கிறேன்.

நீங்கள் எத்தனை இடங்களில் காங்கிரஸ் சர்வாதிகாரத் திற்குத் துணை போய் இருக்கிறீர்கள். அஸ்ஸாம் மாநிலத்தில் என்ன நடந்தது என்பதை எண்ணிப் பாருங்கள். காங்கிரஸ் கட்சியின் அமைச்சரவை மீது ஜனதா கட்சியும் மற்ற கட்சி களும் நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்த போது, அங்கே வலது கம்யூனிஸ்ட் கட்சியும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் 23 பேர் இருக்கிறார்கள். அந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களிக்காமல், வெளி நடப்பு செய்தார்கள். அதனால் அங்கே விழவேண்டிய காங்கிரஸ் அரசு, பிழைத்து விட்டது. ஆகவே, நாங்கள் சொல்லலாமா, காங்கிரஸ் அராஜகத்தை ஆதரித்து, காங்கிரஸ் பக்கம் நீங்கள் நிற்கிறீர்கள் என்று.

சாதிகாரமாக தனி அதிகாரிகள் மூலமாக பல கொள்கைகள் நடப்
பது அனைவரும் அறிந்தது. ஊராட்சி மன்றங்களாக இருந்தாலும்,
ஒன்றியங்களாக இருந்தாலும், நகராட்சி மன்றங்களாக இருந்
தாலும் இவைகளில் இன்றைய நிலை என்ன என்பதையெல்லாம்
நான் சொல்லாமலேயே நீங்கள் எல்லாம் நன்கு அறிவீர்கள். இவை
களில் ஊழல், லஞ்ச லாவண்யம், எதேச்சாதிகார நிர்வாகம் நடப்
பதற்குத்தான் நீங்கள் வழிவகுத்து இருக்கிறீர்கள். லஞ்சத்தை
யும் ஊழலையும் நிரந்தரமாக்கிவிட்டீர்கள் என்று நான் குற்றஞ்
சாட்டுகிறேன். அதை நீங்கள் மறுக்கமுடியாது. தேர்ந்தெடுக்கப்
பட்ட பிரதிநிதிகள் அந்த அமைப்புகளில் எல்லாம் இல்லாததன்
காரணமாக அவைகள் ஒழுங்காக நடைபெறவில்லை. நிர்வாகங்
களிலே இன்றைக்கு ஊழல் மலிந்துவிட்டது. கிராம அதிகாரிகளை
நீக்கியதைப் பற்றிப் பாராட்டிப் பேசினார்கள். அந்த கிராம
அதிகாரிகளை நீக்கியதற்குப் பின்னால் இன்றைக்கு என்ன
நிலைமை இருக்கிறது? முன்பு 5 ரூபாய் லஞ்சம் கொடுப்பதற்குப்
பதிலாக 50 ரூபாய் கொடுத்தால்தான் ஒரு சர்டிபிகேட் கூட
வாங்கமுடியுமென்ற நிலைமை இருக்கிறது. என்று சகல பிரிவின
ர்களும் பேசுகிறார்கள் என்பதை யாரும் மறுக்கமுடியாது. எல்
லாக் கிராமங்களிலுமே நிர்வாகம் சீர்குலைந்திருக்கிறது என்பதை
தெரிந்து கொள்ளவேண்டும். கிராமங்களிலே கிராம அதிகாரிகள்
கிடையாது. கூட்டுறவு சங்கங்களிலே தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதி
நிதிகள் கிடையாது, பஞ்சாயத்துக்களிலே மக்கள் பிரதிநிதிகள்
நிர்வாகம் கிடையாது. தனி அதிகாரிகள் மூலமாக எதேச்சாதி
காரமாக ஆட்சி செய்யக்கூடிய நிலைமை இருக்கிறது. சட்டமன்ற
உறுப்பினர்களாகிய நாங்கள் போகிறபோது எங்களிடம் மக்கள்
சாக்கடை வசதி கிடையாது. ரோடு வசதி கிடையாது என்று
சொல்கிறார்கள். பஞ்சாயத்துத் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியத்
தலைவர்கள் செய்யவேண்டிய வேலைகள் எல்லாம் சட்டமன்ற
உறுப்பினர்கள் தலையில் விழுகிறது என்பதைத் தெரிவிக்கக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே தன்னிறைவுத் திட்டம் பற்றிப் பிரமாதமாகப் பேசப்
பட்டது. நேரம் இல்லாத காரணத்தால்அதைப்பற்றி நான் சுருக்க
மாகப் பேச விரும்புகிறேன். அந்தத் திட்டம் எவ்வாறு செயல்
பட்டது என்பதைப்பற்றிச் சொல்லவிரும்புகிறேன். 5, 6 வருடங்
களிலே செய்யவேண்டிய வேலைகளை 6 மாத காலத்திலேயே
முடிக்கவேண்டுமென்று சொல்லி. இன்றைக்கு வேலைகளை
எல்லாம் ஏப்ரல் மாதத்திற்குள் முடிக்க வேண்டும். செப்டம்பரில்
வேலையை ஆரம்பித்தால் மார்ச் மாதத்திலேயே முடிக்கவேண்டு
மென்ற முறையிலே 6 மாத காலத்திற்குள்ளாக 50 லட்ச ரூபாய்
களை ஒரு பஞ்சாயத்து யூனியனிலே செலவழிக்க வேண்டுமென்று
சொல்லி காண்ட்ராக்டர்கள், அதிகாரிகள் ஆளுங்கட்சியினர் எல்
லாம் சேர்ந்து கூட்டுக்கொள்ளையாக செய்திருக்கக்கூடிய திட்ட
மாக இருக்கிறதே தவிர தன்னிறைவுத் திட்டமாக இல்லை.





(நண்பகல் 12·00)

தன்னிறைவுத் திட்டம் நிறைவேற்றப் பட்டதாகச் சொல்லப்
பட்ட பல கிராமங்களிலேகூட ரோடுகள் இல்லை என்ற நிலைமை
தான் இருக்கிறது. டெங்கனிக்கோட்டை என்ற தாலுகாவிற்கு
நான் போய் இருந்தேன். அங்கே உள்ள நெல்மாரா என்ற கிரா
மத்திற்கு நாங்கள் சென்றிருந்தோம். அங்கே தன்னிறைவுத் திட்
டம் நிறைவேற்றப்பட்டுவிட்டது என்று சொன்னார்கள். நாங்கள்
ஜீப்பில் போனாலும்கூட பல கிராமங்களிலே ரோடு வசதிகள்
இல்லை என்பதால் நடந்துபோக வேண்டிய நிலைமைதான் ஏற்
பட்டது. அதைப்போல பல இடங்களில் எங்கள் தொகுதியில் பல
ஊர்களுக்கு ரோடு வசதிகள் கிடையாது. அடிப்படை வசதிகள்
எதுவும் கிடையாது, பள்ளிக்கூட வசதி இல்லை, ஆனால் தன்
னிறைவுத் திட்டம் நிறைவேறிவிட்டது என்று சொல்கிறார்கள்.
இப்படி 6 மாத காலத்திற்குள்ளாக முடிக்கவேண்டுமென்று
சொல்லி அத்தனை பேர்களும் சேர்ந்து கூட்டுக் கொள்ளை அடித்
தார்கள் என்று தான் சொல்லவேண்டும்.

அதே சமயத்தில் வறட்சி நிவாரணம் என்று சொல்லப்படு
கிறது. எந்த வேலையும் செய்யாமல் பல இடங்களில் பணங்கள்
எடுத்துக்கொள்ளப் பட்டதாக புகார்கள் வந்து இருக்கிறது எங்
களுக்கு. என். ஆர். இ. பி-யில் செய்த வேலையையே வறட்சி
யிலும் செய்ததாக இரு கணக்குகள்எழுதப்பட்டிருக்கின்றன. உதா
ரணமாக ஒன்றைச் சொல்கிறேன். அறந்தாங்கி தாலுக்காவில்
பெரியாதூர்ஊரணி என்ற ஊரில் 1982-ல் என். ஆர். ஈ. பி-யில்
செய்த வேலையை திரும்ப அதே வேலையை தன்னிறைவு திட்டத்
திலும் செய்ததாக சொல்லப்பட்டிருக்கிறது. இப்படியாக பலயி
டங்களில் செய்யப்பட்டிருக்கிறது. உதாரணமாக ஒன்றைச் சொல்
கிறேன், ஒரு திட்டத்திற்கு செய்தவேலையை மறு திட்டத்திற்
கும் எடுத்து செய்வதாகச் சொல்லி பணங்கள் மோசடி நடந்து
இருக்கிறது என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, குடிநீர் மேல்நிலைத் தொட்டிகள் பலயிடங்களில்
கட்டப்பட்டு இருக்கின்றன. ஆனால் எந்த மேல்நிலைத்தொட்டியும்
சரியாக செயல்படவில்லை என்று நான் குற்றம் சாட்டுகிறேன்.
ஒன்று இரண்டு ஊர்களில் ஒன்று இரண்டு இடங்களில் வேண்டு
மானால் சரியாக செயல்படலாமே தவிர பலயிடங்களில் அந்த
மேல்நிலைத் தொட்டிகள் செயல்படவில்லை. காரணம் மெயின்
டெனென்ஸ் கிடையாது. அதற்கு வேண்டிய பஞ்சாயத்து யூனியன்
களில் நிதிகள் கிடையாது. இருந்தாலும் சீராக செய்வது கிடை
யாது. காரணம் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் கிடையாது.
இந்த மாதிரி பல உதாரணங்கள் சொல்லமுடியும். உதாரணம்
என்னுடைய தொகுதியில் ஆவல் நத்தம், என்ற ஊரில் தோண்டு
கால் என்ற ஊரில், மைப்பாறை என்ற ஊரில், துறையூர் என்ற
ஊரில் அதேமாதிரியாக அனவரதநல்லூர், சேரவலம், ராமானுஜப்

[திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்] [1983 நவம்பர் 9

மதுரை பாண்டியன் போக்குவரத்து கழகப் பேருந்து நிறு
வனம் 1971–72 ஆம் ஆண்டில் டாக்டர் கலைஞர் அவர்கள்
ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது 22 லட்சம் ரூபாய் நட்டத்
தினை பெற்று, 1975–76 ஆம் ஆண்டிலே, புரட்சித் தலைவர்
அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது, 61 லட்சம் ரூபாய்
நட்டத்திலே கொடுத்தார்கள். அதை 104 லட்சம் ரூபாய்,
1982–83 ஆம் ஆண்டிலே லாபம் சம்பாதிக்கின்ற நிறுவனமாக
எங்கள் புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு மாற்றியிருக்
கிறது.

சேரன் போக்குவரத்துக் கழகம் 7 லட்சம் ரூபாய் நட்டத்
திலே இருக்கும்போது ஆட்சிப் பொறுப்பை ஏற்ற டாக்டர்
கருணாநிதி அவர்கள் 17.54 லட்சம் லாபமாக கொடுத்த சூழ்
நிலையில், 1982–83-லே 52 லட்சம் லாபம் என்ற சூழ்நிலையை
உருவாக்கியிருக்கிறோம். சோழன் போக்குவரத்துக் கழகத்திலே
1971–72 ஆம் ஆண்டிலே 5.62 லட்சம் நட்டம் என்ற சூழ்
நிலையிலிருந்தது, புரட்சித் தலைவர் ஆட்சிப் பொறுப்பை ஏற்
கின்றபோது, 102 லட்சம் ரூபாய் நட்டத்தைக் கொடுத்த நிறு
வனம் இன்றைக்கு 59 லட்சம் ரூபாய் லாபத்தை 1982–83-லே
ஈட்டிக் கொண்டிருக்கிறது. அண்ணா போக்குவரத்துக் கழகத்தில்
1975–76-லே 25.81 லட்சம் நட்டம் என்ற நிலை போய்,
1982–83-லே 34.53 லட்சம் லாபம் என்கிற சூழ்நிலை உருவாகி
யிருக்கிறது.

1975–76-லே கட்டபொம்மன் டிரான்ஸ்போர்ட் கார்ப்
பொரேஷன் 75 லட்சம் ரூபாய் நட்டம் என்ற சூழ்நிலையில்
புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பினை ஏற்ற பிறகு
1982–83-லே 137.51 லட்சம் லாபம் சம்பாதிக்கின்ற சூழ்
நிலையை உருவாககியிருக்கிறது. அதேபோல் தந்தை பெரியார்,
போக்குவரத்துக் கழகத்தை 1975–76-லே புரட்சித் தலைவர்
அவர்கள் 98.75 லட்சம் நட்டம் என்ற சூழ்நிலையில்
ஆட்சிப் பொறுப்பினை பெற்று, 1982–83-லே 47.52 லட்சம்
லாபம் ஈட்டுகிற சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறார்கள்.
திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் 125 லட்சம் (குறுக்கீடு,
மணியடிக்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சீக்கிரமாக முடித்து
விடுங்கள்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : எங்களுக்கா
திறமையின்மை? பல்வேறு குறைகளை தீர்த்து, கடந்த காலங்
களில் செய்யத் தவறிய வேலைகளைச் செய்து கடந்த காலங்
களில் செய்யத் தவறிய ஆக்கப் பூர்வமான முடிவுகளை எடுப்
பதில் ஏற்பட்ட கால தாமதங்களை தவிர்த்து, முடிவு எடுப்
பதிலே சமயோசித எண்ணங்களை வழிகளை எல்லாம் உருவாக்கி



1983 நவம்பர் 9] [திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்]

யதில், இந்த மாநிலம் மற்ற மாநிலங்களுக்கு வழி காட்டிபோல் இருக்கின்ற வகையில், வளர்ச்சி திட்டங்களை நடத்திக் காட்டியது இந்த அரசு. வளர்ச்சித் திட்டங்களைப் பற்றி பிரணாப் முகர்ஜி அவர்கள் சொல்கிறபோது கூட 34 சதவீதம் வளர்ச்சித் திட்டத்திற்காக செலவு செய்கிற மாநிலம் தமிழகம்தான். மிகக் குறைவாக 17 சதவீதம் வளர்ச்சித் திட்டங்களுக்காக செலவு செய்கின்ற மாநிலம், மேற்கு வங்கத்திலே இருக்கிற சர்க்கார் தான், என்று அவர்களே சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். அப்படி மற்ற மாநிலங்களிலே இருப்பவர்கள், மையத்திலே இருப்பவர்கள், மனிதாபிமானம் கொண்டவர்கள் பாராட்டுகிற சூழ்நிலையில் நீங்கள் நம்பிக்கையில்லை என்று சொல்வீர்களேயானால் மக்கள் உங்களை நம்பப் போவதில்லை. மக்கள் அதற்கான தண்டனையை வெளியே கொடுக்கத் தயங்க மாட்டார்கள் என்பதைச் சொல்லி, மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் இந்த தீர்மானத்தை வாபஸ் வாங்கவேண்டும் என்றுதான் வெளியிலே இருக்கிற மக்கள் விரும்புகிறார்கள். இல்லை என்றால், மக்கள் தண்டிக்க தயாராக இருக்கிறார்கள் என்பதை மட்டும் சொல்லி அமர்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் கொடுத்திருக்கிற நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரித்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஒரு சில கருத்துக்களை இங்கே சொல்ல விரும்புகிறேன். இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்க்கட்சிகள் சார்பிலே நாங்கள் ஏன் கொண்டுவந்தோம் என்பதற்கான காரணங்களையெல்லாம் எனக்கு முன்னாலே நேற்றைய தினம் பேசிய திரு. உமாநாத் அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். 1980 இல் 9 மாநிலங்களை டிஸ்மிஸ் செய்தபோது அதைக் கண்டித்து எந்த அரசியல் கட்சிகள் உங்களோடு நின்றார்களோ அந்த ஜனநாயக சக்திகளைப் புறக்கணித்து விட்டு மக்களுக்கு துரோகம் செய்துவிட்டதைப் பற்றித் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அந்த அரசின்மீது நம்பிக்கையில்லை என்று நாங்கள் தெளிவாகச்சொல்ல முடியும். இந்த அரசின்மீதான ஊழல் புகார்கள்மீது நடவடிக்கை வந்துவிடுமோ என்ற பயத்தின் காரணமாக மத்திய ஆளுங்கட்சியோடு இணைந்து போகவேண்டுமென்று நீங்கள் நினைக்கிறீர்கள் என்று நாங்கள் குற்றஞ்சாட்டுகிறோம்.

தமிழகத்திலே உள்ள ஏழை எளிய மக்கள் எப்படிப் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பதற்கான விவரங்களை நான் இந்த அவை முன் வைக்க விரும்புகிறேன் எல்லா ஜனநாயக அமைப்புக்களையும் சீர்குலைத்துவிட்டீர்கள் என்று நான் குற்றஞ்சாட்டுகிறேன். கூட்டுறவு அமைப்புகளா, கிடையாது. எந்தக் கிராமத்திலேயும் எந்த நகரத்திலேயும் எந்தக் கூட்டுறவு நிறுவனமமாக இருந்தாலும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லாமல் ஏதேச்

[திரு. சோ. அழகர்சாமி] [1983 நவம்பர் 9

உழைத்து, கடைசியிலே வாழ வழியில்லாதவர்கள் அத்தனை பேருக்கும் பென்ஷன் கொடுப்பதற்காக இந்தத் திட்டத்தினை நிறைவேற்றினோம் என்று சொல்லலாம். ஆனால், அந்த இலட்சியத்தினை நிறைவேற்றினார்களா? இல்லவே இல்லை, ஆயிரக்கணக்கான, இலட்சக்கணக்கான மனுக்கள் ஒவ்வொரு அலுவலகத்திலும். பென்டிங்காக இருக்கின்றன,

அதே மாதிரியா தேர்தல் நேரத்திலே நம்முடைய விவசாயச் சங்கத் தலைவர் திரு. நாராயணசாமி நாயுடு அவர்களை முதலமைச்சர் அவர்கள் சந்தித்தார்கள். விவசாயிகளுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக, கொஞ்சம் கொஞ்சமாக எல்லாக் கடனையும் நாங்கள் ரிசர்வ் பாங்குக்குக் கொடுத்து தீர்க்கிறோம் என்று கொடுத்த வாக்குறுதி என்னவாயிற்று? அந்த வாக்குறுதிக்கு விரோதமாக இன்றைக்குப் பல இடங்களிலே ஜப்திகளும் நடக்கின்றன. அந்தக் கடன் பிரச்சினைகள் தீராமல் இருப்பதோடு மட்டுமல்ல, உயர்மட்டக்குழு ஒன்று போட்டார்கள். அந்த உயர்மட்டக் குழு சொன்ன சிபாரிசைக் கூட அமுல் நடத்தவில்லை. அந்த உயர்மட்டக் குழு தெரிவித்த சிபாரிசைக் கூட திரும்பப் பெறவேண்டுமென்று வற்புறுத்தி, மறுத்துச் சொல்ல வைக்கிறீர்களே, நியாயமாக பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டுமென்ற எண்ணம் உங்களுக்கு இல்லையென்று குற்றம் சாட்ட விரும்புகிறேன்.

அடுத்தது உணவுப் பொருள் விநியோகம், 118 இலட்சம் கார்டுகள் கொடுக்கப்பட்டிருப்பதாகக் கூறுகிறார்கள். அரிசி 20 கிலோ கொடுப்பதாக கூறினார்கள். ஒரு குடும்பத்திற்கு நியாயமாகக் குறைந்த பட்சம் இரண்டு குழந்தைகள் இருந்தாலும்கூட, ஒரு நாளைக்கு ஒரு கிலோ என்று சொன்னால் 30 கிலோ வேண்டும். நீங்கள் 2 கிலோ அரிசி போடுகிறீர்கள். கிராமங்களிலே 15 நாளைக்கு ஒரு முறை கூட அல்ல, ஒரு மாதத்திற்கே 2 கிலோ தான் கொடுக்கப்படுகிறது. மீதி 28 கிலோ அரிசியை அவர்கள் என்ன விலைக்கு வாங்குகிறார்கள் தெரியுமா? ஒரு கிலோ ரூ. 4.50-க்கு வாங்குகிறார்கள். அதுவும் மோசமான அரிசி. கொஞ்சம் நல்ல அரிசி, ரூ. 5.50. அப்படியானால் படி ரூ. 8-க்கு வாங்கி அந்தக் குடும்பம் பிழைக்க முடியுமா? நம்முடைய தமிழ்நாட்டில்தான் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்கிறவர்கள் அதிகமாக இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள் 61 சதவிகித மக்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கிறார்கள். ரூ. 5.50 கொடுத்து ஒரு கிலோ வாங்கி சாப்பிட முடியும் என்று கருதுகிறீர்களா? அவர்கள் எப்படி வயிறார சாப்பிட முடியும்? ஆகவே தான் நான் குற்றம் சாட்ட விரும்புகிறேன். நீங்கள் அந்தப் பொது விநியோக முறையில் சரியான கொள்முதலையும், விவசாயிகளுக்கு நியாயமான விலை கொடுத்துக் கொள்முதல் செய்யவும் தவறியுள்ளீர்கள், என்று அதன் காரணமாகத் தான் இரண்டு கிலோ அரிசி கூட உங்களால் பல இடங்களிலே கொடுக்க முடியவில்லை.



1893 நவம்பர் 9) (திரு சோ, அழகர்சாமி)

கேட்டால், மத்திய அரசைக் கைக்காட்டுகீறீர்கள். இப்பொழுது மத்திய அரசோடு சேர்கிறீர்கள். கேட்டால் மத்திய அரசு எங்களுக்குக் கொடுக்கவில்லையென்கிறீர்கள். இன்னொரு இடத்தில் மத்திய அரசு செய்வதுதான் சரி என்று தாளம் போடுகிறீர்கள். ஆகவேதான் குற்றம் சாட்டுகிறேன். இந்தத் தமிழகத்தில் உள்ள ஏழை, எளிய மக்களுக்கு நியாயமான விலையிலே அரிசி கொடுக்கத் தவறி இருக்கிறீர்கள் என்று நான் குற்றம் சாட்டுகிறேன் .........ஆகவேதான் இந்த அரசு மீது நம்பிக்கையில்லையென்று தெரிவிக்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுதலைவர் திரு எஸ் ஜகத்ரட்கன் தலைமை)

அது மட்டுமல்ல இன்று 20 கிலோ அரிசி என்று சொன்னீர்களே என்னவாயிற்று கார்டுக்குக் கொடுக்கும் போது 2 கிலோதான் கொடுக்கிறீர்கள். ஆகவேதான் எல்லா இடங்களிலும் ரூ. 4 ரூ 5 கொடுத்து அரிசியை கூட வாங்க முடியாமல் பலபேர்கள் பட்டினி கிடக்கக்கூடிய அவல நிலைமை தமிழகத்தில் ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

அதே மாதிரியாக இன்று இன்னொன்றும் சொல்லப்படுகிறது. பாமாலின் சம்பந்தப்பட்டவரையில் மத்திய அரசிடமிருந்து வாங்க கோட்டா அனுப்பப் பட்டிருக்கிறதாம் துறைமுகத்திலிருந்து கேரளாவுக்குப் போகக் கூடிய பாமாலின் அத்தனையையும் அவர்கள் எடுத்துச் சென்றிருக்கிறார்கள். தமிழகத்திலே உள்ள நாம் நமக்கு ஒதுக்கிய கோட்டாவை எடுக்கமறுத்திருக்கிறோம் எடுக்கவில்லையென்று குற்றம் சாட்டப்படுகிறது. ஏன் எடுக்க மறுக்கிறார்கள் என்றால் இங்கே உள்ள நல்லெண்ணெய் விலை குறைந்து விடுமாம். ஆகவே அந்த எண்ணெய் வைத்திருக்கிற முதலாளிகள் பாதிக்கப்படுவார்கள். ஆகவே மத்திய அரசால் ஒதுக்கப்பட்ட பாமாலின் கூட. எடுக்கப்படவில்லை என்று காரணம் சொல்லப்படுகிறது. அது உண்மையா என்று அறிய விரும்புகிறேன். அப்படியென்றால் அது மிகப் பெரிய துரோகம் என்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். பாமாலின் பல இடங்களிலே கிடைக்காமல் கியூ வரிசையில் நிற்கிறார்கள். நல்லெண்ணெய் விலையும் 1 கிலோ ரூ. 15 ரூ. 20 ஆகிவிட்டது. தேங்காய் எண்ணெய் விலையும் ரூ. 30 ஆகிவிட்டது. ஆகவே அப்படியிருக்கும்போது மத்திய அரசு ஒதுக்கிய அந்த எண்ணெயை நீங்கள் எடுக்காமல் வேண்டுமென்றே இருப்பது ஒருசில முதலாளிகளுக்கு இலாபத்தைத் தேடித் தரத்தான் என்று நான் குற்றம் சாட்டுகிறேன். ஆகவேதான் இந்த அரசு எப்படி மக்களுக்கு விரோதமாக நடக்கிறது பொதுமக்களுக்கு ஆதரவாக நடக்கவில்லையென்பதால் நம்பிக்கையில்லை யென்று நான் கூறுகிறேன.

புதூர் ஆகிய ஊர்களில் மேல்நிலைத் தொட்டிகள் கட்டி 10 ஆண்டுகளுக்கு மேலாகின்றன. அவைகள் சரியாக செயல்பட வில்லை. இப்படிதான் இந்த மாநிலம் பூராவும் பலயிடங்களில் இந்த மாதிரியான நிலைமை ஏற்பட்டு இருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். கட்டிய மேல்நிலைத் தொட்டிகள் கூட சரியாக செயல்படவில்லை. சரியாக ரிப்பேர் செய்யாமல் அப்படியே இருப்பதால் குடிநீர் வசதி செய்ய முடியாத நிலை இருக்கிறது.

அதற்கு அடுத்தபடியாக இந்த அரசினுடைய ஜனநாயக விரோத போக்கு. ஜனநாயகத்தை இந்த அரசு மதிப்பது இல்லை என்று குற்றம் சாட்டுகிறேன். மக்கள் தங்களுடைய கோரிக்கைக் காக தங்களுக்கு இருக்கின்ற சகல விதமான பிரச்சினைகளுக்காக அதை அரசினுடைய கவனத்திற்கு கொண்டு வருவதற்காக அல் லது நிவாரணம் வேண்டும் என்பதற்காக ஊர்வலங்கள், பொதுக் கூட்டங்கள் நடத்தினால் கிளர்ச்சிகளில் ஈடுபட்டாலும் எப்படியும் இவைகளை அடக்கி ஒடுக்கி விடவேண்டும். அந்த ஊர்வலங்களை நடத்தவிடக்கூடாது. கோரிக்கைக்காக போராடவிடக்கூடாது. என்ற அகம்பாவமான மனப்பான்மையில் இந்த அரசு நடந்து கொள்கிறது என்பதற்கு ஒன்று இரண்டு உதாரணங்கள் சொன் னால் போதும் என்று நினைக்கிறேன்.

20—10—83-ல் சர்வகட்சி ஊர்வலம் திருவில்லிப்புத்தூரில் நடக்கிறது. அந்த ஊர்வலம் நடக்கின்ற நேரத்தில் அதை எப்படி யும் நடத்தவிடாமல் செய்ய வேண்டும் என்பதற்காக அங்குள்ள ஆளும் கட்சித் தூண்டுதலின் பேரால் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் நேரு என்பவர் ஊர்வலத்தை சீர்குலைக்கும்நோக்கத்தோடு சிபிஐ. கட்சியினுடைய கொடியை எங்கள் தோழரிடமிருந்து பிடுங்கி அதை கழித்து அங்குள்ள ஊர்வலத்தினரிடையே ஆத்திரத்தை மூட்டியிருக்கிறார்கள். இதை கண்டித்து பொதுக்கூட்டத்தில் பேசியதற்காக நம்முடைய மார்க்சிஸ்டு கம்யூனிஸ்ட் கட்சியினு டைய தோழர் சின்னசாமி என்பவர் மீதும் கம்யூனிஸ்டு கட்சி தோழர் ராஜி என்பவர் மீதும் பி.சி.75-ன் படி வாரண்டு வாங்கு கைது செய்து இருக்கிறார்கள் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன் ஏன் என்றால் வேண்டும் என்றே இப்படி பழி வாங்கக் கூடிய நிகழ்ச்சிகளை அங்குள்ள ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் சொல்வதை கேட்டுக்கொண்டு சிலயிடங்களில் அதிகாரிகள், போலீஸ் அதிகாரிகளை தவறாக பயன்படுத்தி இந்த மோசமான நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் காரணமாக ஜன நாயகத்திற்கு விரோதமான காரியங்களில் நீங்கள் ஈடுபடுகிறீர்கள் என்று நான் குற்றம் சாட்டுகிறேன்.



அடுத்து, பார்வை அற்ற பட்டதாரிகள் அந்த சங்கத்தின் சார்பில் 3—10—83 அன்று காலவரை அற்ற உண்ணாவிரதம் சென்னையில் மேற்கொண்டார்கள். 5—10—83 அன்று காவல் துறையைச் சார்ந்தவர்கள் அந்த எழிலகத்திற்கு முன்னால் போடப்பட்டு இருந்த பந்தலுக்குள் புகுந்து, அதை அப்புறப்படுத்தி காவல் நிலையத்திற்கு அவர்களை கொண்டு செல்கிறார்கள், அதன் பிறகு ராயப்பேட்டை அரசு மருத்துவ மனைக்கு கொண்டு சென் றார்கள். அங்கேயும் அவர்கள் உண்ணாவிரதம் இருந்தார்கள். இதைக் கண்டித்து, இந்த உண்ணாவிரதத்தை ஆதரித்து கைது செய்ததை எதிர்த்து 50 பார்வை அற்றவர்கள் நந்தனத்தில் ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள். அவர்கள் மீது தடியடி நடத்த அவர்களை காயப்படுத்தி அவர்களை காவல் நிலையத்திற்கு கொண்டு சென்று அவர்கள் மாலையில் விடுதலை செய்யப்பட்டு இருக்கிறார்கள். இது என்ன அக்கிரமம். இதைக் கண்டித்து எங்க ளுடைய கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்த மாணிக்கம் அவர்களும், மார்க்கிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்த நல்லசிவம் அவர் களும் அறிக்கைவிட்டுஇருககிறார்கள். கண்தெரியாதவர்கள், ஊனம் அடைந்தவர்கள் தங்கள் கோரிக்கையாக அரசாங்கம் போட்ட, ஜி.ஓ-வை அமுல்படுத்தவில்லை, வேலை வாய்ப்பு நிறுவனங்களில் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட 3 சதவீத இடம் அவர்களுக்கு சரியாக கொடுக்கவில்லை என்ற காரணத்திற்காக அவர்கள் கோரிக்கை வைத்து உண்ணாவிரதம் இருக்கிறார்கள். அவர்களை கைது செய்தீர்கள், கைது செய்ததை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்கி றார்கள். கண் தெரியாதவர்கள் மீது தடியடி செய்து லாக் அப்பில் போடுவது இது எல்லாம் என்ன அக்கிரமம், இது எல்லாம் ஜன நாயகத்தை ஆதரிக்கிற போக்கா? அல்லது ஜனநாயகத்தை மறுக்கிற போக்கா என்று நான் கேட்கவிரும்புகிறேன். பலயிடங் களில் இதுமாதிரியாக இன்றைக்கு நம்முடைய ஜனநாயக உரிமைக் காக போராட்டங்கள் நடத்தக்கூடிய காலத்திலே எந்தவிதமான கிளர்ச்சியும் நடத்தக்கூடாது என்று போலீஸை வைத்து அடக்கி ஒடுக்கி அவர்கள் போராட்டத்தை நடத்தாமல் தடுத்து நிறுத்து கிற நிகழ்ச்சிகளில் இந்த அரசு செயல்படுகிறது என்ற குற்றச் சாட்டை நான் கூறவிரும்புகிறேன்.

வாக்குறுதி கொடுத்தீர்கள் விவசாய தொழிலாளர்களுக்கு பென்ஷன் கொடுத்தீர்களா, கேரளாவில் கொடுக்கிறார்கள், வங்காளத்தில் கொடுக்கிறார்கள். நீங்கள் கொடுத்தீர்களா?

அதே மாதிரியாக முதியோர்கள் பென்ஷன் அத்தனை பேர் களுக்கும் கொடுக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் கூடச் சொன்னார்களே, அப்படி கொடுக்கப் படுகிறதா? ஒருவர் இறந்து விட்டால் மற்றொருவருக்குக் கொடுக்கிறார்களே தவிர, எத் தனை மனுக்கள் பென்டிங்காக இருக்கின்றன? வருஷமெல்லாம்

[திரு சோ. அழகர்சாமி] [1983 நவம்பர் 9

அதற்கடுத்தபடியாக இன்றைக்கு வேட்டி
எல்லாம் விநியோகம் செய்யப்படுவதாக; விவசாயத் சேலை
லாளர்களுக்கு கொடுப்பதற்காக ரூ. 10 கோடி ஒதுக்கப்பட்டது தொழி
என்று சொல்லப்பட்டது. சேலத்தில் ஏறக்குறைய 70 இலட்சம்
பேர்களுக்குக் கொடுக்கப்பட்டது என்று சொல்கிறார்கள்.
எப்படி கொடுத்தார்கள் அதிலே கூட விளம்பரமா. ஆளுங்
கட்சிக்காரர்கள் அமைச்சர்கள் இருந்தால்தான் கொடுக்க
வேண்டும். விவசாயத் தொழிலாளர்கள் எத்தனை
சளுக்கு நீங்கள் கொடுத்தீர்கள் என்ற கணக்கை பேர்
கேட்க விரும்புகிறேன். அந்த விளம்பரத்திற்காக நான்
செய்தீர்கள். அதற்கு ஒரு உதாரணம். நம்முடைய நீங்கள்
அமைச்சர் அவர்கள் நெகமம் என்ற இடத்திற்கு முதல்
மூன்று நாட்களுக்கு முன்னால் சென்றார்கள். இரண்டு
சம்பவம். 4 000 பேர்களுக்குப் புடவையும் அங்கு நடந்த
வழங்குவதாகச் சொல்லப்பட்டு அவர்களை வேட்டியும்
உட்காரச் சொல்லி இருக்கிறார்கள். 100 முன்னால்
உட்கார்ந்திருரிகிர்கள். அவருக்கே கோபம் வந்து பேர்கள்தான்
நாள் வந்து பார்க்கிறேன் சரியாக இன்னொரு
கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டு கணக்குவைத்துக்
பத்திரிக்கையிலே செய்தி அதிலே வந்தார் என்று
நடந்திருக்கின்றன. இன்றைக்கு முதலமைச்சருடைய மோசடிகள்
மூலத்திலே இது தெரிகிறது என்று நான் வாக்கு
விரும்புகிறேன். ஆகவேதான் இந்த மாதிரி சொல்லிக்கொள்ள
ஊழல்கள் நடந்து கொண்டிருக்கின்றன விவகாரங்களிலே
சொல்ல விரும்புகிறேன். அதற்கடுத்தபடியாக என்பதை நான்
சம்மந்தப்பட்ட பிரச்சினையில் காவிரி நீர் விவசாயி
நெற்களஞ்சியம் என்று சொல்லப்படுகிற தஞ்சை தமிழகத்தினுடைய
இரண்டு ஆண்டுகளாக கடுமையாக மாவட்டம்
பாதிக்கப்பட்டிருக்கிறது.

(பிற்பகல் 12-10).

அதற்கு என்ன காரணம் குறுவை சாகுபடிக்கு ஜூன் மாதம்
12-ம் தேதியே திறந்து விட வேண்டிய தண்ணீர் செப்
டம்பர் 6 தேதி ஆனாலும்கூட இரண்டு ஆண்டு காலமாக
சரியாக திறந்து விடப்படவில்லை அதனால் அந்தப்
பகுதியில் இருக்கிற விவசாயிகளுக்கு மிகப் பெரிய சேதம்
ஏற்பட்டிருக்கிறது. தஞ்சாவூர் மாவட்டத்தில் மட்டுமல்ல
தமிழகம் முழுவதும இந்த நிலையால் விவசாயம் பாதிக்கப்
பட்டிருக்கிறது. தஞ்சாவூர் பகுதியில் மட்டும் விவசாயி
களுக்கு 300 கோடி ரூபாய் வரையில் நட்டத்தை ஏற்படுத்
தியிருக்கிறீர்கள் என்று குற்றம் சாட்ட விரும்புகிறேன்.
அரிசி விலை உயர்விற்கு அதுவும் ஒரு காரணம். 5 லட்சம்
ஏக்கர் குறுவை சாகுபடி ஆகிற இடத்தில் இன்றைக்கு 1-
லட்சம் ஏக்கர்தான் சாகுபடி ஆகியிருக்கிறது. காலத்தில்



1983 நவம்பர் 9] (திரு. சோ. அழகர்சாமி)

மத்திய சர்க்காரை வற்புறுத்தியோ அல்லது கர்நாடக அரசோடு பேசியோ இந்த காவிரி நீர் பிரச்சினையில் தீர்வு காண தவறியிருக்கிறீர்கள்; மிகப்பெரிய பாதகத்தையும் நட்டத்தையும் விசாயிகளுக்கு ஏற்படுத்தி இருக்கிறீர்கள் என்று குற்றஞ்சாட்ட விரும்புகிறேன். இன்றைக்கு தஞ்சாவூர் மாவட்டத்தில் விவசாயிகள் விவசாயம் செய்வதற்கு கூட்டுறவு சங்கங்களில் கடன் வாங்க முடியவில்லை. காரணம் கூட்டுறவுக் கடன் பாக்கி இருக்கிறது. கடந்த ஆண்டு குறுவை சாகுபடி இல்லை. அது தான் அவர்களுக்கு வருமானம் தரக்கூடியது பழைய கூட்டுறவுக் கடன்பாக்கியை கட்டவில்லை யென்பதால் புதிய கடன் இல்லை என்று சொல்கிறீர்கள். புதிய கடன் இல்லையென்று சொல்லியதன் காரணமாக நூறு ரூபாய் கடன் வாங்கக்கூடிய விவசாயி நூறு ரூபாய்க்கு ஒரு மூடை நெல்லை வட்டியாகக் கொடுக்கிறார்கள். மோசமாக லேவாதேவிகாரர்களிடம் விவசாயிகளைத் தள்ளக்கூடிய நிலை இன்றைக்கு தஞ்சாவூர் மாவட்டத்தில் ஏற்பட்டிருக்கிறது. தஞ்சாவூர் மாவட்டத்தைப் பொறுத்தவரை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும் என்று நினைக்கிறேன். நூறு ரூபாய் கடன் வாங்கியதற்கு ஒரு மூட்டை நெல்லை வட்டியாக அங்கே கொடுக்கிறார்கள். இப்படிப்பட்ட மோசமான நிலை அங்கே ஏற்பட்டிருக்கிறது.

அடுத்தபடியாக கிணற்று நீர் பாசனம். மின்சார துண்டிப்பு இன்றைக்கு மிகவும் பரவலாக நடந்து கொண்டிருக்கிறது. மின்சாரம் 6 மணி நேரம் அல்லது 4 மணி நேரம்தான். அதுவும் இரவு வேளையிலும் கொடுக்கிறீர்கள். இரவு வேளையில் மின்சாரம் கொடுத்தால் எப்படி நடவு நடுவது? நெல்லிற்கு பாய்ச்சலாம். அல்லது மற்ற பயிர்களுக்கு வேண்டுமானால் பெரிய வரப்புகளாகப் போட்டு பாய்ச்சலாம். கேப்பையும் சோளமும் மிளகாய் செடியும் நடவு நடுகிற காலத்திலே இரவு வேளையில் மின்சாரத்தைக் கொடுத்தால் விவசாயிகள் எப்படி நடவு வேலைகளைச் செய்வார்கள்? 6 மணி நேரம். 4 மணிநேரம் என்பதும் சரியாக் வருவது கிடையாது. இப்படி கொடுத்ததின் காரணமாக மின்சாரத்திற்கு பணம் கட்டிய இடத்திலேகூட அவர்களுடைய விவசாயத்தை நீங்கள் நாசம் செய்துவிட்டீர்கள் என்று குற்றம் சாட்டுகிறேன். இன்றைக்கு மின்சாரத் துண்டிப்பு வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. விவசாயிகள் கிணற்றிலே கொஞ்சம் தண்ணீர் வந்திருக்கிறது அதை பயன்படுத்தலாம் என்று நினைத்தால். மின்சாரத்தைத் துண்டித்து அவர்களை விவசாயம் செய்ய விடாமல் பாழடிக்கிறீர்கள் என்று குற்றம் சாட்டுகிறேன். நெல்லை மாவட்டத்திலும் இராமநாதபுரம் மாவட்டத்திலும் பல கிராமங்களிலே

மூன்று நான்கு நாட்களுக்கு முன்னால் நூற்றுக்கணக்கான
போலீசாருடன் சென்று மின் துண்டிப்பு நடந்திருக்கிறது
அவர்கள் சொல்கிறார்கள் எங்களால் மொத்தமாக கட்ட
முடியவில்லை. கொஞ்சம் கொஞ்சமாக கட்டுகிறோம்;
பிளஸ் ஒன் முறையிலே கட்டுகிறோம் என்று சொன்னால்
அதெல்லாம் முடியாது; பாக்கியை ஒரேயடியாகத் தான் கட்ட
வேண்டும்; இல்லையென்றால் மின்சாரத்தைத் துண்டிப்போம்
என்று சொல்லி இந்த மின் துண்டிப்பு நடந்திருக்கிறது.
குமாரபுரம் மேசியபுரம் கிராமங்களிலும் நல்லி
கிராமங்களில் இதுபோல நடந்திருக்கிறது. இன்னும் பல
மாவட்டத்தில் சத்தியமங்கலம் தாலுக்காவில் பெரியார்
என்று ஒரு கிராமம்; அங்கே நான் சென்றிருந்தேன். காளப்பாடி
விவசாயிகள் எல்லாம் என்னை வந்து பார்த்தார்கள். அந்த
சொல்கிறார்கள், மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் எங்களுடைய அவர்கள்
மின்சாரத்தை மின் பாக்கிக்காக துண்டித்து விட்டார்கள்,
நாங்கள் ஒன்-பிளஸ்-ஒன் என்று கட்டுகிறோம் என்று சொன்
னோம்; இப்போது அபராதம் எல்லாம் போட்டிருக்கிறார்கள்;
நாங்கள் சிறிய விவசாயிகள். 2 ஏக்கர் 3 ஏக்கர் என்று
வைத்திருக்கிறோம் என்று சொல்கிறார்கள். கூடினால் 5 ஏக்கருக்கு
மேலே அவர்களுக்கு இல்லை. அப்படிப்பட்ட விவசாயிகளுக்கு அப
ராதம் எல்லாம் போட்டிருக்கிறார்கள்.
என்பவர் எஸ். சி. 142 சர்வீஸ் நம்பர் ஆறுமுகசாமி
நோட்டீஸ் வந்திருக்கிறது. ரூ. 20,677-10க்கு
யூனிட்டுக்கு இவ்வளவு அபராதம் என்னவென்று சொன்னால் ஒரு
அதிகமாகச் செய்திருக்கிறார்கள். என்று பெருக்கி தொகையை
நிலத்தை முழுவதும் விற்றாலும் கூட அவர்கள் சொல்கிறார்கள்
முடியாது என்று; வெங்கடாஜலம் இந்த பாக்கியைக் கட்ட
பாக்கி; கருப்பையா கவுண்டர் என்பவருக்கு 31,524 ரூபாய்
பாக்கி 35,440 ரூபாய் 45 எஸ்.சி. 108 சர்வீஸ் நம்பர்
அவ்ருடைய சர்வீஸ் பைசா; காளியப்பன் 239 எஸ்.சி.
கவுண்டர் 94 சர்வீஸ் நம்பர்; ரூ. 12,531 பாக்கி; இராம
தர்சப்ப கவுண்டர் சர்வீஸ் நம்பர் 29,198 ரூபாய் பாக்கி;
காளியப்ப கவுண்டர் பாக்கி 176 ரூ. 56,555 பாக்கி;
எப்படி வரும்? இதுவரையில் 31,900 ரூபாய்: இதெல்லாம்
முழுக்க 5 ஹார்ஸ் பவர் என்ன செய்தீர்கள். ஒரு நாள்
கூட மாதம் 50 மோட்டாரை வைத்து ஓட்டினாலும்
இருந்தால் இரவும் ரூபாய்க்கு மேலே வராது: நன்றாக தண்ணீர்
ரூபாய்க்கு மேல் பகலும் ஓட்டினாலும் கூட 100
ஆயிரம் வரைக்கும் வராது. அப்படியானால் 39 ஆயிரம் 40
உறங்கிவிட்டு இப்போது பாக்கி ஏற்படுகிறவரை உறங்கினீர்களா?
இப்போதுபோய் கேட்க திடீரென்று விழித்துக் கொண்டீர்களா
யென்றால் விவசாயிகளை வேண்டிய காரணம் என்ன? அப்படி
இடத்தில் வைத்து எல்லாம் கூப்பிட்டு வந்து ஒரு
போலீசைக் கொண்டு கொன்றுவிடுங்களேன்.





ஏன் இம்மாதிரியான காரியங்களைச் செய்கிறீர்கள்? 39,000 ரூபாய், 40,000 ரூபாய் பாக்கி என்று சொல்லி மின்சாரத்தைத் துண்டிக்கிறீர்கள். நாங்கள் ஒழுங்காக கொஞ்சம் கொஞ்சமாகப் பணத்தைக் கட்டிக் கொண்டு வருகிறோம் என்று சொன்னாலும் கேட்பதில்லை.

புதுப்பட்டியிலே மின் துண்டிப்பைச் செய்து, பத்து பேர்களை கைது செய்கிறீர்கள். இவ்வாறு செய்வது சரியல்ல. இதையெல்லாம் செய்கிறீர்கள்.

ஆனால் மேட்டூர் அலுமினியம் தொழிற்சாலை பாக்கி அதிகமாக இருக்கிறதே, ஒன்பதரை கோடி ரூபாய் பாக்கி எனச் சொல்லப்பட்டது. ஆனால் அந்த மேட்டூர் அலுமினியம் தொழிற்சாலையில் மின்சாரத்தை துண்டிக்கவில்லையே ஏன்? அங்கே போய் துண்டியுங்களேன். அங்கே உங்கள் கை போகவில்லையே, ஏழை எளிய விவசாயிகள் 30,000, ரூபாய், 40,000 ரூபாய் பாக்கி வைத்திருக்கிறார்கள் என்று சொல்லி துண்டிக்கிறீர்கள். ஆனால் மேட்டூர் அலுமினியம் தொழிற்சாலை நாயுடுவிடம் போனால் ஷாக் அடிக்கிறதே, ஏன் அதைத் தொடமாட்டேன் என்கிறீர்கள். இதற்கான காரணத்தைச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

" இந்தியன் எக்ஸ்பிரஸ் " பத்திரிகையிலே ஒரு செய்தி வந்திருக்கிறது. திருச்சி, சுப்பிரமணியபுரம் செபாஸ்டியன் என்பவருக்கு ஒரு நோட்டீஸ் வந்தது. 1983 ஆம் ஆண்டு நோட்டீஸ் கொடுத்து, மின் துண்டிப்பு செய்த பிறகு, அவர் பணத்தையும் கட்டி, ரீ-கனெக்ஷனுக்காக ஐந்து ரூபாயையும் கட்டி விட்டார். அதற்குப் பிறகு ஜூன் 28 ஆம் தேதி பில்லுக்கான பணத்தைக் கட்டப் போகிறார். முன்னாலே ஜூன் 3 ஆம் தேதி அவரால் கட்டப்பட்ட ரூபாய் வரவு வைக்கப்படவில்லை என்பது அப்பொழுது தெரிகிறது. அவர் டிஸ்கனெக்ஷனுக்குப் பிற்கு, ரீ-கனெக்ஷனுக்குப் பணம் கட்டவில்லை என்று சொல்லி பில்லுக்கான பணத்தை வாங்க மறுத்திருக்கிறார்கள்.

திருச்சி மாவட்டத்திலேயே பல டாக்டர்கள் பணம் கட்டவில்லை என்று நோட்டீஸ் போயிருக்கிறது. கலெக்டர் ஆபிசிலிருந்து கட்ட வேண்டிய பாக்கி 1903 ரூபாய் என்று சொல்லி அதற்கான மின் துண்டிப்பிற்கான நோட்டீஸ் போகிறது. ஸ்பெஷல் போலீஸ் அலுவலகத்திற்கும் நோட்டீஸ் போகிறது. 14,075 ரூபாய் பாக்கி என்று சொல்லி நோட்டீஸ் போகிறது. அரசாங்க அதிகாரிகளுக்கே இப்படிப்பட்ட நோட்டீஸ்கள் போகின்றன என்றால், சாதாரண ஏழை எளிய விவசாயி, அவன் பணம் கட்டியதற்கான ரசீதை எங்கேயாவது தொலைத்திருப்பான், அல்லது தெரியாமல் எங்கேயாவது போட்டிருப்பான், அதன் காரணமாக அவன் 30,000 ரூபாய், 40,000 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று அவனைத் துன்புறுத்துவது எந்த வகையில் நியாயம்? திருச்சி மாவட்டத்திலே ஆட்சித் தலைவர்

அலுவலகத்திற்கும், ஸ்பெஷல் போலீஸ் அலுவலகத்திற்குமே இந்தக் கதி என்றால் சாதாரண மக்கள் என்ன நிலைமைக்கு ஆளாவார்கள் என்று மாண்புமிகு மின்துறை அமைச்சரவர்களைக் கேட்க விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, அரிசன நலன் பற்றி ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அரிசனங்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள் இன்றைக்கு நிறுத்தப்பட்டு விட்டனவா ? அரிசனங்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள் நிறுத்தப்பட்டு விட்டதாக உங்கள் சார்பில் பேசியவர்கள் சொல்கிறார்கள், நேற்றுகூட இங்கே பேசிய ஒரு உறுப்பினர் அவ்வாறு கூறியதாக நான் நினைக்கிறேன். எந்தக் கொடுமை நிறுத்தப்பட்டது ? 1979 ஆம் ஆண்டிலிருந்து 1983 ஆம் ஆண்டு வரையில் பார்த்தால் இந்த ஐந்தாண்டுகளில் 16 அரிசனங்கள் கொலை செய்யப்பட் டிருக்கிறார்கள். 20 கற்பழிப்புகள் நடந்திருக்கின்றன. இவை களெல்லாம் வழக்குப் போடப்பட்டவை. சர்க்கார் கொடுத்த கணக்கு இது. 38 தீ வைப்புகள், 37 பேர் படுகாயப்படுத்தப்பட் டுள்ளனர். இந்த வழக்குகள் எல்லாம் நடந்து கொண்டிருக் கின்றன. இப்படி அரிசனங்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள் தொடர்கதையாக இருக்கிறது. இவைகள் நிறுத்தப்பட்டு விட் டனவா ? அரிசனங்களுக்குக் கொடுமைகள் இழைக்கப்படும் நேரங்களில் நீங்கள் அரிசனங்களுக்கு ஆதரவாக நடவடிக்கை எடுத்திருக்கிறீர்களா ? மேல் சாதிக்காரர்களுக்கு விரோதமாகப் போகிறீர்களா ? இதெல்லாம் இந்த மன்றத்தில் உள்ள பலருக்கும் தெரியும். தொடர்ந்து ஊஞ்சணையிலும், விழுப்புரத்திலேயும், இராமநாதபுரத்திலேயும், மீனாட்சிபுரத்திலேயும் என்ன நடந் தது ? இங்கேயெல்லாம் நடந்த நிகழ்ச்சிகளிலே தாக்குதலுக்குட் பட்டவர்கள் யார் ? அரிசனங்கள்தானே தாக்குதலுக்கு ஆளா னார்கள். இவைகள் உங்கள் ஆட்சியிலே தானே நடந்திருக் கின்றன. இதைத் தடுப்பதற்குக் காலா காலத்தில் நடவடிக்கை எடுத்தீர்களா ? சி.ஐ.டி. போலீசிடமிருந்து உங்களுக்குத் தகவல் வரவில்லையா ? இம்மாதிரி கலகம் நடத்துவதற்குத் தயாராக இருக்கிறார்கள், இதற்கு ஏற்பாடு நடக்கிறது என்று சி.ஐ.டி. போலீசிடமிருந்து தகவல் வரவில்லையா ? அவைகளைத் தடுப் பதற்கு ஏன் முன்கூட்டியே நடவடிக்கை எடுக்கவில்லை ? அரிசனங்களுக்குப் பாதுகாப்பை அளித்து, அவர்களுக்கு அளிக்க வேண்டிய உரிமைகளை நீங்கள் அளிக்கவில்லை என்று குற்றஞ் சாட்டுகிறேன்.

வீட்டுமனைப் பட்டாக்களை எத்தனை பேர்களுக்குக் கொடுத்து இருக்கிறீர்கள் ? என்னுடைய தொகுதியிலே நான் நான்கு தடவைகள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறேன். என் ஊர் உள்பட நான்கு கிராமங்களைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருக் கிறேன், அங்கு இன்னும் மனைகள் கொடுக்கப்படவில்லை, இவ்வளவு மோசமாக அந்த இலாக்கா நடந்து கொண்டிருக் கிறது.



மாண்புமிகு உறுப்பினர் திரு துரைமுருகன் அவர்கள் கூட ஒன் றைச் சொன்னார்கள். ஹைகோர்ட்டில் கொடுத்த ஒரு தீர்ப் பைப் பற்றிச் சொன்னார்கள். அக்விசிஷனுக்குப் போகிற நேரத் தில், அரிசனங்களுக்கு என்று போடாத காரணத்தால் செல் லாது என்று சொன்னதாகச் சொன்னார்கள். உங்களுடைய கவனம் எந்த அளவிற்கு அரிசனங்கள்பால் இருக்கிறது என்பது இதிலிருந்து தெரிகிறது. அரிசனங்களுக்கு வீட்டு மனை கொடுக்க வேண்டுமென்ற அக்கறை உங்களுக்கு இருக்கிறதா ? இல்லை என்றுதான் குற்றஞ்சாட்ட விரும்புகிறேன். எத்தனை ஆண்டு களானாலும் அத்தனை. பேர்களுக்கும் வீட்டு மனைகளைக் கொடுப்பீர்களா ? வீட்டு மனைகளை அரிசனங்களுக்குக் கொடுக் கின்ற நேரத்தில் மேல் சாதிக்காரர்கள் நம்மை வந்து பார்ப்பார் கள், எம்.எல்.ஏ.-வைப் பார்ப்பார்கள், மந்திரிகளைப் பார்க் கிறார்கள். பிறகு கோர்ட்டுக்குப் போகிறார்கள். எனவே, எத்தனை பேர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்களைக் கொடுக்க முடிந்திருக்கிறது ? எத்தனை ஆட்சி மாறியிருக்கிறது ? குடும்பத் தில் ஒருவருக்கு ஒரு மனை என்று உண்டா ? அவ்வாறு கொடுப் பதற்கு முனைந்திருக்கிறீர்களா ? அவ்வாறு அவர்களுக்கு மனை இல்லாத காரணத்தால் பல திட்டங்களின் மூலம் ஆடு வாங்க முடியவில்லை, மாடு வாங்க முடியவில்லை, மானியம் வழங்கி னாலும் அவனால் கோழி வாங்க முடியவில்லை. காரணம் என்ன? இன்றுவரையில் அவனுக்கு வீட்டு மனை என்று ஒன்று கொடுக்கப்படவில்லை.

அரிசனங்களின் சுடுகாட்டுக்குப் பாதை இருக்கிறதா ? எத் தனை ஊர்களுக்குச் சுடுகாட்டுக்குப் பாதை அமைத்துக் கொடுத் திருக்கிறீர்கள் ? பெருந்துறை வட்டாரத்திலே கருமாண்டிசின்னி பாளையம் என்ற பேரூராட்சியில், வெங்கமேடு என்ற இடத்தில் அரிசனங்களுக்குச் சுடுகாட்டுப் பாதை கிடையாது. அதுபற்றி சம்பந்தப்பட்ட எம்.எல்.ஏ. மகஜர் கொடுத்திருக்கிறார். இன்று வரையில் அது கவனிக்கப்படவில்லை. சுடுகாட்டுப் பாதை அமைப் பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(பிற்பகல் 12–20)

எஸ். பெரியபாளையம் என்ற ஊரில் சுடுகாட்டுப் பாதை இல்லை. இப்படி ஒரு ஊரில் சுடுகாடு இல்லை; ஒரு ஊரில் சுடுகாட்டுக்கான பாதை இல்லை. நான் சொன்ன ஊர்களை யெல்லாம், ஒரு உதாரணத்திற்காகத்தான் சொல்கிறேன். நிறைய ஊர்களைச் சொல்ல வேண்டுமென்றால் நேரமில்லை. இந்தக் குறைபாட்டைப் போக்குவதற்குத் தீவிரமாக நட வடிக்கை எடுத்திருக்கிறீர்களா என்று கேட்க விரும்புகிறேன். ஒன்றும் கிடையாது. ஆளும் கட்சியிடம் நல்ல பெயரை வாங்க வேண்டும் என்பதற்காக மதிப்பிற்குரிய நண்பர் திரு. மூர்த்தி அவர்கள் கம்யூனிஸ்ட் கட்சியைத் தாக்கிப் பேசினார்கள். கம்யூ னிஸ்ட் கட்சியினரைப் பார்த்துக் கேட்கிறேன் என்று சொன்னார்

கள். பொதுத் தொகுதியிலே நீங்கள் தாழ்த்தப்பட்டவரை நிறுத்தி இருக்கிறீர்களா என்று கேட்டார்கள். அப்போது குறுக் கிட வேண்டாம் என்று விட்டுவிட்டோம்.

நெல்லை மாவட்டத்திலே நாங்குனேரி தொகுதியிலே திரு. சங்கரப்பண்ணையார் என்று சொல்லக்கூடிய மிகப்பெரிய பண் ணையார் திரு. சங்கர ரெட்டியார் அவர்களை எதிர்த்து எங்க ளுடைய கட்சியின் சார்பாக தோழர் முத்துமாணிக்கம் அவர் களைப் பொது தொகுதியிலே நிறுத்தினோம். அப்போது நீங்கள் ஓட்டுப் போட்டீர்களா? என்ன நடந்தது? அந்தந்த ஜாதிக் காரர்கள் அந்தந்த ஜாதிக்காரருக்கு ஓட்டு போட்டனர். அதற்குப் பிறகும் எங்களுடைய அரிசனத் தலைவர்கள் பல பொதுத் தொகு திகளிலே ஊராட்சித் தலைவர்களாக இருந்திருக்கிறார்கள். உதா ரணமாக ரெங்கசமுத்திரம் என்ற ஊர் எங்களுடைய மாவட்டத் திலே இருக்கின்றது. தஞ்சாவூரிலே நிறைய பேர் இருக்கிறார் கள். அதுமட்டுமல்ல. 1962-லே ஊராட்சி ஒன்றியத்தின் பெருந்தலைவராக எங்களுடைய கட்சியினைச் சேர்ந்த திரு. எஸ். ஜி. முருகையன் அவர்கள் இருந்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு திரு. கே. முருகையன் அவர்கள். இவர்கள் இரண்டு மூன்று தடவை தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். அதெல்லாம் பொதுத் தொகுதிதானே. அவர்கள் எல்லாம் அரிசன மக்கள் இல்லையா? அவருக்கு ஜனாதிபதி பரிசு கிடைத்தது. அதை எல்லாம் மறுக்கிறீர்களா? எவ்வளவு பெரிய காரியம் செய் ததற்காக அவர்களுக்கு ஜனாதிபதி பரிசு கிடைத்தது? எவ் வளவு சிறப்பாக அவர்கள் பணியாற்றினார்கள் என்பது தெரி யுமா? எனவே பொதுத் தொகுதியிலே கம்யூனிஸ்ட் கட்சி அரிசனத் தலைவர்களை நிறுத்தி இருக்கின்றது. ஆகவே கம்யூ னிஸ்ட் கட்சியினைப் பார்த்து ஜாதி என்று எல்லாம் பேசினால் என்ன அர்த்தம்? பேசுவதை நியாயமாகப் பேச வேண்டும். உண்மையைப் பேசுங்கள். உண்மைக்கு மாறாகப் பேசாதீர்கள். ஆகவே இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து தொழிலாளர்கள் பிரச்சினை. இது முக்கியமான பிரச்சினை. இந்தப் பிரச்சினைகளிலே முதலாளிகளைப் பாது காப்பது தானே உங்களுடைய கொள்கையாக இருந்து இருக்கின் றது. இல்லை என்று சொல்ல முடியுமா? பட்டினி போட்டு பணிய வைப்பது அவனைத் தன்னாலே இழுக்கடித்து சரிய வைத்து பணிய வைப்பது ஒன்று. இல்லை என்றால் அவனை அப்படியே வேலை இல்லாமல் ஆக்கிவிடுவது, அப்படிப்பட்ட நிலைமைதானே இருக்கின்றது.

பால் பண்ணையிலே என்ன ஆயிற்று? மாதவரம் பால் பண் ணையிலே பணியாற்றிய ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் இன்றைக்கும் ஊர்வலமாக வந்துகொண்டிருக்கிறார்கள். நாங் களும் போய் அவர்களை வாழ்த்திவிட்டு, வாழ்த்திவிட்டு வருகி





றோம். நல்லா பட்டினி கிடப்பா என்று வாழ்த்திக்கொண்டே இருக்கிறோம். நீங்கள் என்ன செய்தீர்கள்? அத்தனை பேரை யும் வேலையை விட்டு நீக்கினீர்கள்.

அதே மாதிரி போட்டி தொழிற்சங்கத்தைத் துவக்குகிறீர் கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தின் தொழிற்சங்கத்தைத் துவக்குகிறீர்கள். தொழிலாளர் களைப் பிளவுபடுத்துகிறீர்கள். இப்படி பிளவுபடுத்துவது என் பது மட்டும் இல்லை. கடைசியில் என்னவென்றால் அந்தத் தொழிலாளர்களுடைய ஒற்றுமையைக் குலைத்து முதலாளி களுக்கு இலாபத்தைத் தேடிக் கொடுக்கிறீர்கள். இதுதானே உங்களுடைய கொள்கை. ஒரு தொழிற்சாலையிலே போனஸ் பிரச்சினை வருகின்றது. அந்த நிறுவனத்தின் பெயரை வேண்டு மானாலும் சொல்கிறேன். சவுத் இண்டியா விஸ்கோர்ஸ் தொழிற் சாலை அது. அதிலே பணியாற்றும் தொழிலாளர்கள் 42 சத வீதம் போனஸ் வேண்டும் என்று கேட்டார்கள். நிர் வாகம் 40 சதவீதம் கொடுக்கலாம் என்று சொல்லிக் கொண் டிருக்கின்றது. அதை ஏற்றுக் கொள்ளாமல் 3 மாதங்களாக நடந்து கடைசியில் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர் கள் தலையிட்டு 34 சதவீதம் என்று அறிவிக்கிறார்கள். நிர்பந்த மாக அது நிறைவேற்றப்படுகின்றது. இதில் அந்த அமைச் சருக்குப் பரிசு 9 இலட்சம் என்று சொல்லப்படுகின்றது. இது சம்பந்தமான ஆதாரத்தை அங்குள்ள நிர்வாகம் [illegible] ஒரு லெட்டரை நம்முடைய தற்காலிக சபாநாயகர் அவர்களின் அனு மதியோடு இங்கே வாசிக்கலாம் என்று அனுமதி *கேட்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு எஸ். ஜகத்ரட்சகன்): முன்னாடி பெர்மிஷன் வாங்கி இருக்க வேண்டுமே. அவைத் தலைவரின் அனுமதியைப் பெற்றதற்குப் பிறகுதான் அதனைப் படிக்க முடியும்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே அந்த அவர்கள் இங்கே வாசிப்பது என்றால் அதற்கு அவர்கள் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும். அதன் மீது நாங்கள் நடவடிக்கை எடுப்பதாக இருந்தாலும் அதற்கு அவர்கள் ஆட்படுவதற்குத் தயாராக இருக்கவேண்டும்.

திரு. சோ. அழகர்சாமி: மாற்றுத் தலைவர் அவர்களே எந்த நடவடிக்கை வந்தாலும் நான் ஏற்றுக்கொள்கிறேன்.

---

*பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க 10—11—1983 அன்றுதிக்கம் செய்யப்பெறவில்லை.

[1983 நவம்பர் 9

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: துணைத் தலைவர்
அவர்களே, அசெம்பிளி விதிகளிலேயே தெளிவாக இருக்கிறது.
உங்களுடைய அனுமதியோடு என்று பேப்பரில் இருந்து சோட்
செய்யலாம். பேப்பரில் இருந்து நியுஸ் கோட் செய்வது வேறு,
'இந்து' 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' போன்ற பத்திரிகைகளில்
வந்திருக்கிற செய்திகளைப் படிப்பது வேறு, ஆனால் அதிகாரப்
பூர்வமாக யாரோ எழுதியதாக ஒரு லெட்டரைக் கொண்டுவந்து
அதை உங்களின் அனுமதியோடு படிக்கின்றேன் என்று சொல்லி
படிப்பதை எப்படி அனுமதிப்பது? (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நான் சொல்
வதை தயவு செய்து கேளுங்கள். ஒரு டிஸ்கஷன் நாம் பண்ணிக்
கொண்டு இருக்கிறபோது, திடீரென்று ஒரு லெட்டரைக்கொண்டு
வந்து இந்த மாதிரி ஒரு அலிகேஷன் சொல்வது என்றால்......
(குறுக்கீடுகள்).

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: இது ஒரு சீரியஸ்
அலிகேஷன். இட் ஈஸ் நாட் எ ஸ்லமால் மேட்டர் (குறுக்கீடுகள்)
ஒரு மினிஸ்டரைப் பற்றிச் சொல்லியிருக்கிறார். (குறுக்கீடுகள்)

அசெம்பிளி விதிகளில் தெளிவாக இருக்கிறது. முதலில்
அதைத் தங்களிடம் காண்பித்து விட்டு, அந்தப் போட்டோ
ஸ்டேட் காப்பியை நீங்கள் வெரிபை பண்ணி, அதை நீங்கள்
பேசலாம் என்று அனுமதி கொடுத்தால்தான் பேசலாமே தவிர
........(குறுக்கீடுகள்), பேப்பரில் வந்த செய்தியாக இருந்
தால் பேப்பரை வைத்துக்கொண்டு காண்பிக்கலாம். How it
will be proved? (குறுக்கீடுகள்)

[பிற்பகல் 12 30]

மாணபுமிகு பேரவைத் துணைத் தலைவர்: நான் என்ன
சொல்கிறேன் என்பதைக் கேட்ட பிறகு நீங்கள் பேசுங்கள் (கூச்
சல்—குழப்பம்). நாம் ஒரு டிஸ்கஷனில் இருக்கும்போது ஒரு
குற்றச்சாட்டைச் சொல்கிறார்கள். ஒரு டாக்குமெண்டை
புரொடியூஸ் செய்கிறார்கள். சாதாரணமாக குற்றச்சாட்டு
சம்பந்தப்பட்ட டாக்குமென்டைப்படிக்கும்போது 'With the
permission of the Speaker' என்று ஆரம்பிப்பது வழக்கம்.
ஆனால் ஒரு சீரியஸ் அலிகேஷனாக இருந்தால்
தலைவரிடம் முன்னாலேயே காட்டி, அனுமதி வாங்கிக்
கொள்ள வேண்டும் (கூச்சல்—குழப்பம்) நான் இந்தப்
பிரச்சனைக்காகச் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) நான்
சொல்கிறேன். என்னைப்பேச அனுமதியுங்கள். (கூச்சல்—குழப்
பம்) இப்போது நீங்கள் ரெய்ஸ் பண்ணியதற்காகச் சொல்ல
வில்லை. பொதுவாக இங்கே ஏதாவது ஒரு அலிகேஷன்
கொண்டுவரும்போது ஒரு டாக்குமென்ட் இருக்குமேயானல்
அதை அவைத் தலைவரிடம் காண்பித்துவிட்டுத்தான் படிக்க



1983 நவம்பர் 9] (பேரவைத் துணைத் தலைவர்)

வேண்டும். (குறுக்கீடு) இதில் உங்களுக்குள் ஒரு அண்டர்—
ஸ்டாண்டிங் கிடையாது. அவர் ஒத்துக்கொண்டதால் காட்டி
விட்டதாக எப்படி நீங்கள் சொல்கிறீர்கள்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: நான் என்ன
ஒத்துக்கொண்டேன்? நான் ஒத்துக்கொண்டேனா? பணம்
வாங்கினேன் என்றா ஒத்துக்கொண்டேன்? (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இல்லை.
பொறுப்பேற்றுக் கொள்கிறீர்களா என்று நீங்கள் கேட்டீர்
கள்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: அது பொய்க்
குற்றச்சாட்டு. (குறுக்கீடு) அது பொய்க் குற்றச்சாட்டு. நீங்கள்
சபையில் கொண்டு வருகிறீர்கள். நாளைக்கு இதற்குப்பொறுப்பு
ஏற்றுக்கொள்ள வேண்டும்; நடவடிக்கை எடுத்தால் பொறுப்
பேற்றுக்கொள்ள வேண்டும் என்று சொன்னேன். ஆனால் குற்
றச்சாட்டு பொய்க் குற்றச்சாட்டு என்று சொன்னேன். (கூச்சல்—
குழப்பம்) லெட்டரைக் காட்டுவதற்கு முன்னதாக இந்தக்
குற்றச்சாட்டை பொய்க் குற்றச்சாட்டு என்று சொன்னேன்;
அதற்கு பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டுமென்று சொல்லி
அமர்ந்தேன். நான் ஏற்றுக் கொண்டேன் என்றால் எதை ஏற்றுக்
கொண்டேன்? பணம் வாங்கினேன் என்றா? (கூச்சல்—குழப்
பம்) ஒரு கடுதாசியை யாரோ எழுதிப் போடுகிறான். அதைக்
கொண்டுவந்து படிக்கிறீர்கள். அது பொய்க் குற்றச்சாட்டு என்
கிறேன் நான்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: குற்றச்சாட்டை
இங்கே கொண்டுவருவதற்கு முன்னாலே டாக்குமென்ட்
இருக்குமானால் என்னிடம் காட்டி இருக்க வேண்டும். நம்மு
டைய அவை நடைமுறை அது. (கூச்சல்—குழப்பம்). நான்
பேசிய பின்னால் பேசுங்கள். நானே உங்களிடம்தான் வாய்ப்பு
கேட்கவேண்டியிருக்கிறது. எனக்குக் கூட வாய்ப்பு இல்லை என்
றால் எப்படி? நான் பேசிய பிறகு பேசுங்கள். (கூச்சல்—குழப்
பம்) சேர் கொடுத்த ரூலிங்கை சேர் மாற்றக்கூடாது என்று
கிடையாது. இப்போதுதான் நான் வருகிறேன். ஏற்கெனவே
இதற்கு முன்னால் நடந்திருக்கிறது. இந்த அவையிலே ஒரு
சேர் கொடுத்த டெசிஷனை 5 நிமிடம் கழித்து நாம் மாற்றி
யிருக்கிறோம். பெர்மிஷனே கொடுத்திருந்தாலும் 'ரிவெர்ஸ்'
பண்ணலாம். (கூச்சல்—குழப்பம்) அது வேறு. நான் சொல்
வதைக் கேளுங்கள். இதை ஜெனரலாக எடுத்துக் கொள்ள
லாம். இந்த ஒரு இஷ்யூவை மனதில் வைத்து எண்ண வேண்
டாம். நாம் இந்த அவையிலே கடைபிடிக்கக்கூடிய விதிமுறை
அது. அதாவது ஒரு அலிகேஷனைக் கொண்டுவர வேண்டுமென்
றால் ஒரு டாக்குமென்டோ அல்லது ஒரு தஸ்தாவேஜோ உங்க

(பேரவைத் துணைத் தலைவர்) [1983 நவம்பர் 9

ளிடம் இருந்தால் அதை நீங்கள் அவைத் தலைவரிடம் காண்
பித்து அதன் பிறகு எழுப்புவதுதான் முறை. ஆனால் திடீ
ரென்று எழுப்பியிருக்கிறீர்கள். எழுப்பும்போது அமைச்சரவர்
கள் சொல்கிறார்கள் அதற்கு நீங்கள் பொறுப்பேற்றுக்கொள்ள
வேண்டும் என்று. அதன் பிறகு நீங்கள் ஒத்துக்கொள்ள
ஆனால் நீங்கள் இரண்டு பேரும் ஒத்துக்கொள்கிறீர்கள்.
அதை ஒத்துக் கொள்ள வேண்டுமென்ற கொண்டதனால் நான்
அவை நடத்துவது........(கூச்சல்-குழப்பம்). அவசியம் இல்லை.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு
துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அலிகேஷன்
என்று ஆரம்பித்தார். (குறுக்கீடுகள்) இதில் அமைச்சர்
அவர்கள் அந்த லெட்டரை ஒத்துக்கொள்ளவில்லை. உறுப்பினர்
அலிகேஷன் சொல்ல ஆரம்பித்தவுடனே அமைச்சரவர்கள் சொன்
னார்கள். நீங்கள் சொல்லப்போகிற குற்றச்சாட்டுக்கு பொறுப்
பேற்றுக் கொள்ள வேண்டுமென்று சொன்னார்கள். அதற்குப்
பின்னால்தான் லெட்டரைக் காண்பித்தார். லெட்டரைப் படிக்க
ஆரம்பித்த பிறகு லெட்டரைப்பற்றி மினிஸ்டர் கேட்கவும்
இல்லை. உறுப்பினர் சொல்லவும் இல்லை. (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : முழுமையாக நான்
சொல்வதை நீங்கள் கேட்கவேண்டும். அவையில் எதையாவது
எழுப்பவேண்டும் என்றால் முன்னாலேயே சொல்லிவிடவேண்டும்.
சொல்லியாகிவிட்டது என்கிறேன். சொல்லியாகிவிட்டது என்கிற
தனாலே இப்போது ரிவர்ஸ் பண்ண வேண்டுமா என்று யோசித்
துக்கொண்டிருக்கிறேன். This is not final, We can reverse
the decision daily. அந்தந்த நேரத்திற்குத் தக்க, சூழ்நிலைக்குத்
தக்க, அந்தந்த கேசுக்குத் தக்க மாற்றிக்கொள்ளவேண்டும்.
அதுதான் விதி. (குறுக்கீடு).

திரு. ரா. உமாநாத் : உங்கள் டெசிஷனை கொஸ்ட்டின்
பண்ணக்கூடாது என்பது ரூல். நீங்கள் இப்படிச் சொல்கிறீர்கள்.
அமைச்சர் கொஸ்ட்டின் பண்ணுகிறார். எங்களுக்கு ஒரு சட்டம்
அவருக்கு ஒரு சட்டமா ? இதுகூடாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : He is not
questioning.

மாண்புமிகு திரு எஸ். திருநாவுக்கரசு : I am ·ot questio-
ning the order of the Deputy Speaker.



1983 நவம்பர் 9]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: Nobody is
above the Cha'r. As far as the House is co cer ed the Chair
is supreme. The House Supreme. போட்டோ ஸ்டேட்
காபி எடுத்து ஒரு லெடடரை காண்பித்து இருக்கிறார்கள்.
அதை காண்பித்ததிலே இதுவரையில் நாம் ஒத்துக்கொண்
டிருக்கிறோமா? இது மாதிரி என்றால் நாளைக்கு எந்த
உறுப்பினருக்கும் பாதுகாப்பு இருக்காது. இதே மாதிரி
ஆயிரம் லெட்டர்ஸ் கொண்டுவரலாம்.

It is rot the orig nal handwriting (குறுக்கீடு) தயவு செய்து
எல்லோரும் உட்காருங்கள். இந்த மாதிரி கடிதங்களை
எல்லா உறுப்பினர்களையும் இம்ப்ளிசேட் பண்ணக்கூடிய
அளவுக்குக் கொண்டு வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. இதை
நாம் சீர்தூக்கிப் பார்ப்பதற்காகத்தான் இது சரியா என்று
பார்ப்பதற்காகத்தான் ......(கூச்சல்-குழப்பம்) இப்படி
கொண்டு வருவதற்கு வாய்ப்பு இருக்கிற காரணத்தால் நாங்கள்
அதனுடைய ஜெனியுன்னஸ்—அது உண்மையான டாக்கு
மெண்டா என்று தலைவர் பார்த்து முடிவு சொல்லி அதற்கு
பிறகுதான் நாம் விவாதிக்க வேண்டும். (கூச்சல்—குழப்பம்).

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு துணைத்
தலைவர் அவர்களே. பத்திரிகைச் செய்திகளை கோட் பண்ணும்
போது கூட துணைத் தலைவர் அனுமதி பெற்றுத்தான் படிக்க
வேண்டுமென்று இருக்கிறது. இது சாதாரண பிரச்சனை அல்ல.
இது ஒரு சீரியஸ் அலிகேஷன். போட்டோஸ்டேட் காபியை
ஆதன்ட்டிசிட்டி என்று எந்த அத்தாட்சியை வைத்துச்
சொல்கிறார்கள் ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: எல்லோரும்
உட்காருங்கள். இன்னும் நானே பேசி முடிக்கவில்லை. (கூச்சல்—
குழப்பம்) முடிவை உங்களை எல்லாம் கேட்டுவிட்டுத்தான்
சொல்கிறேன். உங்களை எல்லாம் பாதுகாக்க வேண்டும் என்
பதற்காகத்தான் சொல்கிறேன். மாண்புமிகு திரு. உமாநாத்துக்கு
தைரியம் இருக்கிறது, ஓரளவுக்கு விவரம் தெரியும். பாது
காத்துக்கொள்வார். யாராவது ஒரு சாதாரண உறுப்பினர்
விவரம் தெரியாமல் மாட்டிக் கொண்டால் என்ன ஆவது ?
எல்லாரும் திரு உமாநாத்தாக இருக்கமுடியாது. (கூச்சல்-குழப்பம்)
எல்லோருக்கும் எல்லோரையும் பாதுகாக்கத் தெரியும்.
(குறுக்கீடு) எல்லா உறுப்பினர்களும் பாதுகாத்துக்கொள்
வதற்கு அவரவர்களுக்கு விவரம் தெரியும். அவரவர்களுக்கு
தைரியம் இருக்கிறது. எதையும் ஃபேஸ் பண்ணக்கூடிய உறுப்பினர்
கள்தான் இருக்கிறார்கள் என்பதும் தெரியும். எல்லா

To

Sri Raghavanandham,

As per your demand I am sending Rs. 9.00 lakhs in a case (Rs. 100–90 bundles) through V. Perumal and please settle the bonus issue as we discussed in person. As soon as you receive this amount please inform me and destroy this letter.

Thanking you

(கூச்சல்— குழப்பம்). ஆகவே நான் சொல்கிறேன் இப்படி வந்திருக்கின்ற இந்த லெட்டரைப் பாருங்கள். இப்படி நடந்தால் தொழிலாளர்களுக்குச் சாதகமாக என்ன காரியத்தை நீங்கள் செய்வீர்கள்? செய்ய முடியுமா? இப்படிப்பட்ட நிலைமையில் தொழிலாளர்களுக்குச் சாதகமாக இந்த அரசு இருக்கின்றது என்பதை எப்படி நாங்கள் நம்ப முடியும்? ஆகவே நான் சொல்கிறேன். தொழிலாளர்களுடைய .............

திரு துரைமுருகன் : மாற்றுத் தலைவர் அவர்களே, ஒரு அமைச்சர் 9 இலட்சம் ரூபாய் வாங்கி இருப்பதாகச் சொல்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்று.... (குறுக்கீடுகள்)....

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : நான் எழுந்து பொறுப்பேற்றுக்கொள்ளவேண்டும் என்று சொன்னேன். அவர் பொறுப்பு ஏற்றுக்கொள்கிறேன் என்று சொன்னார். அமைச்சர் உட்கார்ந்து கொண்டு இருக்கிறார் என்றால் என்ன செய்வது? சண்டை போடச் சொல்கிறீர்களா? நான் தயார். (கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. எஸ். ஜகத்ரட்சகன்) : திரு. சோ. அழகர்சாமி நீங்கள் பேசுங்கள்.

திரு சோ. அழகர்சாமி : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே அதே மாதிரியாக மன்னார்குடி கூட்டுறவு பால் வழங்கு சங்க தொழிலாளர்கள் வேலை நிறுத்த நோட்டீஸ் கொடுத்து இரண்டு முறை லேபர் அதிகாரிகள் பேச்சு வார்த்தைக்கு அழைத்தும் கூட நிர்வாகம் வரவில்லை. அது மட்டுமல்ல, மூடிக்கிடக்கும் பஞ்சாலைகள்— இன்றைக்கு எஸ்.ஆர்.சி. பஞ்சாலை மூடிக்கிடக்கிறது. 300 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். தமிழ்நாடு ஸ்பின்னிங் மில்லில் 200 தொழிலாளர்கள் 4 வருடமாக பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். காளப்பட்டி பத்மா மில்ஸ் 5 வருட காலமாக மூடிக்கிடக்கிறது. சிங்காநல்லூர் வசந்தா மில்லில் 2,000 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். அதே மாதிரி இன்றைக்கு பஞ்சாலைத் தொழிலாளர்கள் போனஸ் பிரச்னை பற்றி தொழிற்சங்கத்



தலைவர்களைக் கலந்துகூட பேசாமல் அவர்களாகவே அறிவிக்கிறார்கள். அந்த தொழிற்சங்கத்தோடு ஆளும் கட்சியைச் சேர்ந்த தொழிற்சங்கத்தை வைத்து அறிவிப்புகளை அறிவிக்கிறார்கள். ஆகவேதான் தொழிலாளர்கள் சம்பளப் பிரச்சினை, வேலை நிறுத்தப் பிரச்னை பற்றி இந்த மாதிரி நிலை இருக்கிறது. இன்றைக்கு கந்தசாமி நூற்பாலையில் வேலை நிறுத்தம் 640 தொழிலாளர்கள் 10–15 ஆண்டுக்காலமாக..........

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. எஸ். ஜகத்ரட்சகன்) அரை மணியாகிவிட்டது. சீக்கிரம் முடியுங்கள்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இங்கே ஒரு கடிதத்தின் நகலை உங்களிடத்தில் கொடுத்தார்கள். அதை ஏற்கனவே நீங்கள் வாங்கிப் பார்த்து, போட்டோஸ்டேட் காப்பியாக இருந்தால், வெரிபை செய்த பிறகுதான், அது போன்ற கடிதத்தை படிப்பதற்கு அனுமதிப்பது முறையாக இருக்குமே தவிர, அதையே ஆதாரமாக வைத்துக்கொண்டு........(குறுக்கீடுகள்)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. எஸ். ஜகத்ரட்சகன் ; மாண்புமிகு அமைச்சர் பேசட்டும். மற்ற உறுப்பினர்கள் உட்காரவேண்டும்.

மாண்புமிகு திரு எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அது நாகரீகமான நடைமுறையாக இருக்காது என்ற காரணத்தால் குறுக்கிட்டுச் சொல்கிறேன். இப்படி ஒரு உறுப்பினர் மீது கூட, இதுபோன்ற கடிதங்களையோ அல்லது கடிதத்தின் நகலையோ அல்லது போட்டோஸ்டேட் காப்பியையோ யார் மீதும் கொண்டு வரமுடியும். ஆகவே, முதலில் வெரிபை செய்து (குறுக்கீடு) ஸ்பீக்கர் மஸ்ட் வெரிபை இட் —அதற்குப் பின்னாலே தான் அதை டாகுமென்டரி எவிடென்ஸாக நீங்கள் ஒப்புக்கொள்ளலாமே தவிர ...... (குறுக்கீடுகள்)

அவர் அதை ஒத்துக்கொண்டார் என்பதில் அர்த்தம் கிடையாது. அவர் ஒப்புக்கொள்ளவில்லையே. நீங்கள் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும் என்று சொன்னாரே தவிர, அவர் அதை ஏற்றுக்கொள்ளவும் இல்லை, ஒப்புக்கொள்ளவும் இல்லை. எப்படி ஒப்புக்கொள்வார் அதை.? அதனால் நீங்கள் வெரிபை செய்கிற வரைக்கும் இந்த லெட்டர் சமாசாரத்தை (குறுக்கீடு) மொத்தமாக குற்றச்சாட்டு சொல்லட்டும். அது வேறு. But it should not be accepted as a documentary evidence.(குறுக்கீடுகள்).

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்த அவையில் ஒரு டிஸ்கஷன் நடந்து கொண்டிருக்கிறபோது, ஒரு டெலிபுரேஷன் நடக்கிறபோது........(குறுக்கீடுகள்)

(பேரவைத் துணைத் தலைவர்) [1983 நவம்பர் 9

உறுப்பினர்களும் விவரம் தெரிந்தவர்கள்தான். (கூச்சல்-
குழப்பம்). (குறுக்கீடு). உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். நான்
யாருக்காகவும் இங்கே பேசவில்லை. இப்படி ஒரு லெட்டரை
சாதாரணமாக போட்டோ ஸ்டேட் காபியை ப்ரொடியூஸ் பண்
ணியிருக்கிறார்கள். இதிலே அமௌண்ட் ஒரு ரூபாய் இரண்டு
ரூபாய் அல்ல. ஒன்பது இலட்சம் ரூபாய். இது போட்டோ ஸ்டேட்.
சாதாரண அலிகேஷன் இல்லை. எவ்வளவு பெரிய
அலிகேஷன்ஸ் ?

திரு ரா. உமாநாத் : ஒரு ரூபாய் இரண்டு ரூபாய் என்றால்
கேட்க மாட்டோம். ஹியூஜ் அமௌண்ட் என்பதால்தான் கேட்
கிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சாதாரணமாக
போட்டோ ஸ்டேட் காபியை எந்த நீதிமன்றமும் ஏற்றுக்கொள்
வது இல்லை. பொதுவாக சட்ட முறையிலே சொல்கிறேன்.
எந்த நீதிமன்றமும் ஏற்றுக்கொள்வது இல்லை. ஒரிஜினலைப்
பார்த்த பிறகுதான் . . . . . . . . . . . .

திரு அ. ரகுமான்கான் : ஒரிஜினல் எப்படிக் கிடைக்கும்?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஆயிரம் காபி
களை இதைப்போல் ப்ரொடியூஸ் பண்ண முடியும்.

மாண்புமிகு திரு எஸ். திருநாவுக்கரசு : துணைத் தலைவர்
அவர்களே Photo-stat copy is not a1 evidence in the Court also.
கோர்ட்டிலே கிடையாது. எப்படி போட்டோ ஸ்டேட் காப்பியை
அசெம்பளியிலே ரெக்கார்டாக கொண்டு வருகிறார்?
கோர்ட் புரசீடிங்சை நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்).

[பிற்பகல் 12-40]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் அமருங்
கள். நான் சொல்கிறேன். (குறுக்கீடு). மாண்புமிகு உறுப்பினர்
திரு சங்கரய்யா ஒரு நிமிடம். நான் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடு)
அதைத்தான் கேட்கிறேன். அதாவது இந்த லெட்டரை திடீ
ரென்று புரட்யூஸ் பண்ணியிருக்கிறார்கள். இருந்தாலும் இது
வந்து ஜெனியுனா? அதாவது உண்மையான டாக்குமென்டா
என்று உங்களாலே ப்ரூவ் பண்ணக்கூடிய அளவிற்கு, இதை
வந்து என்னிடம் நிருபித்த பிறகுதான் இந்த அவையிலே நீங்கள்
எழுப்ப முடியும். (குறுக்கீடு). நான் சொல்கிறேன். கேளுங்கள்.
(குறுக்கீடு). நான் சொன்ன பிறகு நீங்கள் சொல்லுங்கள்
(கூச்சல்-குழப்பம்). அதாவது விதிக்கு உட்பட்டு ஏதாவது சொல்
லுங்கள். (குறுக்கீடு) (கூச்சல்—குழப்பம்).



1983 நவம்பர் 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இருக்கிற சூழ்நிலைகளில்
இதை முதலிலே என்னிடம் காட்டியிருக்கலாம். திரு அழகர்சாமி 2.
3 தடவை இன்றைக்குப் பேசுகிறேன் பேசுகிறேன், என்று
சொல்லிக்கொண்டிருந்தார். அப்போதே காட்டியிருக்கலாம்.
காட்டவில்லை. காட்டி பெர்மிஷன் வாங்கி அதைப்பற்றி
டிஸ்கஷன் ஆன பிறகு சபையிலே காட்டியிருந்தால் பிரச்சினையே
இருந்திருக்காது. திடீரென்று ஒரு விவகாரத்தை பெரிய அளவிலே
கொண்டு வந்து சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே அதற்கு என்ன
ஆதாரம்? எது என்பதைப் பற்றி நாம் பேசுவோம். அதற்குப்.
பிறகு அதைப்பற்றியும் நாம் முடிவு எடுக்கலாம். (குறுக்கீடுகள்)
நீங்கள் என்னைக் கேட்டிருந்தால் அது வேறு விவகாரம்
(குறுக்கீடு). கிருஷ்ணமூர்த்தி பார்லிமெண்டிலே இருந்தவர்.
ஆகவே அவருக்குத் தெரியும். அவருக்குச் சொல்கிறேன்.
(குறுக்கீடு).

திரு வி. கிருஷ்ணமூர்த்தி : இதை புரூப் பண்ணுவதற்கு நீங்கள்
ஒத்துக்கொள்கிறீர்களா என்று கேட்டார். அவர் அதை ஒத்துக்
கொள்கிறேன் என்று சொன்னதற்குப் பிறகு சம்பந்தப்பட்ட
அமைச்சர் . . . . . . . . . . . . . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சம்பந்தப்பட்டவர் பேசு
கிறார் என்பது கூட அல்ல. (குறுக்கீடு). திரு அன்பில் உங்களுக்குச்
சொல்கிறேன். (குறுக்கீடு). சபையிலே காட்டுவதற்கு முன்பே
என்னிடம் காட்டியிருக்கலாம். நீங்கள் குற்றச்சாட்டுக்கள்
சொல்வதைப் பற்றி நான் அந்த விவகாரத்திற்குள்ளே போக
வில்லை. நான் சொல்வது முதலிலே காட்டியிருந்தால் இந்தப்
பிரச்சினை வந்திருக்காது. ஆகவே திடீரென்று காட்டியிருக்
கிறார்கள். ஆகவே அதைப்பற்றி நாம் விசாரித்துத்தான் முடிவு
எடுக்க முடியும். உடனே முடிவு எடுக்க முடியாது. ஆகவே
எல்லோரும் . . . . . . (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்).

Thiru V. KRISHNAMOORTHY : We will take it to the Business Advisory Committee.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, இதுவரையில் நடைபெற்ற சம்
பவங்கள் குறித்துப்பேசியதெல்லாம் ரெக்கார்டாகியிருக்கிறது.
ரெக்கார்டிலேயிருந்து அந்த பேப்பர்ஸை எல்லாம் ரிமூவ்
பண்ண வேண்டும். தயவு செய்து பொதுவாக அந்தப் பிரச்சினை
யை சபைக் குறிப்பிலேயிருந்தும், பத்திரிகைக் குறிப்பிலேயிருந்
தும் நீக்குமாறு நீங்கள் உத்தரவிட வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன். (கூச்சல்— குழப்பம்).

[1983 நவம்பர் 9

திரு. என். சங்கரய்யா : பேரவைத் தலைவர் அவர்களே நான் இப்பொழுது உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புவது என்னவென்றால், மாண்புமிகு உறுப்பினர் திரு அழகர், சாமி அவர்கள் அப்போதிருந்த தற்காலிகத் தலைவருடைய அனு மதியோடு, அதைக் கொண்டு வருகிறேன் என்று சொன்னார்கள். (குறுக்கீடு, கூச்சல்—குழப்பம்) அப்போது அமைச்சர் திரு இராக வானந்தம் அவர்கள் எழுந்திருந்து நீங்கள் வாசிக்கக்கூடிய கடிதத் திற்குப் பொறுப்பு ஏற்றுக் கொள்கிறீர்களா என்று கேட்டார். அது ரெக்கார்டாகி இருக்கிறது. திரு. அழகர்சாமி அவர்கள் அதற்கு பொறுப்பு ஏற்றுக் கொள்கிறேன் ; முழு பொறுப்பு ஏற்றுக் கொள்கிறேன் என்று சொன்னார். அதற்குப் பிறகு அமைச்சர் உட்கார்ந்து விட்டார். அதற்குப் பிறகு, அந்தக் கடிதம் வாசிக்கப்பட்டது. அதற்குப் பிறகு, மறுபடியும் திரு அழகர் சாமி பேச ஆரம்பித்த பிறகு, தொழில் அமைச்சர் அவர்கள் எப்படிக் குறுக்கிடலாம் என்று நான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தொழில் அமைச்சர் என்று அல்ல, யாருமே குறுக்கிடலாம், குறுக்கிடுவது வேறு.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,......

திரு. என். சங்கரய்யா : நான் இன்னும் சொல்லி முடிக்க வில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் புரிந்து கொண் டேன் என்ன நீங்கள் சொல்லப் போகிறீர்கள் என்பதை. நான் எனக்கு இருக்கிற சிரமத்தைச் சொல்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : அவர் பேசுகிற போது, அதைப் பேசுவதற்கு முன்னால் கடிதத்தை உங்களிடம் காண்பித்த பிறகு தானே பேச வேண்டும்....(கூச்சல்—குழப்பம்).

திரு துரைமுருகன் : ஸ்பீக்கர் நிற்கும் போது யாருக்கும் மைக் கிடைக்காது, அமைச்சருக்கு மட்டும் எப்படிக் கிடைத்தது ?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் இப்போது திரு சங்க ரய்யாவை பேச அனுமதிக்கிறேன். திரு சங்கரய்யாவுக்கு மைக் போடுங்கள்.

திரு என். சங்கரய்யா : பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்ன சொல்கிறேன் என்றால், இதிலே சட்டப் பிரச்சினை நான் சொன்னது. திரு. அழகர்சாமி அவர்கள் சொல்லிவிட்டு, வேறு பல விஷயங்களுக்குப் போய் பேச ஆரம்பித்து விட்டார். அதற்குப் பிறகு, சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் அதை



1983 நவம்பர் 9] (திரு. என். சங்கரய்யா)

அனுமதித்து விட்டார். அமைச்சர் கேட்டார்—பொறுப்பு ஏற் கிறீர்களா என்றார்கள். ஏற்கிறேன் என்று இவர்களும் சொல்லி விட்டார்கள். அதற்குப் பிறகு தொழில் அமைச்சர் அந்தப் பிரச்னையை எந்த அடிப்படையிலே கிளப்புகிறார் என்று எனக்குப் புரியவில்லை. இந்தப் பிரச்சினை மிகக் கடுமையான ஒரு குற்றச்சாட்டு. அதை டெக்னிகல் கிரவுண்ட்ஸ்ஸில் வைத்துக் கொண்டு, தள்ளி விடுவதற்கு அரசாங்கம் முயற்சி செய்யக் கூடாது. அதை தைரியமாகப் ஃபேஸ் பண்ண வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் ஒன்று சொல்கி றேன்....(குறுக்கீடு, கூச்சல்—குழப்பம்).

திரு வி. கிருஷ்ணமூர்த்தி : பேரவையினுடைய தலைவர் அவர்களே, நம்முடைய மன்றம் இயங்குவதற்காக இயற்றப் பட்டிருக்கக்கூடிய வரைமுறைகளில் திடீர் என்று ஒரு குற்றச் சாட்டினை ஒரு மெம்பர் இன்னொரு மெம்பர் பேரிலே கொண்டு வருவதாக இருந்தால், முன்னதாக உங்களிடத்திலே காட்ட வேண்டும் என்பது வரைமுறைகளிலே இருக்கக்கூடிய கொள்கை தான். இது எதற்காக வைக்கப்பட்டது என்றால், திடீர் என்று ஒரு குற்றச்சாட்டைச் சொன்னால், குறிப்பிட்ட அங்கத்தினரை எம்பிராஸிங் சிச்சுவேஷனுக்குக் கொண்டு வந்துவிடும் என்பதற் காகத்தான் முன் நோட்டீஸ் கொடுக்க வேண்டும் என்று இருக் கிறது. இந்தச் சூழ்நிலையில் நம்முடைய அருமை சகோதரர், மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகர்சாமி அவர்கள், இந்த போனஸ் விஷயத்தை முடித்து வைக்கின்ற சமயத்தில், தொழிலாளர் நல அமைச்சர் 9 லட்சம் ரூபாய் பணம் பெற்றுக் கொண்டிருக்கிறார் கள் என்று சொல்லிவிட்டு, ...(குறுக்கீடு) சொன்னவுடனே... (குறுக்கீடுகள், கூச்சல்—குழப்பம்). I am coming to the point. Kindly bear with me. (குறுக்கீடு).

Please control them.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு விவகாரத்தைப் பற்றி ஒரு தீர்ப்புச் சொல்ல இருக்கும்போது, நீங்கள் வழக்கறிஞ ராக இருப்பதால் ரொம்ப ஜாக்கிரதையாக நுழைத்தீர்கள் என் றால், அது நல்லது இல்லையே. மேட்டருக்குள்ளே போகக் கூடாது. மேட்டரை நான் பூராவுமாக எக்ஸ்பென்ஞ் பண்ணப் போகிறேன். You know what are the implications connected with it. Why you have gone into the matter? The matter has been expunged.

[பிற்பகல் 12-50]

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. அழகர்சாமி அவர்கள் ஒரு மிகப் பெரிய குற்றச்சாட்டைச் சொல்கிற சமயத்தில் பாதிக்கப்பட்ட உறுப்பினர்

(திரு. வி. கிருஷ்ணமூர்த்தி) [1983 நவம்பர் 9

அல்லது அதனால் பாதகம் அடையக் கூடியவர் உடனடி
யாக எழுந்து அந்தக் கடிதத்தைப் படிக்கக்கூடாது என்று ஆட்
சேபணை கிளப்பலாம், ஆனால் அப்படி ஆட்சேபணை கிளப்பப்
படவில்லை. அதைக் கிளப்பாமல் (கூச்சல்—குழப்பம்)........

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, அது மாதிரி கடிதம் எனக்கு
ஒன்று வந்தது இல்லை. நான் இந்த மாதிரிக் கடிதத்தைப் பார்க்
கவும் இல்லை. எனவே இது ஒரு போர்ஜரி என்று சொல்கிறேன்.
எனவே மாண்புமிகு சபாநாயகர் அவர்கள் இதைப் பரிசீலனை
செய்து சரியான கடிதமா என்று பார்த்து முடிவு எடுக்கிற
வரையில் இப்போது பேசிய பேச்சு குறிப்பேட்டிலிருந்து நீக்கப்
படவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன், (கூச்சல்-குழப்பம்).

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, ....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சங்கரய்யா, அப்
புறம் திரு. உமாநாத் என்று இப்படியே 12 பேர்களும் பேசிக்
கொண்டிருக்கவேண்டியது இல்லை.

திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்
களே, பலரும் சொல்லியாகி விட்டது, நான் அதை ரிப்பீட்
பண்ணவில்லை. சேரிலே இருக்கிறவர்தான் அப்போது சேர்மன்.
'தங்களுடைய அனுமதியின் பேரில்' என்று சொல்கிறபோது அப்
போதிருந்த சேர்மனே சொல்லி இருக்கலாம். நான் அதைப்
பார்க்கவில்லை. கொண்டுவந்து என்னிடம் கொடுங்கள், இப்
போது படிக்கக்கூடாது என்று சொல்லியிருக்கலாம். ஆனால்
சொல்லவில்லை. (கூச்சல்—குழப்பம்) பேசவிடுவது என்றால்
பேச விடுங்கள். இல்லையென்றால் யாரும் ஒன்றும் பேசமுடி
யாது. ஆகவே அதற்குப் பிறகு படித்தார். நான் சைட் பண்ணு
வது என்னவென்றால் இதே அவையிலே சோளிங்கர் போலீஸ்
ஸ்டேஷனின் ஜி. டி. யினுடைய போட்டோஸ்டட் காப்பியை,
திரு. ரகுமான்கான் இங்கே புரடியூஸ் பண்ணினார். சபாநாயக
ரிடம் முன் அனுமதி கேட்கவில்லை. It was recorded.
அப்புறம் சபாநாயகர் அதை வெரிபை பண்ணி பார்த்தது முதல்
விஷயம், இரண்டாவது, முன்னாள் முதலமைச்சர் பல்வேறு
குற்றச்சாட்டுகளை—கப்பல் சம்பந்தமான ஊழல் குற்றச்
சாட்டுகளும் பல குற்றச்சாட்டுகளும்—சொன்னபோது மாண்பு
மிகு முதலமைச்சர் இருக்கிறபோது பல டெலக்ஸ் செய்திகள்
இங்கே பைலிலே இருக்கக்கூடிய காப்பிகள், போட்டோஸ்டட்
காப்பிகளை வரிசையாக ஒவ்வொன்றாக மேசையின்மீது
வைத்தார்கள். அதற்கு சேம்பரிலே பெர்மிஷன் கேட்கவில்லை.
There are precedents also. இப்போது 'உங்களுடைய அனுமதி
யின் பேரில்' என்று சொல்ல அனுமதி மறுக்காமல் இருக்கிற
போது அதைப்படித்தபோது Involved amount of bribery so much



1983 நவம்பர் 9] (திரு ரா. உமாநாத்)

என்கிற போது நீங்கள் இதை எக்ஸ்பஞ்ச் செய்யவேண்டு
மென்று முடிவு கொடுத்தால், I want to protect நீங்கள் அன்
றைக்குச் சொன்னீர்களே சேரியினுடைய ரெஸ்பக்டை புரடக்ட்
பண்ண வேண்டுமென்று சொன்னீர்கள். That will be affected
and I do not want to be affected.

MR. SPEAKER: Whatever you want to say you have said. But
at the same time I must follow certain rules and regulations,
when a Member of the Legislative Assembly speaks. I have
already stated that unless an advance notice is given to the
Speaker and the Minister concerned, a Member is not
permitted to make allegations in the House. It is clearly state.
(கூச்சல்-குழப்பம்) என்னையும் கேட்காது சம்பந்தப்பட்ட அமைச்
சருக்கும் சொல்லாது ஒரு அலிகேஷனை சடாரென்று அவையிலே
சொன்னால் எப்படி? (குறுக்கீடுகள்) பெர்மிஷன் அவர் கேட்க
வும் இல்லை, கிராண்ட் பண்ணவும் இல்லை.

நேற்றுக் காலையிலே திரு. அழகர்சாமியோடு பேசிக்கொண்
டிருந்தேன். காலையிலேகூட பேசிக்கொண்டிருந்தேன், சொல்லி
யிருக்கலாம். ஒரு வார்த்தை கூட அவர் சொல்லவில்லை. 3
தடவைகள் கேட்டேன், அவர் ஒன்றும் பதில் சொல்லவில்லை.
திடீரென்று ஒரு குற்றச்சாட்டை என்னிடம் காட்டாமல் (குறுக்
கீடுகள்) திரு. சங்கரய்யா, திரு. உமாநாத் நீங்கள் எல்லாம்
சொல்லவேண்டியதைச் சொன்னீர்கள். சட்டத்திலே இப்படித்
தான் இருக்கிறது. நீங்கள் குற்றச்சாட்டுச் சொல்வதற்கு
உரிமை இருக்கிறது. இல்லையென்று நான் மறுக்கவில்லை.
என்னிடத்திலே கேட்டிருக்க வேண்டும். சட்டத்திலே கிளியராக
இருக்கிறது. (கூச்சல்-குழப்பம்).

திரு. அ. ரகுமான்கான் : சட்டசபை எதற்கு இருக்கிறது ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மைக்கை உடைப்பதற்கா?

திரு அ. ரகுமான்கான் : நான் உடைக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : யார் உடைத்தாலும்
என் கண் முன்னால் உடைந்து இருப்பது தெரிகிறது. இந்த
விவகாரத்தில் நாம் கொஞ்சம் பொறுப்பாக நடந்து கொள்வது
நல்லது என்று நினைக்கிறேன். உணர்ச்சி வசப்படுவதில் பிரயோ
சனம் இல்லை. சட்டத்தில் இப்படித் தான் இருக்கிறது. என்
னிடம் காட்டியிருந்தால் பிரச்சினைகள் இல்லாமல் இருந்து

இருக்கும். உடனே சம்பந்தப்பட்ட அமைச்சரைக் கூப்பிட்டு, உண்மையா ? இல்லையா என்ன என்று கேட்க வசதி இருந்து இருக்கும். எதற்கும் வாய்ப்புக் கொடுக்காமல் திடீர் என்று ஒரு குற்றச்சாட்டைப் போட்டு அதை ஒரு பிரச்சினையாக்கி, ஒரு விவாதத்தை உண்டுபண்ணி ஒரு சர்ச்சையாகக் கொண்டு வந்தால் என்ன புண்ணியம். (கூச்சல்-குழப்பம்) நீங்களே ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளக் கூடாது. அப்புறம் எனக்கு வேலை கிடையாது. எனக்கு இருக்கிற வேலை ரெகுலேட் செய்கிற வேலைதான். ரெகுலேட் பண்ணு கிற வேலையை நான் ஒழுங்காக செய்து தான் ஆகவேண்டும் (குறுக்கீடு) திரு. துரைமுருகன் நீங்கள் ஆயிரம் குற்றச்சாட்டு கள் சொல்லலாம், ஆயிரம் குற்றச்சாட்டுகள் சொன்னாலும் என்னிடம் காட்டவேண்டும். (குறுக்கீடு).

THIRU K. S. G. HAJA SHAREEF: Mr. Speaker Sir, it is a very unfortunate incident that has arisen just now. To come out of this very unfortunate incident I suggest that we stop this contraversy at this stage and please take it to the Business Advisory Committee so that we can further consider the matter.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகர்சாமி அவர்கள் குறிப்பிட்ட ஒரு அமைச்சர்மீது ஒருகுற்றச்சாட்டை கொண்டு வருகிறார்கள். குற்றச்சாட்டைக்கொண்டு வருவதைப் பற்றிஎந்தவிதமான ஆட்சேபணையும் இருக்க முடியாது. அதற்கு என்று சில வரைமுறைகள் இருக்கின்றன என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார் கள். ஏற்கெனவே அது கடைப்பிடிக்கப்பட்டு இருக்கிறது. அந்த வகையில் தான் அவரும் ஒரு குற்றசாட்டைச் சொல்வதற்கு தன்னிடத்தில் ஆதாரங்கள் இருக்கின்றன என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகர்சாமி அவர்கள் குறிப்பிட்டு இருக் கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு பிரச்சினை முன்பு வந்தபோது பேரவைத் தலைவராக புலவர் கோவிந்தன் அவர்கள் இருந்தபோது '' சில ஆதாரங்கள் என்று சொன்னால் அதை நீங்கள் முதலில் பேரவைத் தலைவரிடம் காட்டி பேரவைத் தலைவர் அதைப் பார்த்து முறையாக இருக்கிறதா என்று சொன்னதற்குப் பிறகு தான் இங்கு சொல்லவேண்டுமே தவிர நீங்களே இங்கே சொல்லக் கூடாது. நீங்கள் என்னிடம் முதலில் கொடுங்கள். நான் பார்த்து முறைப்படி இருந்தால் அனுமதி கொடுப்பது பற்றி சொல்ல முடியும் '' என்று அப்போது சொல்லியிருக்கிறார்கள். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் திரு அழகர்சாமி அவர்கள் ஒரு





குற்றச்சாட்டைச் சொல்லி அந்த குற்றச்சாட்டுக்கு ஆதாரம் இது என்று மாண்புமிகு பேரவைத் தலைவரிடம் இப்போது கொடுத்து இருக்கிறார்கள். ஆக இதைப்பற்றி அவர்கள் எழுப்புவதற்கும் இதைப்பற்றி பேரவைத் தலைவர் அவர்கள் ஆராய்ந்து ஒரு முடிவு சொல்லி அதை எழுப்புவதற்கும் அனுமதி தந்து எழுப்பி முறைப்படி நடைபெறுகின்ற காரியங்கள் நடை பெறலாம்.

இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்மீது விவாதம் நாளை வரையில் நடைபெற இருக்கிற காரணத்தால் இந்தப் பிரச்னையை இதோடு நிறுத்திவிட்டு, அனுமதி கொடுத்த தற்குப் பிறகு மீண்டும் ஒரு வாய்ப்பு, மாண்புமிகு திரு.அழகர்சாமி அவர்களுக்கு, இதற்கு மட்டும் தனியாக, நாளைக்குத் தரலாம் என்று நான் கூறுகிறேன். தாங்கள் அதைப் பார்த்து உள்ள படியே அனுமதிக்கக்கூடியதாக இருந்தால், அதை எழுப்பு வதற்கு உறுப்பினருக்கு உரிமை உண்டு. மறுப்பதற்கு அமைச் சருக்கு உரிமை உண்டு. ஆகவே, இந்தப் பிரச்சினையை இன்று இந்த அளவோடு நிறுத்திவிட்டு, நம்பிக்கை இல்லாத் தீர்மானம் முடிவிற்கு வருவதற்கு முன்னதாக, இதற்கொரு சான்ஸ் கொடுக்க அடிப்படை இருந்தால், மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகர் சாமிக்குக் கொடுத்து, இந்த ஒரு பிரச்னையை மட்டும் நாளை எழுப்புவதற்கு இடம் தரலாம் என்று நான் கூறுகிறேன். (குறுக்கீடுகள்).

[பிற்பகல் 1-00]

திரு. என். சங்கரய்யா : எங்களுடைய பாய்ன்ட் என்ன வென்றால் அது ரெக்கார்டிலே அப்படியே இருக்கவேண்டும்.

திரு. அன்பில்தர்மலிங்கம் : இன்றைய நடவடிக்கைகள் குறிப் பிலே அப்படியே இருக்கவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைய நடவடிக்கை கள் குறிப்புகளிலே இருக்கும், பத்திரிகைகளிலே வராது. (கூச்சல்—குழப்பம்) நாளைக்கு வரையல் இந்த டிஸ்கஷனை ஒத்தி வைக்கலாம் என்றால், (கூச்சல்—குழப்பம்) இன்றைக்கு எல்லா செய்திகளும் பத்திரிகைகளில் வந்து விட்டால், பிறகு நாளைக்கு எதற்கு டிஸ்கஷன் ? (குறுக்கீடுகள்) நான் சொல் வதைக் கேளுங்கள். ஆகவே இவை பூராவும் சபை நடவடிக்கை களிலே அப்படியே நிறுத்தப்படுகிறது. (குறுக்கீடுகள்). (கூச்சல்— குழப்பம்) திரு. சங்கரய்யா, நான் சொல்வதைச்சற்று கேளுங்கள். நாளைக்கு நாம் கூடி இதை ஆராய்ந்து பார்க்கிற வரைக்கும் இந்தச் செய்திகள் பூராவும் வெளிவந்தால் நல்லதல்ல. (கூச்சல்—

குழப்பம்) * * ஒரு கடிதத்தை ஆதாரமாக வைத்து குற்றம் சாட்டு
வது என்றால் முதலில் பாராளுமன்ற சம்பிரதாயத்திலே அந்தக்
கடிதம் எனக்குக் காட்டப்பட்டிருக்க வேண்டும். அது காட்டப்
படவில்லை. எனவே அமைச்சர் சொன்னது, நீங்கள் சொன்னது
இந்தக் குற்றச்சாட்டு சம்பந்தப்பட்ட வரையில் எல்லாமே நிறுத்தி
வைக்கப்படுகிறது. திரு அழகர்சாமியினுடைய மற்ற பேச்சுகள்
எல்லாம் இருக்கும். (கூச்சல்—குழப்பம்) * * நாளைய
தினம் அலுவல் ஆய்வுக் குழுவிலே வைத்து முடிவெடுக்கலாம்.
முடிவெடுத்த பிறகுதான் அம்முடிவுப்படி நாம் எதையும்
செய்ய முடியுமே தவிர, இப்பொழுது முடியாது. (கூச்சல்—
குழப்பம்).

(கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களும், திராவிட முன்னேற்றக்
கழக உறுப்பினர்களும் தங்கள் தங்கள் இடத்தில் எழுந்து நின்று
கொண்டு கோஷமிடத் தொடங்கினர்.).

* * * *

(கூச்சல்—குழப்பம்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்
கள் அனைவரும் உட்கார வேண்டும். (குறுக்கீடு).

[பிற்பகல் 1·10]

திரு. அழகர்சாமி ஒரு குற்றச் சாட்டைச் சொன்னார்.
அவர் சும்மா இருக்கிறார். ஆனால் நீங்கள் எல்லோரும்
ஏன் சத்தம் போடுகிறீர்கள்?

திரு. உமாநாத் அவர்களுக்கு நான் ஒன்றைச் சொல்கிறேன்.
பிசினஸ் அட்வைசரி கமிட்டியைக் கூட்டி, அதிலே பேசித்தான்
முடிவெடுக்க வேண்டுமே தவிர அதுவரைக்கும் இது பத்திரிகையில்
வரக் கூடாதுதான். இன்றைக்குப் பத்திரிகையில் வரவில்லை
யென்றால் நாளைக்குப் பத்திரிகையில் வந்துவிட்டுப் போகிறது.
அதில் என்ன கஷ்டம்? எனவே, இப்போழுது பிசினஸ் அட்வைசரி
கமிட்டியைக் கூட்டலாம் அல்லவா? பிசினஸ் அட்வைசரி கமிட்
டியைக் கூட்டி முடிவெடுக்கலாம் அல்லவா? அப்படியில்லையென்
றால் ஸ்பீக்கர் சபையை எப்படி நடத்த முடியும்? நீங்கள் பிசினஸ்
அட்வைசரி கமிட்டிக்கு வாருங்கள், உட்கார்ந்து பேசலாம்
(குறுக்கீடுகள்).

இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தின்மீது
மற்றக் கட்சிக்காரர்களும் பேசியாக வேண்டும். இப்படி
அவை நடவடிக்கையைத் தொடர முடியாது. தடை செய்வது
சரியல்ல ; மற்றவர்களையும் பேசுவதற்கு அனுமதிப்பதுதான்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்
றப் பெற்றது.





நல்லது. ஜனநாயகத்தில், பெரிய கட்சிகள் மட்டும் பேசுவதற்கு
அனுமதித்து விட்டு, சிறிய கட்சிகளுக்கு அனுமதி கொடுக்கா
விட்டால் அது என்ன நியாயம்? அது முறையல்ல. சிறிய கட்சி
களையும் பேசவிடுங்கள்.

அலுவல் ஆய்வுக் குழுவை நாளை கூட்டுவோம், அலுவல்
ஆய்வுக் குழுவில் வந்து உட்காருங்கள். இன்றைக்குப் பேப்பரில்
வர வேண்டிய செய்தி நாளைக்கு வரட்டும். அந்தச் செய்திகள்
இன்றைக்குப் பேப்பரில் வருவது முறையல்ல. (குறுக்கீடு)
திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ஏற்கெனவே பி.ஏ.சி.யைக் கூட்டு
என்று சொன்னார்கள். இப்பொழுது ஏன் அதிலிருந்து மாறி
நிற்கிறார் என்று தெரியவில்லை? பி.ஏ.சியைக் கூட்டி முடிவெடுப்
போம். அதற்கும் கட்டுப்பட மாட்டோம் என்றால் எப்படி
நாம் அவையை நடத்துவது? (கூச்சல்—குழப்பம்).

**திரு. ரா. உமாநாத்:** தலைவரவர்களே, எக்ஸ்பஞ்ச் மட்டும்
செய்யக் கூடாது. இதை எக்ஸ்பஞ்ச் செய்ய வேண்டுமென்றால்
அது பார்ஷியாலிட்டியைக் காட்டும் அல்லவா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டத்திலே விளக்கமாக
இருக்கிறது. குற்றச்சாட்டு சொல்வது என்றால், என்னிடத்
திலே முன்னாலேயே காட்ட வேண்டுமென்று இருக்கிறது. திரு.
அழகர்சாமி அவர்கள் பேசிய மற்றதெல்லாம் வரட்டும், இந்தக்
குற்றச்சாட்டு பகுதி மட்டும் செய்தித் தாளில் வராமல் அப்படியே
இருக்கட்டும். அலுவல் ஆய்வுக் குழுவைக் கூட்டுவோம்.
அங்கே முடிவெடுப்போம். அதன்படி நடந்து கொள்ளலாம்.
(கூச்சல்—குழப்பம்) **

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுறு
கின்றன. நான் முன்பே தெரிவித்தபடி திரு. அழகர்சாமி அவர்கள்
படித்த கடிதம், குற்றச்சாட்டு ஆகியவை என் அனுமதியின்றி
எழுப்பப்பட்ட முழக்கங்கள், இதன் தொடர்பாக இந்த அவையில்
எல்லாம் அவைக் குறிப்பில் நிறுத்தி வைக்கப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க
அகற்றப்பெற்றது.

[பேரவைத் தலைவர்] [1983 நவம்பர் 9

கோஷங்கள் எதுவும் பத்திரிகைகளில் வெளியிடக் கூடாது. அவை
தனிப்பட்ட கோஷங்கள். அவைகளைப் பத்திரிகையில் வெளி
யிடுவதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது. அலுவல் ஆய்வுக்குழு
நாளைகூடும்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று
(10–11–1983) காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-31 மணிக்கு ஒத்திவைக்கப்
பெற்றது.

### 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

எதுவுமில்லை.

---

136061

V211,31 N83

N83.53.4